எங்கள் உயிரினும் மேலான

தமிழ்த் தாயின் திருவடிகளுக்கு

காணிக்கை

		பக்க எண்
1	அஞ்சலி	
2	தமிழின் தொன்மை	
3	T. N. சுகி சுப்ரமணியன்	5
4	உமா குருமூர்த்தி	9
5	பகவதி ஜெயராமன்	13
6	தி. க. ஷண்முகம், எம். எல். எஸ்,	17
7	தமிழ்ச் செழியன்	20
8	நா. பார்த்தசாரதி	21
9	துறைவன்	24
10	கண. முத்தையா	29
11	இளங்கம்பன்	31
12	வி. துரைசாமி	32
13	நாரண துரைக்கண்ணன்	36
14	கி. முத்துராமகிருஷ்ணன்	38
15	முகவை வாசுகிநாதன்	41
16	கே. ஜெயலெட்சுமி	42
17	எஸ். டி. சுந்தரம்	48
18	மஹி	52
19	சாலினி இளந்திரையன்	56
20	வல்லிக்கண்ணன்	58
21	தமிழமுகன்	60
22	வீ. பார்த்திபன்	61
23	தேசிணி	63
24	சாலை இளந்திரையன்	64
25	சி. வி. சீதாராமையா	65
26	ரார்திகா	69
27	ந. மு. க. முகம்மது ஹனிபா	72
28	வஸந்தை	72
29	J. B. கிருபளானி	73
30	கொடுமுடி ராஜகோபாலன்	77
31	வி. ஜி. சீனிவாசன்	82
32	புலவர் முத்துவேங்கடேசன்	84
33	கே. ஆர். பசுபதி	85
34	ந. செல்லப்பன்	87
35	மா. சௌந்தரராசன்	88
36	வெ. ஐயாச்சாமி	89
37	அபர்ணா	91
38	திருச்சி பாரதன்	95
39	அமு. வள்ளியப்பா	100
40	கோவி. மணிசேகரன்	101
41	திருச்சி திருமாறன்	104
42	இரா. சண்முகம்	104
43	டி. எஸ். மணி	104
44	செங்குளத்தான்	104
45	வடமலை அழகன்	105
46	எஸ் ஷண்முகம்	105
47	தேனி முருகேசன்	105
48	அழகனார்	105
49	ப. கோபாலன்	106
50	அகிலன்	108
51	டி. வி. கைலாசம்	109
52	ராஜம் கிருஷ்ணசாமி	110
53	சிந்தனைக் கொத்து	

55 குங்குமப்பூ வாசனை புகையிலை

வளமிகுந்த புகையிலையைக் கொண்டு தயாராகும் எமது 55, குங்குமப்பூ வாசனை புகையிலை கலவையின் மூலப்பொருட்கள் விலையை அதிகரித்துக் கொண்டே போவதால் 55 குங்குமப்பூ புகையிலை 3 காக பொட்டலங் களாக எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

எமது வாடிக்கை கடைக்காரர்களும், 55 குங்குமப்பூ வாசனை புகையிலை உபயோகிக் கும் அன்பர்களும் எப்பொழுதும் போல் கீழ்த்த அபிமானத்துடன் ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

A. V. PONNIAH NADAR,
Malaivasal, Tiruchy-2.



1	ஆனந்த விகடன்	i
2	ஆனைமலீஸ் ஏஜன்ஸீஸ்	i
3	சுந்தர விலாஸ்	ii
4	ஜெர்மன் ரேடியோ ஹவுஸ்	iv
5	ஏ. வி. எம். லிமிடெட்	iii
6	K. R. வரதராஜன் & சன்	iv
7	K. R. கிருஷ்ணமூர்த்தி & சன்ஸ்	ii
8	ரேடியோ ஹவுஸ்	vi
9	இந்தோ-ஸ்விஸ் எந்தெடிக் ஜெம்ஸ்	v
10	செயின் என்ஜினீரிங் கம்பெனி	xii
11	தண்டாயுதபாணி பௌண்டரி பிரைவேட் லிமிடெட்	vii
12	டலக்ஸ் போட்டோ சர்வீஸ்	viii
13	"அசோகா" சுகந்த பாக்குத் தூள்	viii
14	மேட்டூர் கெமிக்கல்ஸ் & இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன் லிமிடெட்	viii
15	கோ-ஆப்-டெக்ஸ்	ix
16	சென்னிமலை எச்-எல்-டபிள்யூ கோ ஆப். சொசைட்டி லிட்.	ix
17	அம்மாபேட்டை கைத்தறி நெசவாளர்சங்கம்	x
18	சிண்டிகேட் பேங்க் லிமிடெட்	x
19	கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்	x
20	மதுரை கூட்டுறவு பேங்கு	x
21	பேங்க் ஆப் மதுரை	xii
22	P. R. N. டெக்ஸ்டைல்ஸ்	xi
23	திருநெல்வேலி பாத்திரக்கடை	xi
24	A. சுப்பராயலு செட்டி	xiv
25	G.N சக்ரபாணி செட்டி & சன்ஸ் (பி) லிட்.	xiv
26	A. P. A. ஜுவல்லரி	xiv
27	மாரியப்பா ஸ்டோர்ஸ்	114
28	S. சபாபதி	xiv
29	P. R. கிருஷ்ணய்யர் "பேன்ஸி ஹால்"	2nd cover
30	P. R. நாராயணசாமி அய்யர்	Last cover
31	வின்ஸென்ட் & கம்பெனி (பி) லிட்.	3rd cover
32	பசுபதி மளிகை	xii
33	ஸ்ரீராமவிலாஸ் பாத்திரக்கடை	vi
34	சௌத்மதருஸ் எலக்டிரிக்கல் கார்ப்.லிட்	xiii
35	வாணி பிலிம்ஸ்	xiii
36	A. V. பொன்னையா நாடார்	xv

சிறப்பு மலர்

22 OCT 1968

No 10

1968

★

ஆசிரியர்:
அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

அச்சகம்
கண்ணன் அச்சகம் திருச்சி-2

★

அலுவலகம்:
எழுத்தாளன் அலுவலகம்,
24, தேரடிக்கடைத் தெரு, திருச்சி-2.

★

விலை. ரூ. 4-00

ஸ்ரீ இராமானுஜர்

ஓதிய வேதந்தின் உட்பொரு ளாய்,அதன் உச்சிமிக்க
சோதியை நாதன் எனவறி யாதுரல் கிள்ளிதொண்டர்,
பேதமை தீர்த்த இராமா னுசனைத் தொழுப்பெரியோர்
பாதமல் லாலென்றன் ஆருயிர்க்கு, யதொன்றும் பற்றில்லையே.

அஞ்சலி

உலகம் இதனை நாம் அறிவோம், உலகில் உயிர் வாழ்ந்திருக்கும் உண்மையினுல். உலகம் இதனை நாம் அறியோம், உடல் உண்மை அறியாக் காரணத்தால்.

உலகத்தை அறிவதற்கு முன்பு நமது உடல் கூடு இருக்கிறதே அதில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கும் அதிசயங்களில் ஒரு சிலவற்றையாவது நாம் அறிந்துதான் ஆகவேண்டும்.

உடலின் அமைப்பை வைத்து முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம், பாலை என புறநிலங்களாகப் பிரித்தாலும், அக நிலையை விளக்க எழுந்த எல்லைக்கோடுகள் இயை என்பது விளக்கமாகும். அகமும்-புறமும்-உடல் கூறுகள் என்பதும் சிந்திக்கத்தக்கது.

இவ்வுலகம் நமக்குத் தெரிந்ததாகவும், இதன் இயக்கம் நமக்குத் தெரியாததாகவும் இருக்கிறது. இருளும்—ஒளியும் நம்மைச் சுற்றியிருக்கிறது. உயிர் முயற்சிசெய்து இருளை விலக்கி ஒளியைப் பெறத் துடிக்கும் துடிப்பே உயிர் வாழ்க்கையின் மலர்ச்சியாகும்.

இருட்டறையில் விளக்கு ஏற்றி வைக்கிறோம். விளக்கு ஏற்றுவதற்கு முன்பு அவ்வறையில் இருக்கும் எந்த ஒரு பொருளும் நம் கண்களுக்குத் தெரிவதில்லை. விளக்கின் ஒளியில், நமக்கு ஒளியைத் தருகின்ற விளக்கையும் அதனைச் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் பொருள்களையும் பார்க்க முடிகிறது.

நமது உடல் கூடு இருக்கிறதே, அது ஒரு இருட்டறை. ஆயிரமாயிரம் அதிசயங்களும், அற்புதங்களும் இருளுக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சதிசேர் இருப்பதை அறிந்துகொள்ள நமக்குக் கண்கள் உதவுகின்றன. நமது கண்கள் இரண்டும் சூர்ய-சந்திரர்களின் பிரதிமைகள். இவை இரண்டும் ஒரு குறிப்பிட்டதூரம் வெளியே பார்த்து அந்த எல்லைக்குள் அகப்படும் பொருளை மனதில் பதியவைக்க உதவும் கருவிகள். இக் கண்களின் பார்வைக்கு ஆதாரமாக உடலுக்குள் அச்சு விளக்கு ஒன்று அவியாமல் நின்று எரிந்து கொண்டிருக்கிறது. அந்த விளக்கின் ஆற்றல் கண்களுக்கு இல்லையென்றால் கண்களால் பார்க்க முடியாது.

கண்களுக்குப் பார்வை தரும் அந்த ஆற்றல், நாக்கின் சுவைக்கும், மூக்கின் வாசனைக்கும், ஸ்பரிசத்தின் இன்பத்திற்கும் ஆதாரமாகவும் உயிர் இயக்கத்திற்கு மூலமாகவும், இருக்கிறது ஒளியே என்பதை, அறிந்து அனுபவித்து உரைத்த செம்மொழி தமிழ்மொழியாகும்.

அந்த ஒளியே இறைவன் என்று உறுதியாகச் சொன்ன அறிவுக்குரல் தமிழ்மரபுக்குரியது. 'ஒதிய வேதத்தின் உட்பொருளாய் அதன் உணர்ச்சிமிக்க ஜோதியை நாதன் என்றுணராத தொண்டர்கள் பேதமை மாற்றப் பிறந்த ராமானுஜன்" என்றும், "ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் ஜோதி" எனறும் பாடியது தமிழ் எழுத்துக்குலம்.

வேதம் சார்ந்த சைவம், வைணவம் சாக்தம், கணபத்யம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறு மதங்களும் ஒளிவடிவமே இறைவடி

வம் என்று முடிந்த முடிபாக்கி கொண்டவை "நீர் மேல் நெருப்பு" என்றும், பாற்கடல் துயின்ற வன், மன்றுடி என்றும், ஒளியை வழிகாட்டி குறித்த வாக்கியங்களாகும்.

ஒளி இன்பத்தை எல்லோரும் சுலபத்தில் பெற்று இன்புற முடியாது. முயற்சியும் தவமும், திடசித்தமும், அயராத லயிப்பும், வாசிப் பழக்க மும், பிரம்மச்சர்யமும் தேவைப்படுகிறது.

முயற்சி செய்து முனைபவர்கள் தவிர மற்றவர் களை அந்த பாதை வழியே அழைத்துச் செல்ல, சுலபமாக சித்தியைப்பெற சிந்தித்து சிந்தித்து அமைத்த ராஜபாட்டைதான் ஆலயம், விக்ரகம், பூஜை, அன்னதானம், பக்திமார்க்கம் முத லியவைகள் ஆகும்.

இந்த அறநெறியை, நல்ல பாதையை காட்டி உயர்ந்த லட்சியத்திற்கு மனித உள்ளங்களே அழைத்துச் செல்லும் தன்னலமற்ற தியாகமே எழுத்துப்பணி. "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும், பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழி பெற்று பதவிகொள்வார்" என்ற பாரதியின் சங்க நாதமே எழுத்துலகின் வெற்றிமுரசு.

உள்ளத்தில் ஒளியை குருநாடி அறிந்து அதன் உதவியால் அறிகின்ற அறிவுவிழி பலபடித்த எழுத்தாளன் உடல் கூட்டில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கும் முப்பத்திரண்டு இன உணர்வு சுரப்பிகளையும் அதன் இயல்புகளையும், ஆற்றல்களையும் அறிகிறான். அவன் தனது எழுத் துக்களின்மூலம், வாசகர்களின் உள்ளத்தில் ஊடையாய் இருக்கும் அந்த சுரப்பிகளை இயங்க வைக்கும் ஆற்றல்படைத்து விடுகிறான். அந்த சுரப்பிகளே மனித சமுதாயத்தின் பண்பாட்டுக் காவலர்கள். அமரத்தன்மை பெற்ற அமரர்களும் அந்த சுரப்பிகளே. அவைகளை இயக்கும் ஆற்றல் எழுத்தாளனுக்கும் அவன் எழுத்துக்கும் ஏற்பட்டி ருக்கும் மகத்தான வாய்ப்புகள் ஆகும்.

தன் உள்ளத்தையே பரிசோதனைக்கூடமாக்கி தன்னையே வேள்விக் கூடத்தில் ஹோம அவி சாக்கி அந்த தியாகத் தீயில் தன் சித்தத்தை, சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக பலியிடும் எழுத் தாளன் வாழ்வு, கலிஞரின் வாழ்வு, விஞ்ஞானி வாழ்வு, மெஞ்ஞானி வாழ்வு அமரவாழ்வு ஆகிவிடுகிறது. எழுத்தாளன் இறந்து போகலாம். அவன் எழுத்து இறப்பதில்லை.

ஒரு உண்மையை, தான் அறிந்து அனுபவித் கும் ரகசியத்தை மற்றவர்களுக்கும் சொல்லிவிட வேண்டும் என்ற துடிப்பு இருக்கிறது. ஆவல் இருக்கிறது. அந்த உணர்வின் நெகிழ்வை அப் படியே மற்றவர்கள் மனதில் பதியவைக்கும் ஆற் றல் சொல்லுகிறவனுக்கு இல்லையா? அறியாத உணர்வை யறிந்துகொள்ள முடியாதபடி கேட்ப வர்கள் உள்ளம் இருக்கிறதா என் பது தான் விளங்கவில்லை. என்றாலும் தன் மனத்தில் கண்ட காட்சியை சித்தரித்துக்காட்ட முனைந்து தோற் றுப் போன ஆற்றுமையே இலக்கிய ரசனையாக வும், இலக்கிய உத்தியாகவும் அமைந்து விடுகிறது.

எழுத்தாளன் தன்னை மறந்து தன் செயலை மறந்து தன்னை உள்ளிருந்து நடத்தும் அந்த உணர்வு ஒளிப்பிழம்புடன் ஒன்றிவிடுகின்ற போது அவனது சித்தத்திரையில் பளிச்சிடும் சிந்தனைகள் ஒளி மிகுந்ததாக, வலிமை படைத்ததாக, குருடர்களுக்கும் விழியைத்தரும் ஆற்றல் படைத்ததாக, சமுதாயத்தையே தியாக உணர்வுக்குத் தூண்டும் பேரியக்கமாக, குருநாடி உபதேசமாக, அமைகிறது.

மகாத்மா காந்தி என்ற ஒளிபுருடன் தன் மனத்திரையில் கண்ட சத்திய ஒளியின் வழி யைப் பின்பற்றி தன்னோத்தியாகத் தீயில் இட்டு மாற்றுரர்களின் தொல்லைகளை சகித்து, எல்லா உயி ரும் இறைவன் ஆலயம் என்பதை நிலைபடுத்தி மொகியும் புலைஉணவும் தவிர்த்து, எந்த உயிருக் கும் தீங்கு நினைக்காத அகிம்சை வழியில் நடந்து மறைந்தது அண்மையிலென்றாலும், அவர் வந்து போன ஒளிச்சுவடு இன்னும் மறையவில்லை. ஒளி மயமான தன் தேகம் அதில் ஏற்பட்ட காந்தி அதற்கு உலகம் காட்டும் அஞ்சலி நம் நினைவில் என்றென்றும் நிற்பதற்கு அவரது எழுத்துக்கள் ஒளி தன்மைபெற்று என்றென்றும் வழிகாட்டும்.

சத்தியநெறி நின்றவர் வாக்கும் எழுத்தும் மனித சமுதாயத்தின் கருவூலங்களாகும். ஒரு நூறு வருடம் ஆகிறது. ஒரு வருடம் முழுதும் சிந்திப்பதற்கு உரியது இந்த ஒளிநாட்ட சத்திய வேட்கை. அந்த சத்திய வேட்கை தமிழ் எழுத்தா ளர்களின் தனிச்சொத்தாக மலரவேண்டும். அந்த மலர்ச்சி தாரணியையே உயர்த்த உதவட்டும்.

வாழ்க தமிழ்க்குலம்.
ஒளிர்க ஒளிநாட்டம்
வளர்க தமிழ்
உயர்க மானுடம்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

தமிழ்த் தாய் வருகவே!

ரெட்டியார்

★

செந்தமிழ் அன்னையே சிந்தைகுடி கொண்ட
தெய்வமே அமுதவூற்றே
சிரகமல உச்சியில் சகஸ்த்ரதள மேவிடும்
சிவனார் உவந்த தேனே
முந்துற்ற திருமாலும் முருகனும் களிகொள்ளும்
முத்தமிழின் புத்தமுதமே
முத்தீயின் ஆட்சிக்குட்பட்டவுடற் கூட்டில்
முத்தாடும் ஒளிரத்னமே
சிந்தையால் உலகினை அனந்தநித்தே மகிழ்
சித்தர்கள் காத்தமுதமே
சிற்றணுக் கூட்டமே சேர்ந்த ப்ரபஞ்சமும்
தேகமும் என அறிந்தோர்
கொந்துற்ற சிந்தையிற் கவிதைப் பிரவாகமாய்
குலவு தமிழ்த்தாய் வருகவே!
குவலயம் காணாத சிந்தனை படைத்த செழுங்
குமரித் தமிழ்த்தாய் வருகவே!

அகத்தியன் உள்ளமே யிலக்கணம் என ஒலித்து
அழகு நடைவழி காட்டவும்
அருந்தமிழ் செந்தமிழ் அமிழ்தினும் இனிமை மிகு
அழகு தமிழ் ஒளி வீசிய
பகருமெஞ் ஞானமும் பக்தியும் காதலும்
படைப்பதின் நுட்ப திட்பமும்
பாருலகெல்லாம் இவ்வுடற் கூட்டின் உட்புறம்
பதிய வைத்திருக்கும் சித்தும்
ககனவெளி எங்கணும் ஒளி வழியில் தாவிடும்
கால் வழி முடங்கி ஓர்ந்தும்
காசினியில் ஐந்தினையும் அகம்புறமிரண்டினையும்
ஞானக் கண்வழி அறிகவென்றும்
இகபரம் உடற்கூட்டில் தெளிந்தறிந்துவைத்தவர்
எடுத்தியம்பு சொல்லெலாம்
இணையணி பணிபூண்ட செந்தமிழ் அன்னையே
என் நாகொலு வமர வாராய்!

காலத்தை வென்றவள் கன்னியென நிற்பவள்
கல்தோன்றி மண்தோன்றுக் காலமுதல்
காசினிக் கொழுக்கும் ஞானமும் புகட்டிவரு
கருணை நிறை தமிழன்னையே!
மூலப் படைப்பென்னக் காலக் கணக்கர்கள்
முறை முறை தொகுத்துரைக்கும்
மூதாட்டி செந்தமிழ்ச் செல்வியே! அகம்புறம்
முறறும் அறிந்த மேலோர்
ஞாலத்தில் பனியடா காலமுதல் இற்றைக்கு
நாற்ப தாயிர மாண்டுகள்
நானிலத்திருந் தன்பு நடைசெங்கோலோச்சிடும்
நற்றமிழ்ச் செல்வி நீயே
காலக் கிழத்தியாய் புகழோச்சும் தாயென
கல்லாடர் போற்றும் தெய்வம்
கண்கண்ட தெய்வமே தண்டமிழ்த்தாயே யென்
கருத்தினில் கவிபொழிகவே!

உள்ளொளியை புலன்களொடுக்கியே யுணர்ந்தவர்கள்
ஒங்குநின் சீர் பாடவும்
உலகுக்கு உண்மையை உரைக்கவும் தமிழ்ச் சங்கம்
ஒலித்திடவும் வழியமைத்தார்
தெள்ளுதமிழ்ச் சங்கத்தில் சிவனேயே தலைவனுய்
தெரிந்தங்கு புலமைபெற்றார்
சீருடன் வான்நூலும் உளநூலும் நிலநூலும்
தெரிந்து பயிர் உயிர் துடிப்பும்
வெள்ளமென கணிதம் இலக்கிய இலக்கண
மேவு ஓவியம் இயையும்
வியன்புகழ் அணுவினை பிரிந்து வான்வெளிசெலும்
வித்தார சிதது வைத்தியம்
அள்ளியே செந்தமிழ் சாத்திரம் பலநூறு
யாக்கிப் படைத்த மக்கள்
அகிலத்தில் எங்குமிலை யெனும்படி புகழ்கொண்டதோர்
அன்னை தமிழ்த்தாய் வருகவே!

நிலம், நீர், தீ, வளி என்னுமிந் நான்கும்
நெருங்கி ஒன்றில் ஒன்றிணைந்து
நெடிய விசும்பு எனும் பேரொளியில்
நீள் கரத் தடங்கி நிறகும்
குலவு சந்திர சூரியர் மற்றமுள
கோளங்கள் யாவும் அந்தக்
குன்ருத பேரொளியில் குன்றி ஒடுங்கிடும்
குறிகுணம் அற்ற ஒளியும்
நிலவிட அணுக்குவை ஒன்றுடன் ஒன்றிணைந்து
நிலம், நீர், தீ, வளி, விசும்பு எனவும்
நீள் உயிர்க் கூட்டமுடன் தாவரம் என விரவி
நித்தமும் புதுக்கி நிறகும்
அலகில் அவ்வொளியது செந்தமிழ் சொல்முகடம்
அடங்கிட அறிவு வொளியாய்
ஆனந்த நடமாடும் அன்னையே என் நாவில்
அருட்கவி பொழிய வாராய்!

முதற்சங்கம் தென்மதுரை மாநகர் விளங்கிட
முக்கண்ணன் தலைமையேற்க
முனிவருஞ் சித்தரும் முடிநாகராயரும்
முருகனும் கொலுவிருக்க
விதவித பரியாடல் களரியாவிரையென்ன
வித்தகர்கள் அரங்கமேற்ற
மேலாக நாலாயிரத்து நானூறு நாற்பதின்மர்
விஞ்சு தமிழ் புலமைபெய்வ
வித்தான செந்தமிழ் ஐநூற்று நாற்பத்
தொன்பதுமர் யாத்து வைக்க
சத்தாக அகத்தியம் வைத்து முதற்நூலாய்
தமிழ்த்தாய் கொலுவிருக்க
சதியாக சாகரம் அலேதாவி புயல்வீசி
சங்கமும் தமிழ் மதுரையும்
தன்னிடம் கொண்டேகி தமிழ் அமிழ்தம்
கொண்டதோ
சாகரம் தமிழ்த் தொண்டனே ?

கடல்கொள்ள முதற்சங்கம் தடைபட்ட தமிழ்மொழி
கபாடபுர மதனில் மீண்டும்
இடைச்சங்கமென்ன தொடங்கவும் மேலவர்கள்
இருந்தையூர் கருங் கோழியும்
அடலேறு அகத்தியன் தொல்காப்பியன் மோசிமுதல்
ஐம்பத் தொன்பதின்மர் புலவர்
அன்னதமிழ் ஓச்சவும் மூவாயிரத்தெழு நூறு
அரங் கேறிய புலவரும்
இடைச்சங்க நூலெனக்கல், குருகு, வெண்டாளி
யகவலும் சிறந்தவோங்க
இகிலேவர் கவியரங்கேறி புகழ் கொண்டனர்
ஈடில்லா புலமை யதனுல்
கடலரசன் மீண்டும் சுவைகண்ட பூமிபோல்
இடைச்சங்கம் விழுங்கி ஆர்க்க
கன்னித்தமிழ் நாடது கன்னிமணி யாகவே
காட்சியில் தேய்ந்த தம்மா !

சமரச தூதனுய் தொல்காப்பியத் தனிப் புலவன்
தன் ஒளி வலிமையதனுல்
தமிழர்க்குக் காப்பியம்என முறை வகுத்திந்த
தவிப்பினே தீர்த்த மேலோன்
அமரனுய் தமிழ்மக்கள் உளமெலாம் தமிழ்அமிழ்தம்
அணிசெய்ய வந்த சீலன்
அகத்தியருரு பாதம் துதிக்கும் தொல்காப்பியன்
அழகிட்ட தமிழ் வருகவே!

பாண்டியன் மதுரையில் மீண்டும் தமிழ்ச்சங்கம்
பைந்தமிழ் நாதம் ஓங்க
பைந்தமிழ் பாவலர் நல்லந்துவன் நாகர்
பாரிபுகழ் சேந்தம் பூதர்
தூண்டு செந்தமிழ்கீரன் இளந் திருமாறனும்
சிறு மேதாவி கணகாயரும்
சுடர்மிகு புலவர் நாற்பத்தொன்பது பேர்
செந்தமிழ் கொலு விருந்து
கண்டதோர் பதிற்றுப பத்து அகம்புறம் கலி
கவி நெடுங்குறு நற்றிணையும்
காசினிவியக்கும் பரிபாடல் ஐங்குறு நூற்
களிகூத்து வரி பேர் சிறறிசைகளும்
மூண்ட நல்லன்பேரு மூவர் பாண்டியர்கள்
முறையுடன் அரங் கேறவும்
முத்தமிழ் ஓங்க சத்திய ஒளிச்சுடர்
மீண்டது தமிழகத் தே!

அகத்தியன் எனத்தகும் அருள்வொளி தாங்கி
திருவள்ளுவர் வகுத்த நூலும்
அன்னையின் கரலுக்கு அணிசெய்யும் சிலம்பென
அடிகளார் தொகுத்த நூலும்

தகத்தகு தமிழர்க்கு தமிழ் ஒளவைதந்திட்ட
தத்துவக் குறள் நூலதும்
தத்துவக் குவியலாய் மணி மேகலையென்னும்
தமிழ்த் துறவிதந்த நூலும்
புகப்புக இன்பமே நல்கிடும் பத்துப்பாட்டு
புதுமைக்கு ஆன நூலும்
பொய்யாத நால்வர்கள் மெய்யாக சொன்னதோர்
புதுமறை ஆன நூலும்
சுகமெனும் வாழ்வதில் தூயனேக் காணவே
சுடர் ஆழ்வாராதிகள் சொன்ன
சொன்மாலே பூண்ட என்னருந்தமிழே நீ
தொன்மைக்குத் தொன்மை யானுய்

கம்பனும் வில்லியும் கருத்தொத்தக் கூத்தனும்
கவி வெண்பாப் புகழேந்தியும்
கனக செந்தமிழ் கொண்டு கவிவாணர்துதிபாடும்
கன்னித் தமிழ்த்தாய் வருகவே!
அப்புவியில் செந்தமிழ் தனக்குத் தகீலதந்த
அரசனும் குமணன் ஆக
அயிராத கலம்பகம் தனேகேட்கும் இச்சையால்
ஆருயிர் தீயிட்ட நந்தி
உம்பரும் களிக்கள்ள ஒளிச்சுடர் பெற்றவர்
ஓங்கு தாயுமானுர் வள்ளலும்
உண்மையாய் தமிழ்ப்புதுமை ஊட்டிய பாரதி
ஓதும் தமிழ்க் கவிதையும்
நம்பியே நீனேத்துதித்து ஒளிவழியேறும் பல்
நாவலர் கவி யாரமே
நற்றமிழ்த் தாயேநீ ஏற்றருள் புரிகுவை
நல்லடி போற்றி வாழி!

வேறு

பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படியும் பட்டு
பின்னேகுப் பால்சுரந்தும் தூதுசென்றும்
கட்டவிழ்த்து எலும்பை பெண் ஆக்குவித்தும்
கவுணியர்க்காய் மறைக்காட்டில் கதவில் நின்றும்
இட்டமுடன் பாண்டிய நாடாளநாடு நின்றும்
ஏழை தருமக்குத் தமிழ் பாடித்தந்தும்
திட்டமிட்டு தென்னுட்டுச் சிவமே யாகி
சிறைபட்டான் இறையிங்கே தமிழ்த்தொன்மை
யாலே!

ஆழ்வார்கள் தமிழ்ச்சுவையை மாந்தி நிற்க
அணிமாலே சூடிநின்றும் பாய்சுருட்டிப் போந்தும்
தாழ்வின்றி தமிழ் பின்னே தான்நடந்தும்
தனியரங்கம் அறிதுயிலில் மால்துயின்றும்
ஏழ்கடலுக் கப்பாலே பிறந்த சேசவும்
எங்குநிறை மகம்மதுவும் தமிழைவேட்டு
வாழ்கின்ருர் தமிழ்நாட்டில் அன்றும் இன்றும்
மங்காத தமிழ்த்தொன்மை வாழ்த்தவாரீர்.

நாடகத்தில் நீதிமுறை

டி. என். சுகி சுப்பிரமணியம்

குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும் இது சமூகத்தின் குறிக்கோள். இலக்கியத்தின் மனச் சாட்சி என்ன சொல்லுகிறது? தியோன் — வில்லன்— கதைக்கு மிக மிக வேண்டியவன். தர்மம் தின்பதற்கு அதர்மம் தேவைப்படுகிறது என்னும் வேதகாலக சுருத்துப் போன்றது. இவனை முடிவிலே கொல்வது இயற்கை மரபு. அல்லது தண்டிப்பது மரபு.

இலக்கியமே பழிவாங்குவதைக் கூடத் தன்மை யுடன் சப்பைக் கட்டுவதுதான். எந்த இலக்கியத்தை யும் தேடிப்படித்துப் பாருங்கள். அங்கு பழிக்குப் பழி, தலைக்குத் தலை அநீதிக்கு அநீதி இழைக்கப்பட் டிருக்கும்.

ஆனால், மதச்சார்புடைய இலக்கியங்களில் பழி வாங்கும் தன்மை நீசை நிரம்பியது மன்னிப்பது மனித குணம் என்று போதனை செய்வார்கள். போதனை ஒன்றாகவும் செயல் ஒன்றாகவும் இருப்பதுதான் சிருஷ்டி உலகத்துள் நடைபெறும் வேடிக்கைகள்.

வில்லனை பழிவாங்காமல் மன்னித்துவிட்டால் என்ன?

சமூகத்திலுள்ளவர்கள் எழுதியவனைப் பழிவாங் கத் துடிப்பவர்கள். எழுதுகிறவனைப் பாவியாகவும் துரோகியாகவும் நினைப்பார்கள். சமுதாயத்துள் வாழும் மெய்யன்பர்கள் மனித மனம் மன்னிப்பதால் உயருகிறது என்று பாடுபட, மனித மனம் பழிக்குப் பழி வாங்குவதால் நிம்மதியடைகிறது என்று நாடக உலகத்தினர் பாடுபடுகிறார்கள்.

இவ்விரண்டனுள் எது மெய்ப்பாடு?

இந்த முரண்பாடு மேடை இலக்கியத்திற்கும் பக்தி இலக்கியத்திற்கும் மட்டும் இருக்கிறதா? வேறு இடங் களிலும் பரவியுள்ளதா? மற்றைய இடங்களிலும் இந்த முரண்பாட்டைப் பார்க்கலாம்.

வாழ்வது, சிறப்பாக வாழ்வது என்றால் பலரை வஞ்சித்துத்தான் வாழ முடியும். தூரோகம் செய்து தான் வாழ முடியும், சுரண்டித்தான் உயர முடியும். பழிகள் பல செய்யாமல் பட்டங்கள், பதவிகள், மாடிக்கு மாடிகள் சேர்க்க முடியாது! நம்முடைய பொருளாதார வாழ்க்கைக்கு ஒரு வழியையும், நம் முடைய ஆன்மீக வாழ்க்கைக்கு மாறான ஒரு வழியை யும் பின்பற்றுகிறோம். இந்த இரண்டு ததுவங்களும் சந்திக்க முடியாதபடி இரு கோடுகளை வரைந்து அதன்மீது வாழ்க்கை யந்திரத்தை ஓடவிடுகிறோம்.

தம்முடைய வாழ்வில் குழந்தைகளைத் திருத்துவ தாகச் சொல்லி, தாம் அவர்களை இம்சை செய்கிறோம். நாம் செய்வது என்னமோ, அவர்கள் பிற்கால வாழ்க் கை செம்மையாக அமைவதற்காகத்தான். அவர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிறார்கள். காலம் வரும் போது பெற்றோருக்குத் தண்டனை விதிக்கத் தொடங்கு கிறார்கள். தண்டனை கிடைக்கும்போது, 'ஐய்யோ இது அக்கிரமம். தருமத்தின் கண்ணொன்று பாருங் கள் மக்களே!" என்று புலம்புகிறோம்.

இந்த முரண்பாடு திருமணத்துள்ளேயும் புகுந்து கொண்டுவிட்டது. இரு உடல்கள் ஒருமை வாழ்வு வாழ்வதற்காகப் பிறந்தது என்று பழக்கப்படுத்தினர் கள். ஒருவர் தவறுதலே மற்றவர் சகித்துக்கொள்வது தான் திருமண வாழ்க்கை. இடைக்காலத்தே விவாக ரத்து எனும் புதிய எண்ணம் கிளைக்கத் தொடங்கி யது. விவாகரத்து முதல் திருமணத்திற்குத் தண்டனை யாகவும், மறுமணத்திற்கு அனுமதிச் சீட்டாகவும் எண்ணும் மனப்பக்குவம் உருவாகிவிட்டது. ஒரு முறை பெற்ற தண்டனை போதும் மறு தண்டனை வேண்டாம், வேண்டாமென்று திருமணத்தை விட்டு ஓடுங்கிப் போகிறவர்களையும் பார்க்கிறோம்.

இதுபோன்ற தண்டனை முறைகள் பள்ளிக்கூடங் களிலும் நிலவி வந்தன; வருகின்றன.

மாணுக்கர்களே 'கோதண்டம் போட்டும்' உப்புத் தடவி உரித்தும் வந்த ஆசிரியர்கள் அந்நாளில் இருந்தார்கள். இந்நாளில்? ஆசிரியர்களைப் பழிக்குப் பழி வாங்கும் மாணவர்கள் கையோங்கியிருக்கிறது. ஆசிரியர்கள் மீதும், சமுதாயத்தின் மீதும் வெட்டுக்கிளிகள் பயிரை அழிப்பதபோன்று படையெடுக்கிறார்கள். முற்பகல் செய்த தீவினையை பிற்பகலில் சமூகத்திடை பார்க்கிறோம்.

முதலாளித்துவம் நடத்திய மூர்க்கத்தனங்களே ஆங்காங்கு அறிவோம். மரங்களில் கட்டி வைத்தும் நகக்கண்ணில் ஊசி ஏற்றியும் ஏழைத் தொழிலாளர்களே வதைத்தனர். இன்று முதலாளிகள் நிலைமை என்ன ?

அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு முதலீடும் இல்லை ; அலுவலகமும் இல்லை ; லாபமும் இல்லை என்று தலைமேல் கையைத் தவிக்கிறார்கள். தொழிலாளித்துவ கையோங்கி நிற்பதை நெடுகிலும் பார்க்கிறோம். அடிக்கடி பஞ்சப்படி, போனஸ் என்ற பெயரிலே திடும்திடுமென்று முதலாளிகளின் முதுகெலும்பை முறித்தெடுக்கிறார்கள்.

அதாவது பழிக்குப் பழி, அறிவுக்கு அறிவு அடிக்கு அடி என்று வஞ்சம் தீர்ப்பதை இன்று தொழில் உலகத்தில் பார்க்கிறோம்.

இந்தப் பழிவாங்கும் செயல் மனித மனத்திலும், பண வங்கிகளிலும், சர்க்கார் இலாகாகளிலும்மட்டுமா இருக்கின்றன ?

இயற்கையிடம்கூட இருக்கிறது. அறிவாற்றலாலும், விஞ்ஞானத் தீவினையினும் மனமாதாவின் அடிவயிற்றைக் கொத்திக் கிளறி கனிவர்க்கங்களைத் தோண்டித் தோண்டி தன் காலத்துக்கு அப்பாற்பட்ட சுகபோகங்களைத் துய்க்க நினைக்கும் மனித மந்தைக் கூட்டத்திற்கு இயற்கை பூகம்பத்தையும், புயற்காற்றையும், புரட்சி ஒலங்களையும் உண்டாக்குகிறது. நீர் ஊற்றுகள் ஆங்காங்கு வற்றுகின்றன. பிரம்மாண்டமான மில்கள் அடைக்கப்படுகின்றன. மற்றொரு பக்கம் பல நூறு பல நூறு ஆண்டுகளாக நஞ்சை நிலங்களாக நெல்லும் கரும்பும் தந்த வீனைநிலங்கள் மீது வீடுகளாகட்டுகிறோம் ? இல்லை, பஞ்சத்தையும் படியரிசியையும் அங்கு கட்டுகிறோம்.

ஏழைகள் பட்டினி வேகம், உரிமை உணர்ச்சி பொருளின் வளர்ச்சிக்குப் பதிலாக பொருள்கள் அழிக்கப்படுகின்றன. நேச உடமைகள் சாம்பலாகின்றன. அதாவது பழிக்குப்பழி ஆங்காங்கு திடுமென்று பற்றி எரிவதைப் பார்க்கிறோம்.

மக்கள் இனமே மக்கள் இனத்திற்கு விரோதமாக இருப்பதை இன்று அனுபவிக்கும் துயரைகளில் குடும்பக் கட்டுப்பாடு நினைப்பும் ஒன்று. மக்கள் பெருக்கத்தால் வளம் அழிகிறது. பண்பாடு அழிகிறது. நாகரிகம் நலிகிறது. மனிதப் பெருக்கமே மனித இனத்தின் எதிரியாக வளர்ந்துவிட்டதைப் பார்த்து உலகமே பயந்து கொண்டிருக்கிறது.

உள்நாட்டுப் போர் – அந்நிய நாட்டுப் படையெடுப்பைவிட பயங்கரமான சதிச்செயல் இனப் பெருக்கம். எனவே கட்டுப்பாடு செய்ய எண்ணுகிறார்கள்.

நன்மைக்காகப் பிறந்த கண்ணீர் புகை, ரிட் மனுக்கள், ரெயில் போக்குவரத்துகள் யாவும் பழிக்குப் பழி வாங்கும் படலத்தில் கையாளப்படுகின்றன. கூட்ட நடவடிக்கைள் நிகழும்போது நல்லவர்களும் இதன் காரணமாக கஷ்டம் அனுபவிக்க வேண்டியதாகிறது.

இன்றைய நாகரிக தொழிற்சங்கள். அரசியல் கட்சிகள், இலக்கிய குழுக்கள் புதிய சகாப்தத்தை நிர்மாணிக்கப் போவதாக புதிய குறிக்கோள்களை வெளியிடுகிறார்கள்.

நடைமுறை பாதை என்ன?

முன்னம் இருந்த கட்சிகள், சபைகள், குழுக்கள் செய்த அதே பழிக்குப்பழி கதையைப் புதிய வடிவம் புதிய காரணம் காட்டித் தீர்த்துக் காட்டுகின்றனர்.

எனவே நியாயம் நீதியாவும் நமாற்று வித்தைகள்; நம்பும்படியாகவும் பயமுந்தும் படியாகவும் அமைத்துச் செய்கின்ற கொடுமைகள்; மனித மனத்தில் எழுகின்ற அச்சத்தையும் அடிமைத் தனத்தையும் புதிய முதலாளிகள் புதிய நம்பிக்கைகள் என்னும் மூலாம்பூசி நடத்துகிறார்கள். அறிவு சார்ந்தவர்கள் நடத்தும் தில்லு முல்லுகள் தாம் நீதிமுறை. மனச்சாட்சி துளியும் இல்லாத, பொது நோக்கம் ஏதும் இல்லாத, தன்னல வாதியான போக்கிரிகளே ஆலோசகர்களாக, திறமைசாலிகளாக, கூட்டாளிகளாகச் சேர்த்துக்கொண்டு நடத்தும் சர்க்கஸ் வேடிக்கை தான் நீதிமுறை. நீதிமுறையிலுள்ள கேலிக்கூத்துக் களைவிட, சிறந்த நாடகங்கள் இலக்கியத்துள் இடம் பெற முடியாது.

நம்மிடைப் பிறந்த சட்டங்கள் யாவும் கலப்பில் லாத புரட்டுக்காரியங்களின் வஜ்ஜிரமயமான தூண்கள். மனிதர்களிடையே அறிவை வளர்த்துக்கொண்ட ஒரு சிலர் கூடிப் பேசி, அறிவுமட்டமான தடியர்களின் உதவியாலும் பாதுகாப்பாலும் ஒத்தாசை உதவியாலும், மற்றவர்களை ஒடுக்குவதுதான் நீதிமன்றங்களில் வழங்கப்படும் நியாயத் தீர்ப்புகள்.

உதாரணம் ஒன்றைப்பாருங்கள். புலிவேட்டைக்குப் போகிறான் மனிதன். புலியைக் கொல்வது வேட்டை; மனிதரைப் புலிகொல்வது கொடூரம்! இவன் அறிவுள்ளவனா? வேட்டைக்கும் கொடூரத்திற்

கும் எத்தனை தொந்தம் இருக்கிறதோ, இதே போன்றுதான் அறிவின் மிக்கார் சுகபோகிகள், சட்டத்தின் துணைகொண்டவர்கள் வழங்கும் நீதிமுறைகளும்!

மனித சமுதாயத்துள் நாற்றுக்கு நாறு மாற்றுக் குறையாத சுத்தமான நீதி வழங்கிவிட முடியாது. அநியாய கலப்படமுள்ள நீதியைத்தான் வழங்க முடியும். அறிவு வளர்ச்சி என்னும் காரணத்தால் காலங்களுக்கொப்ப நீதியை மாற்றுவார்கள்; சில சமயம் மரபு காரணமாக அநீதியை மாற்றாது வைத்திருப்பார்கள் நீதிகள் அனைத்திலும் கறைபடிந்த எண்ணங்கள் இருக்கின்றன; தூய்மை இல்லை. ஒரு சில சாதி சமய சமூகர்களின் தன்னலம் அங்கு இருப்பதைக் காணுகிறோம்.

நீதியின்மீது இருக்கவேண்டிய நேர்மையை நீதிபதிகளிடம்கூட காணமுடியவில்லை.

பூசாரிகளிடம் பக்தியில்லை.

வைத்தியர்களிடம் மருத்துவத்திறமை இல்லை. திறமையுள்ளவர்களிடம் சமுதாய அன்பு இல்லை.

வக்கில்களிடம் சட்ட ஞானமும், பொறியர்களிடம் கட்டிட கலைஞானமும், பேராசிரியர்களிடம் கல்வி ஞானமும் இல்லாததைப் பார்க்கிறோம். பட்டம் பெறுவதும் பதவிவகிப்பதும்தான் இந்நாளில் காணக்கிடைக்கும் கல்வியாக இருக்கிறது. திடமான தீர்க்கமான பற்று இல்லாமல் மேல்போக்கான சமுதாயத்தைத்தான் பார்க்கிறோம். உலகத்திற்குக் கல்வி உலகத்திற்கு சுயிட்சம், உலகத்திற்கு நன்மை, உலகத்திற்கு நீதி ...என்னும் உயர் நோக்கமுள்ளவர்கள் நேர்மை வாதிகள் வரக்காணேம்.

ஆயினும் கல்வி, சுயிட்சம், நன்மை, நீதி, தர்மம், ஈகை, அன்பு, வளம், வாக்கு யாவற்றையும் தன்னைச் சார்ந்தவர்களுக்கோ தன் குடும்பத்திற்கோ மட்டுமோ, தன் இனத்தவர், தன் கட்சியாளர்களுக்கோ தேடுவதில் முனைகிறார்கள்.

பரந்த உலகத்தைப் பாலிவன மாக்கினும் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் பாலிவனத்தடை சோகிவனமாக்க நினைக்கும் செய்கைதான் காணமுடிகிறது.

எனவே, பழியும் வஞ்சனையும் வற்றாது வளர்ந்து யாங்கணும் படை நோய் கிருமி போல பதுங்கி இருக்கிறதைப் பார்க்கிறோம். அசந்தர்ப்பங்கள் உருவாகும்போது தீய சக்திகள் திடுமென திரண்டு விடுகின்றன. சமூகத்தில் வளர்ந்த நல்ல பகுதிகளையும் இவை அழித்துவிடுகின்றன.

நீதி நிர்வாகத்துறைகளில், ஆட்சித்துறைகளில் இருக்கின்ற அமைதியையும், எதிர்ப்பார்க்கின்ற குமுப்பத்தையும் எடைபோட்டு, சகஜ நிலையை சமனப்படுத்தப் பாடுபடுகிறார்கள். வருங்காலத்தையும் சென்றகாலச் சிறப்பையும் எண்ணிப் பார்த்துத் தவறுகளைத் திருத்தாமல் மறைத்துவிடுகிறார்கள். மன்னித்துவிடுகிறார்கள். மன்னிப்பதும் மறைப்பதும் இதய சுத்தத்தோடு நடைபெறுதல், அரசியல் சட்டவியல் சூதாட்டத்திற்குப் பயனுள்ள காரியமாக வைத்துக்கொண்டு மறைக்கிறார்கள். பிரசார முறையில் பொற்காலம் உருவாகிறது என்று படம் பிடிக்கிறார்கள். நீதியின் பெயரால், நிர்வாகத்தின் பெயரால் அநீதிகள் புதிய வடிவங்களில் பயிர் செய்யப்படுகின்றன.

பழிக்குப்பழி வாங்கும் குணம், வஞ்சனை செய்யும் குணம், மனித இனத்திற்குள் அதிக காலமாகப் பதுங்கி இருக்கிறதா? இல்லை. நீதி, நியாயம் பார்க்கும் நல்ல இயல்புகள் மனித இனத்திற்குள் வளர்ந்து இருக்கிறதா ?

மனித சமுதாயத்தைப் பார்க்கும்போது நீதியின் வயது அநீதியின் வயதைவிடக் குறைவு. மிக மிகக் குறைவு. அநியாயத்தின் வயதும் அதிகம்; அளவும் அதிகம். பரிமாணமும் மிக மிக அதிகம்.

என்னதான் வேகமாக நீதியை வளர்க்க நல்லவர்கள் முயன்றாலும் அவர்கள் வாயும் வயறும் பதவி உயர்வும் அநீதியாளர்கள் ஆட்சிமுறைக்குள் கட்டிப் போடப்பட்டுள்ளன.

ஒரு பக்கத்து நீதி மறு பக்கத்திலே அநீதியாகக் கிளைக்கிறது. அநீதி இழைக்காமல் நீதியைச் செயல்பட முடியாது என்றும் பழக்கப்படுத்திக்கொண்டுள்ளார்கள். சட்டநீதிகள் அநியாயத்தின் பக்கமே அதிகமாகச் சாய்ந்துள்ளது போன்று இலக்கிய நீதியும் (பொயட்டிக்ஜஸ்டிஸ்) வெறும் கேலிக்கூத்தாக—அதாவது பழிக்குப்பழி வாங்கும் வெறியாட்டமாக இருக்கிறது.

எந்தக் கதையின் சட்டத்தையும் (plot) பார்த்தால், அதன் அடிப்படை பழிக்குப்பழி, வஞ்சனைக்கு வஞ்சனை, ரத்தத்திற்கு ரத்தம் என்றே அமைந்து கிடப்பதைப் பார்க்கிறோம்.

தண்டிப்பதில் தவறு வராமல், சரிநிகர் சமமாக உருவாக்குவதுதான் படைப்பாளர் நோக்கம். கொலைக்குக் கொலையாக அழிவுக்கு அழிவாகக் கண்ணகி செய்தாள் என்பது இளங்கோவடிகள் தரும் தீர்ப்பு. துறவியான இளங்கோவடிகள் கொலைக்கும் அழிவுக்கும் ஆதரவு தந்தால், இல்லறத்தில் ஆசை கொண்ட கதாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள் எழுதும் காவ்யங்கள், கதைகளில் அழிவைக் காணுமல் மன்னிப்பைக் காணமுடியும்.

இந்நாள் தப்பறியும் இலக்கியம் ஏன் வளருகிறது. முதல் அத்தியாயத்தில் நடக்கும் கொலையைச் செய்தவன் யார்? அவனே இறுதி அத்தியாயத்தில் கொல்வதற்குத்தான் தேடுகிறோம்.

உயிரோடு இருக்கின்றவர்களைக் கொன்று குவிக்கும் வாழ்க்கை நியதியை இலக்கியத்துள்ளும் பரப்புகிறார்கள். தவறு செய்கிறவனைத் தண்டிப்பதும் நல்லவர்களுக்குப் பரிசுகள் பாராட்டுவதும் இலக்கிய நீதி.

உண்மையான கல்வி, உயர்வான கல்வி, இவற்றின் நோக்கம் மனிதனை மன்னிப்பது என்று இருக்குமானால், உயர்ந்த இலக்கியங்கள் யாவும் மன்னிப்பைத் தான் படைக்க வேண்டும்.

மக்களைத் திருத்துவதற்குக் கூட பயன்பட வேண்டும் என்ற எண்ணம் மாறினால் போதும்.

அநீதியைத் திருத்துவதற்காக நாம் இல்லை; நீதி வழியே நடப்பதற்காகத்தான் நாம் இருக்கிறோம் என்னும் ஒருமுக பாதையிலே — காந்தீயப் பாதையிலே நடப்போம்.

அநீதியைத் திருத்துவதற்குப் பதிலாக நீதியாக நடப்பது என்பது புதியவகை மனச்சாட்சியாகும். குற்ற வாளியை மறப்போம்; குற்றத்தை நினைப்போம் என்பதுதான் புதிய வகை மனச்சாட்சி.

மனச்சாட்சியிலே புதிய மனச்சாட்சி, பழைய மனச்சாட்சி எனக் கூறுவதைக்கூட நீங்கள் வெறுக்கலாம். மனச்சாட்சி யென்பது காலத்தால் மாறக் கூடியது. கண்ணகி என்னும் பாத்திரம் அரசனையும் மதுரையையும் எரித்தாள். இந்நாளில் ஒரு பாத்திரம் பழிக்குப் பழியாக ஒரு மனிதனையும் அவன் வாழும் பகுதியையும் எரிக்க முயன்றால் நீதியிடம் பக்தி கொண்ட அறிவின் மிக்கார் அவனைச் சிறைச்சாலைக்குள் அடைப்பார்கள். எனவேதான் நீதி மன்றங்களில் மட்டுமல்லாமல் இலக்கிய சிருஷ்டிகளிலும் புதிய நீதி முறைகள் வருதல் வேண்டும்.

வாழ்க்கையிலே கடைப்பிடிக்காமல் இலக்கியத்திற்கென்றும் சில நீதிகள் வைத்திருக்கிறார்கள். இலக்கியத்துள் கடைப்பிடிக்காமல், வாழ்க்கைக்கென்றும் சில நீதிகள் வைத்திருக்கிறார்கள்.

வேறுபட்ட இரண்டுவகை நீதிகளும் அழிந்து வாழ்வுக்கும் இலக்கியத்திற்கும் ஒரே தன்மையான நியதிகள் — நீதிகள் நிலவினால்தான் உண்மையான உலகம் நீதியைப் பாதுகாக்கும் உலகம் வளர முடியும்.

நாடகத்தில் வருகின்ற நீதிகள் வாழ்க்கையிலும், வாழ்க்கையில் வருகின்ற நீதிகள் நாடகத்திலும் ஒரே தன்மையுடன் காணப்படுமானால் நாம் உண்மையும் உயர்வும் நிறைந்த ஆன்மீக வாழ்வு வாழ முடியும். இல்லாதபோனால் ஆண்டிகள் வாழ்வு தான் இரு பக்கத்திலும் கானகக் கிடைக்கும்.

அன்னை எனும் ஆலயம்

★

- உமா குருமூர்த்தி -

வியிலே எதையோ குழைத்துத் தடவினார்கள். அப்பா... ...ஒரே கசப்பு!

"குழந்தைக்குச் செவ்வெண்ணெய் புகட்டி சேனை வைத்தாயோ தங்கம்?..." என்ற குரலைத் தொடர்ந்து, "என்னடி முழிக்கறே? இந்தப் பொன் சங்கிலியை எடுத்து, ஒரு துளி விளக்கெண்ணெயில் உறைத்து, அதில் துளி வெல்லத்தைக் குழைத்து, குழந்தையின் வாயில் வை!..." என்று எவரோ அதிகாரம் செய்தார்கள்.

'வெல்லமா இது!...சே!.. எனக்கு இனிப்பே பிடிக்காதே!" முகத்தைச் சுளித்துக் குரல் கொடுத்த என் வாயிலிருந்து 'சேனை' வழிந்தது!

"...பரங்கும்மா!...உங்க பேத்திக்கு இனிப்புப் பிடிக்கலே துப்பிட்டது. இந்தக் காலத்துப் பிள்ளையாச்சே! பிறக்கிறபோதே எல்லாம் தெரிஞ்சுருக்கு!..."

நர்ஸ் தங்கத்தின் குரல் கணீரென்று கேட்டது.

உண்மைதான்!.. .. விளக்கெண்ணெயின் ருசியை விழுங்கிவிட்டு வெல்லத்தைத்தான், நான் துப்பினேன்! மனிதப் பிறவியே, அதிலும் பெண் ஜன்மமே கசப்பு நிறைந்ததுதான் என்பதைத் தாயின் 'கரு' விலேயே புரிந்துகொண்டுவிட்டேனே?

'இதுவும் பெண் தானடி லட்சுமி?..."

அலுத்த ஒரு குரல்.

"அதென்னம்மா இப்படிக் கேட்கிறீர்கள்?..அஞ்சாவது பெண் கெஞ்சினாலும் கிடைக்காது!..."

ஐயிரு திங்கள் சுமந்து, அங்கமெல்லாம் நோக, அருமையுடன் பெற்றெடுத்த அன்னையின் அன்புக் குரல் பதில் அளித்தது.

என் அகம் பூரித்தது!...மனம் துடித்தது. என்னுள் இந்த அன்னைக்கு ஏற்படப்போகும் சுகம்தான் என்ன? எதற்காக இப்பிறவி எடுத்தேன்?

தாயின் உதரத்தில் உள்ளபோதே சகல தத்துவங்களையும் அறிந்து, அனுபவித்தது போன்ற வெறுப்பு நிலையில் பிஞ்சு மனம் அலுத்துக்கொண்டது.

"என்ன தங்கம்! குழந்தையைக் கவனிக்காமல் தரையிலேயே போட்டுவிட்டாய்?..... எடுத்துத் துடைத்து, இப்படிக் கட்டிலில் என் பக்கம் விடு!..."

குடியிருந்த கோயிலிருந்து நர்ஸுக்கு உத்தவு பிறந்தது. அவள் சிரித்தாள்.

"இதுவும் பெண்ணுப்பிறந்திடுச்சேன்னு சிலர் அழுவாங்க! நீங்க ஆனந்தப் படறீங்களா..."

தங்கத்துக்கு வியப்பு.

அப்படி அந்த அன்னை அழுவாளேயாகில், இப்படி ஒரு பிறவி எடுத்ததில் நான் பெறும் இன்பம் என்ன? அடிமேலடிபட்ட அம்மி நகருவதுபோல, ஆளுக்கு ஒன்று சொல்லக் கேட்ட அம்மா அழுதுவிடுவாளோ?

ஆனால் அந்தத் தாய் அழவில்லை! அடிபட்ட புலி போலச் சீறினாள்!

"பெண் என்றால் மட்டம் என்று ஏன் நினைக்க வேண்டும் தங்கம்? ஆணுக்கும் பெண்ணுக்கும், சுமப்பதும், நோவுபடுவதும் பேதப்படுகிறதா? இந்தக் காலத்தில் பெண்களும் ஆண்களுக்குச் சமமாய் எந்தத் துறையிலும் உயர்ந்து நிற்கிறார்கள். நீங்கள் எல்லோரும் குறைப்பட்டுக் கொள்ளும் இவள் டாக்டராக வோ, ஆசிரியையாகவோ ஆகி நிறைந்த வாழ்வு வாழப் போகிறாள் பார்!..."

என் மெய் சிலிர்த்தது. பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வதா?... நானா?... எனக்குச் சிரிப்புத் தான் வந்தது!

"அம்மா! அம்மா! அதுகுள்ளே சிரிக்குதும்மா குழந்தை!" தங்கம் ஆரவாரம் செய்தாள்.

"உண்மையிலேயே குழந்தை நல்ல அழகு. கருகருன்னு, சுருட்டை சுருட்டையா, மோதிரச் சுருள் போல எவ்வளவு தலையிர்?... மூக்கும் விழியும் மோகனச் சிரிப்பும்... சுவர்ணப் பதுமைபோல..."

தங்கத்தின் வர்ணனைக்குப் பாட்டியிடமிருந்து பதில் எழுந்தது. "ஆமாம்! அழகான பெண்ணுப்பிறந்தால் மட்டும் பெருமைப்பட்டால் போதுமா?... அவளையும்கூட அடிமைகொள்ள வரப்போறவனுக்கு எவ்வளவோ வீலே கொடுக்கத்தானே வேண்டியிருக்கு! அதுதானே 'பெண்ணே, புண்ணே' என்கிறீர்கள்!..."

கலித்துக் கொண்டே பாட்டி வெள்ளரிப் பாலாடையில், சர்க்கரைத் தண்ணீர் எடுத்து வந்தாள்.

"நீ வீட்டுக்குப் போறத்துகுள்ளே குழந்தைக்கு இதைப் புகட்டிவிட்டுப் போ!..." என்றாள்.

தங்கம் பாலாடையை வாயருகில் கொண்டு வந்ததுமே எனக்கு அழுகை வெடித்துக்கொண்டு வந்தது.

"சூடு அதிகமானால் ஆறட்டும் தங்கம்!.." அன்னையின் பரிவு.

"இல்லேம்மா!... இவளுக்கு இனிப்புப் பிடிக்கவில்லே. உப்பும் உறைப்புமா ரசம் வைத்து ஊத்துங்க!... பொல்லாத குட்டிக்கு!"

நர்ஸ் சிரித்தாள்.

ஆ! ரசம்!... அதுவும் அம்மா சாப்பிடும் வேப்பம்பூ ரசம்... நினைக்கும்போதே மணத்தது. அந்தத் தாயின் மணி வயிற்றில் கருவாக நான் உருவான நாள் முதல், வேம்பு ரசமும், மிளகு தக்காளி வற்றலும்தான் அவள் ஜீவநாடியாக ஆயிற்று.

அந்த ருசிதான் என்னுள் பரவிப் படர்ந்து, கசப்பை வளர்த்து விட்டதோ?

மூன்றும் நாள்!

அம்மாவுக்குப் 'பத்தியம்' போட வேண்டிய தினம். பிஞ்சுக் கத்தரிக்காய் பொரித்த குழம்பும், சுட்ட அப்பளமும் செய்து வைத்தாள் பாட்டி. ஆனால் அம்மாவுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லே; அவள் விரும்பியது வேப்பம் பூ ரசம்தான்!

"நன்றாயிருக்குதடி! பத்துமாசமாய் அந்த ரசத்தைக் குடித்து சதைக் கெட்டுப் போச்சு!... வெந்நீரை விட்டுச் சாப்பிட்டாற்போல! நாங்க எல்லாம் பிள்ளை குட்டி பெறவில்லேயா!.. உனக்கு மட்டும் ஒவியமா?..."

பாட்டி வெறுப்புடன், தீராப்பொறியே என அம்மா கேட்டு செய்துகொடுத்தாள். அன்று என் வயிறு நிரம்பிப் பூரித்தது!

எனக்குப் பெயரிடும் தினம் வந்தது.

"இந்தப் பெண்ணை உண்டானது முதல் மன்னிக்குக் கசப்புத்தான் பிரியமாயிருக்கிறது... 'வேம்பு' என்று வைக்கலாம்!..." என்றாள் சிற்றப்பா!... வேடிக்கையாக!

"நல்லாயிருக்கு வேம்புவும் சாம்புவும்!... குரல் இனிமை கோடி பெறும் இவளுக்கு... இவள் கோகிலம்!" என்றாள் அருமைத் தாய்.

மறுதினம் அம்மாவின் அம்மா வந்தாள். மகளுக்கு வேண்டியதைச் செய்ய விரும்பிய அவளுடன் மல்லுக்கு நின்றாள் அப்பாவின் அம்மா! தன்னுடன் ஊருக்கு அழைத்துச் செல்ல விரும்பிய அம்மாவின் விருப்பத்தை மகள் நிராகரித்ததால் முடிவில் அம்மாவின் அம்மா மூன்று தினங்களில் ஊர் திரும்ப, அடுத்த சில தினங்களில் அப்பாவின் அம்மாவும் கோபித்துக் கொண்டு சின்னப்பிள்ளே யிடம் போய் விட்டாள்!

பச்சை உடம்புடன் அந்த அன்னை பட்ட பாடு!...

பொறுமையின் உருவாம் இந்தத் தாயிடம் கருவாய் ஜனித்து, திருவாய் அவதரித்து, அவளுக்கு மேன்மேலும் கஷ்டம் தந்து வேடிக்கை பார்க்கிறேனே!

நாட்களின் தேய்விலே நான் வளர்ந்தேன். அன்னை வரும் 'பெண்தானே' என்று அலட்சியம் செய்தாலும், அன்னையின் அரவணைப்பிலே அழகும் அறிவும் சுடர்விட ஒளிர்ந்தேன். அதிகாலையில் அம்மா எழும்போது கூடவே எழுவேன்; பல் தேய்க்கும் போதும், காபி போடும்போதும், வேலைகள் செய்யும்போதும் அம்மாவை ஆசையுடன் பார்த்தபடி நிற்பேன்; எப்போதும் அவளிடமே அகலவே மாட்டேன்.

வாழ்வில் தான் அவளுக்குத் துயரங்கள் எத்தனை? பாடுகள் எத்தனை?... அத்தனைக்கும் ஈடு கொடுத்து... அன்பு குறையாமல்...

தாய்மை என்பது உப்பாக, அன்னை ஒரு கல்லாக அம்மா என்பவள் அன்புருவாய், தியாகியாய், சேவகியாய், அனைத்தும் தாங்கும் சக்தியாய்... அன்னை ஒரு ஆலயமாய்...

ஆதி சக்தியே அன்னை தானே!

அன்று ..

காலையில் எழும்போதே எனக்கு தலைவலி; உடல் அனலாகக் காய்வது போலிருந்தது. அம்மா என்னைக் கண்டு பதறிப் போனாள். அப்பாவிடம் கூறி டாக்டர் வீட்டுக்குக் கூட்டிப் போகச் சொன்னாள்.

ஆச்சரியம்! டாக்டர் கொடுத்த கசப்பு மருந்து எனக்கு இனித்தது!... கசப்பு நிறைந்த இவ்வுலக வாழ்வை விட்டு, விடைபெறப் போகிறேன் என்பதாலோ!...

மாலை வந்தது. சுவாமி விளக்கேற்றி விட்டு, மருந்து அலமாரியைத் திறந்தாள் அம்மா. எப் போதும் அதில் எனக்குத் தேவையான தின்பண் டங்கள் இருக்கும். அம்மா கொடுப்பதை ஆவலு டன் வாங்கித் தின்பேன். இன்னும் அந்த வழக் கத்துக்கேற்ப என் கை தானாக நீண்டது.

"...உனக்கு உடம்பு சரியில் லேடா கண்ணு!... ஒன்றும் தின்னக் கூடாது!..." என்ற அன்னை ஒரு சிமிட்டா சர்க்கரையை எடுத்து என் உள்ளங்கையில் வைத்தாள். இனிப்பே பிடிக் காதவளாயினும் அன்னை ஊந்த இனிப்பு அமுத மாக என்னுள் பரவியது.

மருந்தை அருந்திவிட்டுச் சற்றே கண்ணயர்ந் தேன். வலிய இரு கரங்கள் — இரும்பணைய இரு பூகக் கரங்கள் என்னை அணைத்துத் தூக்கி எடுத் தன.

ஆயிற்று; அன்னையுடன் அளவளாவிய என் ஆயுள் முடிந்து விடப்போகிறதோ! பூவுலகில் என் ஜன்மம் முடிவு பெறப் போகிறதோ!

உள்மனம் உணர்ந்து கொண்ட உண்மையை உடல் ஒப்புக் கொள்ள மறுத்து, காலனின் கடும் பிடிக்குள் அகப்படாமல் துவண்டு துடிக்கையில், "ஐயோ! குழந்தைக்கு வலிப்புப்போல கையும் காலும் இழுக்கிறதே! டாக்டரைக் கூட்டி வாருங் களேன்!..." என்று பறந்தாள் அம்மா. மடியி லிட்டு என்னை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

அன்னையின் அன்புப் பிடியா?...

காலனின் இரும்புப் பிடியா?

எது வெற்றி பெறும்?

ஐயோ! முடிவில் அன்புக்கு, இழப்பையா பரி சாகத் தரப்போகிறேன்! முடியாது!... முடியவே முடியாது!...

'அன்பின் வலிமை'யில் சிக்கி, வாழ்வின் கசப்பை மறந்துவிடாதே. நீ வந்த வேலை முடிந்து விட்டது...' என்று என்னுள் ஒரு குரல் ஒலித் தது.

"நான் வருகிறேன். இனி அவசியமானால் சொல்லி அனுப்புங்கள்..." என்றபடி டாக்டர் விடை பெற்றுக் கொண்டார். அம்மா அந்த 'இனி' என்பதன் பொருளைப் புரிந்து கொண்டாள்.

"என்ன டாக்டர், இனி..."

அம்மா மேலே கேட்குமுன்பு, "ஒன்றுமில்லை. இரவு குழந்தை நிம்மதியாகத் தூங்கட்டும்... காலை யில் சொல்லி அனுப்பலாம்!..." என்றார் அப்பாவி அப்பா.

எனக்குச் சிரிப்பு வந்தது!

"...இதோ சிரிக்கிறாள் பார்! கோகுல் சிரிக்கிறாள் பார்! ஜுரம் எல்லாம் போய்விட்டது!" என்றபடி போர்வையை இழுத்து மூடினார் அப்பா.

அம்மாவின் வேதனை நிறைந்த முகத்தை ஒருதரம் நோக்கிப் புன்னகைத்தேன். தன் துயரத்தை யெல் லாம் உள்ளடக்கிக்கொண்டு அன்னையும் மென்னகை புரிந்தாள்.

"அவ்வளவுதான்!.....கோகுல் இனி நமக்குப் பிரபஞ்சத்தில்லை.....அம்பிகையின் சொத்தாகிவிட் டாள் அவள்!..."

அம்மா குமுறியபடியே கூறினாள்.

"தூங்குகிற குழந்தையைக் கண்டு என்ன உளறு கிறாய்? பைத்தியமா உனக்கு?..."

அப்பா ருத்திரமூர்த்தியானார்.

அப்பாவின் அறியாமையைக் கண்டு அம்மா என்ன சொல்வாள்? தன் உள்ளக் குமுறலை அடக்கிக் கொள்ள அரும்பாடுபட்டவளாய் வீட்டுக் கதவுகளை யெல்லாம் இழுத்து மூடினாள். தூங்குகிற தன் மற்றக் குழந்தைகளை எழுப்பினாள். அப்பா சொல்லச் சொல் லக் கேட்காமல் என்னைத் தூக்கிக்கொண்டு ரேழிக்கு வந்து என்னைத் தன் மடியில் கிடத்திக் கொண்டாள்.

"கோகுல்!...அடி கோகுல்!.....என்னை விட்டுப் போகிறாயா?..."

அண்டம் அதிர்ந்தது. அந்த அன்னையின் அடிவயிற்றில் காலன் இட்ட தீயின் உக்கிரத்தில் ஊரே விழித்துக்கொண்டது.

'இதுவும் பெண்ணு?' என்று ஊரும் உற்றாரும் அலுத்து வெறுத்து என்னை ஏசியபோது, "இந்தப் பெண்ணு?...அஞ்சாவது பெண்ணெருளும் கிடைக் காது!... இப்படிக் குறைப்பட்டுக் கொள்ளாதீர்! இவள் தான் உலகம் புகழ உயிர்வாழ்வு வாழ்வாள்!" என்று பெருமைப்பட்ட பெற்ற வயிற்றில் பிடி அக்கினியை அள்ளி இறைத்துவிட்டு.....

ஐயோ!...போகிறேன்!...அருமை அன்னையை விட்டுப் போகிறேனே!

* * *

"வரவேணும் அபர்ணு!...உன் பூவுலக வாசம் முடிந்ததா? இப்போதாவது உன் ஆசை தீர்ந்ததா? இரண்டு வருடமாய், நீ இன்றி நான் இருந்ததாகவே இல்லே..."

ஆவலுடன் இருகை நீட்டி அம்பிகையை வரவேற்ற எம்பெருமான் அவள் முகவாட்டத்தைக் கண்டு திடுக்கிட்டார்.

"ஏன் முகவாட்டம் உமா? வாழ்வு எப்படியிருந்தது வையகத்திலே!..."

அன்புடன் அணைத்த அரவணிநாதனே விலக்கி, அகம்பதற உமையாள் படபடத்தாள்.

"அநியாயம் நாதா!.. அநியாயம்!..."

"....எது அநியாயம் சாம்பவி?..... வாழ்வா, சாவா?..."

சிரித்தபடியே கேட்டுவிட்டு ஆவலுடன் அம்பிகையின் முகத்தை ஏறிட்டு நோக்கினர் அம்பலவாணன்.

"இரண்டுமேதான்! வாழ்வின் அநியாயத்தைக் கூடத் தாங்கிவிடலாம். சாவின் கொடுமையைத் தாளவே முடியாது. ஐயோ!... அந்த அன்னையின் துடிப்பு... பெற்ற லயிறு பற்றி எரிகையில் எமன்கூட பஸ்மமாகிவிடுவான் போலிருந்தது..."

"இதுதான் வாழ்வு, சக்தி!... இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதை இயல்பாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு இனி தானே அந்தத் தாய்க்கு வந்துவிடும்! இதோ, இங்கே பார்!..."

அகண்ட தன் மார்புடன் அணைத்த நிலையிலேயே அம்பிகைக்குத் தன் அபய கரத்தைக் காட்டினார் ஈசன்.

ஆவலுடன் ஆண்டவனின் அங்கையை உற்றுப் பார்த்தாள் அகிலாண்டேஸ்வரி.

"போனவள் போய்விட்டாள்! இனி இருப்பவர்கள் நன்றாக இருக்க நீங்கள் திடமாய் இருந்தால் தானே முடியும்?....இப்படிச் சாப்பிடாமல், தூங்காமல் உடம்பைக் கெடுத்துக்கொண்டால் எப்படி?..... கன்னித் தெய்வமாய் நின்று அவள்தான் நம்மைக் காக்கவேண்டும்..." என்று குழந்தையைப் பறி கொடுத்த தாய் கணவனைத் தேற்றிக்கொண்டிருந்த காட்சி அதில் விரிந்தது.

தேவியின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"பார்த்தாயா மைமா?..." அன்னை எனும் ஆலயத்தின் ஆழ்ந்த தத்துவமே இதுதான். வாழ்வின் துன்பத்தையும் தன் அன்பின் வலிமையால் மாற்றி, தியாகத்துக்கும், பொறுமைக்கும், பெருமைக்கும் உறைவிடமாய் விளங்குபவள் .. அன்பு குடியிருக்கும் கோயில்தான் அன்னை எனும் ஆலயம்... தரணிக்கெல்லாம் தாயாகிய நீ அறியாததா இது?..."

"...உக்குங்!..."

குறும்புடன் அணைத்த மகாதேவனின் மார்பில் செல்லமாகச் சினுங்கியபடியே முகம் புதைத்தாள் குமரனின் அன்னை.

சத்தியம் - என்பது

சத்தியம் என்பது வாய்மைமட்டுமன்று. உள்ளத்தின் உண்மையையும் அது குறிப்பிடும். சத்திய வஸ்துவும், நித்திய தத்துவமுமான இறைவனையும் குறிக்கும். ஆண்டவனின் நாமரூபங்கள் எண்ணிலடங்காதவை. அவற்றைப் பற்றி எண்ணும் போது நான் அளவிலா ஆச்சர்யமும் அச்சமும் அடைந்து ஒரு கண நேரம் ஸ்தம்பித்து விடுகிறேன். ஆனால் அவனே நான் வழிபடுவது சத்தியவடிவிலேயாம்.

—காந்தி.

ஆங்கிலம் :
மெல்வின் பிரவுன்

தமிழாக்கம் :
பகவதி ஜயராமன்

ஆன்மாவைக் கைப்பற்றுதல்

"மைக்கேல்! நான் தற்போது மிகக் கடின மாக வேலை செய்துகொண்டிருக்கும் ஓர் ஆராய்ச்சிப் பொருள் குறித்து நீ ஓளவாவது தெரிந்துகொள்ள வேண்டும். அது என்ன தெரியுமா? அதுதான் கைப் பற்றுதல்" — இங்ஙனம் கூறினர் மருத்துவர் பெர்ன்ஸ்டின்.

"கைப்பற்றுதலா? அது என்ன அது?" நான் திருப்பிக் கேட்டேன்.

"ஆமாம்; ஓர் இறந்த மனிதனின் ஆன்மாவைக் கைப்பற்றுதல்."

"அது எப்படி முடியும் ஐயனே?"

"மைக்கேல்! என் அருமை மாணவனே! என்னுடு நீ எத்தனை நாள் பழகியிருக்கிறாய்; எவ்வளவு நாள் நீ எனக்கு உதவியாக இருந்திருக்கிறாய். என்னைப் பற்றி நீ இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ள வில்லையே. முடியாது என்பதை நான் எத்தனை தடவை முடித்துக்காட்டியிருக்கிறேன்!"

அந்தப் பெரிய மனிதர் முன்னிலையில் நிற்க என்னுல் இயலவில்லை; எனக்கு மனம் சூழல்வதுபோல் இருந்தது. ஏனெனில், அவர் சொன்னது அவ்வளவும் உண்மை; உண்மைக்கும் மேற்பட்ட உண்மை என்று கூடக் கூறுவேன். காரணம், அவருடைய அற்புதமான கண்டுபிடிப்புகளில் பாதியை நான் கண்ணுரக் கண்டிருக்கிறேன். என் கண்கள் அவற்றை நம்பாவிட்டாலும், அவர் அவற்றைச் செய்தே காட்டினர்.

"அதனுல் தங்களுக்குக் கிடைக்கப்போகிற பலன் என்ன?" நான் அவரைப் பார்த்து பயந்துகொண்டே கேட்டேன். காரணம், இதுபோன்ற இயற்கையின் மூலகங்களைப் பரிசீலிப்பதன் வாயிலாக நமக்குக் கிடைக்கக்கூடிய நலன் ஒன்றுமில்லை என்பதே என் கருத்து.

"நிரம்பப் பலன் கிடைக்கும்; இதுவரை ஓளவு வெற்றியும் கிட்டியுள்ளது" என்று அவர் ஆழ்ந்த சிந்தனையில் தமக்குத் தாமே சொல்லிக்கொள்வது போல் கூறினர்.

"அப்படியானுல் தாங்கள் எதைக் கருதிக் கூறு கிறீர்கள்?"

ஆம்; அதைத்தான். ஆன்மாவை முழுமையாகக் கைப்பற்றுதலே."

* * *

என் இரத்தம் ஒரு கணம் உறைந்துவிட்டது. தவிர்க்கமுடியாதது என்றாலும், அவர் ஆராய்ச்சியை என்னுல் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. ஆனுல், எனக்காக எதுவும் நின்றுவிடவில்லை. மனிதனின் ஆன்மாவைக் கைப்பற்றும் அளவுக்கு அவர் ஆராய்ச்சி வளர்த்தான் செய்தது. ஆனுல் அது இன்னும் எனக்குப் புதுமையாகவே இருந்தது; அவர் நோக்கம் என்ன என்பது எனக்கு இன்னும் குழப்பமாகவே இருந்தது. ஆனுல், அவர் சொல்வதையெல்லாம் கேட்பது என்னுடைய கடமை; எனவே, பெறுமையாகக் கேட்டேன். அன்றைய இராச் சாப்பாட்டுக்குப் பிறகு இதுவரை இவ்வகையில் நடந்த வேலைகளைப் பற்றி மற்றொரு பரிசோதனை பண்ணப்போவதாக மருத்துவர் கூறினர்.

இப்போது இதனை நான் ஒரு சுகாதார மனையிலிருந்து எழுதுகிறேன். இங்கே மனத்தெளிவு மிக்க

மக்கள் தங்கள் வாழ்க்கையின் சீரிய பாதிப்பாகத்தைப் பயனுள்ள காரியங்கள் பலவற்றைச் செய்வதில் ஈடுபடுத்துகின்றனர்; இதற்குக் காரணம், அவர்களுடைய வாழ்க்கையின் அமோ நீளங்கள் அவர்களுடைய சொந்த இல்லங்களிலிருந்து பிரிக்கப்பட்டிருப்பதே. இதனைக் கூறுவதால் எனக்கு ஏதோ மனக்கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது; என்னிடம் எந்தக் கோளாறும் இல்லே என்பதே என் திடமான நம்பிக்கை. ஆம், நான்தான் மருத்துவர் பெருன்ஸ்டினின் வாழும் உடலங்கள், உடலத்தை விட்டுப் பிரிந்த ஆவிகள், ஆவி அகன்றுவிட்ட உடலங்கள் பற்றிய பரிசோதனைகளைக் குறித்து உங்களிடம் தெரிவித்தேன்; இதனோடு ஓர் ஆண்மாவில் அதிகாரத்தையும், இன்னோர் ஆண்மாவில் அடிமைத் தனத்தையும் புகுத்திப் பார்க்கவேண்டும் என்கிற அவருடைய கொள்கையையும் குறித்து உங்களுக்கு அறிவித்தேன். ஆனால், என்னிடம் மனக்கோளாறு ஒன்றுமில்லை.

உங்களை மேலும் நான் குழப்பத்துக்குள்ளாக்க விரும்பவில்லே. எனக்கு மூளைச் சிகிச்சை புரிய மூளை மருத்துவ வல்லுநர் எவரும் தேவையில்லை. நான் என் கதை முழுவதையும் மறைக்காமல் உங்களுக்குச் சொல்கிறேன்; பிறகு நீங்கள் தீர்மானியுங்கள், யாருக்கு மூளைச்சிகிச்சை அவசியம் தேவை என்பதை.

ஃ ஃ ஃ

என் பெயர் மைக்கேல் காஃப் என்பது. நீங்கள் என்னை ஓர் இரஷ்யன் என்று நினைத்தால், அது சரியானதுதான். நான் புனித பீட்டர்ஸ்பர்க்கு பல்கலைக் கழகத்தில் மருத்துவ விஞ்ஞானம் படித்தேன்; மாஸ்கோ மருத்துவமனே ஒன்றில் உள்ளுறை மருத்துவனுகச் சேர்ந்தேன்; அஸ்கேரான் பேரறிஞர் பெருன்ஸ்டினைச் சந்தித்தேன். எங்களுடைய சந்திப்பு எங்களைப் பிரிக்கமுடியாத ஒரு பிணைப்பில் கொண்டுவிட்டுவிட்டது. பின்னர் நாங்கள் இருவரும் ஒரே விதமான பொருள்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்திருேம்; ஒரு வரை யொருவர் நன்கு புரிந்துகொண்டோம்; பல சமயங்களில் நாங்கள் இருவரும் ஒரே வழியில் சிந்தனை புரிந்தோம்.

காரல் பெரன்ஸ்டினை நான் சந்தித்த பொழுது, அவர் தமது துறையில் மிகச் சிறந்த அறிவுத்திறம் படைத்தவராகக் கருதப்பட்டார். உயிர் மெய் இரசாயனம் (Biohemistry) என்னும் விஞ்ஞானத் துறையில் அவர் தனிச் செல்கோல் செலுத்தினர்; அத் துறையில் அவருக்குப் பழைய உலகிலும் புதிய உலகிலும் போட்டியாளர்களே இல்லே. ஆனல், ஒரு விஷயத்தைப் பற்றிய மனவுறைச்சல் மட்டும் தன் கூர் முனேயை அவர் உள்ளத் தடத்தில் ஆழப்புதித்திருந்தது; அந்த விஷயந்தான் கைப்பற்றுதல் குறித்த கொள்கை. கைப்பற்றுதல் என்ருல் ஏதோ அற்ப மனிதப் பண்டங்களில் ஒன்றைக் கைப்பற்றுதல் என்று பொருள் அல்ல: ஓர் அதியுயர்வான, அபாயம் மிக்க பண்டத்தைக் கைப்பற்றுதல் என்பதே பொருள்.

அந்த ஒரு நாள் மாலே எனக்கு நன்முக நினைவிருக்கிறது; அம்மாலேயிதான் அவர் எனக்கு அந்தப் புதிய பரிசோதனேயை அறிமுகப்படுத்தினர்; எனதுடைய இளமையான கூர்மை மிக்க காதுகள் அதனே உற்றுக் கேட்டன. அந்த மாலே முழுதும் மழை பெய்துகொண்டிருந்தது; எனவே, நாங்கள் அன்றைய இரவுவரை ஆய்வுக்கூட்டத்திலேயே தங்கிவிடுவது என்ற தீர்மானித்தோம். ஏற்கனவே வரவழைத்து வைத்திருந்த வெள்ளே எலிகளின் ஒரு புதிய தொகுதிக்குக் கொடிய உண்ணுயிர்கள் (viruses) சில ஊசி மூலம் ஏற்றப்பட்டன.

ஃ ஃ ஃ

மழை இன்னும் கொட்டிக் கொண்டிருந்தது; ஆய்வுக்கூடத்தின் கூரைமுகடுகள் மழை நீர் விழுந்து நடுங்கின; கரிய வானத்தில் இடி குமுறிக்கொண்டிருந்தது; வெளிப்புறத்து வீதிகளில் கனமான மழை நீர் விழுந்து சாலேகளின் ஒளியை மழுங்கச் செய்தது. கண்ணுடிச் சாளரங்களுக்கு வெளியே ஓர் அச்சம் தரத்தக்க இருட்டுக் கவிந்திருந்தது. நான் ஒரு சிகரட்டைப் பற்றவைத்துப் புகைச்சுருள்களேச் சாளரத்துக்கு வெளியே விட்டுக் கொண்டிருந்தேன். அது போது என் மனத்தில் ஏதோ ஒருகொந்தளிப்பு இருந்தது. ஆனுல், மருத்துவர் பெரன்ஸ்டின் அவர்களோ நேரத்தைச் சிறிதும் வீணுக்காமல், எங்கள் இரசாயப் பாட்டுக்குப் பிறகு நடக்கவிருக்கும் ஆராய்ச்சிகளை எல்லா முன்னேற்பாடுகளேயும் சேனிக்காமல் செய்து வந்தார்.

சிகரட்டுத் துண்டு என் விரல்களேத் தீய்க்கத் தொடங்கியபோதுதான் அதனே எறிந்துவிட வேண்டும என்ற உணர்வு எனக்கு வந்தது. இப்போதுதான் நான், என் நண்பராகவும் ஆசானுகவும் கொண்டிருந்த அந்த மனிதரின் பண்பு குறித்துச் சிந்திக்கத் தல்லப்பட்டேன். நான் அவரை வெறும் அவருடைய மூளேத் திறத்துக்காக மட்டும் போற்றவில்லே; அவருடைய சீரிய பண்புகளுக்காகவும் நான் அவரை என் இதயத்தினுள் பூசித்துவந்தேன்.

இப்போதுதான் நான் அவரை முதல் தடவையாகக் கவனித்தேன். அவருடைய பரந்த தோள்கள் அவருடைய விலாவைவிட்டு மிகவும் அகன்றிருந்தன. அவருடைய சிறுத்த இடையோ, காட்டெருமை போன்ற அவருடைய மார்பையும் வலிமை வாய்ந்த அவருடைய கழுத்தையும் தாங்கிக் கொண்டிருந்தது. அவருடைய தலே முடியில் சில கீற்றுகளாக ஒடிய நரையிழைகள் அவர் நெற்றிப் பொட்டில் சென்று விழுந்தன. அவருடைய உதடுகளோ மிகுதியும் நிகிப்பானவை; அவை அடிக்கடி அசைந்து நான் பார்த்ததில்லே. பார்வையில் செருக்கு வெடித்தது போன்ற அவர் முகத்தில் இரண்டு மென்மையான மனிதப் பண்பு குடியாத கண்கள் தொடலிலடிக் கொண்டிருந்தன. என்னவிட அவர் ஒடி உயரமானவர்; அதனே நான் நிரம்பவும் விரும்பினேன். உயரம் அவருக்குக் கம்பீரத்தைக் கொடுத்தது மட்டும் அல்ல; நான் எப்போதும் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்துப் பேசவே விரும்பினேன்.

"சாப்பாடு தயார்" என்று ஆய்வுக்கூடத்தின் வாயிலிலிருந்து சமையல்காரன் குரல் கொடுத்தான். அவனுக்கு உள்ளேவந்து சொல்லக்கூடப் பிரியமில்லை; காரணம், ஆய்வுக்கூடத்தின் வேடிக்கையான சூழல் அவனைக் கறைப்படுத்திவிடக் கூடாது என்பதே.

∴ ∴ ∴

நாங்கள் எப்போதும்போல் ஆர்வத்தோடு இரைச் சாப்பாட்டைச் சுவைத்து உண்டோம். அதுபோது பேரறிஞர் பெர்ன்ஸ்டீன் கீன்ப்பற்றிருக்கும் அறிகுறி ஒன்றும் எனக்குத் தென்படவில்லை. சாப்பாட்டு வேலை முடிந்ததும், எங்கள் வயிறு நிறைந்ததும், மனத்துக்கு மறுபடியும் கிளர்ச்சியும் சுறுசுறுப்பும் ஏற்பட, நாங்கள் ஆய்வுக்கூடத்துக்குள் நுழைந்தோம். அச்சமயம் ஆய்வுக் கூடத்தின் முக்கால்வாசிப் பாகம் கூண்டுக்குள் அடைக்கப்பட்ட விலங்கினங்களுக்கே ஒதுக்கப் பட்டிருந்தது.

மருத்துவர் இப்போது ஆய்வுக்கூடத்தின் கதவு கனியெல்லாம் மூடினர்; பின்பு தன வாயிலுள்ள அடைத் தார்; சாளரங்களின் வெல்லாம் இழுத்துச் சார்த்தினர். எல்லாவற்றையும் நன்கு மூடிய பிறகு, ஒரு புன்சிரிப் புடன் அவர் என்னிடம் வந்தார்.

"என் அருமை மாணவனே! சிறிது முன்னெச் சரிக்கையாக இரு; இல்லாவிட்டால், இந்த உலகம் முழுதும், பாதியளவே முடிக்க நம் அரைகுறைக் கொள்கையைத் தெரிந்துகொண்டுவிடும். இதனுல் உலகத்துக்கு நன்மையில்லை இப்போது நாம் வெறும் வாய்ப்பாட்டளவிலேயே நிற்கிறோம்; அதுவே வாய் பாடு 207-HTO என்பது. இதைக் கண்டே நீ திகைப் படையப் போகிறாய் பார்."

நான் மருத்துவரைக் கூர்ந்து கவனித்தேன். அவர் ஒரு குடிமருந்தைக் கலப்பதைப் பார்த்தேன். அதனை அவரே குடித்தார்; மருந்துக் குவளையில் ஒரு கரும் பச்சையான மேகம் சுழல்வதைக் கண்டேன். அதிக நேரம் பிடிக்கவில்லை, அவர் தள்ளாடினர். அவர் கீழே சரிந்துவிழுந்துவிட்டார். எனக்குக் கை கால் ஓடவில்லை; என்னுல் எழுந்திருக்கவும் முடிய வில்லை.

எப்படியோ சமாளித்துத் தன் தலைமயிரைப் பிடித்தவண்ணம் அவர் எழுந்திருந்தார். ஆனுல், அதி சீக்கிரத்தில் ஒரு கோரமான, தொடர்ந்த, வேகம் நிறைந்த உடல்வலிக்கு ஆட்பட்டார்; அந்த வலி அவர் உடலைப் பிய்த்து எடுத்தவிடுவதுபோல் இருந்தது. அவர் உடற்பு முழுதும் குளிர்ந்த வியர்வை தோன்றி வழிந்தது. நாறு வேறுபட்ட குரலில் அவர் கூச்சலிட் டார். அது சில சமயம் பெண்போலவும், சிலசமயம் குழந்தைபோலவும் ஒலித்தது. அவர் தரையில் படுத்து உருண்டுகொண்டே புலம்பினர். இப்போது அந்தக் கூடம் முழுவதும் ஒரு மரணவாடை வீசியது. ஓர் ஆயிரம் பிணங்கள் சிதைந்து அழுகி எடுக்கும் வாடை அந்தக் கூடத்தின் காற்றேடு கலந்து புழுங்கிக்கொண் டிருந்தது. எனக்கு மூச்சு நின்றுவிடுவதுமாதிரி ஆகி விட்டது.

புதுமையான மனிதக் கூக்குரல்கள் பல எனக்குக் கேட்டன; அவை யாவும் மருத்துவரின் வாயிலிருந்தே வந்துகொண்டிருந்தன. "இல்லை, இல்லை; நான் அதை விரும்பவில்லை; எனக்கு உதவிவேண்டும். அதைக் கருணைகூர்ந்து அளியுங்கள்; கருணைகூர்ந்து அளிக்கத் தவருதீர்கள். என்மீது இரக்கம் காட்டுட்டுங்கள் ஐயா"—இப்படி அவர் ஒரு புதுமையான குரலில் அரற் றிக் கொண்டிருந்தார். ஆனுல், அந்தக் குரல் மட்டும் திண்ணமாக அவருடைய குரல் அல்ல.

∴ ∴ ∴

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு மாறுதல் ஏற்பட் டது. அவருடைய உடல் வலி முழுவதும் போய்விட் டது. அந்தக்கூடத்தில் பரவியிருந்த தீய வாடையும் மறைந்துவிட்டது.

"சரி, நீ யார் தம்பி?" ஒரு சன்னக் குரல் எழும் பியது. மருத்துவருடைய வாயிலிருந்துதான் அது வந்தது என்பது அவருடைய உதடு அசைந்ததிலிருந்து தெரிந்தது. மறுபடியும் அதே குரல் ஒலித்தது. "ஊம், நான் கேட்ட தற்குப் பதில் சொல், தம்பி."

அவர் என்னை நோக்கிவந்தார். அவருடைய வலது பாதம் சிறிது வளைந்திருந்தது. என்னை அவர் நோக்கியபோதெல்லாம் அவர் தம் கண் ணிமையை மூடிமூடித் திறந்தார். பிறகு, தாம் குஸ்தாவ் எனனும் மின்செல் கோமகனின் ஆரு வது மகன் என்றும், தம் பெயர் ஹர்செப்பர்க்கு கோமகன் என்றும் கூறினர். மேலும் பல விஷயங் களைப் பற்றி அவர் பேசினர். சில விஷயங்களைக் குறித்தும் சில மனிதர்களைக் குறித்தும் அவர் கேட்ட கேள்விகள் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. காரணம், அவைகள் அல்லது அவர்களைப்பற்றி எனக்கு மங்கலான நினைவுகூட இல்லாததுதான்.

பதினேந்து நிமிடத்திற்கப்புறம் ஹர்செப்பர்க்கு கோமகன் கொட்டாவி விட்டார்; ஒரு சாய்வு நாற் காலியில் படுத்தார்; உடனே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார். எனக்கு நடுக்கம் எடுத்தது. இது விபரீத மாக இருந்தபோது நம்பமுடியாததாகவும் இருந் தது. எனினும், இந்நிகழ்ச்சி நடக்கவே செய்தது.

இப்போது மருத்துவர் விழித்துக்கொண்டார். திரும்பும் பழைய மருத்துவராகிவிட்டார் அவர். தம் சொந்தக் குரலில் பேசத் தொடங்கினர்:

"எனவே, என் அருமை மைக்கேல்! ஒரு வெற்றி எனக்குக் கிடைத்திருக்கிறது. ஹர்செப்

கோமகன் கூறிய அனைத்தையும் நான் பரிசீலித்துப் பார்த்தேன்; அவை யாவும் சரித்திரத்துக்குப் பொருந்தியே வருகின்றன என்பதை ஒப்புக் கொண்டே தீரவேண்டும். அந்தக் கோமகனின் ஆன்மா கொஞ்ச நேரத்துக்கு முன்பு என் உடம்பிலேயே தங்கியிருந்தது.''

''சரி, இன்னொருவருடைய ஆன்மா தங்க ளுடைய உடம்பில் வந்து தங்குவதால் கிடைக்கக் கூடிய பலன் என்ன?'' எனறு நான் கேட்டேன்.

''உனக்குத் தெரியவில்லையா, மைக்கேல்!... நான் ஓர் ஆன்மாவைக் கைப்பற்றி வைத்திருக் கிறேன். இனி நான் செய்யவேண்டியதெல்லாம், கைப்பற்றிய ஆன்மாவை என் அடிமையாக்கிக் கொள்வதுதான். அது நான் 'வா' என்றுல் வர வேண்டும்; 'போ' என்றுல் போகவேண்டும். பிறகு, நான், பேரறிஞர் ஆல்பர்ட்டு ஈன்ஸ்டினின் ஆன்மாவைத் தேடிக்கொண்டு வரும்படி அதற்குக் கட்டளையிடுவேன். எனக்கு அவ்வான்மா கிடைத்துவுடன், மேற்கண்ட பேரறிஞரின் சோத னைகளை நான் தொடர்ந்து அவருக்காகப் புரிவேன். இதனுல் ஈன்ஸ்டினை நான் என் உடம்பில் மறுபடி யும் வாழவைப்பேன். உலகத்துக்கு இக்காரியம் மூலம் நிறைபயப் பலன் கிட்டும்.''

ஆம், இது ஓர் அற்புதச்செயல்தான். ஒரு பெரிய மேதையை (ஈன்ஸ்டினை) ஒரு சாதாரண மனித னின் உடம்பில் வாழச்செய்வது, மனித சாதனை களுக் குள்ளே ஒரு மாபெருஞ் சாதனை என்பதில் ஐயம் ஒன்றுமில்லை அந்தப் புரட்சிக் கருத்தைக் கேட்டவுடனேயே எனக்கு ஒரு கிளர்ச்சி உண் டாயிற்று; அந்தச் செயலினுல் விளையக்கூடிய பலன் என் சிந்தனையைக் கவர்ந்தது மருத்துவரின் இனை பிரியாத தொண்டனுக என்றும் இருக்க வேண்டும் என்று நான் உறுதி பூண்டேன்.

ஃ ஃ ஃ

இப்படியாக மற்றவர்கள் ஆன்மாவைப்பற்றிய பரிசோதனைகள் என்முன்னே நடந்துகொண்டே யிருந்தன. வேறு உலகத்துக்குச் சென்றுகொண் டிருந்த எண்ணற்ற ஆன்மாக்களை மருத்துவர் மறித்துக் கைப்பற்றிதை நான் கண்ணுரக் கண் டேன். அவ்வான்மாக்கள் ஒருசமயம் ஒரு ஜீனுக் காரனுடையதாகவும், மற்றொரு சமயம் ஓர் அமெ ரிக்கனுடையதாகவும், இன்னொரு சமயம் ஒரு தட் சுக்காரனுடையதாகவும் இருக்கும். மற்றவரு டைய ஆன்மாவை அவர் மேற்றெகொண்டபோது அவர் தம்முடைய ஆன்மாவைக் கொஞ்ச நேர மாவது இழக்கவேண்டியே இருந்தது.

ஒவ்வோர் இரவும் நாங்கள் சலிக்காமல் பணி யாற்றினேம். எனினும், மருத்துவர் பெரன்ஸ்டின் எந்த ஆன்மாவையும் தம் அடிமைப்படுத்த இயல வில்லை. அவை யாவும் பத்து அல்லது மிஞ்சினுல் பதினைந்து நிமிடத்துக்குமேல் அவரிடம் தங்கிய தில்லை. ஆனுல், இந்நில அவரை மனங்குன்றச் செய்யவே இல்லை. ஆனுல், ஒரு புதுமையான ஆன் மா மட்டும் அவரைச் சந்தித்திராவிட்டால், அவர் நிலை இம்மாதிரி ஆகியிராது என்றே சொல்லத் தோன்றுகிறது; அவராலும் இது குறித்து எனக்கு விளக்கம் ஒன்றும் கூறமுடியவில்லை. அந்த ஆன்மா அவருடைய ஆராய்ச்சியைக் குலைத்த தோடன்றி, அவருடைய பரிசோதனைகளையும் கெடுத்துவிட்டது. மருத்துவர் மற்றவர் ஆன்மாக் களைக் கைப்பற்றப்போய் அவ்வான்மா மருத்துவ ரையே கைப்பற்றிவிட்டது. ஆனுல், ஒருநாள்.....

அது ஒரு நேர்த்தியான காலைப்பொழுது. அன்று நான் சிறுதுமுன்னதாகவேழுந்திருந்து, ஏழுமணிவாக் கில் காலைச் சிறுஉண்டி அருந்தினேன். பின்னர் எட்டு மணி வாக்கில் வீட்டைவிட்டுக் கிளம்பி நிதானமாக மருத்துவரின் ஆய்வுக்கூடத்துக்கு நடந்து சென் றேன். கதவு திறந்திருந்தது; எனவே, நான் உள் ளே நுழைந்தேன்; ஆனுல், அங்குச் சுற்றுமுற்றும் எவ ரும் காணப்படவில்லை. மருத்துவர் உள்ளே எங்கா வது இருப்பார் என்று நினைத்துக்கொண்டு, நான் பின் கூட்டுக்குச் சென்று, அங்கு இருந்த அண்டை வீட்டுக் குள் நுழைந்தேன்.

எங்கும் ஒரே குழறுபடியாக இருந்தது. கூண்டுக ளெல்லாம் திறந்திருந்தன; ஒரு விலங்கும் கண்ணுக் குத் தென்படவில்லை. கூடம் முழுவதும், அதற்கப்பா லும் காகிதங்கள் சிதறிக் கிடந்தன. வாய்பாடுகள் பல சிதைந்துவிட்டன. எனக்கு எல்லாம் ஒரே பீதி யாக ஆகிவிட்டது. வேலைக்காரர்களைக் கூப்பிட்டுக் கொண்டு நான் வெளியே ஓடினேன். அவர்களுக்கும் மருத்துவர் எங்கே இருக்கிறர் என்பது தெரியவில்லை. நான் வீதிக்குப் போய், அங்கிருந்து மருத்துவரை எங் காவது கண்டுபிடிக்கலாம் என்று விரைந்து கொண் டேயிருந்தேன். ஆனுல், அவரோ, எங்கோ நாம் அண்டாத இடத்துக்குப் போய்விட்டார்.

ஃ ஃ ஃ

ஒரு வாரம் கழிந்தது. நான் காலைப் பத்திரிகை களைப் படித்துக்கொண்டிருந்தபோது, சில தலைப்பு வரிகள் என் கண்ணைக் கவர்ந்தன:

''தலைசிறந்த மருத்துவர் பெரன்ஸ்டின் பித்தர் விடுதியில்.''

எனக்குக் கோபம் பொங்கியெழுந்தது. பெரன்ஸ் டின் ஒரு பித்தர் என்று கூற யாருக்குத் துணிச்சல் உண்டு? நான் உடனே பித்தர் விடுதியை நோக்கிச் சென்று, அங்கு மருத்துவரைப் பார்க்கப் பேட்டி கேட் டேன். பின்னர் காவல்துறையினரை வருந்தி அழைத் தேன்; தேசம் முழுவதுமுள்ள விஞ்ஞானிகளைப் பணிந்து கூப்பிட்டேன். இதற்கு முன்பே ஓர் இருட் டுப் புரையில் நான் மருத்துவர் பெரன்ஸ்டினைக் கண் டேன்.

தமிழ் நாடகத் தந்தை

ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள்

சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள்!

(ஔவை நி. க. சண்முகம், எம். எஸ். சி.)

"ஒரு நாடகம் சிறப்பாக இருக்கவேண்டு மானால் அந்த நாடகத்தில் பங்குகொள்ளும் நடிகர்க ளிடையே ஒழுங்கும், நியதியும், கட்டுப்பாடும் இருக்க வேண்டும்."

ஆம்; சுமார் அறுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாடகமேடை, சீர்கெட்டிருந்த அந்த நாளிலே, முன்குறிப்பிட்டவாறு குரல் கொடுத்தார் ஒரு பெரி யார். அந்தப் பெரியார்தான் தமிழ் நாடகத் தலைமை யாசிரியர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்.

7—9—68 அன்று சுவாமிகளின் நூற்றி ஓராவது பிறந்தநாள் விழா. தூத்துக்குடியில் 1867ல் தோன் றிய சுவாமிகள் 1922ல் புதுவையில் மறைவெய்தினர். சுவாமிகளின் சமாதி மண்டபம் கட்டப்பட்டுள்ளது. மதுரைப் பெரு நகரில் சுவாமிகளின் திருவுருவச் சிலு யினைத் தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர் கள் திறந்து வைத்துள்ளார். தொடர்ந்து மூன்று நாட்கள் நாடகக் கலை விழா நடைபெறுகிறது.

சுவாமிகள் மறைந்த போது அக்காலத்தில் வாழ்ந் திருந்த மற்றெரு நாடக ஆசிரியராகிய உடுமலை முத்து சாமி கவிராயர் அவரது பிரிவாற்றுமையால் மனமுரு கிப் பாடிய பாடல் இது:

சந்தரராவ் முதலாகத்
தலங்கனந்தன் வரை வகுத்துச்
சொல்லுங்காலே,
எந்த நாடகத் தலேவர்
நீயின்றி நடனவரங்

கேறி நின்ருர் ?
அந்த மார்க் கண்டனுக் கன்(று)
அரனளித்த வரமுனக் கீண்
டருமை யாச்சோ?
சந்தமார் சங்கரதாஸ்
சாமி நீணெ யாய் காணும்
தருண மன்றே.

சுவாமிகளிடம் அந்த நாளில் நாடகப் புலவர்கள் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தனர் என்பது இப்பாட லின் மூலம் நமக்குத் தெரியவருகிறது. தமிழ் நாடகத் துறைக்கு அடிப்படைச் செல்வம் வழங்கிய வள்ளல் என்று அவரைச் சொல்லலாம். ஆம் .. தமிழ் நாடகத் துறையில் சங்கரதாஸ் சுவாமிகள் தலைமை ஆசானுகப் போற்றப் பெறுபவர். அவர் ஏறத்தாழ நாற்பது நாட கங்கள் எழுதியிருக்கிருர். அவை பெரும்பாலும் நமக் குத் தெரிந்த பழங்கதைகள் தாம். வடமொழி நாடக மாகிய மிருச்சகடியையும் ஷேக்ஸ்பியரின் ரோமியோ ஜூலியத், சிம்பலின் ஆகிய நாடகங்களையும், மணிமே கலே, பிரபுலிங்கலீலே ஆகிய காப்பியக் கதைகளையும் சுவாமிகள் நாடகமாக்கியிருக்கிருர்.

அவருடைய நாடக அமைப்புத்திறன் ; அந்த அமைப்பிலே காணப்படும் நுணுக்கம்; நாடகப் போக் கிலே நாம் காணும் அழகு; நாடகப் பாத்திரங்களின் வாயிலாகப் பாடல்களிலும், வசனங்களிலும் அவர் வெளியிடும் கருத்துக்கள்; அந்தக் கருத்துக்களால் நாடம் காண்போர் அடைந்து வந்த பயன் இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போதுதான் சுவாமி களின் நாடக நல்லிசைப் புலமை தமக்கு நன்முகத் தெரிகிறது.

அங்கு அவர் சில சமயம் தம்மைப் பார்த்துத் தாமே சிரித்துக்கொண்டும், வேறு சில சமயம் தம்மை நோக்கித் தாமே கடிந்துகொண்டும் இருந்தார். திடீரென்று அவர் ஒரு கற்கோவ் புத்தகத்தைப் படிக் கத் தொடங்கினர். அவர் ரூசினியாவின் பெருமகளகத் தம்மைக் கருதிக்கொண்டதால், அத்தக் கொடிய நரக மான பித்தர் வழுதியிலிருந்து வெளிச்யேற அவர் கூக் குரலிட்டார், மருத்துவர் நிலையை நான் வேதனையுடன் கவனித்துக் கொண்டிருந்தேன். என் கண்கள் குள மாகிவிட்டன.

"ஐயோ, ஏழை மனிதர், ஆராய்ச்சியில் தம் ஆன் மாவையே இழந்துவிட்டாரே"— நான் எனக்குள் ளேயே முணுமுணுத்துக் கொண்டேன்.

"ஐயோ, அவர் ஆன்மா எங்கே போய்விட் டது?"— இப்படி எல்லோரும் கேட்டார்கள்.

அவர்களுக்கு நிலைமையை விளக்க நான் முயன் றேன். ஆன்மா வாய்பாட்டைப் பற்றிக் கூற முற்பட் டேன். நிலைமையைப் புரிந்துகொள்ளும்படி வேண் டினேன். நான் சொல்வதைச் சிறிது கேட்கும்படி கெஞ்சினேன், முழங்காலிட்டு வாதாடினேன். உரக்க ஓலமிட்டேன். ஆனுல் அவர்களோ "வருந்துகி றேம்-மிகவும் வருந்துகிறேம்" என்றே முனகினர்கள்.

நான் வீரிட்டு அழுதேன், ஒருவர் கூறினர், "சகாதாரமேன; அதுதான் இவரைக் காப்பாற்றும்.

—சன்டே ஸ்டாண்டர்டு,
22—9—'68

உரை நடை அதிகமாக அமுலுக்கு வராத பழங்காலத்தில் எழுதப்பட்ட நாடகங்களாதலால் சுவாமிகளுடைய நாடகங்களில் பெரும்பாலும் பாடல்களே நிறைந்திருக்கும். இந்த நாகரிப்பேரில் மேடையில் நடிப்பவருக்காகத் திரை மறைவிலிருந்து மற்றொருவர் பாடும் இரவல் குரல் வழக்கமெல்லாம் அப்போது இல்லை. நாங்களே தான் பாடுவோம். சிரித்தாலும், பாட்டு அழுதாலும் பாட்டு, கோபித்தாலும் பாட்டு, ஒருவருக்கொருவர் உரையாடி கொள்வதும் எல்லாம் பாட்டு, மயந்தான். வசனங்கள் பெரும்பாலும் பாட்டின் பொருளை விளக்குவதாகவே இருக்கும்.

வெண்பா, கலித்துறை, விருத்தம், சந்தம், வண்ணம், ஓரடி, தொண்டிச்சிந்து, கலிவெண்பா, கும்மி, தாழிசை இவ்வாறு பலவகைப்பட்ட பாடல்களாலும். சிறுபகுதி உரையாடல்களாலும் எழுதப் பெற்றவை தாம் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள்.

அந்தக் காலத்தில் நடந்து வந்த நாடகங்களில் சுவாமிகளின் பாடல்களைப் பாடாத நடிகர்களே இல்லை. கட்டுப்பாடு இல்லாமல் மனம் போக்கில் சொந்தமாகப் பேசிவந்த நடிகர்களை ஒழுங்குபடுத்தவே பிற்காலத்தில் சுவாமிகள் வசனங்களும் எழுதத் தொடங்கினர். அந்த நாளில் பிரபலமாக இருந்த சிறுவர் நாடகக் குழுக்களோடு அவர் தொடர்பு கொண்டபோதுதான் வசனங்களை அதிகமாக எழுதினர் என்று சொல்லவேண்டும்.

சுவாமிகள் நல்ல இசைஞானம் உள்ளவர். சந்தம், வண்ணம் முதலியவற்றைப் பாடுவதில் மிகத் திறமை பெற்றவர். தாள விந்நியாசங்களை நன்கு அறிந்தவர். கஞ்சிரா வித்வான் புதுக்கோட்டை மாள்புண்டியா பிள்ளை அவர்கள் சுவாமிகளின் சந்தப் பாடல்களைப் போற்றி, அவரைத் தமது சுவீகார புத்திரராக ஏற்றுக் கொண்டார். 'புலவரேறு' என்று கொண்டாடப்பெற்ற பழனி தண்டபாணி சுவாமிகளிடம், சுவாமிகள் சில காலம் பாடங் கேட்டார். இளமையிலேயே வழக்கையில் வெறுப்புற்று ஆண்டிக்கோலத்துடன் முருகப் பெருமான் கோயில்களைத் திருத்தலங்களுக்கு கெல்லாம் அவர் யாத்திரை செய்தார். அதன் காரணமாக அவரை எல்லோரும் சுவாமிகள் என்றே அழைக்கத் தொடங்கினர்கள். முழுப்பெயரையும் குறிப்பிட வேண்டியதில்லை. 'சுவாமிகள்' என்றாலே போதும். நாடகத்துறையில் அந்தச் சொல் அவர் ஒருவரைத் தான் குறிக்கும்.

சுவாமிகளின் எந்த நாடகத்தை எடுத்துக் கொண்டாலும் அதிலே ஒழுக்கமும், தர்ம நெறியும், வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

'நவரசம்' அதாவது உவகை, பெருமிதம், சிரிப்பு, கோபம், வியப்பு, வெறுப்பு, சோகம், பயம், சாந்தம் இப்படி ஒன்பது சுவைகள் சொல்லப்படுகின்றன அல்லவா? இந்த பாவ உணர்ச்சி குன்றாமல் அந்த அந்தக் கட்டத்திற் கேற்றவாறு பாடல்கள் அமைக்கும் திறமை சுவாமிகளிடம் இருந்தது. பாட்டின் மெட்டும், அதில் அமைக்கப்படும் சொற்களும் பாவத்தை வெளிப்படுத்துவனவாகவே அமையும். சத்திய வான், சாவித்திரியை வர்ணித்துப் பாடுகிறான்: அந்தர மதியேபோல் முகம் காணும-நல்ல

அஞ்சுகம் மொழியைக் கேட்டு நாணும்-கொடும்
ஆலம் மஞ்சளான கண்கள்
நாடுகின்ற வேனே மனம்
கோணும் மையல் தோணும்
கந்தரம் கமுகுமலர்ச் செங்கை-இவள்
காமனுராதிக்கினேய தங்கை-இரு
காது வள்ளே போலும் முல்லே
ஆனபல்லே ஒதும் மெல்லே
சங்கை கொள்ளும் மங்கை

உபமானங்கள் எவ்வளவு சரளமாகப் பாட்டில் அமைந்திருக்கின்றன பார்த்தீர்களா?

தர்க்கப் பாடல் ஒன்று; சீமந்தனி நாடகத்தில் பாடுவது:

சீமந்தனிக்கும், சந்திராங்கதனுக்கும் முதற் சந்திப்பு: ஊர்பெயரெல்லாம் விசாரித்து முடிந்த பிறகு திருமணத்தைப்பற்றிப் பேசுகிறான் சந்திராங்கதன்.

இன்னும் மணம் நீ செய்யா
திருப்பதுவும் ஏது?
இச்சைகொண்டேன் சொல்லுதற்கு
லச்சையுமாகாது.

இதற்கு சீமந்தனி விடையளிக்கிறாள்:

அடுத்துமுயன்றுலும் எல்லாம்
ஆகும் நாளல்லது
ஆகுமோ மரம் பருவம்
இன்றில் பழுக்காது.

''அடுத்து முயன்றுலும் ஆகுநாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா.''

என்ற பழம் பாடல் ஒன்றை, இந்தப் பாட்டில் எவ்வளவு அருமையாக வைத்திருக்கிறர் பாருங்கள்.

நகைகளின் பட்டியல் வேண்டுமா உங்களுக்கு? சீமந்தனியில் அவலோக ராஜன் தன்னிடம் யாசகம் கேட்கவந்த ஒருவாலிபனுக்கு பெண் வேஷம் போட்டுவிடச் சொல்லுகிறான். பாடலைக் கேளுங்கள்.

நெற்றிச்சுட்டி ஜடைபில்லே கொப்பு
நிகரறு தலையணி இருபிறை வைப்பு
அட்டிகை வைரம் பட்டை சிவப்பு
அழகிய பதக்கம் உலக மதிப்பு
கமலல் ஜிமிக்கி புல்லாக்கொடு நத்து
கண்ட சரப்பளி கண்டிகை முத்து
காசுமாலே கடகாரச் சங்கிலி
கம்பிகாரை பொன்சன்னச் சங்கிலி
வாகு வலேயமொடு காப்புக் கொலுசு
வளேயல் கங்கணவகை பலபல தினுசு
பச்சை நீலம் முதலாம் நவரத்னம்
பதித்த நாகப் பதுமவிரலுக்கு மோதிரம்
இறுக்கி மேலே பூட்டும் இடை ஒட்டியாணம்
இணே முகப்பு வைரம் கழற்சாய் பிரமாணம்
பாதசரம் கிண்கிணி தண்டை மயங்கை
பணித்த காலாழி பீலி மிஞ்சி சதங்கை

இப்படியே பாட்டுத் தொடர்கிறது.

நகைகளின் நாகரீகம் கழுத்தில் வெறும் ஒரே ஒரு முத்துச் சரத்திற்கு மட்டும் வந்திருக்கும் இந்தக் காலத்துப் பெண்கள் இந்த நகைகளின் வீபரங்களேக் கேட்டாலே மூர்ச்சை போட்டுவிடுவார்களல்லவா?

பிரகலாதன் நாடகத்தில் இரணியன் பாட்டு; மாயாவி மகாவிஷ்ணு எங்கருந்தாலும் கொண்டு வருமாறு கூறுகிறான். அத்தகான வழிகளேயும் சொல்லுகிறான். பாடல் இரணியனுடைய செருக்கிலேயே பேசுகிறது பாருங்கள்!

''சுட்டு தான தவம் நாட்டு வார்குடலே
சுட்டி மீதில் உறவாட்டுவீர்
காட்டிலே எரியை மூட்டி ஓமநிலே
காட்டுவார் உயிரை ஓட்டுவீர்''.

எவ்வளவு அற்புதமான சந்தம் பாருங்கள்.

''எத்தான வித்தை பலகற்றே ஒளித்தவன்
இருப்பானதைப் புகலுவேன
எப்பாடு பட்டு மவனேப் போயிமுத்துவர
இப்போது சித்தமிசை வீர்''

பாத்திரங்களின் பண்புக்கு ஏற்றவாறு சீசார் கனேப் பயன்படுத்துவது சுவாமிகளுடைய தனிச் சிறப்பு, கருத்துச் செறிவு நிறைந்த சுவாமிகளின் வசனத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு. 'அபிமன்யு சுந்தரி, நாடகத்தில் சுந்தரி தூயோதனன் மகன இலக்கண குமாரனுக்கு மணமுடிக்கப் போவதை எண்ணி மனம் வருந்துகிறாள். மேனகாள சத்துக்கள் அவளது காதையும், நெஞ்சையும் தூண்டுகின்றன. அந்தச் சமயத்தில் அபிமன்யு பூச் செண்டுக்குள் வைத்தனுப்பிய ஓலேயந்து சேருகிறது. உடனே மிகுந்த மகிழ்ச்சியோடு தோழியிடம் பேசுகிறாள்.

''அடி தோழி, தரித்திரனுக்குத் தனப்புதையல் கிடைத்தது போலும், கடலிலே அமிழ்பவனுக்கு கப்பல் உதவுவது போலும், பிறவிக் குருடனுக்கு கண் ஒளி விளங்கப் பெற்றது போலும் என் பிராணனேக் காப்பாற்ற இந்தக் கணேயாழி உதவிற்று. சற்று நேரத்திற்குமுன் இலக்கண குமாரனுக்கு நான் தேவி என்பதாக முழங்கிய மேனகாள வகைகளேக் கேட்டு வருந்திக்கொண்டு இருந்தேன் இப்பொழுது அவ்வகை வாத்தியங்கள் எல்லாம் என்னேத் தைரியப்படுத்தி தேறுதலேச் சொல்வது போல் ஒலிக்கின்றன. எப்படியென்றால் தந்துபிகள் எல்லாம் 'தும்தும்' என்று ஒலிக்கின்றன சங்கங்கள் எல்லாம் 'பம்பம்' என்று முழங்குகின்றன. தாளவகைச் சல்லரி, மல்லரி, கரடிகைகளோ 'தீம் தீம்' என்று சப்திக்கின்றன. முரசு, பேரிகை, மிருதங்கங்கள் 'தோம் தோம்' என்று தொனிக்கின்றன.

ஆகவே இவ்வகை வாத்திய ஒலிகள் ஒன்று கூடி தும், பம், தீம், தோம், துன்பம் நீங்தோம என்ற பொருளேக் கொடுக்கலாயின. இனி நமக்கு யாதொரு குறையுமில்லே. நானே பாக்கியவதி, அதிருஷ்டசாலிப் பெண்.''

என்ன அழகான வசனம் பார்த்தீர்களா?

கலித்தொகை, குறுந்தொகை, திருக்குறள், நாலடியார் முதலிய சங்க இலக்கிய நூல்களெல்லாம் சுவாமிகளுக்கு மனப்பாடம். அவருடைய பாடல்களிலும் வசனங்களிலும் இவை நிறைந்து கிடப்பதைக் காணலாம்.

சுவாமிகள் ஒரு நாடகத்தை ஒரே நாளிரவுக்குள் எழுதி முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அதுதான் அவருடைய மகத்தான சிறப்பு. அவர் கையெழுத்துப் பிரதிகளே நான் பார்த்திருக்கிறேன். தாம் எழுதியதில் ஒரு இடத்தைக்கூட அடித்துத் திருத்தி எழுதியதே இல்லே.

சுவாமிகள் தொடக்கத்தில் நடிகராகவும் சில காலம் பணியாற்றினர். இரணியன், ராவணன், எமதர்மன், நளதமயந்தியில் சனீஸ்வரன் முதலிய வேடங்கள் சுவாமிகளின் நடிப்புத் திறமையை வெளிப்படுத்திய சிறந்த பாத்திரங்கள் என்பதைப் பல பெரியார்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். தமிழ்நாடு செய்த தவத்தின்பயனை மான் பூண்டியா பிள்ளே அவர்களின் வேண்டுகோளுக் கிணங்கிச் சில ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் சுவாமிகள் நாடகாசிரியப் பொறுப்பை மேற் கொண்டார். பல நாடகக் குழுக்களிலே பணியாற்றினர். புதிய நாடகங்களே இயற்றியருளினர். சம ரச சன்மார்க்க நாடகசபை யென்ற பெயரில் தாமே ஒரு நாடக சபையையும் தோற்றுவித்தார்.

தீபத் திருமகள்

- தமிழ்ச் செழியன் -

மொட்டுப் பனித்துளியில் முல்லை மலர்ச்சிரிப்பை
மோந்து மணம்பரப்பி வந்தனள்-எழில்
நீந்தும் விழியொளியைத் தந்தனள்-நல்ல
பட்டுத் துகிலுடுத்துப் பாசக் குரல்கொடுத்துப்
பாடல் பலஇயற்றி நின்றனள்-அவள்
ஆடற் கலைமுடித்துச் சென்றனள்.

ஞாலத் திருள்விலக்கி ஞானத் தொளிபடைக்க
ஞானத் திருவுருவாய் வந்தவள்-அவள்
மோனத் தவம்புரிந்த முன்னவள்-நல்
சீலத் தொளிவிளக்காய்ச் செக்கச் சிவந்திலங்கும்
செம்மை நிறம்படைத்த மேனியாள்-அவள்
இம்மைப் பயன்கொடுக்கும் அன்னையாம்.

மீனப் பெருவிழியாள் மின்னற் கொடியிடையாள்
மேகக் குழல்முடித்த சுந்தரி-கரு
நாகச் சடைபடைத்த மாமயில்-நறுந்
தேனிற் சுவையுடைய தென்னந் தமிழ்மொழியாள்
தீபத் திருமகளாம் பாரடா-அந்தத்
தெய்வப் பெருமகளைப் பாடடா.

—★—

தமிழ் நாடகமேடையின் மங்காத ஒளி விளக்காகத் திகழ்ந்த எஸ். ஜி. கிட்டப்பா சகோதரர்களும் தீந் தமிழிசைப் புலவராக நம்மிடையே வாழ்ந்த மதுரை மாரியப்ப சுவாமிகளும் இந்தக் குழுவிலே தான் பயிற்சி பெற்றனர். இந்தப் புதிய நாடகத்தை அமைப்பதானாலும், சுவாமிகளைப்போன்ற நமது முன்னோர்கள் கையாண்ட நாடக அமைப்பு முறைகளைப் பின்பற்றி நாடகம் அமைக்கவேண்டும். அப்படி அமைக்கப்பெறும் நாடகம்தான் காலத்தினால் அழிக்கப்படாமல் நிரந்தரமாகச் சிறந்து விளங்கும். நாடகம் எழுதுவோருக்கு சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்கள், ஓர் அரிய செல்வம் என்பதில் சிறிதும் ஐயமில்லை. வாழ்க சுவாமிகளின் புகழ்.....வாழ்க நாடகக்கலை.

(9—9—68இல் மதுரையில் திரு. நே. பொ. மீ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற நாடகக் கருத்தரங்கில் பேசிய கருத்துரை)

தமிழ்ப் புத்தக வெளியீட்டுத் துறை திருப்தி அளிக்கிறதா?

★

நா. பார்த்தசாரதி
(ஆசிரியர் "தீபம்")

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்கிற துணிவு நமக்கு வந்திருப்பதிலிருந்தே தமிழ்ப் புத்தக வெளியீட்டுத் துறையின் எதிர்காலத்தைப்பற்றி நாம் நம்பிக்கை கொள்ள இடமிருக்கிறது. 'திருப்தி அளிக்கிறதா?'—என்ற பொதுக்கேள்விக்கு வாசகருக்கா, பதிப்பாளருக்கா, எழுதுபவருக்கா, என்று மூன்று கோணத்திலிருந்தும் விடை காண முயலலாம். பதிப்பாளருக்குத் திருப்தியளிக்கிற ஒரு வெளியீடு வாசகருக்குத் திருப்தியளிக்காமற் போகலாம். எழுத்தாளருக்குத் திருப்தியளிக்கிற ஒரு வெளியீடு பதிப்பாளருக்குத் தொழில் லாபமும், வாசகருக்குப் பயனும் தராமற் போய்விடலாம். ஆகவே திருப்தி என்பது ஒருவரை மட்டும் பொறுத்த விஷயமில்லை என்று தெரிந்து கொள்ள முடிகிறது. யார் செய்கிறானே அவனுடைய திருப்தி—யாருக்காகச் செய்கிறோமோ அவர்களுடைய நிருப்தி, யாரைக் கொண்டு செய்கிறோமோ, அவர்களுடைய திருப்தி என்று திருப்தியளிப்பதை மும்முனைப் பார்வையைப் பார்க்க வேண்டியிருக்கிறது. எல்லாத் தொழிலுக்குமே இது பொதுவாகப் பொருந்தும் என்றாலும் பதிப்புத் தொழிலுக்குச் சிறப்பாகப் பொருந்தும். இந்தியாவிலேயே அதிகமாக விற்பனையாகும் தினசரி, வாரமிருமுறைப் பத்திரிகைகளைப் பதிப்பிக்கிறவர்கள், ஆசிரியர்கள், வாசகர்கள், தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலேயே அதிகப் பிரதிகள் விற்பனையாகும் புத்தகத்தின் பதிப்பாளர் ஒருவரையோ, ஆசிரியர் ஒருவரையோ, தமிழ் நாட்டில் விரல்விட்டு எண்ண முடியவில்லை. பத்திரிகை விற்பனை வசதி, பத்திரிகை விற்பனைப் பெருக்கம், பத்திரிகைத் தொடர்களைப் புகழ், இவை அனைத்தும் சேர்ந்தும் கூட, ஒரு தனிவாசகன் ஒரு தனிப்பட்ட புத்தக வெளியீட்டைத் தேடிவந்து, தமிழ்ப் புத்தகம் வாங்கும் முறை வளர்வதற்கு உதவவில்லை. தவறு அல்லது கோளாறு எங்கே இருக்கிறது? புத்தகங்களின் அளவிற்குத் தரமாகவும், விஷயனத்தோடும் நடத்தப்படும் பத்திரிகைகளின் நிலையும் இதே மாதிரித் தான் இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன் கேரளத்தின் முக்கிய நகரம் ஒன்றிலுள்ள நேஷனல் புக்ஸ்டால் கிளை ஒன்றிற்கு ஒருநாள் சாயங்கால வேளையில் போயிருந்தேன். திருவிழாக் கூட்டம்போல் மக்கள் வருவதும் புத்தகங்கள் வாங்கிச் செல்வதும் எனக்கு ஆச்சரியத்தினை அளித்தன. சென்னையிலுள்ள எந்தத் தமிழ்நிறந்த தொரு புத்தக வெளியீட்டகத்திலும் எந்த ஒரு தினத்தின் சாயங்கால வேளையிலும் அப்படி ஒரு கூட்டத்தையும் வியாபாரத்தையும் இதுவரை நான் பார்த்ததில்லை. ஏதோ ஒரு வெளியூர் ஆர்டருக்கு, கல்லூரி, அல்லது பொது நூல் நிலையங்களின் தேவைக்கு அனுபுவதற்குப் பார்சல் கட்டிக்கொண்டிருப்பதைத் தவிர மிகச் சிறந்த அல்லது மிகப் புகழ்பெற்ற தனி ஆசிரியர் ஒருவரின் புத்தகத்தைக்கூடப் பல தனிவாசகர்கள் தேடி வந்து பணம் கொடுத்து வாங்குவதை இன்றுவரை நான் சென்னையில் பார்க்கமுடியவில்லை. இந்த நிலையை நல்லபடி மாற்றியமைக்கிற பதிப்புத் தொழிலையே நம்பியிருக்கும் நாணயமான பதிப்பாளர்களும், எழுத்துத் தொழிலையே நம்பியிருக்கும் நியாயமான திறமையுள்ள சில எழுத்தாளர்களும்கூடத் தமிழ்நாட்டில் மானமாக வாழமுடியாது.

எனக்குத் தெரிந்து—இந்த நிலைமையை ஆராய்வதற்கான ஒருகூட்டங்களோ, செமினார்களோகூட இங்கு அதிகமாகக் கூட்டப்படுவதில்லை. இப்போது இப்படி நாம் அடிக்கடி ஆராய்ந்தொடங்கியிருப்பதே ஒரு சாதகமான அடையாளம் என்று மீண்டும் நான் கூற விரும்புகிறேன்.

ஓர் ஆசிரியன் என்ற முறையில்—ஒரு பதிப்பாளன் என்ற முறையில், நீண்ட நாட்களாகவே நான் சில அடிப்படை உண்மைகளைச் சிந்தித்து வந்திருக்கிறேன். ஒரு மாதப் பத்திரிகையை நான் தொடங்குமுன், ஏற்கெனவே கூடந்த இருபதாண்டுகளில் திறமை

மிக்க எழுத்தாளர்களே பதிப்பாளராகவும் ஆசிரியராக வும் இருந்து நடத்த முன்வந்த பல பத்திரிகைகள் எந்தந்த நிலையில் எப்படி நின்று போயின என்பதுபற்றிப் பலரிடம் விசாரித்து அறிய முற்பட் டேன். அதிலிருந்து எனக்குச் சில உண்மைகள் தெரிய வந்தன. சில பல தெளிவுகளும் உண்டாயின. ஒரு காரி யத்தைத் தொடங்கும் மங்கலமான வேளையில் அப் படித் தொடங்கி நிறுத்தப்பட்ட பல காரியங்களே ஆராய்வது நல்லதா என்று 'ஸெண்டிமெண்டலாக' உங்களில் சிலர் நினைக்கலாம். இந்த விஷயத்தில் 'ஸெண்டிமெண்டலாக' இருப்பதைவிட ப்ராக்டிகலாக இருப்பது நல்லதென்று நான் நினைத்தேன்.

ஆரம்ப காலத்திலேயே தாங்கள் பதிப்பித்து வெளியிடப்போகும் பத்திரிகை தாங்க முடிந்ததற்கு அதிகமான எஸ்டாபிஷ்மெண்ட் செலவுகளைத் தாங் கிச் சில பதிப்புக்கள் முறிந்திருந்தன. புதிய சொந்தப் பத்திரிகை தொடங்குமுன் தாங்கள் பணி புரிந்த பிரம்மாண்டமான முகலிடுள்ள பத்திரிகை ஒன்றின் ஆடம்பரச் செலவுகளை முன் மாதிரியாகக் கொண்ட தன் காரணமாகச் சில பதிப்புக்கள் பாதியிலேயே கைமுதல் கரைந்து நின்றிருந்தன. காகிதம், அச்சக வகை, சீரான—எளிய நிர்வாகம், ஏஜெண்ஸி ஏற்பாடு கள் ஆகிய புறவகணங்களிலே போதுமான கவன மும், முன்னெச்சரிக்கையும் இன்மையினாலே சில பதிப்புகள் நின்று போயிருந்தன. எதை வழங்குவ தற்காக என்ன நோக்கத்தோடு பதிப்பிக்கிறோம் என் பது பற்றி எப்போதுமே ஒரு திட்டவட்டமான நோக்க மின்றி அவ்வப்போது கூறப்பட்ட நோக்கங்களே எல் லாம் ஏற்று கோட்டரீ ஆப் பப்ளிகேஷன் (Character of the Publication) ஒரு சீராக இல்லாமல் சில பதிப் புக்கள் சீரழிந்து நடுவிலேயே தக்குமுக்காடிப்போய் நின்றிருந்தன. ஆரம்பத்தில் ஒருவித ஆசையிலே பணம் போட முன் வந்து, பின் பு நாளடைவில் மனம் மாறி முதலீடு செய்பவர் கைவிட்டதன் காரணமாக ஆசிரியரும், பதிப்பிப்பதை வேறுவழியின்றிக்கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுச் சில பதிப்புக்கள் நின்றி ருந்தன. பல்வேறு திசைக்கு இழுக்கும் பலநோக்குள்ள பார்ட்னர்கள் ஒவ்வொருவராகக் கழற்றிக்கொண்டு போனபின், ஆசிரியரும் திகைத்துப்போய் நிறுத்த நேர்ந்த பதிப்புகளும் இருந்தன. குறிப்பிட்ட இரண்டு மூன்று விளம்பரதாரர்கள் மட்டுமே தங்களைக் காப் பாற்றிவிட முடியுமென்ற நம்பிக்கையிலே சில பதிப்புக் கள் தோன்றி, அந்த இருவர் மூவர் மனம்மாறி உதவி மறுத்தும் பயந்து-பொதுவாக எல்லா விளம்பரதாரர் களையும், அணுக அஞ்சியதால் சில பதிப்புக்கள் நின் றிருந்தன.

பதிப்புத்தொழிலில் ஈடுபட இந்த முன்னெச்சரிக் கைகள் பெரிதும் உதவும். புத்தகத்திற்கும் சரி, பத்திரி கைக்கும் சரி, பெரும்பாலான அடிப்படை ஒற்றுமை கள் உள்ளன. இந்த முன்னெச்சரிக்கைகளே மேற் கொண்டு என்னஎவ்வி நான் பயனடைந்திருக்கி றேன். இனி புத்தகப் பதிப்பு என்று வரும்போதும் தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தைக் கடன் வாங்கிச் சொந்தத்தில் நானே சில புத்தகங்களைப் பதிப்பித்து விற்பனைக்கும் அனுப்பியுள்ளேன். அந்த அனுபவங்களையும் ஓளவு இங்கே ஆராயலாம். பொது வாகத் தமிழ்நாட்டில் புத்தக உள்ளடக்கம், பிழை யின்றி அச்சிடுதல், எளிய நியாயமான விலைக்குப் புத் தகத்தை விற்பனைக்கு அனுப்புதல் ஆகியவற்றையே அட்டைப்படம் முன்னுரை, அணிந்துரை, சிறப்புரை, வகையறுக்களின் அளவு அதிகமாகிவிடுகிறது. ஒரு சில புத்தக ஆசிரியர்கள், தமக்குக் கல்லூரியில் போதித்த பேராசிரியரின் முன்னுரை, தமக்கு எம். வி.ட். வாங்க உறுதுணைபுரிந்த சான்றோரின் சால்புரை, புத் தகம் வெளியிடப் பொருளுதவி புரிந்தவரின் பொன் னுரை, சமர்ப்பண உரை, பதிப்பாளர், அச்சகத்தார் ருக்கு நன்றியுரை, என்று புத்தகத்திற்கு முன் ஐந் தாறு கடுமையான சிறப்புச் சொற்பொழிவு கேட்கும் அசதியையும் சலிப்பையும், உண்டாக்கிவிடுகிறீகள். புத்தகத்தைப் படிக்கக் காத்துக்கொண்டிருப்பவன் வாசகன் எனபதே அவர்களுக்கு மறந்துபோய்விடு கிறது. தமிழ்ப் புத்தகம் எளிய நியாயமான கவர்ச்சி பெற வேண்டுமானால், மூவண்ண அட்டை, வழவழ அட்டை மோகம் குறையவேண்டும். உள்ளே பத்து பாரங்களே அச்சிட 600 ரூபாய் செலவென்றால், அட்டைப்பட பிளாக், ஆர்ட் பேப்பர், மூ வ ண் ண அச்சுக்கூலி, எல்லாம் சேர்ந்து 800 ரூபாய் ஆகி விடுகிறது. அந்தச் செலவையும் புத்தக விலையில் போட்டால், புத்தக விலை ஏறிவிடுகிறதைத் தவிர்க்க முடியாது. உள்ளே எவ்வளவு மோசமான தாளில் எத்தனே மட்டமாக அச்சிட்டாலும் அட்டைப்படம் பிர மாதமாக இருக்கவேண்டுமென்ற 'அட்டை மனப் பான்மை'– ஒழியத்தான் வேண்டும், இதற்கு அர்த்தம் அட்டை அழகு வடிய வேண்டும் என்பதில்லை. உதாரணமாக வாசகர் வட்ட அட்டையைப் பாரு களேன். பென்குவின்புக்ஸ் போல ஒரு சீரான அமைப்பு இல்லையா? கேரளத்தில் வெளியிடப்படும் தரமான புத்தகத்தின் அட்டைகூட எளிய அழகுடன் இருப்பதைக் காண்கிறோம். புத்தகத்துக்காக அட்டை என்றிருக்க வேண்டுமேயொழிய அட்டைக்காகவே புத்தகம் என்றிருக்கக்கூடாது. பத்திரிகைகளுக்கா வது நியூஸ் ஸ்டாலில் டிஸ்ப்ளே போட்டி இருக்கிறது. புத்தகங்களை இங்கு பத்திரிகைகள் போல் நியூஸ் ஸ்டா லில் தொங்கவிடப்படுவது இல்லே. ஆகவே புத்தகங் களின் அட்டைக்காக வலே ஏற்றுவதைக் கூடியவரை கைவிட வேண்டும். உள்ளே நல்ல காகிதத்தால்— தெளிவான அச்சு அமைப்பினுல் வெளியிட நல்ல செலவு செய்தாலும் பயன் உண்டு. மோசமான உள் பக்கங்கள், மோசமான அச்சமைப்பு, நல்ல அட்டை யால் பேசாத்தப்பட வேண்டும என்ற சல அடக்க மனப்பான்மை அநாகரிகமானது. இவ்வளவு கடுமை யாகக் கூறுவதற்கு வருந்துகிறேன். நோக்கம் நல்ல தாக இருப்பதால் கடுமையாகக் கூறினுலும் தவறில்லே.

ஒரு புத்தகம் தயாராகி வரும் வரை உள்ள பல செலவுகள் நினேவில்லாமல் ஆரம்பக் காரியங்களுக்கே அதிகமாகச் செலவழித்துப் பின்னுல் 'பைண்டிங்' செய்ய வேண்டியபோது கையைப் பிசையும் சில பதிப்பாளர்—ஆசிரியர்களே நான் பார்த்திருக்கிறேன். தமிழ்சிறந்த இலக்கிய மன்னர்கள் கூடச் சொந்தமாகப் புத்தகம் வெளியிடுவதில் ப்ராக்டிகலாகத் திட்டமிடு வதில்லே. புத்தகம் வெளியிட என்று சொஸைட்டி யில் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியதும்-புத்தகம் மார்க்கெட்டுக்குப் போய்ச் சேருகிறவரை எல்லாச் செலவுகளையும் பார்த்து ஒரு சீராகத் திட்டமிடாமல்

ரீம் முந்நூறு ரூபாய் விலையுள்ள இம்போர்ட்டெட்ஆர்ட் பேப்பர் வாங்கிவிட்டு உள்ளே பேப்பர் சுமாராகவும், அச்சு சுமாராகவும் முடித்துவிட்டு பைண்டிங்குக்கு கார்டுபோர்டு வாங்கப் பணம் போதாமல், தனியே மேலும் கடன் வாங்குகிறவர்கள் உள்ளனர். முதல் அனுபவமே அடுத்து சொந்தமாகப் புத்தகம் வெளியிடலாம் என்ற எண்ணமே இரண்டாவது முறை எழுமுடியாதபடி செய்துவிடுகிறது. பலர் விஷயத்தில் இதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

கோ-ஆப்ரேடிவ் சொஸ்ஸைடியில் நான் கடன் வாங்கி வெளியிட்ட புத்தகங்களைப் பொறுத்தவரை- எனக்கு இப்படிச் சலிப்பான அனுபவம் எதுவுமில்லை. தயாரிக்க வேண்டிய புத்தகம் பைண்ட் ஆகி மார்க்கெட்-போகிறவரை உள்ள செலவுகளை முதலிலேயே பட்ஜெட் தயாரித்து ஒன்றை ஒன்று விழுங்கிவிடாமல் பார்த்துக்கொள்வேன். ஆர்ட் பேப்பர் வாங்குவதில் மட்டும் விசேஷ கவனம் செலுத்தி மற்ற காரியங்களை ஏனோதானோ என்று முடிக்கும்படியாகவோ, ஆரம்பச் செலவுகளைச் சுருக்கனமாகச் செய்துவிட்டு, முதலில் 'அச்சக பில்லை'க்கொடுக்க முடியாமல் தினறுவதாகவோ, புத்தகம் வெளியிட என்று திட்டமிட்டு வங்கிய கடனுக்கு மேலாகச் செலவு ஆவதாகவோ, எனக்கு அனுபவங்கள் ஏற்பட்டதே இல்லை. அச்சிடுவதற்குரிய பலவேறு தாள்களின் ஆல்பம் ஒன்றும், அவற்றின் தெளிவான எடை, விலை விவிதப்பட்டியல் ஒன்றும்கூட என்னிடம் இருக்கிறது. இன்றைய நிலையில் தமிழ் எழுத்தாளன் சொந்தமாகப் பதிப்பிக்கும் எந்த வேலையில் ஈடுபட்டாலும் குறைந்த நிலமுள்ள சிக்கனமான விவசாயியைபோல், ஒரு எளிய குடிசைத் தொழிலில் முதலீடு செய்பவனைப்போல நடந்துகொள்ள வேண்டும். அச்சகம், பைண்டிங், ஆர்டியவைபற்றிய தெளிவான நிலைமைகளை ஓர் எழுத்தாளன் அறிவதும், நிகேவு வைத்துக்கொள்வதும் அவனது கற்பனை வளத்தையும், மனத்தின் கனவு காணுகிற லளிதத்தன்மைகளையும் மெருத்துவிடும் என்று சிலர் கூறுகிறார்கள். அது தவறு. எழுத்தாளனும், உலகில்தான் வாழ வேண்டும். காசு, பணம், விலே விபரம் மற்றத்துறைகளில் தெரிவதுபோல், தன் துறையான காகிதம், அச்சு, பைண்டிங், பற்றிய நிலவரங்கள் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். மனிதன் புழங்கும் காசுகளோ, நாணயங்களோ இழிவாகக் கருதப்படுவதற்கும், விலேவாசிகள் தெரியாமலிருப்பதற்கும் - எழுத்தாளனுக்கென்றே விலேவாசிகளில்லாத 'உடோபியன் சாம்ராஜ்யம்' ஒன்று தனியாக எங்கும் படைக்கப்பட்டிருக்கவில்லே. விலேவாசிகள் உள்ள உலகத்தில் வாழ்ந்துகொண்டே, 'எனக்கு அதெல்லாம் தெரியாது! நான் சதாகாலமும் கற்பனேயில் மிதப்பவன்' என்று மேலுக்குக் கூறிக்கொள்வதைத் தமிழ் எழுத்தாளனின் ஆஷாடபூதித்தனம் என்றேகூறவேண்டும். இப்படியே தமிழ்வாசகர்களிடம் உள்ள ஆஷாடபூதித்தனங்களும் தொலேயவேண்டும்.

தமிழ்வாசகன் மாதம் பத்து முதல் பதினேந்து ரூபாய் வரை பத்திரிகைகள், தினசரிகள், வாங்கச் செலவழித்தாலும், செலவழிப்பானே ஒழிய அதில். ஒரு மூன்று நான்கு ரூபாயைக்கூடப் புத்தகம் வாங்கச்செலவழிக்க முன்வர மாட்டான். ரயில் பயணம், பஸ் பயணத்தின் போது படிக்கவும், ஏர்ல் ஸ்டான்லிகார்ட்னர் வாங்குவானே தவிர தமிழ்ப்புத்தகம் எதுவும் வாங்க மனம் வராது. தமிழ் நாட்டில்கூட ஏர்ல் ஸ்டான்லி கார்ட்னரின் ஒரு புத்தகம் மாத விற்பனேயில் செலவழிகிறதில் பாதிப் பிரதிகள் கூட ஒரு தமிழ்ப்புத்தகம் வருட விற்பனேயில் செலவாவதில்லே. ஆர். கே. நாராயணனின்'தி கய்ட்' முதற்பதிப்பிலிருந்து இன்றுவரை சுமார் இருபதாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்றிருக்கிறது. இப்படி ஒரு நல்ல தமிழ்ப்புத்தகம் பல வருஷங்களில் கூட விற்பதில்லேயே? ஏன்? புத்தகமாக வாங்கி படிப்பதை விட தாலு வாரப் பத்திரிகைகளே வாங்கி 6 தொடர் கதைகளே ஒரு வருடத்தில் 'பைண்ட்' செய்துகொள்ளலாம் என்ற தமிழ்வாசக மனப்பான்மையும் ஒரளவு இதற்குக் காரணமாகலாம். இந்த மனப்பான்மையை இத்தகைய லெமினர்கள் மூலம் மெல்ல மெல்லப் புத்தக வெளியீட்டுக்குச் சாதகமாக மாற்ற வேண்டும். கற்பனே உலகிலேயே மிதப்பாக ஏமாறுமல், தற்தக்கோபுரத்திலிருந்து இறங்கி வந்து, தன் தொழிலப்பற்றிய பிரக்ஞையை எழுத்தாளனும் அடையவேண்டும். நியாயமான, நாணயமான பதிப்பாளர்கள் நல்ல புத்தகங்களே எளிய விலேக்கு அளிக்க முன்வந்து தேடிவரும் தனி வாசக ரசிகர்களேப் பெருக்க முயல மாதிரி புத்தகங்கள் வேண்டும். இதற்கு எழுத்தாளர், வாசகர் ஒத்துழைப்பும் தேவைப்படும். இப்படியெல்லாம் கூட்டுறவோடு செய்ய முற்பட்டால் தமிழ்ப்புத்தக வெளியீட்டுத்துறை திருப்தி அளிக்கிற ஒன்றாக மாறுமென உறுதியாக நம்பலாம்.



அன்னை

"கவிதை நாடகம்"

★

துறைவன்

பாத்திரங்கள்: 1. அநீதி
2. வறுமை
3. செல்லையன்
4. மாரியம்மை
5. தேவானை

மாரி :

தேவானை, தேவானை

தேவா :

அத்தையம்மாள், வாருங்கள்

மாரி :

சிவி முடியாமல் சிங்காரம் செய்யாமல்
பாவிமகளே பரிதவித்து நிற்பதென்ன?

தேவா :

சிவி முடிப்பதற்கும் சிங்காரம் செய்வதற்கும்
பூமியிலே நாலுபேர் போல இருப்பதற்கும்
நல்ல கணவனை நான் நானிலத்தில் பெற்றேனு

மாரி :

சீசல்லையா நல்லவன்தான் சீருள்ள வாலிபன்தான்
தொல்லை தரமாட்டான் தொந்தரவு
செய்யானே

தேவா :

பிள்ளைகள் மேலன்பும் பெரியோர் தமை வணங்கும்
கள்ள மிலாச்சிந்தை களைரவமும்
வாய்ந்தவர்தான்
ஆனாலும் உலகத்தில் அடிக்கும் அலைகளுக்குள்
படகோட்டத் தெரியாது பதைக்கின்றார்
எந்நாளும்.

மாரி :

வாழும் வகை தெரியா வஞ்சனென்ரு கூறுகிறாய்
வாழும் வகை தெரியா வஞ்சனென்று
சொல்லவில்லை
வாழும் வகை தெரிந்தும் வாழும்
முயற்சியில்லை
எடுத்த தொரு காரியத்தை இன்னல்களைக்
கண்டஞ்சி
முடிக்காமல் கைவிட்டு மூளும் துயர்வெறியில்
உலகமே தீயதென்றும் உலகத்தார் கயவரென்றும்
பழித்துத் திரிகின்றார் பட்டினியாய்
வீட்டினிலே
நானும் குழந்தைகளும் நலிந்து கிடந்தாலும்
உற்றவழி செய்யாமல் உறங்கிக்கிடக்கின்றார்.

நெஞ்சத் திடத்தை நெகிழவிட்டு கையிலுள்ள
சொத்தைக் கரைத்து சூழ்ந்து வரும்
வெள்ளத்தில்
தள்ளுண்டு மோதுண்டு தடுமாறும் தூரும்பாக—
அலைந்து திரிகின்றார் அல்லல் மிகக்
கொள்ளுகின்றார்
அறிவுத் திறத்தையெல்லாம் அடியோடு
மறந்துவிட்டார்
நெறிகெட்டுப் போகின்றார் நிலைமை
யிதற்கென் செய்வேன்

மாரி :

நல்லவிதம் நீயெடுத்துச் சொல்லத்தானுகாதோ

தேவா :

எல்லாம் முடிந்தாச்சு எடுத்தெடுத்துச்
சொல்வதெலாம்
செவியேற்கமாட்டாமல் சிந்தையிலே
கொள்ளாமல்
சோம்பல் ஒரு தத்துவமாய்ச் சொல்லுகின்றார்
நடுவீட்டில்
யாதிங்கு செய்வதென்று தெரியாமல், வழிதவறும்
மானுய் மறுகுகின்றேன் மனநோய்க்கே
ஆளானேன்.

மாரி :

குடும்பத் தலைவி மனம் குமுறுவதோ? கணவனைத்
தான்
திருத்த முடியாமல் திகைப்பதுவோ
இந்நிலையை
மாற்றிவிட வேண்டும் மணங்கமழும் இல்லறத்தில்
அன்புக்கொடி பூத்த அல்லிப்பூ மக்களொடும்
இன்பவளம் காணுமல் இன்னல் வரலாமோ?

அஞ்சாதே தேவாணை ஆடவர்கள் போக்கை
யெலாம்
கண்டறிய மாட்டோம் நாம் கலங்கரை
விளக்காக
நின்றுவழி காட்டுவதே நேரிழையார் தம் கடமை

உன் கணவன் தனைக் கண்டே உரைப்பேன்,
திருந்தும் வழி
உன் கவலை மாற்றிடுவேன் உள்ளம்
வருந்தாதே
நானெடுத்துச்சொன்னபின்னும் நல்லவழி
காணுனேல்
தெய்வம் துணையுண்டு தேறியிருப்பாய்
மகளே.

[காட்சி மாற்றம்]

அந்தி :

நல்லவரை இவ்வுலகில் நடமாட வொட்டாமல்
அல்லற் படுத்துகின்ற அந்தி என் பெயர்
தான்.

வறுமை :

சிந்தித்துச் சிந்தித்துச் செயல்திறமை அற்றுவிட்ட
மந்தக் குணத்தோரை வாட்டுகின்ற வறுமை
நான்

அந்தி :

வணக்கம் தோழா வறுமையே வணக்கம்.

வறுமை :

இணக்கம் கொண்டோம் என்றும் இருவரும்
உலகில் கலகமும் நோயும் படைப்போம்.

அந்தி :

கலகம் பெருத்தால் தொழில்கள் தேயும்

வறுமை :

தொழில்கள் தேய்ந்தால் சோம்பல் வளரும்

அந்தி :

சோம்பல் வளர்ந்தால் துட்டர் பெருகுவர்

வறுமை :

துஷ்டர் பெருகிடில் நல்லோர் ஒதுங்குவர்

அந்தி :

இஷ்டம்போல் நாம் இருவரும் வாழ்வோம்.

(இருவரும் சிரிக்கிறார்கள்)

வறுமை :

அதோ வருகிறான் அருமைத் தொண்டர்

அந்தி :

தேவாணை கணவன் செல்லையா தானே

வறுமை :

நாவாரப் புகழ்வோம் நல்லவன் அவனை.

அந்தி :

எதிர்க்கும் சக்தி ஏதும் அவனிடம்
பதுங்கி யிருப்பினும் பையநீக் கிடுவோம்.

வறுமை :

தலையைக் குனிந்து தட்டழிவெய்தி
நிலைமை மறந்து அவன் நினைவழிந்திடுக.

அந்தி :

நான் அவனிடம் போய்ச் சிறிதுரையாடுவேன்

வறுமை :

பின்னர் நானும் பேதையை வாட்டுவேன்

அந்தி :

வணக்கம் தோழா

செல்லை :

வணக்கம்—யார் நீ

அந்தி :

நான்தான் அந்தி நானிலம் முழுதும்
ஆட்சி செலுத்திட ஆசை கொண்டவன்.

செல்லை :

உன்னுல் என் நிலை உணரார் உலகில்
கற்றமை இருந்தும் அறையார் என்னை
வேலை தாரார் வண்டிழி சூட்டுவார்
கேலி செய்குவார் கெடுப்பார் என் தொழில்.

அந்தி :

அதுவே உண்மை அனைத்தும் நன்று
அநீதி உலகில் அருந்திறல் வாய்ந்த
உன்னைப் போன்றோர் உயிர்வாழ முடியுமோ ?

நீயோ மேதை நிரம்பப் படித்தவன்
தீயோர் உன்னைச் செருக்கால் மிதிப்பார்
உழைப்பதால் இங்கே ஒருபயன் இல்லை
உழைப்பின் பலனை எனக்கு எவர் தருகிறார்.

செல்லி :

யானும் நினைந்தேன் நீ அது சொன்னாய்
ஊனும் உயிரும் வாட்டி உழைத்தும்
பயன் ஒருமண்ணும் பாரில் கண்டிலேன்.

அந்தி :

இப்பொழுதிருக்கும் நிலையிலே மாற்றம்
காண விரும்புதல் கானல் நீர்தான்.
இருந்தபடியே இருந்திடுவாய் நீ
ஏற்றம் மாறுதல் இன்னும் ஒருபடி
உயர்தல், ஒங்குதல் என்பதெல்லாமே
மாயைதம்பி, மனத்தின் மயக்கம்.

கண்ணர் உண்மை கசப்பே வாழ்க்கை
எண்ணம் இயற்றும் கவலைச் சேறே
நமக்கெலாம் சுவர்க்கம் நாமும் வளர்வோம்
என்ற பேச்சை எடுக்க வேண்டாம்.

செல்லி:

இனிப்பாய்ப் பேசும் என்பெரு நண்ப
உழைப்பால் உயர்ந்தோர் உலகினில் ஏது?
அதிர்ஷ்டம் வேண்டும் அடித்திடும் யோகம்
பொன்னும் பொருளும் மணியும் குவியும்
வானத் திருந்தே மழையாய்ப்பொழியும்
பொழியும் வரைநான் பொறுத்திருந்திடுவேன்.

என்னறிவுக்கும் திறமைக்கும் ஒரு
பொன மழை பொழியப் போகின்றது கான்
பொன்மழை பொன்மழை புதிய யுகமழை.

(மந்திர உச்சாடனம் போல் முனங்கித் தூங்குகிறான்)

அந்தி : (மெல்லியகுரலில்)

வறுமை நண்பா வாழ்க நின் மாயம்
இளைஞனை மயக்கினேன் இன்னும் அறிவு
ஏதுமிருந்தால் நீ போய்க்கெடுத்திடு

வறுமை :

அவவிதமே தான் அணுகுவேன் அவனை
(தாமதம்)
செல்வா, தம்பி, செல்லியநண்பா

செல்லி :

யாரது என்னை இவ்விதம் அழைத்தது?

வறுமை :

நானே வறுமை தரித்திரம், புவியில்
நன்குரலென்றும் நவின்றிடுவார் என்னை

செல்லி :

செல்வன் என்று ஏன் செப்பினாய் என்னை

வறுமை :

செல்வன் நீயே வறுமை என்றிடும்
அழியாச் செல்வம் அமைந்துள துன்னிடம்.

செல்லி :

என்ன கதைக்கிறாய் வறுமையோர் செல்வமா?

வறுமை :

வறுமைச் செல்வம் வாய்ந்தவரால்தான்
பெருமை மிகுந்தது பாரினில் எங்கும்.
புதுமைக் கருத்தும் புதுயுகக் காட்சியும்
நிதமலர்க்கவிதையில் நெளிந்திடச் செய்தனர்
வறுமை தழுவிய புலவர்தாம் அல்லரோ?

மந்திரஞ் சொல்லும் மறைகளைத் தந்தனர்
தமக்கென ஒன்றும் இல்லா முனிவரே
சிந்தையில் தெளிவு சேர்ந்திட வேண்டிடில்
தரித்திரம் வேண்டும் தரித்திரச் செல்வா
தெளிவு வேண்டுமோ திகைப்புறவேண்டுமோ?

செல்லி :

திகைக்க வைத்திடுமுன் தத்துவம் உணர்ந்தேன்

வறுமை :

திகைத்தாய் அல்லை நீ தெளிந்தாய் தம்பி.

செல்லி :

தரித்திரம் செல்வம் திகைப்பே தெளிவு
தலைகீழ்ப் பாடம் ஆயினும் உன்னைக்
காரணம் காட்டி மறுக்கும் வலிமை
என்னிடம் இல்லை இனிதே உரைத்தாய்.

வறுமை :

காரணம் எல்லாம் செல்வர் தம் சூது
கிழிந்த ஆடையும் கிளர்ந்த கேசமும்
இழிந்த கண்களும், இடுங்கிய சொற்களும்
மெலிந்த நடையும் மிழற்றும் மொழியும்

வறுமை வாழ்வின் வளத்தைக் காட்டிடும்

இதுவே சுவர்க்கம் இதுவே உலகில்
மனித வாழ்க்கையின் மா பெரும் மாட்சி.
மண்ணிலே உழைத்திட மாடா நாமெலாம்?
ஆலையில் உழைத்திட ஆடுகளாநாம்.

வாணிகம் செய்திட வாய்க்குமோ நமக்கு
காவல் புரிந்திடக் கட்டி வருமோ?
கைகளும் கால்களும் கண்களும் செவியும்
அழகிய உடலும் ஆண்டவன் தந்தது.

உழைத்து வியர்வையில் ஓடாக் கிடவோ?
தேயச் செய்து சிதைத்திடுவதற்கோ.
சும்மா இருத்தலே சுகத்தின் பெருநிலை
அம்மா என்பதே தாரகமந்திரம்

செல்லி :

என்னுள் ளத்தின் எதிரொலி நீயே
இன்பம் சொட்டும் இணையிலா அறிவுரை
இஃதறியாமல் ஏதோ சொல்லி
ஏச்சும் பேச்சும் இசைத்தாள் மனைவி.

வறுமை :

வருகிறேன்.....நண்ப.....

செல்லி :

வாழ்க நீ.....வறுமை

மாரியம் :

ஏண்டா தம்பி இப்படி நிற்கிறாய்

செல்லி :

தெளிவு பெற்றேன் தீர்ந்தது என் ஐயம்

மாரி :

வாழ்க நீ தம்பி வயிற்றுக்காக
உழைத்து வாழ்வாய் உன்சிறு குழந்தைகள்
மனைவி தமக்கே மகிழ்ச்சியைத் தருவாய்

செல்லி :

இல்லை இல்லை இது வீண் கனவு
அல்லல் உழைப்பு அரிய வாழ்க்கையில்
உழைத்து வாடுதல் உயர்ந்தோர் செய்வதா?

மண்ணிலே உழைக்க மாடா நானும்
ஆலையில் உழைத்திட ஆடா நானும்.

மாரி :

ஐயோ பாவம் புத்தி கலங்கினாள்
சித்தம் தவறிச் சிதைந்தது மூளை
குழந்தையும் மனைவியும் எப்படி வாழ்வரோ?
ஆண்டவன் சோதனை ஆரிதற்கென்செய்வார்?

[காட்சி மாற்றம்]

செல்லி :

துக்கமே விழிப்பு துயரமே இன்பம்
திகைப்பே தெளிவு தரித்திரம் செல்வம்.

அநீதி :
(வெடிபடச் சிரித்து)

வெற்றி வெற்றி இணையிலா வெற்றி
உழைக்கும் இளைஞனைப் புழுவாய்
மாற்றினேன்
வெற்றி வெற்றி.

வறுமை :
(அழுகைச் சிரிப்பு)

வெற்றி வெற்றி இணையிலா வெற்றி
அசையும் மனிதனை குத்துக் கல்லாய்
நின்றிடச் செய்தேன் நிகரிலா வெற்றி.

அநீதி :

மனிதனையப் பிறந்தவன் மண்புழு வானான்.

வறுமை :

அறிவாய்ப் பிறந்தவன் பன்றியாய் விட்டான்.

(வெடிபடச் சிரித்தல்)

குழந்தைகள் அழுதன குமுறுவாள் மனைவி
அபலை தேவனை அழுகையில் மூழ்கினாள்.

அநீதி :

ஒருவனைப்பிடித்தேசம் ஒழிந்ததோர் குடும்பம்

(தாமதம்)

வறுமை :

எழுந்திருக்கின்றாள் தேவனை, அது பார்

அநீதி :

என் செயப் போகிறாள் என்னவோ முகத்தில்
தைரியங் கொள்கிறாள் தரித்திரம் ஒழியுமோ?

(தாமதம்)

வறுமை :

பார்க்கலாம் பொறு பொறு இராட்டினம் ஒன்றை
எடுத்து வைக்கிறுள்.

அந்தி :

இழைக்கிறுள் நூலே

வறுமை :

குழந்தைகள் எழுந்தன தாய்க்குத் துணையாய்
பஞ்சைத் தூய்மை செய்கின்றன பார்.

அந்தி :

ராட்டினச் சக்கரம் கண்டால், என் சூலே
நடுங்கு கின்றது நண்பா, வறுமை.

வறுமை :

ராட்டினம் சுழன்றது என்தலே சுழன்றது.

அந்தி ;

ராட்டினச் சக்கரம் காளியின் கைவேல்

வறுமை :

நமக்குத் தலேவலி வந்தது இவ்வீட்டில்

அந்தி :

பேசுவேன் அவளிடம் பெண்ணே, நீயும்
வாழ்ந்த வாழ்வை நினேத்துப் பார்ப்பாய்
ஏழைபோல் இவ்விதம் இராட்டினம் சுற்றவோ.

தேவானே :

அநீதிப் பேயே அடக்குவாய் வாயை
ஆடவன் துணேவன் அகத்தின் தகிவனே
மயக்கியது போல என்னேயும் மயக்க
வந்தா யோ நீ வகையிலாப் பேயே.

அந்தி :

சினங்கொள்ளாதே தேவா னேயம்மே.

தேவானே :

கோபத் தீயால் கொளுத்துவேன் உன்னே
ராட்டினச்சக்கரம் கொய்யும் உன் தலேயை
ஆயிரம் அநீதி அவனியில் இருக்கலாம்
அஞ்சலேன் அவற்றை ஆமைபோல்
வாழேன்
எதிர்ப்பேன், அவற்றை இப்பெரும் ராட்டையால்

ஓடிப் போய்விட உடனே அகன்றிடு.

வறுமை :

போகிறேன், பெண்ணே புத்தியில் ஆணினும்
பெண்ணே சிறந்தவள் என்றுநான்
உணர்ந்தேன்
நூற்கும் நூலினுல் நீங்குமோ வறுமை.
அரைக்கால் வயிறும் நிரம்புமோ தாயே.

தேவானே :

அக்கறை இல்லே வறுமைப் பிசாசே
உழைத்து வாழுவேன் உற்றது போதும்
உனக்கிங் கிடமில்லே உழைப்பினே வெறுக்கும்
வறுமைப் பேயே வழிக்கொள்வாய்நீ
நின்ருய் என்ருல் நெரிப்பேன் கழுத்தை.

வறுமை :

ராட்டினம் சுழற்றத் தொடங்கிய பின்னுல்
நிற்பது எங்ஙனம் நில்லேன். சென்றேன்

தேவானே :

நானே வயலில் ஆலியில் உழைத்துப்
பாடுபட்டுக் குழந்தைகள் வளர்த்து
சிக்கன வாழ்வில் சிறப்பினேயடைவேன்

கொண்ட கணவன் திருந்தினும் அன்றி
திருந்தாதிருப்பினும் அக்கறை இல்லே.
இன்னலே எதிர்ப்பேன் தனியாய் எதிர்ப்பேன்
தைரியம் என் வேல் தெளிவென் சக்தி.
முன்னெரு நாளில் உலகினில் எங்கும்
எருமை யசுரன் என்ருெரு பேயன்
துக்கமும் திகைப்பும் இழிவும் வறுமையும்

நோயும் நொடியும் பரப்பினுன், ஆண்டான்
அவனே பழித்திடும் திறமிலார் தேவர்
அரனும் அயனும் திகைத்தனர்.

உமையவள் கலேமகள் ஓங்கும் திருமகள்
மூவரும் தாய்க்குல மூலவேர்களாய்
ஒன்றுகூடினர் ஓங்கிய தவத்தால்

ஆயிரங்கோடி சிங்க வலிமையைப்
பெற்றனர், மகிடா சுரனே மாய்த்தனர்
அநீதியைக் கொன்றனர் அறிவை விடுதலே
செய்தனர், வறுமையைச் செற்றனர் முழுதும்
பெரும் பராசக்தி பாரினேக் காத்தாள்

அதுபோல் இன்று நான் குடும்பம் காப்பேன்
உழைப்பும் முயற்சியும் ஓங்குக ஓங்குக.
தளர்வும் சோம்பலும் தவிர்க தவிர்க
சுழலுக ராட்டினம் சுழலுக பெண் திறல்
ஆ.....என் கணவன் அசைத்திடுகின்ருன்.

செல்லே :

அருமைத் தேவி அனேத்து முணர்ந்தேன்
சோம்பல் ஒழிந்தது எருமைத் தன்மை
போக்கினேன் இன்று இனிதே உழைப்பேன்
அன்னையாய் நீயே அறிவுரை நிகழ்த்தினுய்.

"இளைஞர் தலைவர் நேத்தாஜி"

கண. முத்தையா

நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் வங்காளம், அளித்த பெருங்கொடை. ஆயினும் அவர் இந்தியாவின் தனிப்பெருந் தலைவர்களில் ஒருவர். இந்திய மக்களின் நல்வாழ்வு, இந்திய மக்களின் முன்னேற்றம் இவைதான் அவரது தாரகமந்திரங்கள்.

நேத்தாஜியவர்கள் ஹரிபுரா காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிறகு, அதையடுத்து நடந்த பல நிகழ்ச்சிகளினூடே, இந்தியாவிற்குள்ளிருந்து கொண்டே இந்தியாவின் விடுதலையைத் தரிதப்படுத்த இயலாது என்று அவர் கருதினார். ஆகவே இந்தியாவை விட்டு வெளியேறி, இரண்டாவது உலக யுத்த சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, இந்தியாவின் விடுதலையைத் துரிதப்படுத்தவேண்டுமென்ற ஆசைப்பட்டார். அந்த ஆசையை நிறைவேற்ற அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிகத் துணிகரமானவை என்பது மட்டுமல்ல; அதீத மானவையுங்கூட.

அவர் பல துன்பங்களுக்கிடையே தமது ஒப்பற்ற லட்சியத்தை நோக்கி முன்னேறிய முயற்சியின் விளைவுதான், அவர் ஜெர்மனியை அடைந்து, அங்கிருந்து டோக்கியோவிற்குப்போயி. இறுதியாக மலேயாவிற்கு வந்தது. 1943-ம் வருடம் அக்டோபர் மாதம் 21ம் நாள் சிங்கப்பூரிலே சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நிறுவினார் நேத்தாஜி. அச்சு நாடுகளும் அவற்றை ஆகரித்த வேறு சில நாடுகளும் இந்தத் தற்காலிக அரசாங்கத்தை அங்கீகரித்தன. இந்த நிகழ்ச்சியை இந்தியாவிலிருந்த சிலர் தவருகப் புரிந்து கொண்டனர். "பாசிஸ்டுகளுடன் நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சேர்ந்து கொண்டுவிட்டார். உலகில் பாசிஸ சர்வாதிகாரம் வெற்றி பெறத் துணை புரிகிறார்" என்று தவருகப் பிரசாரம் கூடச் செய்தார்கள்.

நேருஜியைப் போல் நேத்தாஜி உலக சகோதரத்வ சியல்ல. உலக சகோதரத்வம் சமாதானம் என்பவைகளிற்பற்றி வெளிப்படையாக அவர் எதுவும் பேசியதில்லை. அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு கூட இவைகளிற்பற்றி அவருடைய கருத்து என்ன என்பது தெளிவாகத் தெரியாது. அவருடைய லட்சியமெல்லாம் இந்தியாவின் விடுதலை; இந்திய மக்களின் நல்வாழ்வு; இவைதான். இந்த லட்சியத்தை அடைவதற்குக் கிடைக்கக்கூடிய எல்லாச் சந்தர்ப்பங்களையும், எல்லாவித ஆயுதங்களையும் பயன்படுத்த வேண்டுமென்பது தான் அவருடைய ஆசை. அந்த ஆசையின் விளைவே அச்சு நாடுகளின் ஆதரவோடு தோற்றுவிக்கப்பெற்ற சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கமும் இந்திய தேசிய இராணுவமும்.

சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை நிறுவியபோது ஜப்பானிய அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் முக்கியமான சரத்துக்களின் சாரத்தை கவனித்தால் இந்த உண்மை விளங்கும்.

1. பிரிட்டிஷ் இராணுவம் சிங்கப்பூரிலும் மலேயாவிலும் விட்டுச் சென்றுள்ள இராணுவ தளவாடங்கள் யாவற்றையும் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிடுவதோடு, கைதியாக்கப் பெற்றுள்ள 60 ஆயிரம் பிரிட்டிஷ் இந்திய ராணுவத்தினரில் விரும்புகிற எல்லோரையும் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்த்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

2. பர்மா-இந்திய எல்லையில் நேசதேச இராணுவத்தை எதிர்த்துப் போராடுவதோடு, அஸ்ஸாம்-சின் ஹில்ஸ் மலைவழியாக சீனாவிற்கு சப்ளை லாரிகள் செல்லும் ரோடோ ரோடு பாதையை அடைத்து, சீனா

விற்குச் சப்கோயைத் தடுப்பதும் இந்திய தேசிய ராணுவத்தின் பொறுப்பு.

3. பர்மாவிலும் இந்தியாவிலும் வசிக்கும் 30 லட்சம் இந்தியர்களும் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தின் பிரஜைகளாகவே கருதப்படுவார்கள்.

4. பர்மா எல்லையைக் கடந்து இந்திய மண்ணில் இந்திய தேசிய ராணுவம் நுழையும்போது, ஒரு ஜப்பானிய சோல்ஜர்கூட இந்திய மண்ணில் காலடி எடுத்து வைக்கக்கூடாது.

இந்த நிபந்தனைகள் நேத்தாஜி எவ்வளவு முன்னெச்சரிகையோடும் தேச பக்தியுடனும் செயல்பட்டார் என்பதை தெளிவுபடுத்தும். கிழக்காசியாவில் வாழ்ந்த 30 லட்சம் இந்திய மக்களும் தங்களுக்குப் புது வாழ்வு அளிக்க வந்த தெய்வமாகவே நேத்தாஜியைக் கருதினார்கள். இந்திய மக்களே மரியாதையாக நட்புடன் நடத்தவேண்டும் என்ற நம்பிக்கையைத் தங்களுக்களித்த தலைவர் என்றே கிழக்காசியாவின் 100 கோடி மக்களும் நேத்தாஜியைக் கருதினர்கள்.

நேத்தாஜியின் தலைமையில் கிழக்காசியாவில் வாழ்ந்த இந்திய மக்களின் தன்பங்கள் துடைக்கப் பெற்றன. அவர்களுக்கு அகஞும் வாழ்க்கையில் நம்பிக்கையும் நாட்டுப்பற்றும் மிகுந்து விளங்கின. இந்திய தேசிய இராணுவம் பர்மாவிலிருந்து முன்னேறி அச்வார் பகுதியிலும், அஸ்ஸாம்-டாம்மு எல்லையிலும் தேச நாட்டுத் துருப்புகளை எதிர்த்துப் போரிட்டது. போர்முனை நோக்கிப் புறப்பட்ட இராணுவ வீரர்களுக்கு நேத்தாஜி கூறிய வார்த்தைகள் என்றும் மறக்க முடியாதவை.

"நேச நாட்டுத் துருப்புகளுக்கு அளிக்கப் பெறுவதுபோன்ற சப்தினை வசதிகள் எதுவும் நம்மிடம் இல்லை. நம்முடைய ஆயுதங்களோ மிகவும் சிறியவை. நான் உங்களுக்குத் துன்பத்தையும் மரணத்தையும் தான் கொடுக்க முடியும். ஆயினும் நீங்கள் பிறந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடுங்கள் என்று உங்களை நான் கேட்கிறேன். உங்களில் பலர் இந்திய மண்ணையேகூட மிதிக்க முடியாமல் போகலாம்; சுதந்திர இந்தியாவைக் காண முடியாமலே மாண்டுபோக நேரலாம். ஆயினும் நீங்கள் தான் சுதந்திரநாட்டு அஸ்திவாரத்தின் செங்கல்கள். மேலே எழும்பியுள்ள அழகிய மாளிகை அஸ்திவாரத்தைக் காணமுடியாததைப்போல், அஸ்திவாரத்தின் செங்கல்லும் தான் தாங்கி நிற்கும் மாளிகையைக் கண்டு களிக்க முடியாது. ஆனால் அந்த மாளிகை முழுவதையும் தாங்கி நிற்கும் மகத்தான பணியைச் செய்வது அஸ்திவாரத்தின் செங்கல்கள்தான். அதே போன்ற மகத்தான பணியை நீங்கள் செய்யப்போகிறீர்கள். யுத்தத்தின் தேவையை முன்னிட்டு, மத்தியதர வர்க்கத்திலிருந்தும் கல்லூரிப் பட்டதாரிகளிலிருந்தும் பெரும்பாலோரை சேர்த்து 20 லட்சம் வீரர்களைக் கொண்ட ஒரு இந்திய இராணுவத்தை பிரிட்டிஷார் தோற்றுவித்திருக்கின்றனர். இவர்களில் சிலரையேனும் போர்முனையில் நீங்கள் சந்திப்பீர்கள். தாய் நாட்டின் விடுதலைக்காக நீங்கள் போராடி, "ஜெய்ஹிந்த்" என்ற கோஷத்துடன் நீங்கள் விழ்ந்து மடிவதைப் பார்த்தவும், அவர்கள் மனதில் இரண்டாவது போர்முனை தோன்றிவிடும். அதற்குமேல் பிரிட்டிஷார் இந்தியாவை அடக்கியாள முடியாது. இந்த மகத்தான இரண்டாவது போர் முனையை இந்தியர்களிடம் தோற்றுவிக்கவே நீங்கள் செல்கிறீர்கள்".

இந்த இணையற்ற வாசகங்களே இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த வீரன் ஒருவனும் மறக்க மாட்டான். இங்கு மற்றொரு முக்கிய நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

போராட்டம் பல மாத காலம் நீடித்தது. 'டம்மு' வைக் கடந்து அஸ்ஸாம் எல்லைக்குள் இந்திய தேசிய ராணுவம் நுழைந்தது. பர்மா இந்திய எல்லையில் முதல் ரயில்வே ஸ்டேஷனை கோஹிமா ரயில் நிலையத்தை கர்னல் சகனவாஸ்கான் அவர்கள் தலைமையில் முன்னேறிய முதலாவது கொரில்லா ரெஜிமெண்ட் கைப்பற்றிக்கொண்டது. மற்றொரு பகுதி மணிப்பூர் சமஸ்தானத்தின் தலைநகரான இம்பாலை நோக்கிச் சென்றது. இம்பால் ஆறு மைல் தூரமே இருந்தது சில தினங்களில் விழுந்துவிடும் என்று கருதினர்கள். இம்பால் விழுந்துவிட்டால், சுதந்திர இந்திய அரசாங்கம் நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் யாவும் செய்யப்பெற்றன, மேஜர் ஜெனரல் சாட்டர்ஜி, விடுதலை செய்யப்பெற்ற இந்திய மண்ணின் முதலாவது கவர்னராக நியமிக்கப் பெற்றுவிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி நடந்தது. ஜப்பானிய அரசாங்கத்திற்கும் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்திற்கும் இணைப்பு ஸ்தாபனமாக விளங்கிய ஹிக்காரி சிக்கான், கர்னல் ஹபிபுர் ரஹ்மானவர்களுடனும், மேஜர் ஜெனரல் சாட்டர்ஜி அவர்களுடனும் பேசி, முதல் கவர்னராக நியமிக்கப்பெற்றுள்ள மேஜர் ஜெனரல் சாட்டர்ஜி அவர்களுக்கு அரசியல் ஆலோசகராக ஒரு ஜப்பானிய மேஜரை அனுப்புவதென்று ஏற்பாடு செய்துவிட்டது. இந்த ஏற்பாட்டைப்பற்றி தாஜிக்குத் தெரிவிக்கப்பெற்றபோது, நேத்தாஜி இதை முற்றிலும் நிராகரித்துவிட்டார். ஹிக்காரிசிக்கான் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஜப்பானிய கர்னல் ஒருவர். நேத்தாஜியிடம் வந்து ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்று டோக்கியோவிற்கு அனுப்பப்பெற்றுவிட்டதாகும் அதை இனி மாற்றமுடியாதென்றும் தெரிவித்தார். "ஒப்பந்தம் கிழக்கெதியப்படவேண்டும். ஒரு ஜப்பானிய வீரர்கூட இந்திய மண்ணில் காலடி எடுத்துவைக்கக் கூடாது" என்று நேத்தாஜி கண்டிப்பாகக் கூறியதோடு, ஆலோசகராகவோ அன்றி போர் வீரராகவோ எந்த முறையிலேனும் ஒரு ஜப்பானிய வீரர் இந்திய மண்ணில் காலடி எடுத்துவைத்தால், அவனைத் தடுத்து நிறுத்தும்படி இந்திய தேசிய ராணுவத்திற்குக் கட்டளையிடுவேன். அதன் விளைவுகள் யாதாயினும் எனக்குக் கவலையில்லை என்று மிகத் தெளிவாக அறிவித்துவிட்டார். சில மணி நேரத்தில்

அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பெற்றது. இந்த நிகழ்ச்சி ஜப்பானியர்களிடையே கூட, நேத்தாஜிக்கு மிகப் பெரிய மரியாதையைத் தேடித் தந்ததுமட்டு மல்ல, அவருடைய ஒப்பற்ற தேசபக்திக்கும், துணி விற்கும் எடுத்துக்காட்டாகவும் விளங்கிற்று.

"துஞ்சும் பொழுதினும் தாய்பதத் தொண்டினை மறந்திடாதவங்கத்தினே" என்று மகாகவி பாரதி குறிப்பிடுவது, முழுக்க முழுக்க நேத்தாஜிக்கே பொருந்தும். இந்தியாவின் விடுதலை, இந்திய மக்களின் நல்வாழ்வு என்பதைத் தவிர வேறு எதையுமே சிந்திக்காத காரணத்தினால் தான், முன்பு நான் விவரித்த சந்தர்ப்பத்தில், அவர் அத்தனை துணிவுடன் நடந்து கொண்டிருக்கிறார். தாய்நாட்டின் விடுதலைக்காக எந்தச் சூழ்நிலையையும் பயன்படுத்திக்கொள்ள அவர் தயார். ஆனால் இந்தியாவின் நலனை பாதிக்கக்கூடிய எதையும், வினாவுகூடப் பொருட்படுத்தாது, துணிவுடன் எதிர்த்து நின்றிருக்கிறார்.

நேத்தாஜி எப்போதும் சுறுசுறுப்பும் செயலாற்றலும் மிக்கவர். எந்தத் தோல்வியிலும் மனம் கலங்கா தவர். 1945-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் கடைசி நாள். நேத்தாஜியவர்கள் பர்மாவை விட்டு மலேயாவிற்குப் புறப்பட்டார்கள். பர்மாவில் அவர்களைக் கடைசியாக சந்திக்கும் பாக்கியம் பெற்றவர்கள் மேஜர் மஹபூப், அஹமதும், நானும்தான். நேத்தாஜியவர்களின் ராணுவக் காரியதரிசி என்ற முறையில் அவர்களை வழியனுப்ப வந்திருந்தார் மேஜர் மஹபூப். ராணி ஜான்ஸி ரெஜிமென்டைச் சேர்ந்த காப்டன் ஜானகித்தேவரையும், லெப்டினட் பார்வதியையும், நேத்தாஜி அவர்களுடன் கூட மலேயாவிற்கு அனுப்புவதற்காக அழைத்து வந்திருந்தேன் நான். இரவு 11 மணி. இரங்கூன் நகருக்கு வெளியே இஞ்சீன் ரோடும் ஒக்கின் ரோடும் பிரிகிற முனையில் மேஜர் ஜெனரல் போன்ஸ்லே அவர்களும் நேத்தாஜியுடன் செல்லும் ஒரு சிறிய கோஸ்டியும் காத்திருந்தனர். எல்லோருடைய முகத்திலும் கவலைக்குறி. ஒரே பயங்கர அமைதி. சிறிது நேரத்தில் நேத்தாஜி அவர்களின் கார் வந்தது. நேத்தாஜியவர்கள் ராணுவ உடையில் சிரித்த முகத்துடன் காரிலிருந்து இறங்கினர். ஒன்றுமே நடக்காததுபோல் வாய் நிறைய வெற்றிகீப் போட்டுக்கொண்டு கவலையற்றுக் காணப்பட்டார். எல்லோருடனும் கைகுலுக்கிவிட்டுக் கூறினர்:

"நீங்கள் யுத்த களத்தில் தளம் (பொசிசன்) மாற்றுவதில்லையா அதுபோலத்தான் இதுவும். இந்தியா விடுதலையடைவது உறுதி. தோல்வியை நாமே ஏற்றுக்கொள்ளாத வரையில், தோல்வி நம்மை வந்து அடைவதில்லை யென்பதுதான் மகாத்மா காந்தி நமக்குக் கற்றுத் தந்த பாடம். தைரியமாயிருங்கள். ஜெய்ஹிந்த்" என்று கம்பீரமாகக் கூறி அவர் விடை பெற்ற காட்சியை என்றும் மறக்க முடியாது. வாழ்க நேத்தாஜி! வெல்க இந்தியா! ஜெய்ஹிந்த்!

கவிதை

இளங்கும்பன்

மனத்தருவில் பூக்கின்ற
மலர்தானே? கவிதை
மகிழ்வூட்டிப் புலன்மாற்றும்
மதுதானே? கவிதை
நினைவாகி நின்ருளும்
நிகழ்ச்சிகளோ? கவிதை
நிள்வைய வாழ்க்கையதன்
நிழல்தானே கவிதை?

துயர்போக்கும் அமுதத்தின்
துளிதானே? கவிதை
துன்பஇன்ப நிலேதந்ந
துடிப்பதுவோ? கவிதை
அயர்வறியா உழைப்பதனின்
அறுவடையோ? கவிதை
ஆவேசப் பெருந்தீயின்
அனல்தானே கவிதை.

வியப்பீற்கு வியப்பூட்டும்
வினாவதுவோ? கவிதை
விண்கீற்று மின்னலேப்போல்
விளாவதுவோ? கவிதை
நல்லமைதி மௌனத்தின்
நல்குரலோ? கவிதை
நாட்படாத நலங்கொண்ட
நற்பரிசோ? கவிதை!

பிடி சோறு

"கவிதை நாடகம்"

வி. துரைசாமி

★

பாத்திரங்கள் : மன்னன் ஹரூன்-அல்-ரஷித்
மதகுரு
ஏழை
அரசகுமாரி
காவலன்.

ஒலிக்குறிகள் : வீணை
அரச சபை குறிக்கும் இசை.

(மன்னன் ஹரூன்-அல்-ரஷித் பூங்காவில் இருக்கிறான். அவனுடைய மகள் அருகிலிருந்து வீணை மீட்டுகிறாள். வீணையின் ஓசைக்குப் பிறகு)

மன்னன் :

கைவிரல்கள் தானசையக் காணுகிறேன், காதினிக்கப் பையவரும் இன்னிசைதான் பரவசத்தில்
ஆழ்த்துவதேன்?
செல்வக் குழந்தாய் செவிக்கினிய வீணையுடன்
நல்லதொரு பாடல் இசைத்திடுக நான் கேட்க.

மகள் :

தந்தையிட்ட ஆணை தலைமேற்கொள்வேன் எனினும்
விந்தையாய் உள்ளதுங்கள் வேண்டுகோள்.....

மன்னன் :

... ... என்ன விந்தை

மகள் :

பாட்டைக் கேட்டின்பமுறும் பாவமே செய்தறியீர்

(சிரித்து)

ஆட்டமும் பாட்டும் அனுபவிக்கப் பிரியமிலாப்
பெற்றியுடையீர்நீர், ஒளரங்கப் பேரரசர்
பொற்றொப் பின் பற்றும் பொற்புடையீர் அல்லரோ?

மன்னன் :

(சிரித்து)

நன்றுகப் பேசுகிறாய் நல்லது.....எங்கே உன் கீதம்?

மகள் :

(வீணையுடன் பாடுகிறாள்)

தென்றல் அழகியவள் தேடிவரும் சோலையிதில்
உன்றன் புகழ்பாடி ஓடிவரும் வண்டொன்று
கன்று குரல் கொடுக்கக் கனியும் ஒரு பசுபோல்
என்றன் இசையினிலே ஒன்றிக் கலந்ததுமேன்?
என்னருமைத் தந்தையே இசையை ரசித்தீரா?

மன்னன் :

இன்பக் குமாரி இசைக்கரசி நீயேதான்
உன் புகழை மக்கள் ஒருங்கே பரப்புகின்ற
நன்னாளும் தூரமிலீகே நாடாளும் பேரரசாய்
எல்லா உயிர்க்கும் இறைவனாய் வீற்றிருக்கும்
என்றன் புதல்வியுடை இன்னிசையில் சொக்கினேன்

மகள் :

போதும் புகழ்ந்துரைகள் பொன்னெஞ்ச தந்தையீர்
ஏதும் இசையில் இதுவரையில் நானறிந்த
தத்தனையும் கொஞ்சமே ஆழ்கடல்முன் சிற்றோடை
போலத்தான் .....

மன்னன் :

... ... அப்படியா? புகழ்வேண்டாப் பொற்கொடியோ?

மகள் :

ஞாலத்தில் நற்புகழை வேண்டாதார் யாருமில்லை
என்றாலும் தம்புகழைத் தாமே பறைசாற்றல்
தன்றல்ல என்பதுவே நானறிந்த உண்மை.

மன்னன் :

விருப்பம்போல் கல்வியெலாம் வேண்படி கற்றுப்
பெருக்கினாய் நின்னறிவை ஆனாலும் பேதையுனக்
கிவ்வளவு கர்வந்தான் வந்தவிதம் எப்படியோ?

(மதகுரு வருகிறார்)

வருக பெரியீர், வருக அமர்ந்திடுக

மதகுரு :

அல்லாவின் ஆசி ஹரூன்-அல்-ரஷீத் மன்ன
எல்லா நலமும் இனிதுபெற்றுக் கோலோச்ச
ஆண்டவனின் அன்பு நிறைந்த அரசரிடம்

மன்னன் :

மதகுருவின் அன்பில் மயங்குகிறேன்....ஆனாலும்

மதகுரு :

விதவிதமாய் வாழ்த்துரைகள் வீசவில்லை என்கின்ற
ஏக்கம் சிறிதுண்டோ? ... ...

மன்னன் :

.... இல்லை இல்லை இவ்வுலகைக்
காக்கும் தனித்தலைவன் யானே மனிதகுலம்
அத்தனையும் அன்றி அனைத்துயிரும் எனனடியை
மெத்த வணங்கி மிகுசுகத்தை யெத்துவதைக்
கண்டிருந்தும் ... ...

மதகுரு :

ஆட்சி புரிவ தரசனே யானாலும்
மாட்சி மிகும் கடவுள் அன்புருவே யில்லாமல்
அணுவும் அசையாது ஹரூன்-அல்-ரஷீத் அரசே
கணுவெனினும் தில்லாக் கரும்பொன்று காட்டுவையோ?
கருமின் வளர்ச்சி செழிப்பெல்லாம் அக்கணுவால்
என்பதனைச் சற்றேனும் எண்ணி நீ பார்த்ததுண்டோ?

மன்னன் :

இருக்கலாம் ஆனாலும்இப்பெரிய நாட்டை
உருக்கமாய் ஆளும் உயிர்வினுல் என்னுடைய
ஆணைக்குள் எல்லாம் அடக்கம் அறிகுவீர்

மதகுரு :

வீணுக்கேன் இவ்வாதம்? விட்டொழிப்போம் வேற்தனே
சாணும் முழமும் சரியளவே யாமென்பாய்

மகள் :

பெண்ணுக்குக் கர்வமெனப் பேசினீர் தந்தையீர்
விண்ணுக்கெல் லாம் பெரிய வேந்தராய் வீற்றிருந்து
முத்தொழிலைச் செய்யும் முதற்பொருளைச் சற்றுமே
எண்ணுமல் பேசுதலும் என்னவோ? .. ...

மன்னன் :

(கோபத்துடன்)

... ... சீ மதிகேடி
என்ன துணிச்சலுடன் ஏதேதோ உளறுகிறாய்
மன்னனென்றும் பாராய் மதகுருவென் றோராய்
எழுந்தப்பால் சென்றிடுக என்முன் அரைக்கணமும்
நில்லாதே ....

மதகுரு :

.... வேண்டாம் நெடுஞ்சினம் பார்வேந்தே
பொல்லா ததுகோபம் பொறுத்திடுக புத்திரிபால்
சென்று வருவேன், சினந்தணிக செங்கோலாய்

(மதகுரு புறப்பட்டுப் போகிறார்)

2

(மதகுரு தமது வீட்டு முற்றத்தில் தனக்குள் பேசுகிறார்)

மதகுரு :

பேதமையே கொண்டுள்ளான் பேரரசன் சற்றுமே
சூதை அறியாத சுகவாழ்வு வாழ்வதனுல்
தப்பெண்ணம் கொண்டான், தரணியிலே செல்வங்கள்
எல்லாம் கிடைத்துவிட்ட எக்களிப்பு ... ஆம் ....
... அதுதான்
அல்லா அருளிருந்தால், அரசனுக்கு மெய்யுணர்வை
ஊட்டுவேன் ...

(பிச்சைக்காரன் வருகிறான்)

பிச்சை :

(நடுக்கத்துடன்)

ஐயா...ஐயா...பசி...கொஞ்சம்
சோறு இருந்தா போடுங்க..., பெரியவரே—மகராஜா
மூணு நாளா பட்டினி ...

(இருமுகிறான்)

மதகுரு :

ஐயோ பாவம் மூணு நாளா பட்டினியா? ... ஹும் ... அப்பா?
அதோ தெரியுது பார் அரண்மனை அங்கே போ வயிறு
நிறையச் சோறு கிடைக்கும்.

பிச்சை :

ஏதுங்க? .... அரண்மனைங்களா அங்கே எப்பிடிங்க
கிடைக்கும்? ... காவலாளுங்க கிட்டேயிருந்து
அடிதானுங்க கிடைக்கும் . .

மதகுரு :

பயப்படாதே அப்பா, நான் அங்கே வருவேன்
உனக்கு
தான் சோறு போடச் சொல்கிறேன் போ

பிச்சை :

சரிங்க ...

(போகிறான்)

மதகுரு :

(தனக்குள்)

மன்னனது கர்வம் மடக்கும் உபாயமிது
முன்னாலே யான்போய் மூடி வேந்த னுடிருப்பேன்
இவ்வேழையைக் கொண்டே ஏற்றபுத்தி கற்பிப்பேன்
ஒவ்வா அகங்காரம் ஒடும்வழியிதுதான்
அல்லாவின் பேரருள்தான் அரசற் கெளிதிலே
கிட்டிவிடும் காலமும் கிட்டிவிட்ட தின்றே
வரைந்துசென்று வேந்தனைக் காண்போம் ...

(அரண்மனையை அடைகிறார்)

8

(பிச்சைக்காரன் அரண்மனை வாசலில் பிச்சை கேட்கிறான்)

பிச்சை :

பசி காதை அடைக்குதுங்க .. மகாராஜா மூணு
நாளாப் பட்டினி
கொஞ்சம் சோறு போடுங்க ஐயா ...

காவலன் :

(அதட்டலுடன்)

போடா போடா ... பிச்சை கேக்கறதுக்கு
நல்ல இடம் பார்த்து வந்தியே .... இது மகாராஜர்
அரண்மனைங்கறது
கூடத் தெரியிலே? போடா சத்தம் போடாமே ....

மதகுரு :

அவனே அதட்டாதே அப்பா நீ உள்ளே சென்று
மன்னனிடம்
நான் வந்திருப்பதைத் தெரிவி

காவலன் :

அதோ மகாராஜாவே வந்து கொண்டிருக்காங்க ...
(அரசன் வருகையைக் குறிக்கும் ஒலிப்பின்னணி)

மதகுரு :

வெற்றி சிறக்கட்டும் வேந்தனே உன் ஆயுள்
கற்றறிந்தார் பேரறிவு போலே வளர்ந்திடுக

மன்னன் :

வரவேண்டும் ஆசானே வணக்கம் ... இவ்வாசலிலே
ஒரு காலமும் தனித்தே நின்றதில்லே இன்றென்ன?
காவலர்கள் தம்மைத் தடை செய்து விட்டனரா?

மதகுரு :

இல்லே இல்லே மன்னவா எனக்குத் தடைவிதிக்க
வல்லவர் யார் உன்னையன்றி? வாளேந்தும் காவலரால்
இன்னல் ஒன்றுமில்லே இதோ இந்த ஏழையைப்பார்

மன்னன் :

வற்றி யுலர்ந்த உடல் வாடைக் குளிர் தடுக்கப்
பற்றுத கந்தை பசித்த வயிறு இன்னுமென்ன?

மதகுரு :

வேண்டுகோள் ஒன்று விடுக்கின்றேன் வேல்வேந்தே
ஆட்சிக் குயர் தலேவ ஹரூன்-அல் ரஷீத் அரசே
தட்டாமல் நிறைவேற்றித் தரவேண்டும் ...

மன்னன் :

.... தயை நிறைந்தீர்,
தங்கள் விருப்பத்தைத் தட்டியதும் உண்டோ?
உடனே நிறைவேற்றும் உள்ளம் உடையேன்யான்
என்ன செய்ய வேண்டும்? இனிதாய் உரைத்திடுக.

மதகுரு :

ஒன்றுமில்லே மன்னவா உனதாட்சிச் செங்கோலே
இன்றெருநாள் மட்டும் இவ்வேழை யிடம் தந்திடுக
பொன்றுப் புகழ் நினக்குப் போர்வையாய்ப்
பெருகிவிடும்
ஏழை துயர்துடைத்த ஏந்தலெனப் போற்றிடுவார்

மன்னன் :

கூடாச் செயலெனினும் குருவீற்கய் ஒப்புகிறேன்
நாடானும் செங்கோலும் நல்ல கிரீடமும் பொன்
சிங்கா சனமும் சிறக்கவே தங்களிடம்
ஒப்படைத்தேன் இன்றுமட்டும் உங்கள் மனம் போற்
செய்க
அந்தப் புரம் நோக்கிச் செலலுகிறேன் ஆசானே
விந்தை வினோயாட்டை நானோ விடிந்ததுமே
பூர்த்தி செய்க ...

மதகுரு :

.... அப்படியே, போய் வருக மன்னவா

(அரசன் போகிறான்)

(மதகுரு அவ்வேழையிடம்)

உனக்கு நல்ல காலம் பிறந்துவிட்டதப்பா உன் பசிக்கு
உணவு
கொடுக்கச் சொல்லி மகாராஜாவிடம் கேட்டேன்.

பிச்சை :

சோற்றையே காணவிங்களே . . . என்னங்க நல்ல காலம்
பிறந்திருக்குன்னு கேலி பண்ணுறிங்க . . .

மதகுரு :

மகாராஜா உனக்காக ஒரு நாள் பூராவும் ராஜஜியத்தையே
உன்னிடம் கொடுக்கச் சம்மதித்திருக்கார்.

பிச்சை :

என்னங்க .... நிசமாவா ... என்னமா நம்பறதுங்க ....
நான் இந்த அரமனைப் பக்கம் வந்ததே பெசகுங்க ...
என்னே விட்டுடுங்க போறேன்.

மதகுரு :

அட பைத்தியமே...இன்னிக்கு பூராவும் நீதானப்பா மகாராஜா

பிச்சை :

அப்படிங்களா ...

மதகுரு :

ஆமாம் ... ஆனு ஒரே ஒரு நிபந்தனே

பிச்சை :

என்னங்க?

மதகுரு :

நீ மகாராஜாவா சிம்மாசனத்திலே உட்கார்ந்திருக்கிற வரைக்கும்
பச்சைத் தண்ணீரைக்கூட வாயிலே ஊற்றக்கூடாது...

பிச்சை :

அதுக்கென்னங்க .... மூணு நாளோட நாலாவது நாள் பட்டினி
கெடந்துதான் பழகிப் போச்சுங்களே ..

மதகுரு :

அப்படியென்றால் வா அரண்மனைக்குள்ளே போகலாம் ... ஹும் ...
யாரப்பா காவலாய் பராக்கொல்லிக்கொண்டு முன்னால் போ...

காவலன் :

ராஜாதிராஜ ராஜமார்த்தாண்ட வீர தீர பராக்கிரமபுது மகாராஜா
பராக்...

மதகுரு :

இதோ சிம்மாசனம் .... ஏறு . . . இந்தா . . . செங்கோலைக் கையிலே
பிடித்துக்கொள் . . .

பிச்சை :

(ஆனந்தத்துடன்)

இந்த ஜென்மத்துக்கு இதுபோதுங்க . . . எனனுக்குக் கிடைக்கும் இந்த மாதிரி ராஜ பதவி . . .

மதகுரு :

அதிகமா பேசாதே . . . இந்தா கிரீடத்தைத் தலையிலே வைச்சுக்கோ . . .
அப்பா சேவகா . . . புது மகாராஜாவைக் கண்ணுங் கருத்துமா
காவல் செய் ...

காவலன் :

அப்படியே . . . சுவாமி . . .

மதகுரு :

அரசாட்சி நடக்கட்டும் . . . கொஞ்ச நாழிகை கழித்து நான் வருவேன்.

பிச்சை :

போயிட்டு வாங்க . . . பெரியவரே . . .

(பேசகிறார்)

பிச்சை :

ஐயோ ... பசிக்கறப்புத் தாங்கலியே ... உயிர் போயிடும்போலே
இருக்குது ... நல்ல ராஜபதவி கிடைச்சது ... பெரியவரையும் காண
வியே ...

காவலன் :

மகாராஜா கவலைப்படாதிங்க .... வந்திடுவார் பெரியவர் . . .

பிச்சை :

அட போங்கய்யா . . . மகாராஜாவாம் மகாராஜா பசி குடலைப்
பிடுங்குது . . . கொஞ்சம் சோறு கிடைச்சாத் தேவலியே . . .

காவலன்

அதோ குருவும் மகாராஜாவும் வந்துக்கிட்டிருக்காங்க

பிச்சை :

உயிர் போகுதுங்க . . . பெரியவரே வேண்டாங்க இந்த மகாராஜா
பதவி . . .

மதகுரு :

ஏனப்பா . . . இன்று இரவு மீதியிருக்கிறதே . . . அதற்குள்ளே
விட்டனா?

பிச்சை :

வேண்டாங்க . . . வேண்டாங்க . . . பைத்தியக்காரத்தனமா ஒத்துக்கிட்டேனுங்க
சிம்மாசனத்திலே உட்கார்ந்தா வயிறு ரொம்புங்களா . . . ஒரு பிடி
சோறுதானுங்க என் உசிரைக் காப்பாத்தும் . . . அதுக்கு இந்த ராஜ பதவி
ஊடாகுங்களா . . .

மதகுரு :

அப்படியாப்பா . . . சரி வாசலிலே ஒரு பாத்திரத்திலே சோறு வைத்
திருக்கு . . அதை எடுத்துச் சாப்பிடு . . . போ . . .

(போகிறார்)

(அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பானது)

அந்தியில் அழகு தெய்வம்

நாரண-துரைக்கண்ணன்

★

அந்தியாம் மாலைதன்னில்—ஒருநாள்
ஆற்றோரம் நடந்துசென்றேன்
மத்திகள் தாவும் ஆல—மரத்தினில்
மாங்குயில் கூவியதே.

ஓடைநீரின் ஓசை—உள்ளத்துக்(கு)
உவகை யளித்ததுவே!
ஏடுவிரித்த தல்லி—எங்கும்
எழிலாம்பல் மலர்ந்ததுவே!

பொதிகையின் பூங்காற்று—உடம்பைப்
புளகிக்கச் செய்ததுவே!
மதியத்தின் வெப்பமெல்லாம்—இதுதான்
மாற்றியே வைத்ததுவே!

மலிவாயில் வீழும்வெய்யோன்—மேலெல்லாம்
மஞ்சளைச் செம்மைசெய்தான்
வகிலசும் நுனியரைப்போல்—வானில்
வெண்முகில் கருத்திட்டதே!

பசுமை போர்த்துநின்றுள்—இயற்கை
பன்னிறமலர் சொரிந்தாள்.
வசுதேவர் மரபினர்தாம்—அப்பக்கம்
ஆனிறை ஓட்டிச்சென்றார்;

சதங்கை யொலித்ததுவே—திடுமெனச்
சிந்தனை சிலிர்த்ததுவே!
பதத்தின் இசையினைப்போல்—வனிகளின்
பண்ணொலி கேட்டதுவே!

யாதென்று திரும்பிப்பார்த்தேன்—எதுவோ
அள்ளம்போல் இலங்கக்கண்டேன்
போதொன்றைக் கோடிசுமந்து—முன்னே
போவது போலக்கண்டேன்

பொற்சிலை போலொருபெண்—அங்கேதான்
பொலிவுடன் காட்சிதந்தாள்
கற்பனையைத் திரட்டிக்—கலைஞன்
கைவண்ணங் காட்டினானே!

ஐயோ! இவளழகை—தான்தான்
எவ்விதம் எடுத்துரைப்பேன்?
பொய்யோ? துடியிடைதான்—அதுவும்
பூபாரத்தால் இற்றிடுமோ?

அழகெலாம் திரண்டுருண்டு—இப்படி
ஒருரு வாயினதோ!
பழகுதற் கரியபொருள்—பண்பொடு
பெருமைதான் பெற்றதுவோ!

வான்தரும் மதிமுகந்தான்—கொள்ளை
வனப்பில் விஞ்சுகின்றதுவோ!
ஆண்டவன் படைப்பினிலே—இவள் ஒரு
அற்புதம் அற்புதமே!

தேவேந்தன் திருமகளோ!—தையலாள்
செங்கோட்டு யாழ்வடிவோ!
பாவேந்தர் பாடிவரும்—நல்ல
ப(வ)ழவண்ணப் பைங்கிளியோ!

அலைமகள் கலைமகளோ!—இவள்தான்
யாரென அதிசயித்தேன்
மலைமக ளாகமாட்டாள்—அவள்
மானுடம் பெற்று வாராள்.

கொவ்வைச் செவ்வாயினிலே—நாணெடு
கொப்பளித்ததாம் சிரிப்பு.
செவ்வை யாகச்சமைந்த—என் சிந்தையைச்
சூறைதான் ஆடியதே!

நினைவு தெரிந்தமுதல் - நானிவ்விதம்
நிலைதான் குலைந்ததில்லை.
கனவிலுங் கூடச் - சிறிதும்
கண்ணியங் குறைந்ததில்லை.

தூய நெற்யினின்றும் — நானென்றும்
தடமே புரண்டதில்லை;
தீயநெறி திறம்பா — என்னுள்ளம்
திரிந்து வேருனதென்ன?

எங்கேயோ பார்த்ததுபோல்—எழில்முகம்
என்நெஞ்சில் நின்றதுவே!
எங்கேநான் பார்த்திருப்பேன்?—எத்துணை
எண்ணியுந் தெரியவில்லை.

முன்னைப் பிறவியிலே—இவள் தான்
மூண்ட உறவினளோ !
அன்னை கினையினளோ!—எந்தன்
அத்தையின் சேயிழையோ?

நேச முகமாக என்முன்னே
நிலைத்துதான் நின்றனளே!
பாசம் மிகுந்ததுவே !—மனந்தான்
பையவே தாவியதே !

'அழகு முகத்தாளே !—நீதான்
யாரடியோ ?' என்று கேட்டேன்
பழகுதமிழ் பேல்வான் – ஆனலும்
பவழவாய் திறக்கவில்லை.

'வாய்முத்தஞ் சிந்திடுமோ !—உந்தன்
வனப்பிதழ் திறந்துவிட்டால் ;
நோயென நினைத்தனையோ?—என்னை
நொந்திட வைத்திடலேன்?

எங்குநான் கண்டேன்; சொல்?—எழிலே !
எனக் கினங் காட்டாயோ ?
பங்கய முகத்தாளே ! உன்றன்
பரம்பரை உணர்த்தாயே !

செப்புக் குடந்தாங்கிச்—செல்வியீ
சேண்நேரம் நிற்கின்றாய் !
ஒப்பிலாப் பேரழகி !—உந்தன்
ஒள்ளிடை துவண்டிடுமே !

என்னென்ன வோகேட்டேன்—ஏனோ
ஏறிட்டும் நோக்கவில்லை.
விண்ணுக்கு ஒருவிருந்தாம்—அவளும்
விந்தையை வினைத்துநின்றாள்.

நாணமே ஒருருவாய்—நின்றவள்
நாழிகை சிலகழித்து
நாணுடன் கோணினின்று—மெல்ல
நகைக்கூட்டம் செய்தனளே !

கண்வழி உள்நுழைந்து—இதயக்
கதவைத் திறந்துகொண்டு
புன்னகைதான் காட்டி—அவள்
பொம்மெனப் புகுந்துநின்றாள்

தின்தோளில் தைத்தபார்வை—அவளுள்ளக்
குறிப்பினைக் காட்டியதே !
'அண்ணல்! எனையாட் கொள்ளென—அவளும்
அமைதியாய் இயம்பினளே.

செந்திருவின் குறிப்புணர்ந்து—நான்
சிந்தை களிகூர்ந்தேன்
வந்திட்டேன் என்றுசொல்லி—அவள்பின்னே
வழி நடந்(து) ஏகினேனே.

'வாழ்வை வளப்படுத்தி—என்னை
வாழ்விக்க வந்தவளே !
ஆழத்திடு இன்பத்திலே' என—அவள்
அன்பகம் புகுந்தனனே !

பெண்ணர சாக நின்ற—அவளின்
பேரெழில்(ல்) அள்ளாகண்டேன்
விண்ணை விலைமதிப்பாள்—அவள்
வேதத்திறைவியாய் விளங்கினளே.



நாடக ராஜா

எம். ஆர். கோவிந்தசாமி

எட்டயபுரம் கி. முத்துராமகிருஷ்ணன்

நாடகத் தந்தை நாடக ஆசான் நாடகப் பேராசிரியர் என்று நாம் இன்று போற்றிப் புகழ்ந்து துதிபாடுகிறோம் சங்கரதாஸ் சுவாமி அவர்களை. இன்று நாம் அவருக்கு அஞ்சலியாக மாலையைக்கு சிலையடுத்து வணங்கிறோம். தமிழ் நாட்டினர் செய்யவேண்டியதை செய்யவேண்டிய நேரத்தில் செய்தனர். நாம் என்றும் நன்றிக் கடப்பாடு உடையவர்கள் அல்லவா?

இந்த நேரத்தில் நாடகக் குருவுக்கு அஞ்சலி செய்ததுபோல் அன்னாரது முதல் சீடன், நாடக ராஜா எம். ஆர். கோவிந்தசாமி அவர்களின் நாடக நடிப்பின் சீரும் சிறப்பும், தன்மையும் மென்மையையும் கேட்டுத்தெரிய வேண்டும் என்ற நிலையில் உள்ளேன். அனனுரைப்பற்றி கேட்ட செய்திகளை உங்களோடு நானும் எழுத்தாளன் சிறப்பு மலர் வாயிலாக வெளியிட்டு பகிர்ந்து கொள்வதில் மகிழ்கிறேன்.

மன்னர்குடி என்றது சிறிய ஊர். அங்கு வாழ்ந்த ரெங்கசாமி, செங்கமலத்தம்மாள் தம்பதிகளுக்கு 1892-ம் ஆண்டு ஓர் ஆண் மகன் பிறக்கிறான். வளர்கிறான். அவனே பின்னல் நாடக மன்னனாகத் திகழ்ந்த கோவிந்தசாமி.

எட்டயபுரத்தில் உள்ள தூரத்து உறவினரான செல்லியா என பவர் கோவிந்தனை இங்கு அழைத்து வந்து வளர்த்தார். பையன் நாளொரு மேனி பொழுது ஒரு பாட்டாக வளர்ந்தான். நகைச்சுவையாக பேசுவதும் பாடுவதுமாக இருந்தான். பள்ளியில் முடைபெறும் சிறிய நாடகங்களில் பங்கு பெற்று நடித்து வந்தார்.

சங்கரதாஸ் சுவாமிகள் தூத்துக்குடியில் இருந்த சமயம் கோவிந்தன் 18 வயது பாலகன். அவனை அங்கு அவரிடம் ஒப்படைத்தனர். சுவாமிகள் மனமுவந்து கோவிந்தனை ஏற்றுக்கொண்டார்கள். ஒளிவீசும் கண்கள்; கூர்த்தமதி; வெடிப்புறப் பேசுதலைக்கண்ட சுவாமிகள் தனக்கு ஏற்ற சீடன் கிடைத்தான் என்று பெருமைகொண்டார். பல நாடகங்களை அவருக்குப் பயிற்றுவித்தார். கோவிந் தன் நன்முகப் பிரித்தார். நாடகத்தில் நடித்தார். பெயரும் புகழும் தானே தேடிவந்து அடைந்தது. ஒன்பது ஆண்டுகள் குருவின் நிழலில் ஆதரவில் இருந்தார். கோவிந்தன் வயது 22 ஆனதும் தானே தனியாக நாடகம் நடிக்க விரும்பினார். குருவிடம் ஆசிபெற்றார். சுவாமிகள் அருள்கூர்ந்து வாழ்த்துக்கூறி, வெற்றியாக பீடுநடைபோடு; உன் புகழ் ஓங்கும்; ஒடுங்காது என்று வழி அனுப்பி வைத்தார்.

1914ல் எட்டயபுரம் வந்து கோவிந்தசாமி, தனது மைத்துனர் செல்லியாவின் தங்கையான சண்முகவடிவு அம்மையை திருமணம் செய்து கொண்டார். தனியாக ஒரு வீடு வாங்கி அதில் குடியேறி தனிக் குடித்தனம் செய்துவந்தார்.

சண்முகானந்த சபா என்ற நாடக குழு ஒன்று அமைத்து எட்டயபுரத்திலும் அதனைச்

சுற்றிய ஊர்களிலும் நகரங்களிலும் பல நாடகங்கள் நடத்திவந்தார்.

எட்டயபுரம் தாதா மகாராசா தன் அரண்மனையிலும் ஒரு நாடகக் குழு அமைத்து சுத்த சேனன், பாதுகா பட்டாபிஷேகம், நல்லதங்காள், மனோகரன் போன்ற நாடகங்கள் நடத்தி வந்தார்கள்.

கோவிந்தசாமி அவர்கள் 105 நாடகம்வரை மனனம் செய்து இருந்தார்கள். இதில் குறிப்பாக வள்ளி திருமணம், நல்லதங்காள், சிறுத்தொண்டன், பாதுகா பட்டாபிஷேகம், அலாவுதீன், தேசிங்குராஜன், ஞானசவுந்தரி போன்ற நாடகங்கள் நடத்தி வந்தார்.

கோவிந்தசாமியைக் கோவிந்தக் குஞ்சு என்று எல்லோரும் செல்லமாக அழைப்பார்கள். ஏனென்றால் அச்சமயம் பிரசித்திபெற்ற கோவிந்தசாமி பிள்ளையும் கல்யாணராமய்யரும் நாடகம் நடத்திவந்தனர் அதனால் இவருக்கு குஞ்சு என்ற பட்டம் கிடைத்தது.

நம் கோவிந்தசாமியின் சிறப்பான நாடகம் சிங்கார லோசனா என்பதாகும். இதில் ராஜாவே பின்பு பிச்சைக்காரனாகி மாண்டு மடிகிறான். இந்த இரண்டு வேடமும் அவரே ஏற்று நடிப்பார். இதில் இவருக்கு நல்ல பேரும் புகழும் உண்டாகியது. இந்தச் செய்தி எட்டயபுரம் தாதா மகாராஜா அவர்களின் காதுக்கும் எட்டியது. உடன் தன் சொந்த நாடக அரங்கிலேயே இதே நாடகத்தினை நடத்தும்படி அரசர் ஆணையிட்டார். மன்னர் உத்தரவுக்கு மறுப்பேது? உடனே மறுநாள் அரண்மனை நாடக அரங்கில் சிங்காரலோசனா நாடகம் நடைபெறுகிறது.

மூன்று வகையில் ராசா மகாராஜா, தாதா மகாராஜா மற்றும் ஊரில் உள்ள பிரமுகர்கள் பலரும் வீற்றிருக்கிறார்கள். நாடகம் நடைபெறுகிறது. சிங்காரன் அரசனுக்கு இருந்து ஆட்சி முடிந்து ஆண்டியாக மாறுகிறார். காட்சி மாறுகிறது, நடிப்பும் மாறுகிறது. அரசன் ஆண்டியான பின், பிச்சைக்காரனாக வருகிறான். உலர்ந்த கண் ஒட்டிய வயது பரட்டைத்தலை கந்தையான ஆடை கையிலே கப்பரை ஏந்தி தன் அடாத செயலினால் படாதபாடுபட்டு செல்வத்தை அழித்து சீரழிந்து நின் ஆண்டியானேன்; யாரும் இந்த இழிநிலையை எய்த வேண்டாம் என்ற படிப்பினைப் பேசி நடிக்கிறார். உண்மையான தோற்றமும் எடுப்பான பேச்சும் தொடுப்பான முடிப்பும் கண்ட தாதா மகாராஜா மெய்மறக்கிறார். தன் சுயநினைவையே இழந்தனர். அவருக்கு சாதாரண மோதிரம் பரிசுதர எண்ணியவர், 2000 ரூ பெறுமான வைர மோதிரத்தைப் பிச்சையாகக் கொடுத்துவிட்டு இடம் திரும்புகிறார். யாவரும் கைகொட்டி நடிப்பைப் பாராட்டுகிறார்கள்.

காட்சி முடிகிறது. கோவிந்தன் அரங்கினுள் சென்று மோதிரத்தை கப்பரையிலிருந்து எடுத்துப் பார்க்கிறார். அது வைரமாக இருக்கக்கண்டு மன்னரிடம் சென்று இது வைர மோதிரம்; சாதாரண மோதிரம் தாருங்கள் போதும் என்று கூறுகிறார். அப்போதுதானா மன்னர் தான் செய்த தவறுதலே உணர்கிறார். என்றாலும் அதனைக் காட்டாது கோவிந்தா உனக்கு நான் இட்ட பிச்சை அது. அதனை நீயே ஏற்றுக்கொள் என்று ஏற்றமாக கூறி அவனை அனுப்பினார்கள் இதன்பின் கோவிந்தன் புகழ் எட்டுத்திக்கும் பரவியது.

எட்டயபுரத்தில் நாடக ராஜா என்ற பட்டமும் ராஜபோஜ சிங்கம் என்ற பட்டமும் பெற்றுக் கொண்டார்.

விருதுபட்டியாக இருந்தகாலம் அது. அங்கு இவர் நாடகம் நடித்தார். அங்குள்ள வாணிகச் செருக்கு, மக்கள்நிலை நாகரிகம்கண்டு, இது ஏன் இன்னும் பட்டியாக உள்ளது, நகராக மாறட்டும் என்று வித்திட்டார். அதன்படியே பின்பு விருதுபட்டி, விருதுநகராக மாறியது. நாடகக் கம்பெனியைக் கலைத்துவிட்டார். காரணம் நாடக வசூல் கம்பெனியை நடத்த போதியதாக இல்லை. எனவே தான் மட்டும் தனியாக அழைக்கும் நாடகங்களுக்குமட்டும் செல்வதாக முடிவுசெய்து அதன்படியே நடித்துவந்தார். இவர் பல ஊர்களில் நடித்த நாடகங்கள் சிலவற்றின் சிறப்பான அம்சங்கள் சிலவற்றைமட்டும் கூறிக்கொள்கிறேன். விரிக்கின் பெருகும்.

உடுமலைப்பேட்டையில் அரிச்சந்திரன் நாடகம் நடைபெறுகிறது. தன் குருநாதர் சங்கரதாஸ் சுவாமிகளை ஏற்றிப் போற்றிப் பாடுகிறார். உள்ளூர் வாசி ஒருவர் எங்கள் கவிஞர் முத்துசாமியைப் பற்றியும் பாடுங்கள் என்று கூறுகிறார். அன்பரே அவசரப்படாதீர்கள். உங்கள் கவிஞர் தேன், எங்கள் கவிஞர் கற்கண்டு என்றார். நண்பர் விடவில்லை; இரண்டும் இனிப்புத் தருவதுதானே என்றார். ஆமாம் என்றாலும் ஒரு சிறு வித்தியாசம். தேன் சாப்பிடும்போது இனிக்கும் கடைசியில் சற்று கசப்பாக இருக்கும். கற்கண்டு எங்கு எப்படி சாப்பிட்டாலும் இனிக்கும் என்றார். உடன் மக்கள் கைதட்டி ஆதரித்தனர் இதனை. பின் இருவரையும் பாராட்டிப் பாடினார்.

கோவிந்தசாமி அவர்கள் காரைக்குடிக்கு நாடகத்திற்குச் சென்றார்கள். அங்கு அனந்தராம அய்யர் உடன் நடிப்பதாக ஒப்பந்தம். வள்ளி திருமண நாடகம் நடைபெறுகிறது. கூட்டம் அதிகம் உள்ளது. வள்ளி தினைப்புனம் காவல் கட்டம். அங்கு வேலன் வருகிறார். இருவரும் சந்தித்துப் பேசுகிறார்கள். அனந்தன் இடக்கு மடக்காகப் பேசி வருகிறார்கள். கோவிந்தன் பெண்ணே நீ அடக்கமாகப் பேசு என்றார். அனந்தன் சற்று தடுக்காக ஏ வேடனே நீ என்னை நெருங்காதே நான் யார் தெரியுமா? அனந்தன் நெருங்கினால் தீமை வரும் என்கிறார் (அனந்தன் என்பதை பாம்புக்கு சிலேடையாகக் கூறினார்)

கோவிந்தன் சும்மா இருக்கமுடியுமா? ஏ பெண்ணே உன்னை இது வரையும் பெண் என்று நினைத்தேன். நீ அனந்தன் (பாம்பாக) ஆகிவிட்டாய். நான் யார் என்று நீ அறிந்திருந்தால் புரிந்திருந்தால் இப்படிப் பேசமாட்டாய். நான் தான் அனந்தன்மீது களிநடனம் புரியும் கோவிந்தன் என்றார். (கோவிந்தன் என்பது கிருஷ்ணனின் வேறு பெயர்). மக்கள் ஆரவாரித்து இந்த சிலேடையை வரவேற்று மகிழ்ந்தனர்.

சாத்தூரில் ஓர் நாடகம். ஏழாயிரம் பண்ணையைச் சேர்ந்த மாரியப்ப பிள்ளை என்பவர் அரிச்சந்திரன் நாடகத்தில் சந்திரமதியாக நடிப்பவர். கோவிந்தனுடன் இவரும் நடித்தார். மயான கட்டத்தில் யாரடி கள்ளி நீ என்ற வசனத்தை சந்திரமதி மடக்கி அரிச்சந்திரனே தினைற வைப்பது இவரது வழக்கமாம். அன்றும் அரிச்சந்திரன் யாரடி கள்ளி நீ என்று கேட்க, பெண்ணே அதுவும் ஊர்பேர் தெரியாதவனே அடியே என்று பேசலாமா என்றுள். கோவிந்தன் புரிந்து கொண்டார். அம்மா நீங்கள் தெரியாமல் பேசுகிறீர்கள். இது மயானம் இந்த நேரத்தில் இங்கு வந்த நீ-யார் அடி-கள் அதாவது யார் வழிவந்தவர்கள் என்று தானே கேட்டேன் என்று ஒரு போடு போட்டார், சந்திரமதி மடங்கி மயங்கி மன்னிப்புக் கேட்டாள்.

கோவிந்தசாமி அவர்கள் சுயம் பாடுவதிலும் தானே இட்டுக்கட்டி வசனம் பேசுவதிலும் வல்லவர். சபைக்கு வருமுன் பியாரே திரிலோகமும் புகழும் என்ற பாடலியும், தசரத ராஜகுமார அலங்காரா என்ற பாடலியும் பண்ணுடன் பாடி வருவார். எடுப்பான சாரீரம். அதனால் பாட்டு நன்றாக இருக்கும்.

ரங்காராவ் என்பவர் சிறந்த பபூன். வள்ளி நாடகம் ஒன்றில் வேலன் மானைத் தேடிவரும் கட்டத்தில் இவனிடம் இங்கு வந்த மான் எங்கு சென்றது என்று கேட்டார். ஓகோ நீங்கள் பூமானை என்றார் ஆம் என்றார். நீங்கள் சீமானை என்றார். ஆம் என்றார். அப்படியானால் நீங்களே தேடிக்கொள்ளுங்கள் என்றார் பபூன். உடனே இவர் நீ உண்மையைக் கூறுகிறாயா, இல்லை அந்தமானுக்குச் செல்கிறாயா என்றார். மக்கள் இதனைக் கேட்டு ரசித்தனர்.

கோவிந்தசாமி அவர்கள் 10 தடவை இலங்கை யாழ்ப்பாணம் சென்று வந்தார். ஒவ்வொரு தடவையும் 15 நாடகம் நடிப்பார். ஒரு மாதம் நாடகம் நடைபெறும் என்றால் இவருக்கு ரூ. 2000 தரவேண்டும். இங்கிருந்து சென்னைர இரண்டாவது வகுப்பு பயணச் சீட்டு இரண்டு, மூன்றாவது வகுப்புக்கு ஒன்றும், பிற செலவுகளும் தரவேண்டும். இதனை பத்திரத்தில் எழுதி பதிவு செய்து முன் பணம் ரூ 1000 வாங்கிக் கொண்டு பின்பு சென்று வருவார்.

மதுரை ரங்கநாயகியே இவருடன் யாழ்ப்பாண நாடகங்களில் நடித்து வந்தார். இவரது நடிப்புத் திறன் கண்ட யாழ்ப்பாண மக்கள் சந்தச்சரப சங்கீத சாகித்யர் என்ற பட்டம் கொடுத்தனர்.

எட்டயபுரத்திற்கு விசுவநாததாசு நாடகம் நடத்த வந்தால் கோவிந்தசாமியிடம் ஆசிபெற்று வந்தபின்பே நாடகம் நடத்துவார். சிலசமயம் இவரும் அவரது நாடகங்களைச் சென்று பார்த்து வந்திருக்கிறார்.

சூரன்குடி ராமசர்மி என்பவர் பபூன் வேடத்தில் கெட்டிக்காரர். இவர் யாரையும் ஏளனமாகப் பேசிவிடுவார். ஒரு சமயம் கோவிந்தசாமி அவர்கள் கோவலன் நாடகம் நடிக்கிறார். மாதவியுடன் கோபித்துக்கொண்டு கண்ணகி வீட்டை நோக்கி வருகிறார். பபூன் மறிக்கிறார். அவரை தான் மகிழ்விப்பேன் என்று ஜாடை கேலி செய்கிறார். சரி அப்படியே செய். நாயாகக் குலை குழுதையாகக் கத்து என்று கூறி அவனை மடக்கினர். அதன் பின் பபூன் அடங்கியே நடித்தான்.

மதுரை கிருஷ்ணவேணி என்ற நடிகையுடன் தூத்துக்குடியில் கோவலன் நாடகம் நடந்தது. மாதவியாக நடித்த அவள் கோவலனை நேசித்து அவனுடன் செல்லும் கட்டம். ஒரு துணியை நீட்டி அதனை அவரை படிக்கச் செய்து வரவேண்டும் என்று சைகை காட்டுகிறார். இச்சைருக்கை அடக்க எண்ணி பெண்ணே உன்ஙை ஆசாரப்படி என் கைப்பற்றிச் செல்வாய் என்றார். பின் நாணிக் கோணி பின் நடந்து சென்றார்.

1924ல் கடைசி நாடகம். உசிலம்பட்டியில் குலேபகாவலி நாடகம். அன்று கண்பார்வையற்ற ரங்காரவ் உடன் நடிக்கிறார். குலோப்பு பறித்து வந்ததாரும் சமயம் கால் இடறி கீழே விழும் சமயம் இவர் பிடித்துக் கொள்கிறார். அன்பரே இவர் பூப்பறித்த மகிழ்ச்சியில் களிதட்டிப்புரிகிறாள்என்று அவரை சமாதானம் செய்து சபையை சமாளித்தார்.

எப்போதும் முருகா சண்முகா சண்முகா என்று கூறிக்கொண்டே இருப்பார். பல சமயம் சண்முகம் என்பார். தன் மனைவி சண்முக வடிவு உடன் என்ன என்பார். ஐயோ உன்னை யார் அழைத்தது? என் அப்பன் முருகனே அல்லவா அழைத்தேன் என்று கூறி கேலி செய்வார். இவர்களுக்குக் குழந்தைகள் இல்லை. கழுகுமலை முருகன்மீது இவருக்கு அளவுகடந்த பக்தி. முருகனைப் பாடுவார். அவரை ஒரு சமயம் நிந்தித்தும் பாடினார்.

ஒருவர் பாலைக் குடித்தால் அல்லவோ உனக்கு
மதிஉண்டு நீ
அறுவர் பாலைக் குடித்து அறிவிழந்தாய்

என்று பாடினாராம். இவரது அந்திம காலம் எட்டய புரத்திலேயே கழிந்தது. கோவிந்தசாமி அவர்கள் 7-5-1924ல் தனது 32 வயதில் மரணமானார். தேசீய கவி பாரதியார் 39 வயதில் காலமானதுபோல இவரையும் இளமையிலே காலன் கொண்டு சென்றான். என்றாலும் காலம் கடந்தாவது நான் சில குறிப்பு தந்தது என் மனதிற்கு ஆறுதல் தருகிறது.

இலங்கை யாழ்ப்பாணம் எல்லாம் துலங்கு நாடக ராசா எம். ஆர். கோவிந்தசாமி இறக்கலாமா உயிர் துறக்கலாமா என்ற பாட்டு என் இளமையிலே கேட்டது, இன்றும் என் மனதில் பசுமையாக உள்ளது. அவர் புகழ் பரவட்டும்.

இவருக்கு ஒரு நினைவுச் சின்னம் எங்குமே இல்லாதது ஒரு ஆச்சரியமே. நாடகக் கலைஞர்கள், சங்கரதாஸ சுவாமிகள் வழி வந்த செம்மல்கள் அவரது முதல் சீடரை பெருமை தரும் வழியில் போற்றி வணங்குவார்கள். நாம் வணங்கவும் வழி செய்வார்கள் என்று எண்ணுகிறேன். எட்டயபுரத்தில் அவர் வாழ்ந்த வீடு இன்று எட்டயபுரம் அரசருக்கு சொந்தமாக உள்ளது. இதனை கலைஞர்கள் அல்லது அரசினர் வாங்கி அவருக்கு ஒரு நினைவுச்சின்னம் ஏற்படுத்தலாம் என்பது என் தாழ்மையான யோசனை. தமிழ் மக்கள் அங்கீகரிக்க வேண்டுகிறேன்.

வையம் சிறிதாக வைத்தோன்!

முகவை வாசுகிநாதன்

பாரதியின் திருப்புகழைப் பனிநீர் கொஞ்சும்
பைந்தமிழாம் நாமலர்கள் பலவும் தூவி !
சீரெதுகை தன்மோனை சேர்வதற்குச்
சிந்தையினைத் தடுமாற விட்டு நிற்கும்
பேரதிகம் இந்நாளில் பிதற்றல் போலப்
பிதற்றாத பெருமையிலே கவிதை சொல்ல
நேரெனக்குச் சென்றதமிழின் சுவையைத் தந்த
நெடுங்கவிஞன் பாரதிக்கு வணக்கம் கோடி!

மலர்சிரித்தால் புதியமணம் மலிந்து தோன்றும்
மங்கையவள் சிரித்திட்டால் மயக்கம் தோன்றும்
சிலர்சிரித்தால் ! வஞ்சனையும் சேர்ந்து தோன்றும்
செங்கதிரோன் சிரித்திட்டால் ஒளியே தோன்றும்
புலர்விடியல் சிரித்திட்டால் பொலிவு தோன்றும்
பொருமேகம் சிரித்திட்டால் மின்னல் தோன்றும்
உலகுபுகழ் பாரதிதான் சிரித்து விட்டால்
உரைத்திட்ட அவையெல்லாம் உயர்ந்து
தோன்றும்

சின்னவொரு வயதினிலே காதல் செய்யும்
செய்தியினைக் கேட்டவர்தாம் என்ன சொல்வார்
என்னவித அநியாயம் என்றே சொல்வார்
இருந்தாலும் பாரதிக்கு மட்டும் ஒவ்வா

அன்னவனே சிறுவயதில் கவிதை என்னும்
அழகுதவம் கன்னியினைக் காத லித்தான்!
கன்னலெனப் பாகென்னத் தேனே யென்னக்
கற்பூரக் கவிதைபல தந்தான் மாதோ !

பேசாத சித்திரமாய் ! இருந்தார் தம்மைப்
பேசுகின்ற பொற்சிலையாய் ஆக்கிவைத்தே
கூசாமல் அந்நியர்கைக் கூலிபெற்றுக்
கொக்கரித்த நம்மவரைக் கூன் நிமிர்த்தி
ஆசாரத் தோடவர்க்கு முரிமை வேட்கை
அளித்திட்ட அட்லேறும் ஆர்த் தெழுந்து
தேசார்ந்த நியாயத்தைச் செய்தான் அந்தத்
தெய்வநலப் பாவாணன் அற்றை நாளே !

கத்துகின்ற குயிலினைப்போல் கேட்டுக் கேட்டு
கற்பனையாம் தேரினிலே பவனிவந்து
முத்தமுத்தாய் ! தத்துவத்தை மோனப்பரட்டாய்
முதுதமிழர் தாமுரைப்பாடி வைத்து
வித்தகனாய் ! வருங்கால வினைவு கூறும்
விவேகத்தின் தகமைகனாய்! விரிந்த வையம்
எத்தினமும் இன்றமிழால் ஏத்தி நிற்க
இவ்வையம் தனைச்சிறிதாய்ச் செய்தான் மாதோ!

பொய்யும் மெய்யும்

கே. ஜயலக்ஷ்மி

★

ரவி எப்போது வருவான் என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த கிரிதரன், தன் அறைக்குள் ரவி நுழைந்ததும் நுழையாதுமாக,

"ரவி! உன் தம்பியுடன் நானும் சென்னைக்குப் போய் வரலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?" குரலில் ஆர்வம் பொங்கக் கேட்டான்.

"நீயா! எதற்காக?" ரவியின் கேள்வியில் எல்லையற்ற வியப்பு.

"என்னமோ தெரியவில்லே ரவி! ஒரு வாரமாகவே சுநீதாவின் நினைவு. போய் ஒரு தடவையாகிலும் பார்த்துவிட்டு வரவேண்டும் என்கிற துடிப்பு. என்ன முயன்றும் அடக்கிக்கொள்ள முடியாமல் பீறிடுகிறது... ஏன்...?" குழந்தை மாதிரி தன்னையே திருப்பிக் கேட்டான் கிரிதரன்.

"இன்னமுமா உனக்கு சுநீதாவின் நினைப்பு? அவள் இன்று வேறொருவருக்கு உரிமையாகியிருப் பவளாயிற்றே!" என்றான் ரவி குற்றம் சாட்டும் பாவனையில்.

"இருக்கட்டுமே. என் ஆவலில் தவறான நோக்கமே கிடையாது ரவி. அவள் சந்தோஷமாக இருப் பதைப் பார்த்தால் எனக்கும் கொஞ்சம் ஆறுதல் கிடைக்கும் என்று தோன்றுகிறது. மற்றபடி..."

"எனக்கு ஆட்சேபணையில்லே கிரி. மோகனிடமும் சொல்லிவிடுகிறேன். நீ போய் வா" என்று கூறினான் ரவி.

தற்காலிகமாகக் கிடைத்த நிம்மதியில் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டான் கிரி. ரவி சொன்னது போல் இன்னொருவரின் உடமையாகிவிட்ட சுநீதாவைப்பற்றி நினைப்பதில் கூட அர்த்தமில்லைதான். இருந்தாலும் தான் செய்த தியாகத்தின் முழுமையானப் பலனைக் கண்கூடாகக் கண்டான் தானே தியாகம் செய்தவர்களுக்கு ஒரு நிம்மதி? இல்லாவிட்டால் பெருமிதம் என்று வேண்டுமானால் சொல்லலாமா? அவனுடைய அந்தரங்கத்தில் இருந்த ஏகாம் அவனைப்போன்ற நிலையில் உள்ளவர்களைத் தவிர வேறு யாருக்கும் புரிந்து கொள்ளமுடியாது.

அன்று அந்தப் பெரிய மருத்துவ விடுதியின் பெரிய டாக்டர், "மிஸ்டர்! கிரிதரன், மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் கட்டையின் உதவி இல்லாமல் இனிமேல் நடக்கவே முடியாது" என்று கூறியபோது, 'ஐயோ நம் கால் ஊனமாகி விட்டதே என்றே, நமக்கு இனிமேல் 'நொண்டி' என் கிற ஒரு புதிய பெயர் வந்துவிடுமே என்றே, அதனு லெல்லாம் நம் வாழ்வு வீணாகப் போகிறதே' என்றே அவன் வருத்தப்படவில்லே. 'ஐயோ, சுநீதா!' என்று தான் அவனுடைய உள் மனம் அலறியது.

'முழுமையான ஒரு சௌந்தர்ய வடிவம் படைத்த சுநீதாவை அடைகிற உரிமை இனிமேல் எனக்குக் கிடையாது' என்று எண்ணி அதற்காகத்தான் கிரிதரனின் உள்ளம் துடித்தது. அழகு, அன்பு, அருள் எல்லாம் முழுமையாக நிறைந்து நிற்கும் ஆண்ட வனுக்கு நாம் குறையுள்ளப் பண்டங்களையோ, மலர் களையோ நிவேதனம் செய்கிறோமா! உடைத்தத் தேங்காயில் எள்ளளத்தனே மராதலேக் கண்டுவிட்டால் கூட அதை அப்படியே அகற்றிவிட்டு வேறொரு நல்ல தேங்காயை எடுத்து உடைத்துப் படைக்கிறோம்! கிரிதரனின் உள்ளமும் அப்படிப்பட்ட ஒரு பக்தனின் உள்ளத்தைப்போன்றதானிருந்தது.

அவனோப் பொறுத்த வரையில் சுநீதா ஒரு சாதா ரணப்பெண்ணல்ல. அவள் அவனுக்கு ஒரு தெய்வம் போலத்தான். அழகுத் தெய்வம் அவனுக்கு அவள். அந்த சௌந்தர்யலக்ஷ்மிக்கு குறையுள்ளத்தன்மை அளிக்க அவன் விரும்பவில்லை. அதன் வினைவு....?

"சுநீதா!

நீ அதிகம் படித்தவளல்ல. இருந்தாலும் நான் எழுதுவதை உன்னால் புரிந்துகொள்ள முடியும் என்று நம்புகிறேன். மனிதனுக்குச் சில சமயம் அதிகாரம் அகம்பாவத்தை உண்டாக்குகிறது. சில சமயம் அறிவும் அகம்பாவக்காரனுக்குகிறது. சில சமயங்களில் புகழ்கூட அவனே அகம்பாவம் பிடித்தவனுக்குகிறது. அகம்பாவம்கூட அளவுடன் இருந்து விட்டால் தவ றில்லை. அது எல்லையைக் கடந்து விட்டாலோ...! மனி தன் மிருகமாகி விடுகிறான். எப்படி....? புரியவில்லையா? புகழ் தந்த போதையில என் அகம்பாவம் எல்லையை மீறித்தான் போய்விட்டது. நான மிருகமாகிவிட்டேன். பிறகுதான் என் தவறு எனக்கு விளங்கியது. வருந்தி னேன். வருந்திப் பயனில்லே என்கிற நிலே வந்தபிறகு வருந்தினேன். அப்படி வருந்தியதற்காக என் மிருகத் தனத்தின் வினேவு கனேயப்பட்டுவிடுமா? நான் ஆண் மகன். என் தவறை மறைத்துக் கொள்ளுகிற வாய்ப்பு எனக்கு இருப்பது உண்மைதான். ஆனால் என்னுடன் சம்பந்தப்பட்ட பெண்ணின் நல்ல! யோசித்துப் பார்த் தேன். வேறு வழியில்லே. அந்தப் பெண்ணின் கழுத் திலேயே மூன்று முடிச்சுகளேப்போட்டு என் தவறுக் குப் பிராயச்சித்தம் தேடிக்கொண்டுவிட்டேன்.

சுநீதா! அங்கே வந்து உன் முகத்தில் விழிக்கிற தூணு எனக்கு இல்லே அதனல் என் வாழ்வை இந்த ஊரிலேயே ஸ்தாப்பித்துக் கொண்டு விட்டேன். ஆகையல் தயவு செயது என்னே மன்னித்துமறந்து விடு."

கிரிதரன்.

இப்படியொரு கடிதத்தையும் எழுதி, அதை சுநீதாவுக்குத் தபாலிலும் சேர்த்துவிடச் சொய்த பிறகு அவன் நெஞ்சம் துடித்த துடிப்பு இருக்கிறதே! அம்மம்மா!

ஒரே ஆதரவாக இருந்த அவனுடைய அன்னே இறந்துவிட்ட பிறகு ஊரார்ின் கண்களுக்கு அவன் அனுதைதான். இருந்தாலும் அவனுக்கு வசதியாக வாழ வழியும், இளம் மங்கையர்கள் விரும்பும் வனப் பும், இளமையும் இருக்கத்தான் செய்தது. இதனல் தானோ என்னமோ கிரிதரன் தன் தாயின் மறைவுக் காக அதிகம் வருந்தவில்லே, 'கஷ்டப்படுகிற நாளெல் லாம் பட்டுவிட்டு, சுகம் அனுபவிக்க வேண்டிய சம யத்தில் இப்படிப் போய்விட்டாளே!' என்று அந்த ஆத் மாவின் தூரதிருஷ்டத்திற்காகத்தான் வருந்தினுன் அவன்.

எதற்காகவும் நிற்காத காலம் தன் போக்கில் விழைந்தது. கிரிதரனுக்கு சுநீதாவின் காதல் கிடைத் தது. சுநீதாவுக்கும் ஏறத்தாழ கிரிதரனின் நிலமை தான். ஆனல் அவளுக்கு ஒரு தாய் இருந்தாள். அந்தத் தாய் ஒரு பணக்காரர் வீட்டில் சமையல்வேலே செய்து கொண்டிருந்தாள். தாயும் மகளுமாக ஏதோ ஒரு மாதிரியாக வயிற்றை வளர்த்து வந்தார்கள். வயிற்றை வளர்க்கச் செய்த முயற்சியில் வடிவமும் வளர்வது இயற்கைதானே? இயற்கையை மீறுவது எப்படி? சுநீதா எழிலோ வியமாகத் திகழ்ந்தாள். அந்த நிலேயிலும் அது மிகமிகச் சின்னக்கிராமம். அதனல் சுநீதாவுக்கு அதிகம் படிக்க வசதியில்லே. அதனல் வீட்டிலேயே முடங்கி விட்டாள். இதுதான் அவளு டைய நிலே.

அந்தப் பணக்காரர்களின் வீட்டின் பிள்ளேகளில் கடைசிப் பையனை வாசுவின் நண்பன் கிரிதரன். நண்பனுடைய வீட்டுக்கு விருந்தினனுக விடுமுறை யின்போது சென்றான். அங்கே தான் அவன் சுநீதாவைக் கண்டான். அவளுடைய முழுமையான சௌந்தர்யம் அவனேத் தன் அடிமையாக்கிக்கொண்டு விட்டது. அந்த மயக்கத்தின் சுநீதாவின் வறுமையோ, இன்னேரே அவன் எண்ணத்திற்குத் தடையாக இருந்துவிடவில்லே. அவனேத் தன் உரிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவன் நினேக்கவில்லே. தன்னே அவளுடைய உரிமைப்பொருளாக அவளுக்கு வழங்கிவிடவேண்டும் என்றே அவன் துடித்தான். அப்படி அவன் நினேக்கத்தக்கது தான் சுநீதாவின் அற்புத சௌந்தர்யம்.

சுநீதா தன் வயதுக்குரிய இயல்பான உணர் வுடன்தான் கிரிதரனிடம் தனது நேசக் கரத்தை நீட் டினுள். ஆனல் கிரிதரனே அந்த அன்புக்கரத்தை அழகுத் தெய்வத்தின் அருள் கரமாகத்தான் கருதி பற்றிக்கொண்டான். இளம் உள்ளங்கள் இணேந்தன. காலத்தினேயும் உரிமையை யாசித்து நின்ற வேகமில் தான் கிரிதரனுக்கு விடுமுறை முடிந்து சென்னேக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தன் இத யத்தைச் சுநீதாவிடம் ஒப்படைத்துவிட்டு வெற்றுட லோடுதான் பிரிந்து சென்ருன்.

ஆறு மாதங்கள்கூட ஆகியிருக்காது. வாசுவின் குடும்பமே சென்னேக்கு வந்து குடியேறிவிட்டது. கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு குடியேறுகிற நிர்ப்பந்தம் பல குடும்பங்களுக்கு ஏற்படுவதுண்டு அல்லவா? அப்படித்தான் வாசுவின் குடும்பத்திற்கும் ஏற்பட்டது. ஆறு-ஏழு குழந்தைகள் படிப்பைத் தொடரவேண்டியிருக்கும்போது கிராமத்தில் இருப்பது எப்படி? வாசுவின் குடும்பத்தில் ஏற்பட்ட இத்த மாறுதல் கிரிதரனுக்கு நன்மையாக முடிந்துவிட்டது. ஆம். சுநீதாவின் அம்மாவும் அந்தக் குடும்பத்துட னேயே ஒட்டிக்கொண்டு சென்னேக்கு வந்துவிட் டாளே!

கிரிதரனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஓர் அளவே கிடையாது. சந்திக்கவும் பேசவும் பயந்து பயந்து நடுங்கவேண்டிய அவசியம் சென்னேயில் இல்லே யல்லவா? சுநீதாவின் தாய் தனக்குப் பார்த்துக் கொண்டிருந்த ஒண்டுக்குடித்தனமும் கடற்கரைக்கு

அருகாமையிலுள்ள ஒரு வீடாக இருந்துவிட்டது. கிரிதரன்–சுந்தா காதல் வளர்பிறைபோல் வளர்ந்து வரலாயிற்று. காதல் கனிந்து கலியாணத்திற்கு நாள் குறிக்கும் வரைக்கும் வந்துவிட்டது. இரு வருமே மே இன்பவனில் ஆனந்தச் சிறகடித்துப் பறந்தார்களே. இயற்கைதானே?

இச்சமயத்தில்தான் இந்தியா எங்கிலும் கிரிக்கெட் போட்டி ஆரம்பமாயிற்று. பம்பாயில் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் போட்டி. அதில் இந்தியக் கோஷ்டியில் கிரிதரனும் இடம் பெற்றான். உரிய நாளில் அவன் செல்லவேண்டி வந்தபோது,

''உங்களுக்கு கிரிக்கெட் ஆடத் தெரியும் என்று என்னிடம் சொல்லவே இல்லையே...'' என்றாள் சுந்தா ஆதங்கத்தோடு.

''உன் முன் அதை நான் பெரிதாகக் கருதவில்லே. அது ஒரு தலைவரா?'' செல்லமாக அவள் மோவாயைப் பற்றி அசைத்தான் கிரிதரன். அசைந்த இடத்தில் இரத்தம் கசிந்தது.

''இல்லே. ஆனால்...'' மேலே பேசத் தெரியாமல் தவித்தாள் அவள்.

''ஏன், சுந்தா! உனக்கு கிரிக்கெட் ஆடுவது பிடிக்காதா?'' ஆற்றுமையோடு வினவினான் கிரிதரன்.

''அப்படியெதுவுமில்லே. இருந்தாலும் இப்போது நம்மைப் பிரிக்கக் காரணமாக இருப்பது அதுதானே? அதனால்தானே என்னமோ...எனக்கு அதைப் பிடிக்க வில்லே'' இதைச் சொல்வதற்குள் அவளுடைய நீல விழிகளே நீர்த்திரை மறைத்துக்கொண்டது.

''அதிகமாகப் போனால் ஒரு வாரமோ—பத்து நாட்களோ! இதற்கா இவ்வளவு கண்ணீர்? தான் புகும் பெற்ருல் அது உனக்குப் பெருமையில்லேயா?'' தன் கைக்குட்டையால் அவள் கண்மலர்களே ஒற்றி யெடுத்தபடி கேட்டான் அவன்.

''அதெல்லாம் அப்புறமல்லவா? இப்போதைக்கு...! எனக்கென்னமோ இந்தப் பிரிவு நீண்டகாலமாகவும் ஆகிவிடும் என்பது போல் அச்சமாக இருக்கிறது. என் இந்த நினைவு அர்த்தமற்றதுதான் என்பதும் எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது. இருந்தாலும் இந்த பீதியிலிருந்து என்னுல் என் மனத்தை விடுவித்துக்கொள்ள முடியவில்லே.'' அவனுடைய கரத்தை எடுத்துத் தன் இதயத்தில் வைத்து அழுத்திக்கொண்டு பயம் கலந்த ஒரு விதக் குரலில் மொழிந்தாள் சுந்தா.

''அப்படியானுல் நான் பம்பாய்க்குப் போகாமல் நின்று விடட்டுமா?'' என்று கேட்டவனின் வாயைத் தன் தளிர்க்கரத் தாமரையால் பொத்தி விட்டாள் அவள்.

''வேண்டாம், தாங்கள் சென்று வாருங்கள்.''

இந்தியக் கோஷ்டியுடன் கிரிதரன் பம்பாய்க்கு வந்ததும் அவன் திறமையாக ஆடி எல்லோருடைய பாராட்டுதல்களையும் பெற்றதும் பழைய கதை. கடைசி நாளன்றுதான் அவனுக்கு அந்த விபத்து ஏற்பட்டது. பணத்தை வாரியிறைத்துதான் வைத்தியம் செய்யப் பட்டது. ஆனுல் விதி யாரை விட்டு வைத்தது, என்று டாக்டர் கிரிதரனே, 'இனிமேல் நீங்கள் கட்டை யின் உதவியில்லாமல் நடக்க முடியாது' என்று தீர்மானமாகக் கூறினுரோ அந்த விஞடியே கிரிதரனின் உள்மனமும் தீர்மானித்துக்கொண்டுவிட்டது, 'இனி மேல் நான் சுந்தாவை மணக்க அருகதையற்றவன்' என்று.

அவனுடைய உண்மையான நிலையை அறிந்தால் சுந்தா மறுக்கக்கூடியவள் அல்லதான். இவனுக்குத் தான் அந்த எழில் வடிவத்தின் அருகில் ஒரு பக்கத்தில் விசித்திரமான கட்டையின் உதவியோடு கணவன் என்று சொல்லிக்கொண்டு நிறகப் பிடிக்கவில்லே. 'அந்த அழகு முழுமையானது. முழுமையான இன்னெரு அழகோடு மட்டுமே இணையவேண்டிய ஒன்று. அதை குறையாகிவிட்ட என்னுடன் இணைத்துக் கொள்வதா? அது எவ்வளவு சுயநலம்?' அவன் அவள் மீது கொண்டிருந்த காதல் தெய்விகமானது. தெய்வீகக் காதலில் சுயநலம் இடம்பெறுமா?

கிரிதரன் கடிதம் எழுதிய ஆறு மாதங்களுக்குப் பிறகு அவனுக்கு ஒரு தபால் வந்தது. ஆனுல் அது சுந்தாவின் கடிதமல்ல. திருமணப் பத்திரிகை.

அவள் கடிதம் எதுவும் எழுதாமல் தன் திருமணப் பத்திரிகையை மட்டும் அனுப்பி வைத்ததற்காக கிரிதரன் வருத்தப்படவில்லே. எழுத என்ன இருக்கிறது. சொற்களாலோ எழுத்தாலோ எடுத்துக் காட்ட முடியாத உணர்வுகளும் மனிதப்பிறவிக்கு இருப்பதை உணர்ந்தே அவள் எழுதாமலேயே இவன் அவள் நிலையைப் புரிந்துகொண்டான். தன் இதயக் காதலை அந்தரங்கத்தில் போட்டு மூடிவிட்டுக் கட்டைக்காகத் தான் அவள் இசைந்திருப்பாள். தன் அழகுக்கும் இளமைக்கும் ஓர் கௌரவமான பாதுகாப்பு வேண்டும். தாயின் கவலையைக் குறைக்க வேண்டும். இந்த இரண்டு கடமைகள் அவளுக்கு உண்டே! அவள் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் அவள் சம்பந்தப்பட்ட இந்தக் கடமைகளுக்கு அவள் உட்பட்டுத்தான் ஆக வேண்டும். உட்பட்டு விட்டாள். பிறர் நிம்மதிக்காகத் தன்னே அழித்துக்கொள்வதானே பாரதப்பெண்மையின் தனிச்சிறப்பு!

அரைகுறையாகத் தெரிந்து வைத்திருந்த சித்திரம் எழுதுகிற பழக்கத்தை வளர்த்துக்கொண்டான்

கிரிதரன். வீட்டில் இருந்தபடியே பத்திரிகைகளுக்குப் படங்களும், கட்டுரைகளும் வரைந்து அனுப்பி வந்தான். அவன் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே வசதியாக அவன் காலங்கழிக்க முடிந்தது. தன் ரகஸ்யம் சுநீதாவின் செவிக்கு எட்டிவிடக்கூடாது என்பதற்காகவே பழைய சிநேகிதர்களையெல்லாம் கத்தரித்துக்கொண்டு புதிய நண்பர்களுடன் பழகி வந்தான். அவர்களுள் ஒருவன் தான் ரவி. கிரிதரனின் அந்தரங்கமனோதத்தையும் அறிந்தவன்.

மூன்று வருடங்களாக கிரிதரன் மணம்செய்து கொள்ளும்படி வற்புறுத்தி வந்தான் ரவி. 'உனக்காக இல்லாவிட்டாலும் ஓர் ஏழைப் பெண்ணுக்காகவாகிலும் இரங்கி அவளுக்கு வாழ்வுகொடேன். உன்னுல் ஒரு ஏழைப்பெண் வாழ்வு பெறட்டுமே' என்பான் அவன். ஆனுல் கிரிதரன் ஒரே பிடிவாதமாக 'என் வாழ்க்கையில் இனிமேல் தருமணத்திற்கே இடமில்லே. என்னுடைய ஆசையெல்லாம் சுநீதா சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பது ஒன்றுதான். அந்த சந்தோஷத்திலேயே நான் இந்தப் பிறவியை நிம்மதியாகக் கழித்துவிடுவேன்' என்று கூறுவான். நாளடைவில் ரவி கிரிதரனிடம் கலியாணப் பேச்சையே எடுப்பதில்லே. நாட்கள் நகர்ந்துகொண்டே இருந்தன.

ரவியின் தம்பி மோகன் சென்னையிலிருந்து வந்து ஒருமாதமாகிறது. அவன் வந்ததிலிருந்தே கிரிதரனின் உள்ளத்தில் ஓர் விதச் சலனம். 'சுநீதாவைப் பார்க்க வேண்டும். அவளுடைய கணவனைப் பார்க்கவேண்டும். அவன் இவளுடைய அழகுக்கு ஏற்றவனுகுன்பதை அறியவேண்டும். அவனுடன் சுநீதா இனபமாக வாழ்வதைப் பார்த்துவிட்டால் போதும். வேறு எதுவும் வேண்டாம். அப்போதுதான் என்னுடைய தியாகம் பலித்ததாகும்.' தியாகம் செய்துவிட்டால் போதுமா? அது எத்தகைக்காக செய்யப்பட்டதோ, அது இவன் எதிர்பார்த்தபடி நிறைவேறியிருக்கவும் வேண்டும். அப்படியில்லாவிட்டால இவனுடைய தியாகம் வீயர்த்தமாகி விடாதா? தன தியாகத்தின் பலனே அறிந்துகொள்ளவேண்டும் என்கிற அவன் ஆவல் நியாயமான ஒன்றுதானே? இப்படி எண்ணித்தான் கிரிவன் விருப்பத்திற்கு தன் சம்மதத்தை அளித்தான் ரவியும்.

ஃ ஃ ஃ

சென்னைக்கு வந்தவுடனேயே கிரிதரன் ஆள் அனுப்பி சுநீதாவைப்பற்றி வாசுவின் வீட்டாரிடம் விசாரித்து வரச்செய்தான்.

சுநீதாவின் தாய் இறந்துவிட்டதாகவும், சுநீதா மணமாகித் தன் கணவன் வீட்டுக்குச் சென்றுவிட்டதாகவும், தற்சமயம் சுநீதா மயிலாப்பூரில் வசித்து வருவதாகவும் தெரியவந்தது. கிரிதரன் உடனே மயிலாப்பூர்க்குச் சென்று சுநீதாவைச் சந்திக்கத் துடித்தான். ஆனுல் அவனுடைய விருப்பத்திற்கு மோகன் தற்காலிகமாகத் தடைவிதித்தான். 'ஞாயிற்றுக்கிழமை யன்று போய்வரலாம். நானும் வருகிறேன்.....' என்ற அவனுடைய வேண்டுகோளைத் தட்டமுடியவில்லே கிரிதரனுல்.

ஞாயிற்றுக்கிழமைஎன்றுவரும் என்று எதிர்பார்த்துத் தவித்துக்கொண்டிருந்தான் கிரிதரன். அதுவும் வந்தது. முதல்நாளே திட்டமிட்டு வைத்திருந்தபடி மோகனும் கிரிதரனும் வாடகைக்காரில் மயிலாப்பூர் சென்ருர்கள். சரியான விலாசம் தெரிந்திருந்ததால் சுநீதாவின் வீட்டைக் கண்டு பிடிப்பது எளிதாகவே இருந்துவிட்டது.

வீடு கிரிதரன் எதிர்பார்த்தபடி இல்லாமல் பெரியதாகவே இருந்தது. வசதியாக வாழ முடிந்தவர்களின் வாசஸ்தலம் என்று எளிதில் ஊகிக்கத் தக்கதாகவும் இருந்தது. காரினின்றும் இறங்கி உள்ளே சென்ருர்கள் கிரிதரனும் மோகனும். வெளி வராந்தாவிலேயே ஒரு பிரம்பு நாற்காலியில் ஒருவர் அமர்ந்திருந்தார். நடுத்தர வயதைக் கடந்துவிட்ட அவர் பார்க்கக் கண்ணியமானவராகத் தோன்றினுர். கூலிங்கிளாஸ் அணிந்திருந்தார். இவர்கள் அவருக்குச் சமீபமாகப்போய் நின்றபிறகு,

'யார், அது?' என்று கேட்டபடியே பார்வையற்ற ஒருவனின் தவிப்புடன் வினவினுர்.

"தங்கள் பெயர் வேணுகோபாலன் தானே? சுநீதாவின்.....?" என்று சற்றுத் தயங்கினுற்போல நிறுத்தினுன் கிரிதரன்.

"சுநீதாவுக்கு வேண்டியவரா? உட்காருங்கள். சுநீதா கோவிலுக்குப் போயிருக்கிருள். வருகிற சமயம்தான்....." என்ருர் அவர்.

கிரிதரனும் மோகனும் அங்கு போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்துகொண்டார்கள்.

"நீங்கள் வந்து....." என்று கிரி பேச்சைத் துவக்கியபோது,

"அப்பா! உம்மாச்சி...பார்த்தேன்..." என்ற மழலேக் குரல் கேட்கவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் கிரிதரன்.

சுநீதாதான் இடுப்பில் ஒரு பெண் குழந்தையும் வலது கையில் கோவில் பிரசாதத்துடனும் மெள்ள நடந்து வந்துகொண்டிருந்தாள்.

"அப்பா! உம்மாச்சி.....?' மறுபடியும் சுநீதாவின் கையில் இருந்த குழந்தை குரல் கொடுத்தது.

இதற்குள் சுநீதாவும் வராந்தாவின் அருகில் வந்துவிடவே, அவள் குழந்தையைக் கீழேயிறக்கி விட்டாள். அந்தக் குழந்தை 'அப்பா!' என்று விளித்துக்கொண்டே தன் தந்தையிடம் ஓடி வந்தது.

"லதாக்கண்ணு! அம்மா எங்கே?" என்று கேட்டபடியே குழந்தையை உட்கார்ந்த நிலையிலேயே வாரியெடுத்துக்கொண்டார்.

"இதோ இருக்காளே! இந்த மாமாவெல்லாம் ஆருப்பா" என்று திருப்பிக் கேட்டாள் லதா.

"சுநீதா!" ஏகக் காலத்தில் லதாவின் தந்தையும் கிரிதரனும் அழைத்தார்கள்.

"நீங்களா?" சலனமற்ற குரலில் சகஜமாகக் கேட்டாள் சுநீதா கிரிதரனைப் பார்த்து.

"சுநீதா! யாரோ உன் உறவுக்காரராம், வந்திருக்கிறார்கள் பார். உள்ளே அழைத்துப்போய் ஏதாவது கொடு..." என்றார் லதாவின் அத்தை.

"ம்....." என்று குரல் கொடுத்தபடி உள்ளே சென்றாள் சுநீதா.

மோகனை 'இங்கேயே இரு' என்று சைகை மூலம் கூறிவிட்டு 'டக்! டக்!' என்று கட்டைக்கால் சப்திக்க சுநீதாவைப் பின் தொடர்ந்து வீட்டினுள்ளே சென்றான் கிரிதரனும். அவன் சுநீதாவின் அழைப்பை எதிர்பார்க்கிற நிலையில் இல்லை!

'டக்! டக்!' என்ற ஒலி சுநீதாவைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கவேண்டும். தன்னை மீறி விட்ட வியப்புடன் திரும்பியவள்,

'இதென்ன கோலம்!' என்று வினவியபடி கிரிதரனின் இடது காலை நோக்கினாள்.

"உனக்குப் பிடிக்காத ஆட்டம் எனக்குப் பிடித்ததின் விளைவு சுநீதா. சௌந்தர்ய லட்சியத்தின் உருவமான உனக்கு இந்தக்குறையுள்ள உடலில் அர்ப்பணிக்க விரும்பாமல்தான்....." மேலே பேச முடியாமல் தவித்துத் தடுமாறினான் கிரிதரன்.

'அப்படியொரு கடிதம் எழுதினீர்களாக்கும்?'

'ஆமாம். அழகுக் தெய்வமான என் சுநீதாவின் கனவன் ஒரு நொண்டியாக இருப்பதா? அதை என்னால் எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? அதனால்தான் அப்படியொரு கற்பனைக் கடிதம் எழுதினேன். உன் கல்யாணப் பத்திரிகையைப் பார்த்த பிறகுதான் என் மனம் நிம்மதி அடைந்தது. இருந்தாலும் நீ சந்தோஷமாக உனக்கு எல்லாவற்றிலும் பொருத்தமானவருடன் இணைந்து இன்பமாக இல்லறம் நடத்துவதைப் பார்த்துவிட்டுச் சென்றால்தான் என் நிம்மதி நிரந்தரமாக நிலைக்கும் என்று தோன்றியது. அதற்காகவே புறப்பட்டு வந்தேன். வந்த இடத்தில் எனக்குப் பெரிய அதிர்ச்சி....."

"அதிர்ச்சியா?"

"ஆமாம். வாசலில் கறுப்புக் கண்ணாடி அணிந்து உட்கார்ந்திருப்பவர்க்கு இரண்டு கண்களுமே தெரியாது போலிருக்கிறதே! அவர் தானே உன் கணவர்? அந்தக் குழந்தை உங்களுடையது தானே?" சுநீதாவின் வாயிலிருந்து என்ன பதில் வருமோ என்கிற தாங்கமாட்டாதத் தவிப்புடன் கேட்டான் கிரிதரன்.

என் கணவர் இதோ இருக்கிறார்..." அவர்களுக்குச் சமீபத்தில் இருந்த சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு புகைப் படத்தைச் சுட்டிக் காட்டுகிறாள் சுநீதா.

அந்தப் படத்தில் இருந்த வாலிபரும் வராந்தாவில் உட்கார்ந்திருந்தவரும் ஒரே மாதிரியாக இருந்ததோடு அதிலும் இவருடைய கண்கள் ஒளிவீசித் திகழ்ந்து கொண்டிருந்ததைக் கண்டான் கிரிதரன். அவன் உள்ளம் 'அப்பாடா' எனறு விகசித்தது.

"இருவரும் ஒரே மாதிரி இருக்கிறார்கள்!" எள்ளுன் திருப்தி நிறைந்த புன்னகை ஒன்றை இதழ்களில் இழையவிட்டபடி கிரிதரன்.

"அண்ணன் தம்பிகளாச்சே!" என்றாள் சுநீதாவும் அதே புன்னகையுடன்.

''குழந்தை?''

''அவருடையது தான். பிரசவ அறையிலேயே அதன் தாய் இறந்துவிட்டாள். நான்தான் எடுத்து வளர்த்து வருகிறேன். அதுவும் என்னையே தன் அம்மாவாக எண்ணிக் கொண்டிருக்கிறது.''

''ரொம்ப சந்தோஷம் சுநீதா. வராந்தாவிலிருந்த வரைப் பார்த்ததும், உடனே அந்தக் குழந்தை அவரை 'அப்பா' என்று அழைத்ததையும், உன்னை 'அம்மா' என்று அழைத்ததையும் கண்டதும் எனக்கு உண்டான வருத்தத்திற்கு ஓர் அளவே கிடையாது. எங்கே, நான் செய்த துரோகம் பயனற்ற ஒன்றாக வீணுகிவிட்டதோ என்று துடித்துப்போய்விட்டேன். உன் அழகும் குணமும் முழுமையானது சுநீதா. உன்னை அடைகிறவரும் முழுமையான அழகராகவும் முழுமை யான குணவானுகவுமே இருக்க வேண்டும். அதுதான் நியாயம், தர்மம எல்லாம். அப்படியில்லாமல் ... வேறு விதமாக இருந்துவிட்டால் ...? ஐயோ! அதை என்னுல் நினைத்துக்கூடப் பார்க்கமுடியவில்லே..'' விழிகளில் துளிர்த்த கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்ட கிரதரன், ''அந்த வேதனையில் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடலாம்கூட ஆச்சர்யப்பட முடியாது சுநீதா. ஆச்சர்யப்பட முடியாது. நல்ல காலம். தப்பினேன். என் தியாகத்தின் முழுமை யான வெற்றியைக் கண்டுவிட்ட திருப்தியே எனக்குப் போதும் சுநீதா. இதைவிட இனிமையான ஒரு செய்தி எனக்கு வேறு எதுவுமே இல்லே,'' என்றான் உணர்ச்சிமிக்கவனுய்.

வாயடைத்து நின்ருள் சுநீதா. அவள் கண்களி லும் கண்ணீர் கசிந்தது. சிரமப்பட்டு மறைத்துக் கொண்டாள் அதை.

''உன் கணவர் எங்கே சுநீதா?'' ஆர்வம் மேலீட் டுக் குரலில் வினவினுன் கிரதரன்.

''அவர் ஊரில் இல்லே. வருவதற்கு ஒரு வாரம் ஆகலாம். ஆபீஸ் விஷயமாக வெளியூர் போயிருக் கிறர்'' எங்கே பார்த்துக் கொண்டு மொழிந்தாள் சுநீதா.

''பரவாயில்லே. நான் வரட்டுமா சுநீதா?', என்று கேட்டான் கிரதரன்.

''காபி சாப்பிட்டு விட்டுப் போகலாம்...'' என் ருள் சுநீதா.

அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பும் போது தன் மடியிலிருந்த மைனர் சங்கிலியைக் கழற்றி குழந்தை லதாவின் கழுத்தில் அணிவித்து விட்டுப் புறப்பட்டான் கிரதரன். கிரதரனேயும் மோக னையும் தான் மட்டுமே உபசரித்துப் பேசி அனுப்பி வைத்தாள் சுநீதா.

மோகனும் கிரதரனும் காரில் ஏறிச் சென்றதும் குழந்தை லதா சுநீதாவிடம் ஓடிவந்தாள்.

''அம்மா! மாமாவெல்லாம் யாரு?'' என்று கேட் டாள்.

''உன் மாமாதான் லதா! அசட்டுமாமா! தனக்கு மட்டும்தான் பொய் சொல்லத் தெரியும்னு நீனைத்துக் கொண்டிருக்கிற மாமா!''என்று கூறியபடித் தன் குழந் தையை வாரி எடுத்துக் கொண்டாள் சுநீதா.

''ஏம்மா அழறே?'' என்று வினவிய குழந்தை லதா தன் தாயின் கண்களிலிருந்து வழிந்து கொண் டிருந்த கண்ணீர் வெள்ளத்தைத் தனது பிஞ்சுக் கரத் தாள் துடைத்தாள்.

''அழவில்லே லதா! நான் அழவில்லே நான் அழவேகூடாதாம். சந்தோஷமாக இருக்கவேண்டு மாம். அப்போதுதான் உன் மாமா நிம்மதியாக இருப் பாராம்'' என்ருள் சுநீதா குழந்தை லதாவிடம்.

''சுநீதா!'' சுநீதாவின் கணவர் வேணுகோ பாலன் தான் அழைத்தார்.

''அவர்கள் தான் போய்விட்டார்களே! யாருடன் பேசிக் கொண்டிருக்கிறய்...?''

''குழந்தைதான் ஏதாதோ கேட்டாள். பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்'' என்று சொல்லிக் கொண்டே கணவரைநோக்கி நடந்துவந்தாள் சுநீதா.

''அவர்கள் யார் சுநீதா? உனக்கு என்ன உறவு? என்னுடன் அவர்கள் அதிகம் பேசவேயில்லேயே...?'' மணிவியின் பக்கமாகத் திரும்பிக் கேட்டார் வேணு கோபாலன்.

''நான் தான் அவர்களே உங்களுடன் அதிகம் பேசவிடவில்லே.''

''ஏன் சுநீதா ? வந்தது...?''

''கிரதரனும் அவருடைய நண்பரும்.''

''என்ன, உண்மையாகவா ?''

''ஆமாம்.''

''நீயேன் இதை அப்போதே சொல்லவில்லே என்னிடம் ?''

''சந்தர்ப்பம் என்னேச் சொல்லமுடியாமல் தடுத்து விட்டது. என்னே மன்னித்துவிடுங்கள். கிரதரன் நாம் நினைத்ததுபோல் கெட்டவரல்ல. ஒரு காலே இறந்து கட்டையின் உதவியால் நடந்து கொண்டிருப் பவர்...''

''சுநீதா!''

''ஆம். அவர் எனக்கு அப்படியொரு கற்பனைக் கடிதத்தைத்தான் எழுதியிருக்கிறர். தன் எண்ணம் ஈடேறியிருப்பதைக் கண்டுபோகவே இப் போது இங்கே வந்து சென்றிருக்கிறர். ஐந்தாறு வருஷங் களுக்கு முன்பு நீங்கள் பார்வையுடன் இருக்கையில் எடுத்துப் புகைப்படத்தைக் காட்டி, 'இவர்தான் என் கணவர்' என்று கூறினேன். அவரும் அதை நிஜமென்று நம்பிக்கொண்டு போய்விட்டார். பாவம், நிம்மதி யாக இருக்கட்டும்...''

'ம்...' என்று பெருமூச்சுவிட்டார் வேணுகோ பாலன்.

ஆம். சுநீதா கூறியது உண்மைதான். கிரதரன் நிம்மதியாகத்தான் சென்ருன். இனிமேல் அவன் நிம்மதியாகவுமே இருப்பான். ஆனல் சுநீதா?...

பரதேசி எடுத்த படம்

எஸ். டி. சுந்தரம்

ஆம், 'நாகலோகக் கும்பெனி' என்பது நகரத்தில் பிரபலமான ஒரு படக் கும்பெனி. நல்லதை மறந்துவிட்ட பூலோக மக்களுக்கு நாகலோகம் என்ற படத்தை எடுத்து அதன்மூலம் நாகலோக நாகரிகத்தைப் பூமியிலே நிலைநாட்டுவதற்காகவே தான் அவதரமெடுத்தாக எண்ணிப் படமெடுக்க வந்த பிரம்மதேவப் பரதேசி என்பவரைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். தெரியாதவர்கள் இருந்தால் அவர்கள் முன்ஜன்மத்தில் செய்த பாவ மிகுதியால் பகுத்தறிவை இழந்தவர்கள் என்பதுதான் நமது கருத்து. உலகத்தில் உள்ள சினிமா நட்சத்திரங்களின் (இந்த இடத்தில நட்சத்திரம் என்ற வார்த்தை பெண்களை மட்டும்தான் குறிக்கும். ஆண்களேஞர்கள் நட்சத்திரங்கள் அல்ல. ஆண்கள் எல்லாம் கிரகங்கள் என்பது உயர்திரு பரதேசியின் அசைக்காத துணிவு) நடிகைகளின் அகராதி ஒன்று உலகத்தில் மனித உருவத்தில் தோன்றியிருக்குமானால், அது நமது பிரம்ம தேவப் பரதேசிதான் என்பதை நீங்கள் எக்காரணங் கொண்டும் மறந்துவிடக் கூடாது. இதை நீங்கள் மறந்துவிட்டால், அது நீங்கள் ஜனிமேல் செய்யப் போகும் பாவங்களின் முன்விளைப்பலன்தான் என்பதுவும் மேற்படி பரதேசியின் அபிப்பிராயம். ஆண் நடிகர்களைப் பற்றி அவரைக் கேட்டால், அவருக்கு வரும் கோபத்தில் அவருடைய ஒட்டு மீசை சிதறி விழுந்துவிடும். உயர்திரு பரதேசியின் பரந்த நோக்கத்துக்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டை மட்டும் உங்களுக்கு எடுத்துக் கூறி பரதேசியின் பராக்கிரமத்தை அறிமுகம் செய்துவிடுகிறேன்; அதன் பிறகும் நீங்கள் புரிந்துகொள்ள வில்லையானால் இந்த உலகம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி என்று புலம்பும் வெங்காயருனியின் பழமொழியை ஆதரிக்கிறீர்கள் என்ற அர்த்தம்.

எங்கெங்கே கலையைப் பற்றிய கூச்சல் எழுகிறதோ அங்கெல்லாம் முன் வரிசையில் அமர்ந்திருப்பார் பரதேசி. நாட்டில் எத்தனை கோடி கட்சிகள் உண்டோ அத்தனை கோடி கட்சிகளிலும் நமது பரதேசிக்கு அக்கறையுண்டு; அனுதாபம் உண்டு. ஆம்ந்த பற்றும் உண்டு.

ஆயிரம் ஆயிரம் அபிப்பிராய பேதங்களையும் தமது அறிவின் இருட்டறையில் வைத்துச் சமரசகீதம் பாடக்கூடிய திறமைவாய்ந்தவர் என்பது அவருடைய அபிப்பிராயம். கட்டுப்பாடற்ற கலை மாடுகள் மேயும் சுற்பனை மத்தையைக் கட்டி மேய்க்கும் திறமையில் தமக்கு நிகரான ஓடையன் தாமே தான் என்னும் தன்னம்பிக்கையுள்ளவர். அவர் ஒரு புரட்சி செய்ய எண்ணித்தான் 'நாகலோகம்' என்னும் படத்தை ஆரம்பித்திருக்கிறார். அவரது கும்பெனிப் பெயர் நாக்குப்பூச்சி அண்டு கோ என்பது. கீரிப்பிள்ளை அண்டு கம்பெனி இதற்கு விரியோக உரிமையாளர். அவருக்கு ஏன் இப்படி, நாகம், நாக்குப்பூச்சி கீரிப்பிள்ளை என்ற விஷ ஜந்துக்களின் மேல் பிரியம் வந்தது எனறு கேட்டுவிடாதீர்கள். அவருக்கு இந்தப் பெயர்களில்தான் அதிர்ஷ்டம் என்று எவனோ ஒரு ஜோசியக்காரன் சொல்லிவிட்டான்.

அவரிடம் வேலை செய்பவர்கள் எல்லோருமே நங்கையர்கள் ஆனதால் 'நங்கை வனம்' என்பது பங்களாவின் பெயர். இப்படியான தனிச் சிறப்புக்கள் வாய்ந்த நங்கைவனப் பங்களாவில் 'நாகலோகம்' படமெடுக்கும் 'நாக்குப் பூச்சி அண்டு கோ'வுக்கு வந்து சேர்ந்தேன். வாசற்படியில் வாளேந்தி நிற்கவில்லே அந்தக் காவல்காரி; அதற்குப் பதிலாக விழிவேல் கொண்டு வீரமுடன் நின்றுள் ஒரு வீராங்கனே! ஒருந்தி சந்தன மேந்தி வரவேற்றாள்; மற்றொருத்தி கனகாம்பரத்தைக் கண்ணிலே தூவினாள்; கதம்பத்தூளைக் காதிலே போட்டாள். இன்னொருவனிதை அதோ ஹிஸ்டீரியா வந்ததுபோல் உறுமி நிற்கும் ஆறு அல்சேஷியன் நாய்கள்! அந்த நாய்கள்கூட பெண்பால்தானென்று காவல் மடந்தை சொல்ல அறிந்துகொண்டேன். ஆகா பெண்ணினத்தைப் பெருமை செய்யும் கலியில், பரதேசிக்கு நிகர் பரதேசியேதான்.

'நாகலோக'த்தின் உள்ளே நுழைந்தேன். வெளி உலகம் மறைந்தது; உள்ளுணர்வு மாறிவிட்டது. புதியதோர் எண்ணம். இன்பச் சிறகடித்து எங்கோ பறப்பது போன்ற உணர்ச்சி. கலே விமானத்திலேறிக் கவிதை வானில் செல்லுத்தாக சொர்க்கத்துக்குப் போவது போன்ற சொல்லமுடியாத சுகம். உள்ளம் சிலிர்த்தது. உடல் அன்னச் சிறகு போல் மென்மையாகிவிட்டது. ஆ! கண்ணுக்கெட்டியவரை கன்னிக் கலல்! அதன் நடுவே கங்கைக் கப்பல்! தூரத்தே கற்பனைத் தீவு. மனதிலே மன்மதச் சோகே. கேட்பதோ காதல் கீதம். காண்பதோ இன்ப வேதம். இனிமை. இனிமை. இனி

மையின் இந்து மகா சமுத்திரம்! அழகு. அழகு. அழகின் அட்லாண்டிக்பெருங்கடல்! பணம். பணம்! பணத்தின் பளிபிக் பேரழி இதுதான்! காட்சி ஒன்றுக்குக் கோடி. கவி பிறக்கும்! கண்ணிமை வீச்சு ஒன்றுக்குக் கவிதை ஜன்னி பிறக்கும். அவ் வளவும் பெண்ணரசிகள்! ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ரவிவர்மாவின் ஓவியம். ஆமாம்! ஒரே மாதிரியான பெண்ணுக்குப் பல வேஷம் போட்டது போன்ற மாயம்! நாகத்தின் கருமை கொண்ட கூந்தலே அவர்கள் நண்டு விரல்களால் கொத்திக் கோதிச் சிக்கெடுத்துக் கொண்டே, நடுவில் கிடந்த பரந்த கூலக் கூடத்துக்கு வந்து தேனீக்கள் போல் குறுகுறுப்பாக நாகக் கன்னிகைகள்போல், குருக்கத்திக் கொடிகள் என ஒருவரை யொருவர் கொஞ்சிகுலவிக் குதூகலமாக அமர்ந்தனர்!

பரதேசி வந்தார். பெருத்ததொரு நாற்காலியில் அமர்ந்தார். படத்துக்குப் பணம் தரும் பைனான்சர் பலி பீடத்தில் புலிப்பால் அமர்ந்தார். அறுபதைத்தாண்டிவிட்ட இந்த இரண்டு பேர்வழிகளும், படமெடுக்கவந்தது எதற்காக என்பதையும், அவர்கள் இந்த நடிகைவனப்பங்களாவில் நீச்சல் குளத்தைக் கட்டி அதில் இந்த நீண்ட மீன்களே நீந்தவிடும் பெருமைகளைப்பற்றியும் நாட்டில் உள்ள கலை ஏடுகள்எல்லாம் லஞ்ச்பட்டங்களோடு விமரிசனங்களேச் செய்துவிட்டதால் இந்த சபலமகா புருஷர்களைப்பற்றி அதிகமாகச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லே என்று யோசித்த வண்ணமே நான் சற்றுதூரத்தில் எனக்களிக்கப் பட்ட நிருபர் நாற்காலியில் அமர்ந்தேன். இப் போது நடக்கப் போவதென்ன வென்றால் 'நாக லோகம்' என்னும் சினிமாக் கதைக்குரிய கடைசிக் கட்ட முடிவுகளே அன்று நிர்ணயம் செய்யத்தான். அந்த வட்டமேஜைக் கூட்டம்! ஆமாம்! நிர்வாகி பரதேசி. டைரக்டர் டேஞ்சர் குமாரி. கதைக் கரடி காளிதாஸி. கதாநாயக் கடுகுகாய்வல்லி. பிரதம வில்லி பீட்ரூட் ராணி! நகைச்சுவை அரசி நடபயங்கரி, சங்கீத டைரக்டரி முகரி தேவி! நடன பூகம்பி நஞ்சண்ட தேவி! அஸிஸ்டெண்டரி அலுவலகுமாரி! மானேஜரி மன்மத வைரி! சிகரட்ட சிங்காரி! பலரின் உடல் பங்காரு! ஒன்றுமே இல்லாத ஒங்காரிணி மற்றும் குருப் டான்ஸ் குருவிகள், கோரஸ் கோட்டான்கள், ஆர்ச் செஸ்ட்ரா கொக்குகள், டெக்னிக் திமிங்கிலங்கள். பக்கத் துணே பார்வதங்கள் எல்லோர் முன்னிலையிலும் எழுந்தது கதையின் விவரதம். கதையின் கலவித்தியை நிர்ணயிக்கக் கூடியிருந்த மாஜிக் கன்னிகள் 'முன்னுள் பெண்கள்' கண்ணதாசரு லுவன் அராபியக் குதிரைப் பாய்ச்சலுடன். ஆப்ரிகா நாட்டு பெண்புலிகள் போல், கங்கோ நாட்டுக் காட்டானில்போல் துவக்கினர், விவாதத்தை. ஆஸ்டிரேலிய நாட்டுக் கங்காருகள் போல் ஆரம்பித்தனர் நடனத்தை. இந்தியாவின் மயில்களேப் போல் எவனோயுமே காணும். எல்லாமே இரவல்!

டைரக்டர் டேஞ்சர் குமாரி பேசுவாள். 'பெண்சிங்கங்களே, புதுமை, புதுமை, புதுமையின் அருமை. நாகலோகத்தை உருவாக்க நாங்கள் சேர்த்தது நானிலப் புதுமை! நமது படம் வெளி வந்தபின் நம் நாட்டுப் பெண்கள் எல்லாம் நாகங்கள் போலவே சீறிப் பாய்ந்து நாகரிக வேட்டையாடவில்லையானல், டேஞ்சர் குமாரியாகிய நான் ஹிட்லர் மீசை வைத்துக்கொண்டு, வேண்டுமானால் விரமன்னனின் கத்தை மீசை வைத்துக்கொண்டு தெருவில் நடப்பதாகச் சபதம் செய்து விட்டேன்.'

ஒரு குரல்:— ஆ! பயங்கரச் சபதம்! பாஞ்சாலி சபதத்தைவிட பண்புநிறை சபதம்.

ஒருத்தி:— நாகலோகம் வாழ்க! நமது நிர்வாகி பரதேசி வாழ்க! இப்போது கனல்கக்கும் கவியரசி — தமிழ்ப் புனலின் தவறே — கற்பனைக் கடவின் சுறுமீன் — கதைக் கரடி காளிதாஸினி கதையை விளக்குவார். கேளுங்கள்; உங்கள் தலையிலே ஏதாவது தோன்றினுல் சொல்லுங்கள்; மனம்விட்டுப் பேசுங்கள்!

அடுத்தது கதைக்கரடி காளிதாஸினி பேசுவாள்: என்னரும் பெண்ணரசிகளே! இதுவரை ஆண்கள் தான் கதைத்துக்கொண்டிருந்தார்கள். இன்று பெண்மை துணிந்துவிட்டது கதை தீட்ட. ஆம், கத்தி தீட்டும் கை கதையும் தீட்டும். கத்தரிக்காய் மட்டுத் தான் வெட்டுமா நம் கை? கலியுலகையும் வெட்டும்! கதை! கதையென்றல் என்ன? பழமைக்கு நாம் கொடுக்கும் புதிய உதையாக இருக்கவேண்டும்.

வசனம்! தாழ்ந்த ஆண்களே எண்ணி நாம் படும் விசனமே வசனமெனப்படும். நாம் போடும் கூச்சல் நாலு கண்டத்துக்கும் கேட்கவேண்டும்!

பாடல்! காதலுற்ற ரஸிகர் களிநடம் புரிய நாம் கொள்ளும் ஊடலுக்கே பாடல் என்று பெயர். நமது பாடலேக் கேட்பவன் ஒப்பாரி வைத்துத் தேம்பித் தேம்பி அழவேண்டும்—சுத்த முகரியில சுருகாட்டுத் தத்துவத்தைச் சுட்டுத் தருவதாக இருக்கவேண்டும்.

ஆடல்! காதல் பெண்டுகளின் பள்ளியறை மாடல் தான் ஆடல் எனப்படும். அறுபது வயது கிழவனுக்கும் ஆடி மேகம் போன்று உணர்ச்சி கூடி ஆட வேணும். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு ஸ்டுடியோ. ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு படக்கம்பெனி. இப்படியாகப் பெருகும்படியான சூழ்நிலேயை நமது ஆட்டம் நாட்டில் உண்டாக்கவேணும்.

டைரக்ஷன்! கண்ணகியின் கோழைக் கற்புக்கு நாம் தரும் கர்ரெக்ஷன்தான் டைரக்ஷன். இருபது முழம் காஞ்சிபுரப் புடவையைக் கட்டிக்கொண்டு தோன்றும் பத்தாம் பசலிகளே பனியன் அழகிகளாகப் பழக்கி, தமிழ்ப்படத்தில் புரட்சி செய்வதே புதிய டைரக்ஷன்.

சங்கீதம்! சகலவித கலாசாரத்திற்கும் எதிராக நாம் ஊதும் சங்கநாதம்.

உடை ! உடலே வாட்டும் துணித் தண்டனைக்கு நாம் விதிக்கும் தடை. உடையும் இடையும் உண்டோ இல்லையோ என்று ரசிகர்கள் ஆராய்ச்சி செய்யும்படி இருக்கவேண்டும். வெங்காய நாட்டு விவேகக் கலை ஞர்களாகிய நாம் வெங்காயச் சருகையிட மெல்லிய ஆடை அணியவேண்டும். நம்மைப் பார்த்தால் உயிர ற்ற சிலைகளுக்குக்கூட வெட்கம் வரவேண்டும். அப்படி செக்ஸ் அப்பீலே உடம்பில் பிக்ஸ் பண்ண வேணும். எவ்வளவுக்கெவ்வளவு துணி குறைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பணம் பிறைகிறது என்பதுதான் நமதரும் பரதேசியார் கண்டுபிடித்த படவுலகின் தத்துவம் !

நடிப்பு ; காசுக்கும் ஆசைக்கும் இடையிலுள்ள இதயத் துடிப்பு.

இத்தனைப் புதிய அம்சங்களோடு நமது நாக லோகம் ஸ்டுடியோ வாசலுக்குள் நுழையப் போகிறது புரட்சி ! புரட்சி ! மற்றவர்க்கோர் மருட்சி ! கதையின் முதல் காட்சியைக் கவனியுங்கள் ! கவர்ச்சியின் சிகரத் திலே அதைக் காட்டப் போகிறோம் ! கண்டவர்கள் உடனே தலே கவிழ்ந்துவிடும் கட்டம் ! இந்தக் காட்சி கண்டவன் விங்கார்கூட காதலன் வேஷத் தோடு கதாநாயகனு மாறுவது நிச்சயம் அது ! எனன கவனிக்க. காயகல்ப காமவல்லிதேவி கதாநாயகியாக வருகிறாள். காட்டு யானை மாதிரி ! மேடையின் மூலை— ஆடை அமெரிக்க முறை ! அப்சரஸ் பாணி ! ஹாவாய் ஸ்டைல். தாடையைத் தாவிப்பிடிக்கிறான் ஓடிவந்த கதாநாயகன் ! தேடிவந்த திகைப்பு ! நாடிவந்த நடுக் கம் எல்லாம் ஒன்றுசேர முழங்குகிறான் நாயகன்.

கதாநாயகி கடுக்காய் குமாரி குறுக்கிட்டுப் பேசு கிறாள் : தவறு. அந்த இடத்தில் கதாநாயகன் முழங்கக் கூடாது ; புரட்சி மழை கொட்ட வேண்டும் ! அடுக் குத் தொடரை முடுக்க வேண்டும் ! மோனேயிடி பொழிய வேண்டும் !... அறிவின் சூடு அனுமார்போல் ஆழ்கடலையும் தாவவேண்டும் ! என்று சொல்லிக் கொண்டே, ஆவேசம் வந்த குரங்குபோல் தாவிக் குதித்த கடுக்காய் குமாரி, ஒரு நோட்டைக் கையில் வாங்கி உணர்ச்சி கொப்பளிக்க உரத்துப் படித்து நடக்க ஆரம்பித்தாள். கடுக்காய் குமாரி தொடர்ந்து கதறுகிறாள் கதையின் வசனத்தை !

வசனம் (அவன்) : ஆ ! அன்பே ! காதலி ! கதா நாயகி ! எங்கே உன் ஆடை ?...

அவள் : ஆ ! கதாநாயகா ! எங்கே உன் கண்கள் !

அவள் : கண்ணுக்குத் தெரியாத உடையேனடி கண்ணே !

அவள் : கார்றுக்குத் தடைவிதிக்கக் கூடாது கண்ணு ! தென்றலோடும் தேனோடும் பிறந்தவள் நான் ! கேவலம் பட்டோடும், பருப்போடும் உறவு கொள்ளேன்—. சுகமுனிவரின் பரம்பரையில் வந்த சுந்தரியடா நான். இன்று சினிமா முனிவர்களே பின் பற்றுறேன்

உடனே அவன் : ஆ ! விடுதலே வீரியே ! சீச்சிருத் தச் சிங்கமே ! சுதந்திரச் சுண்டெலியே ! பழமைக்குப் பாம்பே ! புதுமைக்குப் பூவே ! பண்பின் படுக்கையே ! படுக்கையின் பஞ்சே ! எதுகைக்குத் துணை யே ! மோனைக்கு முற்றுப் புள்ளியே ! அடுக்குத் தொடரே ! நளினமிக்க நடைதமே ! நாடகமே ! நான் கண்ட இலக்கியமே ! அகப் பொருளே ! அகப்பொருளின் ஆழ முள்ள பகுத்தறிவே ! நிரந்தரியே ! நீயன்றே நிலவுல கின் நலமங்கை ! என்கிறான்.

" தென்றல் ! தேன்குழைத்த வான் ! தழை நடுங் கும் மழை ! கடவுளின் தூதாக வருகிறதா ?'' என்கிறாள் கதாநாயகி.

கடவுள் என்று அவள் சொன்னதும் கதாநாய கன் துடி துடித்துக் கோபித்துத் தயாராடன் பல்லைக் கடித்து, 'ஆ ! கொண்மணி ! போனது என் புகழெல் லாம். இடித்தது என் இலட்சியம். தொலைந்தது என் துணிச்சல். அழிந்தது என் அறிவு. கடவுள் என்கிறாய். அக்கணமே கற்பை இழந்தாய் ! கண்ணகி பிறந்த மண்ணகத்திலா கடவுள் ! உண்மைப் பத்தினிக்கு கண வன்தானே கடவுள் !

அவள் :— ஆமாமடா முட்டாளே : பத்தினிக்குப் பதியே கடவுள் ! நீ இன்னும் பதிபக்தவில்லே. நானும் பத்தினி அல்ல ! கேவலம் சினிமாவிலே தினக்கூலிக்கு நடிக்கும் ஆக்டிங் புருஷனே அலறுதே வீணுய் !

அவன் :—! ஆ. ஆ. கடவுளே நம்பும் உன்மீது சந் தேகப்படுகிறேன். தெரிந்தது. கடவுள் என் ற பெயருடைய எவனையோ எனக்குமுன் நீ காதல் செய்துள்ளாய் போலும் ! அல்லது காதலனேக் காட்டிக் கொடுக்க மனம் வராமல்கடவுள் என்ற காரணப் பெயர் கூறி காதலனே நினைக்கின் றாய். காதலுக்கு நான், கருத்துக்கு மற்றவனு ? சே, கருநாகமே. கடுகிப் போ. கர்நாடகக் கந்தல் நீ. கனவுலகக் காளி நான். பொருந்தாது போ. அமையாது, ஆற்றில் விழு. அனுபவித்தேனே என் கிறாய் ? அடைந்தவரை வெற்றி. அனுபவித்தவரை சுகம். அதுவே பகுத்தறிவின் பாடமடி பாடம் ! போதாய். போ.''

பிரதம வில்லி — மிஸ் பிட்ரூட் குமாரி பிறிட்டெழும் ஆவேசத்துடன் நோட்டைப் பிடுங்கிக் கொண்டு, ''என்ன, வில்லன் இதுவரையில் வரவேயில்லே. ஆகா. வில்லனுக்குத்தான் ரசிகரை இழுக்கும் வல்லமை உண்டு. வில்லன் முதல் காட்சியிலேயே வரவேண் டும். மோத வேண்டும் மற்றவரை. சாட வேண்டும் செல்லம்மை. பாட வேண்டும் வடவர் மெட்டு. பேச வேண்டும் தமிழர் பேச்சு. பகுத்தறிவுப் பாசறையின்

பலமிக்க சுட்டிகளின் பதமிக்க கூர்மைகளைத் தன் பேச்சொலியால் போர்வாளாய்த் தாக்க வேண்டும்— தரைதட்ட, வான்முட்ட, தெறிகெட்ட குதிரையென தேள்கொடுக்கு மீசை துடிதுடிக்க, கிராப்புத் தலைமுடி காற்றில் பறபறக்கத் தூள் கிளம்ப வேண்டும் — தர்க்கத் தூள் கிளம்பவேண்டும்.- வாதத் தமிழ் துடிக்க வேண்டும்!''

நகைச்சுவையரசி நடபயங்காரிக்குக் கோபம் வந்துவிடுகிறது. நடுக்கத்தோடு பேசுவாள்: கடமுட இடியதிர படபடவெனப் பேசும் திடமுள கலீமணிகாள். கொட்டகைக்கு டிக்கட் வாங்கி வரும் மக்கள் இப்பாத்திரக்கடைச் சண்டை போன்ற பேச்சுக்காகவா வருகிறார்கள்? இல்லே. சிரிப்பில்லாத உங்கள் நாகலோகம், சர்க்கரை யில்லாத பாயாஸம், பனியில்லாத குளிர், பந்தில் லாத ஆட்டம், பெண்ணில்லாத இரவு, பல்லில் லாத வாய், அடியில்லாத அரசியல், கொடியில் லாத கம்பம், தலையில்லாத முண்டம், பணமில் லாத பெட்டி, படிப்பில்லா ஜனத்தொகை, செல விவ்லாத தேர்தல்! சிரிக்காத கதையும், வறுக்காத வத்தலும், உருக்காத வெண்ணீயும், உடைக் காத தேங்காயும், உலராத அப்பளமும் கெட்டுப் போகும். நகைச்சுவை இல்லாவிடில் நாகலோ கம் நண்டுலோகம் ஆகிவிடும்! நாக்கில்லாதவன் நாவரசன் ஆகமுடியுமா? ஆகவே, எச்சரிக்கை. சிரிக்கத் தெரியாதவர்களே, சிந்தனைக் கோழி களே, சீர்திருத்தக்காரிகளே, சிரிக்காத நீங்கள் உரிக்காத தேங்காயின் உள்ளிருக்கும் வெறுங் குடுக்கைகள்! ஹாஸ்யமற்ற நீங்கள், அரணே தின்டிய பழம் போன்றவர்கள். மகிழ்ச்சியற்ற நீங்கள மஞ்சள் அற்ற மங்கைகள்? ஓடுங்கள். ஓடுங்கள் வெளியே ஓடுங்கள்.''

இப்படி நகைச்சுவையரசி நடுக்கமுடன் பேசியவுடன், சிந்தனைக் கூட்டம் ஒரே சந்தைக் கூட்டமாக — சண்டை கூட்டமாக மாறியது! எண்ணமுடியாதபடி எல்லா கூச்சல்களும் ஒரே நேரத்தில் எழுந்தன! அதைத் தொடர்ந்து பேச்சு இடி.....அதற்குப் பின் பேப்பர் மழை..... அதைத் தொடர்ந்து எதிர்ப்புப் புயல்...நாற்காலி கள் எல்லாம் புயலில் மரங்கள் போல் பங்களா எங்கும் பறந்தன. அதில் ஒரு நாற்காலி பரதேசி யின் தலையில் விழ, அவர் என்மேல் விழ, நான் வெளில் வந்து விழுந்தேன்.

மூர்ச்சை தெளிந்தேன். என்ன ஆச்சரியம். போலீஸ் லாரியிலே வேஷம் கலைந்த தோற்றத் துடன் மூப்பது இளம் வாலிபர்கள் ஏறிக்கொண் டிருந்தனர். பெண் கூட்டமான அந்த வேஷக் காரர்கள் போலீஸ் வந்ததும் ஆண் கூட்டமாக மாறிவிட்டார்கள். ஆம்! பரதேசியின் படத் தொழில் புரட்சியின் இரகசியம் இதுதான். நான் உள்ளே கண்ட பெண்கள் எல்லாம் வெறும் வேஷங்கள்.. ஆம்...பட்டப் பகல் வேஷங்கள். அதாவது இதற்குப் படமெடுத்து, சகலமும் பெண களே என்று விளம்பரப்படுத்தினால், நாகலோகத் துக்கு எண்ணிறைந்த பணத் தவகைகள் வந்து குவியுமே என்று பரதேசியாரின வியாபார தந்தி ரத்திற்கு இந்தப் போலீஸ் நடவடிக்கை முற்றுப் புள்ளி வைத்துவிட்டது. நாகலோகத்தை இனி நாம் காண்போமா? நாக்குப் பூச்சி அண்டு கோவின் விளம்பர போர்டைப் போலீசார் கிருப் பித் தருவார்களா? நங்கைவனம் பங்களாவில் கலீ பட்டபாடு இது. நாகலோகக் கம்பெனி இருந்த அந்த பங்களாவில் இனிமேல் யாராவது குடியேறு வார்களா? இந்தக் காட்சியை தூரத்திலிருந்து பரிதாபத்தோடு பார்த்தும் பார்க்காது போல் என்ஜின் புகைப்போக்கிலே சிகரெட் புகையோடு நின்றுகொண்டிருந்தார் படவுலகப் பிரமிமா மிஸ்டர் பரதேசியார். இதில் எதிலும் பாதிக்காத வர் போல ஒரு மானங்கெட்ட சிரிப்புடன் மைனர் நடைபோட்டார்.

''அய்யா பட்டணத்துப் பரதேசி அய்யா—
பட்டினி தாங்கலே—பைசா போடுங்க
பற்றுக்குறைங்க-பசிதீர்ந்ததும் படம்பாக்கணு
தர்மம் கொடுங்கய்யா [முங்க
தமிழ்ப்படம் பார்க்க தாராளமாகப் பிச்சை
கொடுங்கய்யா!''

என்று கையைநீட்டித் தன் திரைப்படப் பக்தி யைப் பரதேசியாரிடமே காட்டினான் ஒரு பிச்சைக் காரன்.

ஆகா! என்னே நம்மக்களின் ரஸிகத் தன்மை:—

''பிச்சைவாங்கி யுண்ணும் வாழ்க்கைபெற்று
[விட்டபோதிலும்
கச்சில்லாத திரைப்படங்கள் காசுதந்து
காணுவோம்''

என்று பிச்சை வாங்கும் அவன்கூட இச்சை கொள்ளும் ரசிகத்தன்மையே! நீ வாழ்க! நீ இருக் கும்வரை எங்கள் பெட்டி நிறைந்துகொண்டே இருக்கும் — எங்கள் இருட்டறையில் மகாலட்சுமி நாங்கள் ஆட்டுவித்தபடி நடனமாடிக்கொண்டே இருப்பாள். வாழ்க ரசனை! என்று வாய்விட்டு உலக ரசனையை ஒரேயடியாக வாழ்த்தினார் அந்தப் படமெடுக்கும பரதேசி. நமக்குமாத்திர மென்ன! நாமும் வாழ்த்திவிட்டுப் போவோம். வாழ்க ரசனை!

எடுப்புகள்

★

"மஹி"

'எழுத்தாளன்' சிறப்பு மலருக்குக் கதை கேட்டு வந்த ஆசிரியரின் கடிதம் மேஜையின்மேல் கிடந்தது. கதை எழுத உட்கார்ந்துகொண்டு சன்னத்தம் செய்து கொண்டேன்.

திருச்சிராப்பள்ளி நகரிலிருந்து மலரும் மலர் ஆன படியால் தீருச்சி மூமலே வைத்தே எழுதவேண்டும் என்னும் முனேப்பு. அண்மையில் போயிருந்த சமயம் திருவரங்கம் போகவேண்டியிருந்தது. அங்கே உபய நாச்சியார் போல கோபுரத்தின் இருமருங்கிலும் காணப்பட்ட விளம்பரத் தட்டி பற்றிய நினேப்பு. கதையின் மையக் கருத்து அதுவாக இருக்கவேண்டும் என்றும் திட்டம்.

எழுதத் தொடங்கினேன். கதையின் உருவெளியான அமைப்பு உள்ளே புகைந்துகொண்டிருந்தது. உத்தியும் எடுப்பும்தான் தயாராகவில்லே. எழுதிப் பார்ப்போம். எழுதும் ஓட்டத்தில் எல்லாம் சரியாக வந்துவிடும் என்ற பழக்க நியதி. 'பரபர'வென்று எழுதிக்கொண்டு போனேன்.

ஒரு பக்கம் வளர்ந்தது. படித்துப் பார்த்தேன். திருப்தியாகப் படவில்லே. அந்தத்தாளேக் கசக்கிப் போட்டுவிட்டு, மறுதாளில் எழுதினேன். அதைப்படித்துப் பார்க்கும் போதும் திருப்தியில்லே. இப்படியாகப் பலதாள்கள் கசங்கிக் குப்பை குவிந்தன. திரும்பிப் பார்த்தேன். ஒரு சிறு குவியல். அன்னேயால் புறக்கனிப்பட்ட குறைப்பிண்டங்களாகக் குவிந்திருந்தன. பரவமாக இந்தது. குடும்பக் கட்டுப்பாட்டினுல் கருகும் குறைப்பிண்டங்களாக எங்கேயும் ஆக்கிவிட்டாயே? எங்களில் எத்தனே உயர்ந்த ஆத்மாக்கள்" உருவாகமல் கருகி விட்டனரோ? என்பது போலக் குப்பை சொல்லியது.

என்னுள் ஒரு பொறி.., இவற்றுள் ஒன்று மஹாத்மாவாக ஏன் இருக்கக் கூடாது? "இத்தனே எடுப்புகளில் ஒரு சிறப்பான எடுப்பு ஏன் அமைந்திருக்கக் கூடாது?" அத்தனேயும் எடுத்துக் கசங்கிய நிக்கி, நீட்டி நிமிர்த்தி அடுக்கிக் கொண்டு பார்த்தேன்.

"அடே!...! என்று கத்திவிட்டேன்.

"என்ன இது? மூட் வந்து விட்டதோ" என்று சொல்லியபடி காப்பி கொண்டு வந்து வைத்தாள் என் மனேவி லட்சுமி.

"இதைப்படித்துப் பாரு" என்று அடுக்கியவற்றைக் கொடுத்தேன். அவள் உரக்கப் படித்தாள். ஏன்? நீங்களும்தான் இப்போது படிக்கிறீர்கள்.

எடுப்பு-1

சந்திரபுஷ்கரணி

உபய காவேரி நதிதீரத்தில் பூலோக வைகுண்டம் என்ற பெயர் விளங்கா நின்ற ஸ்ரீரங்கம் என்னும் திவ்வியதேஷத்திரத்தில் ஸ்ரீரங்கநாதன் சயனித்திருக்கிறன். அனேத்தும் அறிந்தபடியே துயிலும் அறிதுயில் ஆற்றுள் அழகன், ஸ்ரீதேவி, பூதேவி சமேதனுக நின்று அருள் பாலிப்பதைக் கண்டு பயனுற ஆஸேது ஹிமாசல பர்யந்தம் உள்ள ஆஸ்திக பக்த கோடிகள் படையெடுக்கிறர்கள். ஸ்டேஷனில் என்றும் திருவிழாதான். 'எங்கும் சுற்றி ரங்கரைச் சேவி' என்ற பழமொழிக்கிணங்க: ஊரே கோவிலாய், கோவிலே ஊராய் இருக்கும் ஏழுமதில் சூழ்ந்த எழில் நகரைக் காணக்கண்கோடி வேண்டும்.

மற்றும் இந்த க்ஷேத்திரத்திலுள்ள சந்திரபுஷ்கரணி என்னும் திவ்விய தீர்த்தத்தில் ஸகல பாபங்களும் கரைகின்றன என்பது நம்பிக்கை. ஆகவே பாபிகளாகவே பிறந்தவர்கள் ஸ்ரீரங்கம்வந்துசந்திரபுஷ்கரணியில் மூழ்கித் தம் பாபம் தொலேந்து சுமையிறங்கப் பெற்றவர்களாய்த் திரும்பும் அதிசயம் அன்றிலிருந்து இன்றுவரை நிகழ்ந்துகொண்டு வருகிறது.

அதே க்ஷேத்திரத்தின் இரண்டாவது மதிலே அடுத்துள்ள ஒற்றைத் தெருவிலும் உலகமஹா பாவங்கள் உருவாக்கொண்டிருக்கின்றன என்பது வியந்தையிலும் வியந்தை. ஆமாம்! சந்தேகமில்லாமல் இன்னும் பாவபாக்டரிகள் இருக்கின்றனவாம். போர்டு போட்டுக் காட்டியுள்ளார்கள் சீர்திருத்தக் கமிட்டியார். இவர்கள் நவத்தைச் சீர்திருத்துகிறர்களா? அல்லது

தவறு இங்குதான் இருக்கிறது என்று விளம்பரம் செய்து தவறை வளர்க்கிறார்களா என்று தெரியாத நிலே. அந்தப் பதிலியில் ஒரு வீட்டில்தான கபாலியும் அவன் வளர்க்கும் கிளியும் வசித்தார்கள். கிளியை அவன் வளர்த்தானு? கிளியால் அவன் வளர்ந்தானு? இரண்டும்தான்

எடுப்பு-2

ஐந்து குழி மூன்று வாசல்

அழகுக்கு ஓர் உருவம். அமைப்புக்கு வளர்பருவம். இயறகையும் செயற்கைக்கு எதிரொலித்து நின்றது. கண்டவர் கிளர்ந்தனர். நடந்தால் நாலு பேர் பார்த்தனர். நின்றால் அதில் ஒரு அழகு. பேசினுல் ஒரு கிறக்கம். ஆஹா! பூலோக சுவர்க்கத்தில் இது ஒரு புது சொர்க்கம். ஆம்! கிளி என்று செல்லமாக அழைக்கப்பட்ட கிள்ளிமொழிதான் அவள். வனப்பின் வாசிை; வாவிபச் சுவர்க்கம். அழகுமல்; அசையும் ஓவியம்; அலங்காரவல்லி; ஆசைத தூண்டுகோல்; இன்ப ஊற்று; உதயதாரகை; ஊரின் விடிவெள்ளி; எடுப்பின் எழியாள்; எதிராடு மொழியாள். கிள்ளி மொழியாள். திருவரங்கத் திருப்பதியில் வாழ்ந்தாள்; வாழ்வித்தாள்.

அவனேக் கண்டு மயங்கினர் பலர். பைத்திய மாயினர் சிலர். அவளின் பாதுகாவலுக்குர்ய கபாலியின் கிருதாவுக்கும் கைலிக்கும் பயந்து நல்லவரா மீனர் பலர். கபாலியைக் காகைபை பிடிக்க வலே விரிததோர் சிலர். மொத்தத்தில் ஐந்து குழி மூன்று வாசலில் என்ன தத்துவம என்று புரியாமல குழிகளில் விரலகளே வைத்துப பாரத்துவிட்டுப் போகும் சமபிரதாயம் பேல: அந்தத் தெருவின் வழக்கத்தை யொட்டியும். அந்தத் தெருவுக்கு வரும் வழியில் உளள எச்சரிக்கை போர்டுகளேக் கண்டும் மயங்கினர் அனேவரும் கிள்ளி மொழியும் விளம்பரச் சரக்குதான என்று.

ஆமாம் கிள்ளி மொழி வாழ்ந்த தெருவில் சரகுகள் இருந்தன. அவற்றை நீங்க முடியாமல் தான் கொள்வாரைப் பிடிக்கும் வலேபோலக் கூட்டி வைக்கும விளம்பரம் கூட்டியது. அந்தத் தெருவில் கிள்ளி மொழி வாழ்ந்தாள். பலேயின் கீழ் பால்குடித்தனர். கிள்ளி மொழியும் சரக்குதானு? இதுவே அக்மரின் கேள்வியுமாகி நின்றது.

ஃ ஃ ஃ

எடுப்பு—3

ரங்க விலாஸம்

"திஸ் ஈஸ் ரங்கவிலாஸ்ஸார். யூ பர்ச்சேஸ் திங்க்ஸ் ஸார்" என்றன வழிகாட்டி வாசு.

"வாட் ஏ லவ்லி சார்ம்" உடன்வந்த அமெரிக்கனின் வியப்பு வழிகாட்டிக்குப் புரியவில்லே.

"வாட் ஸார்... வாட் ஸார்" என்று தொடர்ந்தான்.

அறைகுறை ஆங்கிலம் கற்றிருந்த வாசு! ஸ்ரீரங்கமும் ஆங்கிலேயருக்கு வழி காட்டிப் பிழைத்து வந்தான். ஒவ்வொருவரும ஸ்ரீரங்கத்தைக் கண்டு வியந்தார்கள். ரங்க விலாஸ்தையும் அப்படி வாங்கி விடுவாரகள். அதன் காரணமாக வாஸுவுக்குக் கடைக்காரர்கள் கமிஷனும் தர இரட்டை வருமபடி வருவது உண்டு. ஆனுல் 'பீட்டில்ஸ்' போன்ற தோற்றத்துடன் வந்த இந்த இளஞன் ஒவ்வொன்றையும் தூவித்துருவிக் கேட்டது வாசுவுக்கு வியப்பாகிவிட்டது.

ரங்கவிலாஸம் தான் வழிகாட்டலின் கடைநிலே அடுத்தது வெளியேறல். இந்த இடத்தில்தான் அமெரிக்கன் "வாட் ஏ லவ்லி சார்ம்" என்று வியந்தது; ரங்கவிலாஸத்து விற்பனேப் பண்டங்களேயா? படங்களேயா? அங்கிருந்த தூண் சிலேகளேயா? அல்லது... அவனேக் கடந்து சென்ற ஒரு சிலே... ஆம் கிள்ளிமொழியைப் பார்த்ததான் அப் படிச் சொன்னது?

சற்று நேரம் அமெரிக்கனேப் புரிந்து கொள்ளாது வாசு திணறினுன். சற்றைக்கெல்லாம் கிள்ளி மொழியையே, இலக்குவைத்து அமெரிக்கன் தொடர்வதைக் கண்டு தலேயை அசைத்துவிட்டான் வாசு.

'இது என்ன பிரமாதம்" என்ற பாவம் வாசுவின் தலே அசைக்கலில் தெரிந்தது: கோவிலுக்கு வழிகாட்டியதுடன் அடைவளஞ்சனுக்கும் குருக்குத் தெருவுக்கும் கூட வழிகாட்டத் தயாராகிவிட்டான் வாசு. பீட்டில்ஸ் அமெரிக்கன் பின் தொடர்ந்தான்.

இருட்டும் வெளிச்சமும் ஆட்சிக்குப் போராடிய நேரம். ரங்கவிலாசத்தில் ஜ்வலப்பு இங்கே இல்லே: ஆனுல் முன்னே செல்லும் சுடர்க் கொடியான கிள்ளியின் பின்னலுக ரஸிதபடியே பீட்டில்ஸ் அமெரிக்கன் பின் தொடர்ந்தான். ரங்கபுரியின் அழகையும், ரங்கவிலாசத்தின் மாட்சியையும் கண்ட வெளிநாட்டானுக்குஸ்ரீரங்கத்தின் அவலமும், காணவேண்டிய சபலம ஏற்படவிட்டது. வாசு நற்பயதால நஷ்டம்தான் பயன். ஊக்கினுல் கொள்ளாலாம். நாட்டின் மதிப்பு பற்றி அவனுக்கு என்ன? சீர்திருத்தவாதி விளம்பர போர்டு போட்டு வழிகாட்டினுன். வாஸு அமைதியுடன் சென்று வழிகாட்டினுன். இவனும் ஒரு வகையில் சீர்திருத்தம் செய்தவன்தான்.

ஃ ஃ ஃ

எடுப்பு-4

வெள்ளைக்கோபுர விளக்கு

அண்ணே: அண்ணே ..." என்று மூன்று குரல்கள் கூப்பிட்ட பினனர்தான் கபாலி வெளியே வந்தான். கபாலியைப் பார்த்தாலே போதும்: பார்ப்பவருக்கு அச்சந்தான். அதிலும் வழிகாட்டி வாஸு

வந்து முறைகேட்டு "அண்ணே" என்று அழைத்த வுடன் "யாரடாவன்" என்ற பாவம் தொனிக்க கிருதாமீசையுடன் கைலிக் கட்டை சீர் செய்து கொண்டே பிரஸன்னமானுள் கபாலி.

வாஸுவை மட்டும் எதிர்பார்த்து வாசலில் வந்த வனுக்கு கூட ஒரு துணையும் நின்றதைக் கண்டு தூக்கி வாரிப்போட்டு விட்டது. நிமிர்ந்த நெஞ்சைப் பின் னுக்குத் தள்ளிக் கொண்டு தோள் குட்டையை எடுத்து லாகவமாக கக்கத்தில் இடுக்கிக் கொண்டு பணிவுடன் நின்றுள். "ஸாரு யாருங்கோ! சும்மா சொல்லுப்பா" என்று வாஸுவை முடுக்கினுள்.

வாஸு வழக்கமான ஒற்றைக் கண் சிமிட்டலுடன் "கிராக்கிதான். ரங்கவிலாசத்துலே கினியைப் பாத் தாங்க. அம்புட்டுதான். சும்மா சொக்கிப் பூட்டாங்க. இட்டாந்தேன். ஹி...ஹி..." வாஸு தலியைச் சொரிந் தான்.

"இன்னு நாய்னு வூட்டாண்டெ இட்டார வரெக் கும் ஆயிரிச்சா, ஹாங்காங். ஸும்மா டாப்பு எகிரிப் பூடும். இந்தச் சபாலியெ நீ இன்னுநெனச் சிக்கினே சாரு. வளியெப் பாத்துக்க." சபாலியின் வழக்க மான பாவ்லா தொடர்ந்தது. அதை யொட்டி வாஸு சபாலியின் காதருகே ஏதோ ஓதவும் சபாலி முகமெல்லாம் பல்லாகி இளித்தான்.

"சரி நாய்னு. வார நேரந்தான். வந்து பாத்து மனசுக்குப் புடிச்சா ரேட்டு பேஸலாம். வா ஸாரு... உள்ளே வா... "சபாலி வீட்டிற்குள் சென்று சிம்னி விளக்கைப் பொருத்தினுன். இருண்டவீடு இன்னும் இருண்ட மாதிரி ஒளி துடிதுடிப்பை காட்டி யது... வாஸு வழிகாட்ட அமெரிக்கன் உள்ளே போனுன்.

உள்ளே ஒரு மூலியில்... கிளி... அமெரிக்கன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே நின் ருன்.

"சித்தெவடு சாரு.. இன்னும் பாரேன்..." என்று சொல்லி சபாலி அமெரிக்கனை கொலிப்புறம் இருந்த மற்றெரு இருண்ட அறைக்குள் அமைத்துப் போனுன். வாஸு வாசலில் வந்து உட்கார்ந்து கொண்டு தெரு வை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்ணில் வெள்ளைக்கோபுர விளக்குதான் பட்டுக் கொண்டிருந்தது.

ஃ ஃ ஃ

ஒரு ஒயிலுடன் கிளி மொழி வந்தாள். தொடிப் பின் ஒய்லில் அவள் ஒரு நகரும் சிலைபோல வந்தாள். வீட்டு வாசலில் வாஸுவைப் பார்த்துவிட்டு ஒரு தயக்கம். பின்னர் அலையாஸமாக ஒதுக்கிவிட்டு உள்ளே நுழைந்தாள். ஆம்! அவளே எதிர்பார்த்துக் காத்திருந்த சபாலி அவள் வந்தவுடன் "வந்தூட் டியா?" என்றுன்.

அந்தக் குரலே ஓட்டித் திரும்பிய அமெரிக்கனின் கண்களும் நிலைகுத்தி நின்றன. "ஆமாம்! அதே உருவம். ரங்கவிலாஸத்தில் அவன் சந்தித்த அதே கண்கள். அவனுடைய நீல விழிகளுள் நின்று நடன மிட்ட அதே கிளி...

"சும்மா. பேசு. கண்ணு... நம்ம ஆளுதான்" சபாலி தூண்டினுன். கிளிமொழி ஆங்கிலத்தில் பேசி னுள். அமெரிக்கனுக்கு மிகவும் குஷியாகிவிட்டது. அவர்கள் பேசியது சபாலிக்குப் புரியாது என்றலும் 'எல்லாம் நல்லதுக்குத்தான்' என்று எண்ணி நகர்ந் தான்.

அறையில் கிளிமொழியும் அமெரிக்கனும்தான். கேட்டகேள்விக்கெல்லாம் ஆங்கிலத்தில் பதில் சொன் னுள் அவள். அமெரிக்கனின் திட்டத்தையும் தொகை யையும் கிளிமொழி ஒத்துக்கொண்டு விட்டாள். அவ்வளவுதான். அமெரிக்கனின் கண்களில் ஒளி படர்ந்துவிட்டது.

எடுப்பு-5

மொட்டைக் கோபுரம்

"இன்னு அண்ணே! கிளியெக்காணண்ணே... காலியிலே இம்மாம் போதுக்கு வூட்டெவுட்டுக் கௌம் பிச்சு... அண்ணெ நீ பாத்தியா. நீ பாத்தியாண்ணே" என்று பதறினுன் சபாலி. அவன் துடிப்பைக் கண்டு அனுதாபப்பட்டவர் சிலர். 'வேனும் நல்லாவேனும்' என்று மனத்துள் சொல்லிக்கொண்டவர் பலர். "ஐயோ பாவமே! கிளிஎன்று பேரு வெச்சே. பறந்து போயிச்சே. ச்சொ ச்சொ" என்று சொல்லிவிட்டுத் தம் வழி போயினர்.

அக்கம் பக்கத்திலிருந்த இரண்டொரு சரக்கு களுக்கு நிம்மதிப் பெருமூச்சுவந்தது. "அப்பாடா தொலெஞ்சாடா ரதி. இவ இந்தத்தெருவுக்கு வந்தா லும் வந்தா நம்ம கிராக்கி வெல்லம் அந்த வூட்லேயே தோங்குச்சு." இப்படி ஒரு விமரிசனம்.

"சபலி பதருதே. போயி போலீலிலே எழுதி வையி... அப்பரம் ரங்கன் விட்டவழி" என்று வழி காட்டினர். பாவம்! அவர்கள் கண்டனரா? சபலி போலீஸைத் தேடிப் போகமாட்டான்: போகவேண் டியதில்லே என்று.

சபாலியின் நிலே மொட்டை கோபுரமாக நின்றது. கிருஷ்ணதேவராயரால் கட்டிமுடிக்கப்படாமல் பாதியி லேயே மொட்டையாக நின்ற முதல் சுற்று மதில் கோ புரம்போலக் சபாலியின் திட்டம் இப்படிப் பாதியி லேயே நிற்கும் என்று அவன் நினைத்தவன் அல்லன்.

எடுப்பு-6.

கிளிக்கூண்டு மண்டபம்

சென்னை, மார்ச் 9.

செப்புச் சிலைகளைக் கடத்திக்கொண்டு போன வழியில் ஒரு அமெரிக்கர் கைதானர். ஆனுல் அவர் தனக்கு சம்மந்தமில்லே என்றும் இதற்குப் பொறுப்பு ஒரு பெண்தான் என்றும் சொல்லவே, கிளிமொழி

என்ற பெண்ணும் பெண்கள் பெட்டியில் கண்டுபிடிக் கப்பட்டு கைது செய்யப்பட்டாள். போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

மேற்படி செய்தியைப் பத்திரிகையில் படித்த வுடன் கபாலி துடிதுடித்தான். கிள்ளிமொழி அகப் பட்டுக்கொண்டாள் என்றால்..... அவன் தலையில் ஆயிரம் குளவிகள் குடைந்தன. பரபரத்தான்.

ஒரு கிராக்கியில் பல்லாயிரக் கணக்காக லாபம் சம்பாதிக்கலாம் என்று எண்ணியிருந்தவன் பூராவும் வீணாகிவிட்டதைக் கண்டு இடிந்துபோய் நின்றான். கையில் உள்ளதையும் வீணாக ஆக்கிவிடாமலிருக்க வீட்டின் கொல்லையில் பெரிய குழி வெட்டினான். ஆயிற்று சேமித்திருந்த சிலகோப் போட்டு மூடிவிட வேண்டியதுதான் பாக்கி. எங்கிருந்து வந்தனரோ, புற்றீசல்போலப் போலீசார் அந்த வீட்டைச் சூழ்ந்து கொண்டனர்.

கபாலி கையும் களவுமாகப் பிடிபட்டுவிட்டான். அவன் வாய் 'கிளி கிளி.....உன் வேலையா?' என்று முணுமுணுத்தது. 'ரங்க ரங்கா' என்று கிளிமண்ட பத்துக் கிளி கத்துவதுபோல அவனும் முணமுணத் தான்.

ஆமாம்! கபாலி பட்டணத்துப் போக்கிரிதான். பல கேஸ்களில் வெற்றிகரமாகத் தப்பியவன்தான். சில்லறை கைமாற்றல்களிலிருந்து பல்லாயிரக் கணக் கான ரூபாய்களை வழங்கும் பழஞ்சீலைக் கடத்தலை ஆரம்பித்தான்.

வெளிநாட்டார் கபாலியின் திட்டத்துக்கு உர மளித்தனர். தன் தொழிலை நடத்த ஆங்கிலம் தேவைப் பட்டதால் பல இடங்களில் ஏஜண்டுகள் (முகாஸ்தாக் களை ஏற்படுத்தி நல்ல சம்பளம் கொடுத்தான், அப்படி யாக ஒரு ஏஜண்டாகத்தான் கிள்ளிமொழி வந்து சேர்ந்தாள். பட்டதாரிதான் கிள்ளிமொழி. நல்ல உருவு எடுப்பு. அத்துடன் சொல் எடுப்பும் சேர்ந்தது. தொழில் மளமளவென்று முயலவே கிள்ளிமொழி கபாலியை இஷ்டம் போல ஆட்டிவைக்கும் நிலைக்கு வந்துவிட்டாள்.

பழைய கோவிலான ஸ்ரீரங்கத்தில் அவன் சிலை கடத்தலுக்கு வேண்டிய பாகங்களும் இருந்ததால் அங்கேயே மத்தியநிலையத்தை அமைத்துக்கொண்டு வாழ்ந்தான். அவன் தொழில் இப்படி அடைபட்டு விடும், அதுவும் கிளியால் என்று எண்ணியவன் அல்லன்.

ஃ ஃ ஃ

முடிப்பு:— இந்த ஆறு எடுப்புகளைத் தனித்தனி யாக வாசித்தேன். திருப்திபடவில்லை. ஒருங்கே தொட ராகப் படித்தால்.....

உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது?

சிந்திக்க ஒன்று

சாலினி இளந்திரையன்

நீதைப்பற்றிப் பேசினாலும் அதன் இலக்கணத்தை (*Definition*)க் கூறுவதும், அதன் நன்மை தீமைகளை விவரித்து, அதைக் கைக் கொள்ளவோ கைவிடவோ தூண்டுவதும் திருவள்ளுவரின் போக்கு. அறிவுடைமையின் சிறப்பைப்பற்றி வள்ளுவர் பல இடங்களில் கூறுகிறார். அறிவு என்று அவர் எதைக் கருதுகிறார் என்பதும் அதை வளர்ப்பதற்கு அவர் கூறும் வழியும் சிந்திக்கக் கூடியவைகளாக உள்ளன.

"எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பது திருக்குறளில் ஒரு பாட்டு. ஒரு பொருளின் (அல்லது நிகழ்ச்சியின்) வெளித் தோற்றம் எப்படி இருந்தாலும் அதன் உண்மையான தன்மை எது என்பதைக் கண்டுணர்வதே அறிவு என்பது இதன் பொருள். இக்குறட்பாவில் கூறப்படும் "உண்மையான தன்மையை அறிவது" என்பது என்ன? இந்தக் கேள்விக்கு, "சென்ற இடத்தால் செல்லவிடாது, நீதி ஒரீஇ, நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்னும் மற்றொரு பாட்டு விடை தருகிறது. ஒன்றின் நலனும் தீதும் அறிவதுமட்டும் அறிவாகாது; நல்லதைக் கண்டுணர்ந்து அதைப் பின்பற்றுமாறு நம்மைத் தூண்டுவது எதுவோ அதுவே அறிவு. இதுவே அறிவைப் பற்றிய வள்ளுவர் கருத்து.

இந்த அறிவை ஒருவன் இயல்பிலேயே பெற்றிருக்கிறானா, அல்லது தன் முயற்சியால் அவன் அதை வளர்த்துக்கொள்ள முடியுமா? என்னும் கேள்விகளுக்கு, "பெரியாரைத் துணைக்கோடல்" என்னும் அதிகாரத்திலும் அதற்கு எதிர்மாறான "சிற்றினஞ் சேராமை" என்னும் அதிகாரத்திலும் தெளிவாக விடையளிக்கிறார் வள்ளுவர்.

ஆலமரத்தின் விதையிலிருந்து ஆலமரமே முளைத்து வளருகிறது; முருங்கை மரத்தின் கொப்பு ஒன்றை வெட்டி நட்டால் அதிலே முருங்கையே தளிர்த்து வளருகிறது. ஆலமரத்தின் விதை எந்த இடத்தில் முளைத்தாலும் அதனிடம் ஆலமரத்தின் தன்மையே உள்ளது; முருங்கையும் அப்படியே. வாத்தின் முட்டையிலிருந்து வாத்துக் குஞ்சு பிறக்கின்றது; தன் தாய்—தந்தையரைப் போலவே அந்தப் புதிய வாத்தும் வாழ்ந்து முடிகிறது. ஆனால் மனிதன் மட்டும், உருவ வகையில் தன் பெற்றோரை ஒருவாறு ஒத்திருந்தாலும், சிந்தனையிலும் செயலிலும் இவன் அவர்களைப் போலவே இருப்பதில்லை; நாளுக்கு நாள் மாறிக்கொண்டு வருகிறான்.

இதற்குக் காரணம் என்ன? மற்ற உயிர் இனங்களின் அறிவுக்கும் மனிதனின் அறிவுக்கும் வேறுபாடு இருக்கிறது; அதில் ஏற்படும் பாதிப்புக்களிலும் வேறுபாடு இருக்கிறது. மனிதன் நீங்கலாக உள்ள ஏனைய உயிர்கள் மற்ற உயிர்களின் பழக்க வழக்க நடைமுறைகளினால் பாதிக்கப்படுவதே இல்லை; பாதிக்கப்படும் அளவுக்கு அவைகளின் வாழ்க்கை நடைமுறை விரிவடைவதில்லை. மனிதனின் நிலை வேறு; அவன் மற்றொருவனுடன் சேர்ந்தும், அவனைச் சார்ந்துமே தன் வாழ்வை நடத்த வேண்டியுள்ளது. எனவே, அவனுடைய அறிவு அவனைச் சுற்றி இருப்பவர்களோடு அவனுக்கு ஏற்படும் பழக்கத்திற்கு ஏற்ப மாறுகிறது.

'ஒவ்வொருவனும் அவனுக்கு வேண்டிய அறிவுடனேதான் பிறக்கிறான்' என்று நினைக்கிறோம். ஆனால் அது உண்மை அல்ல; அந்த அறிவைப் பெறுவதற்குரிய ஓர் இயல்பூக்கத்தோடு மட்டுமே அவன் பிறக்கிறான். தன்னைச் சேர்ந்தவரோடு

வாழ்ந்து பழகப் பழக, நன்று எது என்பதை அறி கிருன்; அதன் வழியில் செல்லும் துணிவையும் பெறுகிருன.

இதனே வள்ளுவர் மிகத் தெளிவாகக் குறிப் பிடுகிருர்:

மனத்துளது போலக் காட்டி,
ஒருவற்கு
இனத்துளது ஆகும் அறிவு.

அதாவது, அவனேச் சூழ்ந்துள்ள கட்டம்,—அவன் தனது உற்ருரும் உகந்தாருமாகக் கொண்டுள்ள கூட்டம்,—எதை நல்லது என்று கொண்டு வாழ் கிறதோ அதையே அவனும் நல்லது என்று ஏற்றுக்கொள்ளுகிருன்.

'அப்படியானுல் இதை அறிவு என்று கொள்ள முடியுமா? அறிவு என்று கொண்டால் சாதி, மதம், இனம், நாடு எனனும் கட்டங்களே வகுத்துக் கொண்டு அதனதன நலனுக்கு ஏற்பவே மக்கள் செயற்படுவதைத் தவறு என்று சொல்லமுடியுமா?'

இந்தக் கேள்விகளுக்கும் வள்ளுவர் பதில் தந் துள்ளார். ஒரு கூட்டத்தின ஒருவனுகவே மனிதன வாழ்கிருன என்பதையும், அதன் மூலமே அவன் அறிவு பெறுகிருன் என்பதையும் வள்ளுவர் ஏற்றுக்கொள்ளுகிருர். ஆனுல், அந்த அறிவு நல்ல அறிவாக இருக்கவேண்டும என்பதையும், அதைத் தரக்கூடியதாக அவன் சேரும் கூட்டமும் நல்ல அடிப்படையில் அமைந்த கூட்டமாக இருக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்ட அவர் மறந்துவிடவில்லே.

மனந்தூய்மை செய்வினே தூய்மை
இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

ஒருவன் சேரும் இனம் நல்லதாக இருந்தால் அவ னுடைய மனத்தெளிவும் அதன் வினேவான செய லாக்கமுமாகிய அறிவு தூயதாக இருக்கும்; இல்லே எனில் அவன் அறிவு நல்ல அறிவாவதில்லே.

ஒருவன் எத்தகையவன் என்பதை அவனு டைய கூட்டத்தைக்கொண்டே முடிவு செய்துவிட லாம். 'ஒருவற்கு,—இனத்தான் ஆம் இன்னன் எனப்படும் சொல்' என்கிறது வள்ளுவம். இதையே வேறுவிதமாக, "நல்லினத்தின் ஊங்கும் துணே யில்லே; தீயினத்தின் அல்லல்படுவதூஉம் இல்" என்றும் அதுவே பேசுகிறது. நல்ல இனத்தோடு சேர்ந்து அது தரும் வளத்தால் தனது அறிவை வளர்ப்பவன நல்லவன் என்று பெயர் பெறுகிருன்; தீய இனத்திற் சேர்ந்து தனது அறிவையும் அந்த இயல்புகளோடேயே வளர்த்துக்கொண்டவன் இழிவுகளுக்கு ஆளாகிருன்.

"மனநலம் நன்கு உடையராயினும், சான் ருர்க்கு, இனநலம் ஏமாப்பு உடைத்து" என்னும் பாட்டு, ஒருவன் நிரந்தரமாக நல்லவர் கூட்டத்தில் இருந்தால்தான் அவனுடைய அறிவும் நல்லறிவாக இருக்கும் என்று குறிப்பாக எச்சரிக்கிறது.

பொதுவாகத் தனிமனிதனுக்கும் சமுதாயத் துக்கும் பிரிக்கமுடியாத ஓர் பிணேப்பு இருக்கிறது. பலரின் கூட்டமாகிய சமுதாயம் விரிந்த அடிப் படையில் கொள்கைகளே அமைத்துக்கொண்டு இயங்கினுல், அதன் தனிமனிதனும் நல்லவனு கிருன்; அது சுருங்கிய கொள்கைகளின் மீது அமைந்துவிட்டால் அதைச் சேர்ந்த தனிமனித னின் அறிவும் குன்றியே போகிறது.

"நிலத்து இயல்பால்
நீர்திரிந்து அற்றுஆகும்
மாந்தர்க்கு
இனத்து இயல்பது ஆகும்
அறிவு"

என்னும் குறள் இதையே அழுத்தந்திருத்தமாக வலியுறுத்துகிறது.

அறிவைப்பற்றிய வள்ளுவரின் எண்ணங்களே ஆழ்ந்து சிந்திக்கையில், "(தனிமனிதர்களுக்குப் போலவே) சமுதாயத்துக்கும், தன்னே வழி நடத்திக்கொள்ளும் ஒரு நோக்கு அமைந்துவிடு கிறது; அது நல்லதாக இருக்குமாறு பார்த்துக் கொண்டால் அதன் ஓர் உறுப்பினனுகிய தனிமனி தனும் நல்லவனுக இருப்பான்" என்று வள்ளுவர் நினேத்திருப்பதாகத் தெரிகிறது. இக்கருத்து சிந்தனேக்கு உரியது.

ஒருவனும் உலகமும்

★

வல்லிக்கண்ணன்

அவன் தூங்கிக் கொண்டிருந்தான்.

பொழுது நன்றாக விடிந்திருந்தது.

வைகறையின் ஒளி பரவியபோதே, பறவைகள் குதூகலித்துக் கூச்சலிட்டன. அங்குமிங்கும் துள்ளித் திரிய ஆரம்பித்தன. காக்கைகள் கத்திக்கொண்டு நெடுகிலும் பறக்கத் தொடங்கின.

அதற்கு முன்னரே பால்காரன் வீடுவீடாகச் சென்று, சைக்கிள் மணியை ஒலி செய்து, பால் விநியோகிக்கும் அலுவலில் ஈடுபட்டிருந்தான். 'பேப்பர் பையன்' தலைபோகிற வேகத்திலே சைக்கிளை மிதித்துச் சென்று அவசரம் அவசரமாகப் பத்திரிகையை உசிதமான இடத்தில் வீசிவிட்டு அவன் பாட்டுக்குப் போனான். யார் யாரோ எங்கெங்கோ போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

இதெல்லாம் அவனுக்குத் தெரியாது. அவன் சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தான். ஒரு சிறு அறை. அது அவன் உறைவிடம். அதை ஒட்டி முன் திண்ணை. அதுதான் அவன் படுத்துத் தூங்குமிடம்.

போவோர் வருவோர் அவனை நன்றாகப் பார்க்க முடியும். பார்த்தார்கள்.

பார்க்கிறவர்கள் மனம் எண்ணங்களை ஓடவிடக் கூடிய இயல்பைப் பெற்றவை. ஆதலே, அவர்கள் இஷ்டம்போல் நினைத்துக்கொண்டு போனார்கள்.

'சுகமாகத் தூங்குறான்! கொடுத்துவைத்தவன். நமக்கு அதுக்குக் கொடுத்துவைக்கலே!' என்று எண்ணிக்கொண்டு போனார் பால்காரர்.

'சோம்பேறி. நானும் பார்க்கிறேன், தினமும் இப்படித்தான் கிடக்கிறான்' என்று நினைத்தான் 'பேப்பர் பையன்'.

ஒரு மாமியார் மருமகளை சத்தம்போட்டுக் கொண்டிருந்தாள்: 'நானும் ஒரு நாளைப்போல ஒருநாள் சொல்லிக்கிட்டே இருக்கேன். நீ உன் வழக்கத்தை மாத்திக்கிடவே மாட்டேன்கிறியே. சூரியன் எழுந்திருச்ச பிறகு, அவன் மூஞ்சியிலே சாணி வீசி அடிக்கிறமாதிரி, வாசல் தெளிச்சுப் பெருக்கப்படாது, படா துன்னு. நீயும் ஒருநாளைப்போல தனசரி இப்படியே செய்துக்கிட்டு வாறே. பொண்ணுப் பொறந்தவ விடியதுக்கு முன்னாலேயே எழுந்திருக்க வேணும்? ஏழு மணிவரையா தூங்கிக்கிடப்பது?...'

மருமகள் சாணி கரைத்த நீரை அள்ளி 'சளப் சளப்' என்று தெளித்தபடி, ஏதோ முணுமுணுக்கிறாள். அவள் பார்வை திண்ணையில் தூங்கிக்கிடக்கும் நபரைக் கண்டது. 'அவர் பாடு நிம்மதி! கேட்கிறதுக்கு ஆளே கிடையாது. கொஞ்ச நேரம் சுகமாகப் படத்துக்கிடக்கலாம்னு நெனச்சால், அதிலே மண்ணைப்போட எனக்குன்னு வந்து வாய்த்திருக்கு இந்த மாமியார் குரங்கு!' என்று பொருமையோடு புகைந்தாள் அவள்.

மணி ஆகிக்கொண்டிருந்தது. வெயில் ஏறிக் கொண்டிருந்தது. அவன் இன்னும் தூங்கிக் கொண்டிருந்தான்.

ஒரு பெரியவர். அதிகாலையில் எழுந்து, நீராடி, நெற்றி நிறைய விபூதி பூசிக்கொண்டு, வயிறு நிறைய இட்டிலி காப்பி சாப்பிட்டுவிட்டு, குடையைக் கையில் எடுத்துக் கொண்டு, கடைக்குக் கிளம்பினார். கடை முதலாளி அவர்.

அவர் பார்வை தூங்குகிறவன்மீது பட்டது. 'தூங்குமூஞ்சிப்பய. இப்படித் தூங்கினு எப்படி உருப்படுவான்? விடியமூஞ்சி!' என்று முறைகூறிக் கொண்டே நடந்தார் அவர்.

அவசரமாக ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் ஒரு இளைஞன். 'சே, என்ன வாழ்க்கை இது! மிஷின் மாதிரி!' என்று அலுத்துக்கொண்டது அவன் மனம்.

அவன் கண்கள் தூங்குகிறவனை எடை போட்டன. 'நேற்று ராத்திரி கடைசி ஆட்டம் சினிமாவுக்குப் போயிருந்திருப்பான். இல்லேன்னு சொன்னது வேறு ஜல்சா மேலே போயிருப்பான். இப்போ கவலையில்லாமல் தூங்குறான். நம்மைச் சொல்லு. சினிமாவுக்குப் போக முடியுதா? ஜாலி தேடி அனுபவிக்க முடியுதா? ஒரு நாள் விடிய விடியத் தூங்கணும்; பத்துப் பன்னிரண்டு மணி ஆனலும் எழுந்திருக்கப் படாதன்னு நானும் நினைக்கத்தான் செய்றேன். எத்தனையோ நிறைவேறாத ஆசைகளில் அதுவும் ஒண்ணு. ஞாயிற்றுக்கிழமைகளிலே கூடத் தூங்க முடியறில்லே. அன்னைக்கும் ஆபீஸ் வேலே. இல்லேன்னு வீட்டு வேலே..... தூ, என்ன வாழ்க்கை மயிரு வேண்டிக் கிடக்கு.....' என்று தன்னுள் தானே எரிந்து கசந்து கொண்டு போனான் அவன்.

தூங்குவோன் இன்னும் தூங்கிக்கொண்டேயிருந்தான். இளைஞன். நல்ல தோற்றம் கொண்டவன். களையான முகம். அடர்ந்த தலைமுடியின் ஒரு கற்றை அகண்ட நெற்றிமீது வந்து கிடந்தது. ஏதோ கனவு கண்டிருப்பான் போலும். அவன் முகத்தில் ஒரு மலர்ச்சி. இதழ்களில் தெளிவும் சிரிப்பு.

அந்த அறைக்கு எதிர்த்தாற்போல் இருந்த வீட்டின் வாசல்படியில் வந்து நின்றள் ஒரு யுவதி. தூங்கிக்கொண்டிருக்கும் அவனைப் பார்க்காமல் இருக்க முடியுமா? அவன முகமும், அங்கு நிலவிய இளம் சிரிப்பும் அவள் உள்ளத்தில் சிறு மலர்ச்சி உண்டாக்கின. 'எவ்வளவு அழகு! யாரையோ நினைத்துக் கொண்டிருந்து, அவள் கனவில் வந்து தோன்ற, அவளோடு விளையாடுவதுபோல் நினைப்பிருக்கும். அதுதான் அந்த முகம் இப்படி மலர்ச்சியோடு இருக்கிறது. அவள் யாரைக் இருப்பாள்? எந்த அதிர்ஷ்டக்காரப் பெண்ணுக்கு இவரோடு விளையாடக் கொடுத்துவைத்திருக்கிறதோ? இவர் கனவில் வந்து விளையாடுகிற சுந்தரி நானுக்கூடி இருக்கலாம்! இவர் அடிக்கடி எனைப் பார்க்கிற பார்வையில் ஆசை தளும்புவதை நான் கவனிக்காமல் இல்லே.....'

அவள் அவனையே—துயிலில் அமைதியும் ஆனந்தமும் அழகும் நிலவிக் காட்சி தந்த முகத்தையே—வைத்த விழி வாங்காமல் பார்த்தபடி நின்றாள்.

'ஏ எருமை மாடு, அங்கேயே என்னத்தைப் பார்த்துக்கிட்டு நிக்கிறே?' என்று ஒரு இடிக்குரல் உறுமியது பின்னே. 'சீ போ உள்ளே!' என்று கத்திக் கொண்டு வந்து நின்றாள் அவள் தந்தை.

அவள் திடுக்கிட்டு, பயந்தபடி, வீட்டினுள் வேக மாய் சென்று மறைந்தாள்.

அவர் எதிரே திண்ணையில் தூங்கும் இளைஞனைப் பார்த்தார். வெறுப்பை உமிழ்நீராக மாற்றி, காறித் துப்பினார். 'கடா மாட்டுப் பய! எட்டரை, ஒன்பது மணி ஆகப் போகுது. இன்னும் தூங்கிக்கிட்டுக் கிடக்கான். அப்படித் தூங்கணுமின்னு அறைக்குள்ளே படுத்துத் தூங்றதுதானே! ராக்காடு வெட்டி மாதிரி ராத்திரி பூரா முழிச்சு ஊர் சுத்தியிருப்பான். சீட்டாடியிருப்பான். குடிச்சுப்போட்டுக் கண்டபடி அலஞ்சிருப்பான். இப்போ தெத்த சவமாக் கிடக்கான். இந்தமாதிரிப் பயலுகளே எல்லாம் சவுக்கால அடிக்கணும். ஆமா. ஒரு சாந்தப்பய பிள்ளே இப்படி வேண்டியதுதான். அந்தக் காலத்திலே — அதுவும் முப்பது முப்பத்தஞ்சு வருஷத்துக்கு முந்திதான் — சாந்தப்பய பிள்ளேன்னு ஒரு சங்கிலி இன்ஸ்பெக்டர் இருந்தாரு. எப்பவும் கையில் ஒரு சவுக்கு வச்சிருப்பாரு. வீணப் பயலுக, வெறும் பயலுக, அயோக்கியப் பயலுக, போக்கிரிக, சோதாக்கள், தெருவிலே ஒழுங்கா நடக்காதவன், வாய்க்காலில் ஒழுங்கா தூணி கட்டிக்கிட்டு குளிக்காதவன். இதுமாதிரிப் பயலுகளே எல்லாம் பார்த்தால், சுளீர் — ஒரு சவுக்கடி. பளீர் — இந்தா வாங்கிக்கோ ஒண்ணுயின்னு கொடுப்பாரு. இது மாதிரி, பொம்பிளப் புள்ளே கூட நிக்கிறே, நடமாடற இடத்திலே இப்படிப் படுத்துக் கிடக்கிற எருமை மாட்டுப் பயலுகளுக்கும் சவுக்கடி கொடுக்கணும்.....'

அவருக்கு அவர் மனைவிமீது நம்பிக்கை கிடையாது. மகள்மீது நம்பிக்கை கிடையாது. அண்டை அயலார் பேரில் நம்பிக்கை கிடையாது. ஆகவே, சந்தேகம் கும்பும் அவர் உள்ளம் சதா கொதித்துக் கொண்டே யிருக்கும். இப்படும் அப்படித்தான்.

அவன் நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

அந்த வனவில் ஒரு வீட்டில் ஒரு அரசியல்வாதி இருந்தார். அவரைக் கண்டு பேச நண்பர் ஒருவர் வந்தார். இருவரும் வெளியே கிளம்பினார்கள். அதில் உலகப் பிரச்சினைகள் அனைத்தையும் அலசிப் பிழிந்து உதறி எறியும் சுபாவமுடைய அவர்கள் இன்னும் தூங்கிக்கொண்டிருந்த அந்த வாலிபனைப் பார்த்தார்கள்.

'சார், நம்ம நாடு வளர்ந்து முன்னேறவில்லே என்றால், அதுக்கு இதுபோன்ற சோம்பேறிகள் தான் காரணம் உழைக்காமல், வீண் பொழுது போக்குவதும் உண்டு உறங்குவதுமாய் காலம் கழிக்கும் வீணர்கள் பெருத்துப் போனார்கள் ... ...'

'நீங்கள் சொல்வது உண்மை. ஐப்பானே பாருங்கள். சின்னஞ்சிறு நாடு. வெகு வேகமாக முன்னேறிவிட்டது உலகத்தின் பெண்ணம் பெரிய சாதனைகள் எல்லாம் அங்கு தான் உருவாக்கப்பட்டுள்ளன என. அது எப்படி சாத்தியமாயிற்று? உழைப்பு. கடுமையான உழைப்பு. எல்லோரும் எப்போதும் உழைத்துக் கொண்டேயிருப்பது...'

'கரெக்ட்! நம்ம நாட்டிலே சோம்பேறிகள் பெருத்துப் போனார்கள். சுகமாகத் தூங்க விரும்புகிறவர்களும், வேலைக்கு மட்டமாகப் போகிறவர்களும், வேலே நேரத்தில் வம்பளப்பவர்களும், உழைக்காமலே உரிய கூலியை— ஏன்? அதிகமான கூலியை,

அதுகூட போனசும் சேர்த்து— வாங்க ஆசைப்படுகிறவர்களும், எத்திப் பிழைப்பவர்களும், காக்காய் பிடிப்பவர்களும்...'

'வெறும் பேச்சுப் பேசுகிறவர்களும்—'

'ஆமாம். அளப்பர்களும் மேல் மினுக்கிப் பேர்வழிகளும் பெருத்துப் போனார்கள் ...'

அவர்கள் பேசிக்கொண்டே போனார்கள். அவன் தூங்கிக்கொண்டே கிடந்தான்.

சிறிது நேரம் சென்றதும், அவன் உருண்டான். புரண்டு கொடுத்தான். கைகளை தலைக்கு மேல் நீட்டி, உடலை நெளித்தான்.

'சே. என்ன வலி! மேலெல்லாம் கடுமையான வலி. காய்ச்சல் வரும் போலிருக்கு. இப்போ இரண்டு வாரமாக் கடுமையான உழைப்பு. அலைச்சல் வேறே. அசதி. ஆனா அப்படியே அசத்திட்டுது. என்னை அறியாமலே நல்ல தூக்கம் தூங்கியிருக்கேன்.' மூச்சை உள்ளிழுத்து நீண்ட சுவாசமாக உயிர்த்தான்.

'தூங்கையிலே போகும் மூச்சு-சற்றே சுமைமாறிப் போனலும் போச்சு என்று சொல்லிவச்சான். நான் அடிச்சுப்போட்டது மாதிரித் தூங்கிக் கிடந்தேனே. அப்படியே செத்துப் போயிருந்தால்கூட, யாருக்குத் தெரியப் போகுது? இல்லே, யாரு தான் கவலைப்படப் போறாங்க?' என்றொரு எண்ணம் ஓடியது அவன் உள்ளத்தில்.

அவன் தனியன். இப்போது எழுந்ததும், அவனுக்குத் தேவையான காப்பியைத் தயாரிப்பதற்காக அவனே அடுப்பு பற்றவைத்தாக வேண்டும். பசித்தால் சாப்பிடுவதற்கு அவசியமான உணவு எதையாவது அவனே தயாரிக்க வேண்டும்.

'ஓட்டலில் சாப்பிடலாம் தான். ஆனால், பாவிப் பயலுக கொள்ளே அடிக்கிறானுக அநியாய விலே. அதுக்குக் காசு கிடைக்க வழியில்லே. அப்படி காசு கொடுத்து வாங்கிச் சாப்பிட்டாலும், அது வயிற்றுக்குப் போதுமானதாயில்லே. என்ன பிழைப்பு! எத்தனே பிரச்னைகள்! எவ்வளவு விதமான உழைப்புகள்!'

அவன் நெடுமூச்செறிந்தான்.

அவர் அவருக்கு அவரவர் பிரச்னைகள்! அதே சமயத்தில் ஒவ்வொருவரும் மற்றவரைப்பற்றி அவரவர் மனம்போன போக்கில்—அவரவர் சுபாவங்களின்படி —எடைபோட்டு, முத்திரை குத்தி, மூலையில் ஒதுக்கிவிடத் தயங்குவதில்லே.

வேடிக்கை மனிதர்கள்! விசித்திரமான உலகம்!

அவன் எழுந்தான். அவனைச் சுற்றி உள்ள மனிதர்கள் அவனைப் பற்றி கொண்டு—கொள்ளக்கூடிய —உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் உணரத் திராணியற்றவனும், அறிந்து கொள்ள அவா இல்லாதவனும், அவனும் தனது போக்கில், தனது அலுவல்களில் ஈடுபட்டானான்.

அவளிடம்

சந்தக் கவிமணி தமிழழகன்.

கன்னத்து மேட்டுக்
கனிச்சிரிப் பில்—அதன்
காரியப் பாட்டுத்
தனிச் சிரிப்பில்
மின்னெந்த நாணம்
மினுங்கக் கண்டேன்;--அதில்
மேலாய்க் குறும்பு
சினுங்கக் கண்டேன்!

விழிகள் சுழலும்
விறுவிறுப் பில்--அதில்
வேல்வந் தழலும்
கிறுகிறுப் பில்
அளிகள்வந் தாடும்
அழகு கண்டேன்;--அதில்
ஆயிரம் சொர்க்கம்
பழகக் கண்டேன்!

எதிர் வீட்டு அழகு...

★

வி. பார்த்திபன்

"சௌதாமினி... சீக்கிரம் இங்கே வாயேன்" முரளியின் அலறலைக் கேட்டு என்னவோ ஏதோ என்று அரக்கப் பறக்க ஓடி வந்தாள் சௌதாமினி.

"அதோ பார்!..." — ஜன்னல் வழியாகச் சுட்டிக் காட்டினான் முரளி. சௌதாமினி முகத்தைச் சுழித்துக் கொண்டாள்.

"சே! இதற்குத்தான் கூப்பிட்டீர்களா?... நான் என்னவோ என்று கை வேலையை அப்படியே போட்டது போட்டபடி விட்டுவிட்டு வந்தேன்.... கடைசியில்..." முகத்தை தோளில் இடித்துக் கொண்டு, இப்படிக் கூறியபடியே வெறுப்பை உமிழும் ஒரு பார்வையை தெருப்புறம் வீசிவிட்டு உட்புறம் நோக்கிச் சென்று விட்டாள்.

முரளி "ம்!" என்று பெருமூச் செறிந்தான்.

ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான்.

எதிர்த்த வீட்டிலிருந்து கிளம்பிய இருவரும் மெதுவாகத்தான் நடந்துகொண்டிருந்தனர். கண் நிறைய அந்த ஜோடியை பார்த்தபடி நின்றான். அவன் குழந்தை கமலி, மழலைக் குரல் கொஞ்ச அழைத்ததைக்கூட காதில் வாங்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டே நின்றான்.

ஒருவரை ஒருவர் தழுவினாற்போன்ற நிலையில், கையை பின்னிப் பிணைத்தபடி சென்று கொண்டிருந்த அந்த இருவரும் தெருக்கோடியில் சென்று மறைந்து விட்டனர்.

முரளி உள்ளே சென்றான்.

∴ ∴ ∴

கிட்டத்தட்ட ஒருமாதம்தான் இருக்கும் காலியாகக் கிடந்த முரளி வீட்டின் எதிர்வீட்டிற்கு அந்த இருவரும் குடிவந்து. முதன் முதலில் அவர்கள் இருவரையும் சேர்த்துப் பார்த்த அந்த பேட்டை வாசிகள் எல்லாருமே தம் கண்களில் வியப்பைச் சிந்தத் தவறவில்லை.

"அடடா!... எத்தகைய பொருத்தமான ஜோடி!..." என்று வியந்து பாராட்டாதவர்கள் இல்லை.

இருவருமே அழகில் அவ்வளவு சிறந்து விளங்கினர். ஆனால் ...

இந்த ஒரு மாதத்திற்குள் எத்தனை மாற்றம்.

வியப்பு வழிய பார்த்த கண்கள் வெறுப்பைப் பொழிந்தன. இசை பாடியவர்களது நாக்குகள் வசையை மழையாகச் சிந்தின. எல்லாருமே 'அந்த இருவரையும்' ஒரு மாதிரிதான் பார்த்துக்கொண்டனர். தத்தமக்குள் கசமுசவென்று பேசிக் கொண்டனர்.

முரளி மட்டும் அந்தக் கூட்டத்தில் சேராமல் ஒதுங்கியே இருந்து வந்தான்.

"சௌதாமினி ...! அந்த இரண்டு பேரையும் பார்த்தால்..." — பக்கத்து வீட்டு நளினி.

"ஐயோ, போதுமே!... அதைத்தவிர வேறு ஏதாவது பேசேன்" — சௌதாமினி இரண்டு கைகளாலும் காதைப் பொத்திக் கொண்டாள்.

"அதற்கு இல்லே சௌமி!... இரண்டு பேரும் தெருவில் போகும்போது .. கைகளை எப்படிப் பின்னிப் பிணைத்துக் கொண்டு .. போகிறார்கள் தெரியுமா?..."

"ஏன்?... அவன் அவள் தோளின் மேல் கை போட்டு வளைத்து அணைத்துக் கொண்டு போகும் கண்ணராவியை நீ பார்த்ததில்லையா? ... ஐயே!..."

"அப்பொழுதுதான் 'ஹஸ்பெண்ட் — ஒய்ப்'னு தெரியுமா என்ன? ... குழந்தைகள் எல்லாம் பார்த்து..."

நளினி முடிப்பதற்குள் சௌதாமினி பாய்ந்தாள்: "ஏன்... பெரியவர்களது நிலைமை மட்டும் என்ன வாழ்கிறது?..."

முரளி இருந்த அறையை நோக்கி பார்வையை வெட்டினாள் சௌதாமினி. முரளி தலையைத் திருப்பிக் கொண்டான்.

"சௌதாமினி!...."

"என்ன?....."

"உன் தோழி போய் விட்டாளா?"

"ஏன்?"

"இல்லே, ஒரு வேளே திரும்பி வருவாளோ?"

"எதற்கு..."

"அந்த அப்பாவிகள் இருவரையும் பற்றி வம்பு வளர்க்க மீண்டும் வருவாளோ என்பதற்காகக் கேட்டேன்"

"உங்களுக்கு அதைப்பற்றி என்ன அவ்வளவு அக்கறை?"

"அவர்கள் கணவன்—மனைவி! இதை நீ ஒப்புக் கொள்ளுகிறாயா, இல்லியா?....."

"அவர்கள் எப்படி இருந்தால் நமக்கு என்ன? .." —சௌதாமினி சீறினாள்.

"இது மிக நன்றாக இருக்கிறது. கணவன் மனைவி உறவெல்லாம் விட்டிற்குள்ளேதான் இருக்கவேண்டுமே தவிர.... இதுபோல வெட்ட வெளிக்கெல்லாம் வரக்கூடாது தெரியுமா?.. .." — அவள் தொடர்ந்து கடுகாய் வெடிக்கலானாள்.

முரளிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லே.

"அவர்கள் இருவரும் அப்படி என்னதான் தவறு செய்துவிட்டார்கள் ....." — முரளி பரிதாபமாகக் கேட்டான்.

"ஐயோ!..... இன்னும் என்னதான் செய்யவேண்டும் என்கிறீர்கள்.....இருவரும் அழகாய் டிரஸ் செய்து கொளகிறார்கள்.... கூலிங்கிளாஸையும் போட்டுக்கொண்டு, ஒரே மாதிரி அடி எடுத்து வைத்தபடி போகிறார்கள்.....ஆனால் இதைப்பற்றியெல்லாம் ஒன்றுமே தப்பாகயாரும் எதுவும் பேசவில்லே. போகும் போது....."

சௌதாமினியின் முகம் அருவருக்கத்தக்க பொருளேக்கண்டதுபோல் பேசிக்கொண்டு வரும்போதே மாறியது.

".....அவன் அவள் கைகளேப் பின்னிப் பிணைத்துக்கொண்டு நடக்கிறான். இது ஒரு தவறா?....."

"ச்சும் ! ... கட்டி அணைத்துக் கொண்டு போகிறான்!....."

"அதற்கு என்ன?... இது ஒரு தவறா?.. சின்னஞ் சிறிசுகள்... அப்படித்தான் இருக்கும். இதை ப்பாய ஒரு தவறு என்று எதற்குக்கொண்டு அதையே பெரிதுபடுத்திக் கொண்டு ... எனக்கு பிடிக்கவேயில்லே சௌதா!..."

"ஆமாம்... உங்களுக்கு ஒன்றுமே தப்பு இல்லே... இங்கே ஊரே சிரிக்கிறது, தெரியுமா!... ஒரு பெண்ணுக்கு கொஞ்சமாவது கூச்ச நாச்சம் இருக்க வேண்டாம். இல்லே, அவனுக்குதான் மான மரியாதை தெரிய வேண்டாம். 'என்னடா இது!... நாலுபேர் நடமாடுகிற வீதியாயிற்றே... ஒரு பெண்ணே — என்னதான் கட்டிய மனைவியாக இருக்கட்டும் — இப்படித் தழுவிக் கொண்டு நடக்கிறேமே' என்ற அறிவு வேண்டாம். ... இப்படியா ..."

முரளி ஆத்திரத்தோடு அவளே பார்த்தான்.

"சௌமி... எனக்கு நீ எவ்வளவுதான் சொன்னாலும் அவர்கள் பேரில் தவருகவே எண்ணத் தோன்றவில்லே. ஏன் என்றே தெரியவில்லே ... அவள் அவனிடமும், அவன் அவளிடமும் ஒருவரை ஒருவர் கொடுத்துவிட்டார்கள் என்றே நினேக்கிறேன். ஒவ்வொரு நாளும் இதோ அந்த எதிர் சூமிற்குள் இருக்கும் ஜன்னலுக்கு முதுகைக் காட்டினுற்போல் அவன் அமர்ந்து கொண்டிருப்பான். அந்தப் பெண் இரண்டு கைகளிலும் எண்ணேயைக் குழைத்து வந்து சுருள் சுருளாக இருக்கும் அவன் தலேயில் தடவி அழகாக படிய வாரிவிடுவாள்... அவன் சீப்பை வாங்குவதற்காகக் கையை நீட்டுவான். அவள் தடுப்பாள். அதற்குப் பிறகு டிரஸ் செய்துகொண்டு, இருவரும் சிரித்த முகமாய் வெளியே வரும்போது... அடடா !.... எப்படி இருக்கிறது தெரியுமா ?....

'சிலபேர் பகலில் 'கூலிங்கிளாஸ்' போட்டுக் கொண்டால்கூட மைக்குப் பார்க்கச் சகிக்காமல் இருக்கும். எத்தனேயோ நாள் இரத்திரியில்கூட இவன் எங்கேயோ போய்விட்டு கூலிங்கிளாஸுடன் வரும்போது...."

வெறிபிடித்தார்ப்போல் பேசிக்கொண்டே இருந்தான் முரளி. கேட்டுக்கொண்டே இருந்தாள் சௌதாமினி.

வாயிலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு இருவருமே எட்டிப் பார்த்தனர்.

எதிர்வீட்டு வாசலில் டாக்ஸி நின்றிருந்தது.

"மெதுவாக ... இறங்குங்கள் ..." — அவனே அணைத்தார்ப்போல இறங்குளுள் அவள்.

"சே!... அசிங்கம்!..." — வேகமாக உள்ளே போக முயன்ற சௌதாமினியின் கையைப் பற்றி இழுத்தான் முரளி.

"சௌ...மி...! அவ்...கே .. பார்...!" என்ற சொற்கள் அவன் வாயிலிருந்து பதற்றத்தோடு உதிர்ந்தன

வேண்டா வெறுப்பாக எட்டிப் பார்த்தாள் சௌதாமினி.

கீழே விழுந்திருந்த கூலிங்கிளாஸை எடுக்கக் குனிந்தருந்தாள் அந்தப் பெண்.

அவன் தலே குனிந்திருந்தான்.

எடுத்த கண்ணுடியை மாட்ட முகத்தை நிமிர்த்தினுள் அவள். அவன் முகத்தில்...

கண்கள் விழிகளற்று இருந்தன.

"சௌமி!..." — அழுத்தத்தோடும் துன்பத்தோடும் சௌதாமினியின் கரத்தை இறுகப்பற்றிக் கொண்டே அவகே நோக்கித்திரும்பினுன முரளி.

சௌதாமினியின் கண்களில் நீர் கரை கட்டியிருந்தது.

பாலமுருகனிடம் பயின்ற பாடம்!

—தெசிணி

நீலக, ஆடிக் கிருத்திகை அந்தி
பால முருகனைத் தொழுது பராவ,
கோயில செல்ல நினைத்து, வீட்டின்
வாயில் நுழைந்தேன்; மகிழ்ந்தேன் ஆங்கு
தங்கையின் குழந்தை தங்கக் கண்மணி
நங்கூ ரம்போல் இடையிற் கைவைத்தே
ஓய்யா ரமாக விழியோரம் பார்த்தான்;
கொய்யாப் பழத்தின உட்சிவப்பு பாக
மலர்ந்த முகத்தில் மழலை முருகையே
சிலிர்த்துக் கண்டேன்; சேர்த்தள்ளிக்
கொண்டேன்;
ஊரில் இருந்து தந்தை யுடனிவன்
தேரென வந்தான் சின்னமணி வாசகன்!

ஃ ஃ ஃ

வந்ததும், அன்னவன் முறையி டுதுதான்:
"மாமா, அண்ணனை மட்டும், அன்று
கோயிலுக் கழைத்துச் சென்றனை நீயே;
இன்றெனை அங்கே இட்டுச் செல்லாயா?"—
என்றனன் குருத்து, இளநீர் மொழியினுல்;
"ஆகட்டும் நயனு, அழைத்துச் செல்கிறேன்!"
எனறேன; அடுத்து, அழைத்தும் நடந்தேன்!

ஃ ஃ ஃ

பேசா தவனும் என்கைப் பிடித்து
நடந்தே வந்தான் பிஞ்சுக் கால்களால்;
தன்னைத் தூக்கி வரும்படிச் சொல்வது
அன்னவன் வழக்கம்; அன்றதை மறந்தனனே?
யானே அவனைத் தூக்கிச் செல்லலாம்
என்றும் நினைத்தேன; ஆயினும் மறுகணம்...
நினைப்பில் —
மறுநாள் மாற்றிக் கொண்டிட வேறு
சட்டை இல்லை; வண்ணன் வருவதும்
நிச்சயம் இல்லை; எனவே குழந்தையின்
கால்பட் டழுக்குச் சட்டையில் ஏறுமே
என்னும் இழிநினைப் பூர்ந்தகால், குழந்தையைத்
தூக்கிக் கொள்ளும் எண்ணங் கைவிட்டேன்;
உள்மனத் துறையுங் கடவுளோ அறியான?
கள்ளனென் கடையனென் மடமையென்
உரைப்பேன?

ஃ ஃ ஃ

திருமயிலைக் —
கபாலீச் சுரத்தின் உட்பிரா காரஞ்
சுற்றி வருகையில் எனக்குத் தெரிந்த
மூத்த அந்தணர் குடும்பமொன் றங்கே
கண்டேன்; அவர்கை இருந்த குழந்தை
என்பால் தாவி வந்ததும், வாங்கித்
தூக்கிக் கொண்டேன்; துடிப்புட னிதனைப்
பார்த்துக்கொண் டிருந்தான் தங்கையின்
குழந்தை;
இப்போது மட்டும் என்னுடைச் சட்டை
அழுக்கினைப் பற்றியான் எண்ணிட வில்லை;
ஆம்,ஆம் வேண்டும் எனக்கும் இத்தண்டனை!
தங்கையின் மைந்தன், மற்றவர் குழந்தையைத்
தூக்கிய என்னைப் பார்த்த அப்பார்வை,
முருகனே வந்து முறுவலித் தென்னை
ஏளனம் செய்தவா றிருந்த அக்காட்சி
அடியவன் நெஞ்சில் அழியாப் பாடம்
பதித்ததை, அம்மா! பதறி யுணர்ந்தேன்;
கீழ்மை தெருட்டிய இறையை வழுத்தினேன்.

காலைக் காட்சிகள்

சாலை இளந்திரையன்

வீட்டுக் கதவு திறந்ததுவே–விடி
வெள்ளி வெளிச்சம் விரிந்ததுவே
மாட்டுத் தொழுவத்தில் பத்துவிரல்–தரும்
பாலின் நகைப்பும் ஒலித்ததுவே.

கோலம்

முற்றத்தில்'மாறு குழைந்திடவே–அங்கு
மொய்த்திட்ட குப்பையர் ஓடினரே!
மற்றந்தப் பத்திலே அப்பத்துவிரல்–பொடி
மாவில் கலைகள் விரித்தனவே.

சிற்சிறறும் பென்னும் உயிர்க்குலங்கள்–பொடி
தேடிக் குவிந்த திருக்குலங்கள்,
''கற்றனளே, கலே கற்றனளே!'' எனக்
கண்ணிரண் டுறியே நின்றனவே.

கொம்பிலே சிட்டு விழித்ததுவே–அந்தக்
கோதை நடையினைக் கண்டதுவே:
''அம்மவோ என்ன சுறுசுறப்பு!''என்றுதன்
'ஆசை அவளே' அழைத்ததுவே.

புதுக்கல்

முந்திக் குரல்தந்த காக்கையனுர்–அவள்
பூசிடும் ஏனப் பருக்கைகட்கே
வந்து தரையில் விழுந்தனரே–நெடு
வாயை நிறைத்தங் கெழுந்தனரே

நீர்தரு பீலி திறந்துவிட்டாள்–ஒளி
நிளும் கலங்கள் அடுக்கிவைத்தாள்:
வேரவள் இல்லறப் பூம்பயிர்க்கே–எனில்
வெற்றுக் கலங்களும் பூத்தனவே!

பொன்னுடல் நீரில் புதுக்கிவந்தாள்–ஒரு
பூமுகமோ, அது தேன்நிலவோ?
தன்னெழில் காணவும் நேரமுண்டோ–அன்பன்
தன்சுவை எண்ணிச் சமைப்பவட்கே?

இணைக் கிளிகள்

காலே எழுந்து முகமலர்ந்தே–வந்த
கட்டுடல் புன்னகைக் காரியவன்
சேலைக் கிளிஎதிர் வந்துநின்றுன்–அவண்
நீள்விழிக் கேதன்னைத் தந்துநின்றுன்

புன்னகை யாமொரு பூவெடுத்தாள்–மணம்
பொங்கிடும் காப்பியும் தான்கொடுத்தாள்
'என்கிளி யே'என முன்நடந்தான்–அவள்
'ஈதென்ன!' என்றனள்,–நின்றிருந்தாள்.

கோணல் சிரிப்பைக் குவித்துவைத்தாள்–இதழ்க்
கோடி விளிம்பென்னும் கிண்ணத்திலே!
நாணச் சிவப்பில் விழுந்தனவே–அந்தத்
தந்தச் சிலேபெற்ற கன்னங்களே.

'போங்கள்' எனக்கொஞ்சும் வாயிதழை–அவன்
பூட்டுவதோ கொள்ளே முத்தத்திலே?
தேங்கள் பருகிய கண்ணிரிண்டால்–அவன்
தின்னுவதோ அவள் கண்களையே!

வரப்போனன்

போக மனமின்றிப் போகலுற்றுன்–அவன்
போமெழில் கண்டவள் சாகலுற்றுள்!
வேக உலேவைத்த பொக்கரிசி–குரல்
வீசிக் குதித்தது குக்கரிலே.

பத்து மணியதை எண்ணலுற்றுன்–இந்தப்
பாருச் சிலேயிலும் கண்ணேயிட்டான்:
பித்தம் இழுத்தது வீட்டுக்குள்ளே–பணி
வீறு நடத்திற்று வேலேக்குள்ளே.

'எட்டு மணிப்பொழுது எவ்விதம்போம்?'–என்னும்
எண்ணச் சுழலில் அவனடந்தான்;
பட்டு மலர்களும் மாலேவரும்–அந்த
மாபெரும் இன்பத்தை மென்றிருந்தாள்.

மூலம்:—
ஸ்காந்தம் (சமஸ்கிருதம்)

தமிழாக்கம்
சீ. வி. சீதாராமையர்.

விந்திய மலை வளர்ந்த வர்ணனை

வியாச முனிவர் கூறினர் :...

1. ஒரு சமயம் மிக்க ஒளியுடன் கூடிய நரதர் நர்மதா நதியில் ரீராடி எல்லா உயிர்களுக்கும் எல்லா வற்றையுள்ளிப்பவனான ஓங்காரேசுவரனை வழிபாடு செய்து அப்பால் சென்று கொண்டிருக்கும்போது எதிரில் மக்களின் பாபங்களைப் போக்கும் நர்மதா நதியின் நீரினுல் பிரகாசிக்கும் விந்தியமலையைக் கண்டார்.

2. இந்தமலை அசையாப் பொருள், அசையும் உயிர்த்தொகுதி, என்ற இருவகையான பொருட்களின் செழிப்பினுல் நிலமகளை வசமாகி என்று அழைக்கக் காரணப் பெயராக அமையச் செய்தது.

3. மாமரங்களினுல் ரசத்திற்கு இருப்பிடமாகவும், அசோக மரங்களினுல் மக்களின் துக்கத்தைப் போக்குவதாகவும், பனை, மாவிலங்கை, கூந்தல்பனை, ஆலம், தேக்கு முதலிய மரங்களால், நிரம்பியதும்,

4. கிருஷ்ண, அகருமரங்களால் வான வீதியிலே பட்டினம் போலவும், ஸ்ரீபல மரங்களால் வனப்புள்ள பழங்களோடு கூடியதும், அகரு மரங்களால் ஏராளமான சம்பத்து நிறைந்ததாயும், கபித்த மரங்களால் குரங்குகளால் பொனனிறமும்,

5. வனலட்சுமியின் மார்பு பிரதேசம் போல விளங்குகின்றதும், ஒப்பற்றச் சுவையுடன் கூடிய கனிகளுடன் தொங்கிக் கொண்டிருக்கின்ற வாழை மரங்களாலும் அந்தமலை விளங்கிற்று.

6. வண்ண வண்ண வர்ணங்களுடன் பிரகாசித்து ஸ்ரீ தேவியின் விளையாட்டு மண்டபம் போல விளங்குவதும், நாரங்க மரங்களுடனும், நாவல், கொய்யா, நீர் நொச்சி முதலிய மரங்களாலும் அந்த மலை நிறைந்திருந்தது.

7. காற்றில் அசைந்து கொண்டிருக்கும் கங்கோலக் கொடிகளாலும், அல்லிக்கொடிகளாலும் மேல் விரிப்பை உடையதாயும், லவங்கக் கொடிகளின் அசைவுகளால், நாட்டியத்துடன் கூடிய மண்டபம் போல அம்மலை விளங்கியது.

8. மெதுவாக அசைந்து கொண்டிருந்த கற் பூரவாழை மரங்களின் இலைகள் வழிப்போக்கர்களை இங்கு வந்து இளைப்பாறுங்களென்று கைகளினுல் ஜாடை செய்து கூப்பிடுவது போல அம்மலை காணப்பட்டது.

9. ஆண் யானை போல விளங்குவதாயும், தேவதைகளுக்கு மிகப் பிடித்ததாகவும், மனிதர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தங்க நிற மலர்களுள்ள புன்னை மரங்களும், பூங்கொத்துக்களால் மயக்கத்தையுண்டாக்கும் மல்லிகைக் கொடிகளாலும்,

10. சிவப்புப் பழங்களுடன் நிரம்பி தனது அந்த ரங்கத்தை நேசத்துடன் வெளிக் காண்பிக்கின்றதோ என்னும்படியாக வெடித்த மாதுளம் பழங்களோடு கூடிய மாதுளை மரங்களாலும், மக்களேயில்லாத கானகத்திலே தனக்குப் பிரியமானவர்களைத் தழுவிக் கொள்ளுகின்றதோ என்னும்படியாக அந்த மரங்களின் மேல் படர்ந்திருக்கும் மாதவிக் கொடிகளுடன் கூடி அம்மலை விளங்கிற்று.

11. அனேத்து இடங்களிலும் தனது தலைகள் எல்லாவற்றினுலும் கோடி கோடி பிரம்மாண்டங்களைச் சுமந்து நிற்கும் அரவுக்கரசனான அனந்தனைப்போல, எண்ணிக்கையற்ற கனிகளுடன் அக்காடு முழுவதையும் மணத்தால் பொங்கி வழியச் செய்யும் அத்தி மரங்களின் வரிசைகளாலும் அம்மலை விளங்கியது.

12. காட்டு யானைகளைப் போல மிகப் பருத்துள்ள பலா மரங்களுடனும், கிளி மூக்கைப்போல மிகச் சிவந்த பலாசங்களாலும், தனது காதலியைப் பிரிந்ததால் உள்ள வேதனையையுணர்த்துபோலுள்ள பூக்களுள்ள பலாசமரங்களுள்ளதும், மெய்சிலிர்த்து, ஒன்றையொன்று தழுவிக்கொள்வது போலுள்ள கதம்ப நீப மரங்களுடனும், திராட்சைக் கொடிகளுடனும், மேருவின் சிகரம்போல மிக உன்னதமான கிளைகளுடன் கூடிய பிரியால மரங்களுடனும் (முராலம் மரங்கள்) பல்வேறு வகையான செடிகொடிகளுடனும் கூடிய அம்மலை காமமுடைய வர்களின் வீடுகளோ வென விளங்கியது.

13. மலேச்சாரங்களில் போட்டுள்ள குடிசை களேப்போல் உயரமாயும் மிகப் பெரியதாயு முள்ள ஆலமரங்களாலும், பூங் கொத்துக்களின் திரட்சியால் கொக்குகளால் நிறைந்தும் வெம்பலீ மரங்களாலும், இரப்பவருக்கு பிச்சை கொடுக்க கை நீட்டுகிறபோல அதிக கிளேகளுடன் கூடிய காமர்த் தம், கீரம், சிரிபில்வம், கரம்பகம் முதலிய மரங்களா லும் அம்மலே விளங்கியது.

14. ராஜ சம்பங்கி மொக்குகளுடனும், ஆரத்தி எடுத்ததுபோலத் தோன்றுவதும், இலவம்பஞ்சு மரங் களேப் போலும், தாமரை மலர்கள் நிறைந்த தடாகத் தை மீறியதோ என்னும்படி அம்மலே இருந்தது.

15. சில இடங்களில் அசைந்தாடும் இலேகளுள்ள அரச மரங்களாலும், சில இடங்களில் பொன்னிறப் பூக்களால் விளங்கும் செந்தாழைச் செடிகளாலும், சில இடங்களில் மாலதி மரங்களுடனும், மற்றும் சில இடங் களில் நத்தலால மரங்களுடனும் அந்த ஒப்பற்ற மலே நிறைந்து பொலிந்தது.

16. இலஞ்சி, பந்து ஜீவன், பத்ர ஜீவன் முதலிய மரங்களால் விளங்குவாய், கிந்துகம், இலுகுதி (புங் கம்) கருணே முதலிய பலவித மரங்களாலும் நிறைந்து கருணுரசத்திற்கு இருப்பிடமபோல் அம்மலே சோபித் தது.

17. எப்பொழுதும் இடைவிடாமலிருப்பவனும், சர்வாத்மனுயும் விளங்கக் கூடிய மகேசனே முதலுக் கள் நிரம்பிய கைகளினுல் பூசிப்பவன் போலவும் மதுர மரங்களிலிருந்து உதிகின்ற பூக்களால் பூசிப்பவன் போலவும் அம்மலே பரசன் விளங்கினுன்.

18. ஸர்ஜ்ஜ, அர்ஜுன, அஞ்சன மரங்களால் நிரம்பிய சாமரங்களேக் கையில் கொண்டுள்ள தென்னே, கர்ஜமம் முதலிய மரங்களால் இடைவிடா மல் மேல் பாகத்தில் குடைபிடிப்பதைப் போல அம் மலேயரசு அழகாக இருந்தது.

19. எண்ணற்ற வேம்பு, மந்தாரை, கோவித பிரம், பாடலி, புளி, பேரரே, பப்ளிமாஸ், கரகாடம், சீகண்டம், ஏரண்டம், திப்பிலி, வகுளம் (மகிழமரம்), திலகம் முதலிய மரங்களால் திலகமிடப்பட்ட நெற்றி யைப்போல் விளங்கிக்கொண்டு அட்சி, ப்லட்சு, சல் லலி, தேவதாரு, அரித்ருமம முதலிய எப்பொழுதும் பழங் களேயும், பூக்களேயும் உள்ளதான மரங்களுடனும், கொடிகளுடனும் அம்மலே விளங்கியது.

20. ஏலக்காய், கிராம்பு, மிளகு, மரங்களேச் சுற்றிக் கொண்டும், நாவல், மா, பலாத, சீலேஷ் மாதக, ஸ்ரீபர்ணை முதலிய மரங்களாலும், கனிகளும், மலர்களும் உள்ள அடர்த்தியான மரங்களாலும், சங்க வனங்களாலும், சந்தனம், செஞ்சந்தனம், கடுக்காய், கர்ணிகாரம், தானிக்காய் முதலிய மரங்கால் அலங்க ரிக்கப்பட்டதாயும், திராட்சை, நாகவல்லி, கணுவல்லி, மல்லிகை, பூதிகை, குந்தம், மதபந்தீ முதலிய கொடிக ளால் நறுமணம் உடையதாய் மரங்களின் மேல் ஏறிக் கொண்டும், அதைச்சுற்றிக் கொண்டும், அசைந்து ஆடும் கொம்புகளுடன் நிரம்பிய மாலதி முதலியவை களால் அலங்கரிக்கப்பட்ட மரங்களும் உண்டு, அனேக ரூங்களே அடைந்து கேளிக்கைகளுடன் விகோயாடுவ தற்கு வந்த கிருஷ்ணனே எவ்வெண்ணும்படியாக அந்த விந்தியமலே விளங்கியது.

21. அனேக மிருகங்களால் நிறைந்தும், பலவித பட்சிசுகூட்டங்களால் சப்தம் பொருந்தியும், வித விதமான நதி, குளம், பள்ளங்களுடன் சுற்றி வருவ தாயுமிருப்பதால் செல்வத்தையுடைய சொர்க்க பூமியைவிட்டு மிக அதிகமான போகங்களே அனுப விக்க இச்சை கொண்டு வந்திருக்கின்ற தேவதை களேனிருப்பிடம்போல் அந்த மலே காணப்பட்டது.

22. இலே, பூ இவைகளுடன் அர்க்யத்தைக் கொடுப்பதும், மரங்கள் "ஓ" என்று சப்தமிடுவதால் தூரத்திலிருந்தே வரவேற்பைச் சொல்வதுபோல் உள்ள அந்த மலேக்கரசன் ஆயிர சூரியர்களின் பிர காசத்தையுடையவனும், ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற தேவமுனிவரான நாரதரைக் கண்டு அவரை எதிர்கொண்டு தூரத்திலிருந்தே வரவேற்கப் புறப்பட்டான்.

23. அந்தப் பிரம்மபுத்திரரின் திவ்விய காந்தி யால்குகைகளில் உள்ள இருட்டு போக்கப்பட்டு, அந்த மலேக்கரசன் அங்கு வந்து கொண்டிருக்கும் அவரைக் கண்டவுடனேயே தன் மனதிலடங்கியிருந்த இருளெ யெல்லாம் போக்கப்பட்டவனுனுன்.

24. பிரம்மபுத்திரரான அந்த நாரத முனிவரின் ஒளியினுல் விந்திய மலேக்கு மெய் சிலிர்ப்பு ஏற்பட் டது. அவன் நாரதரை விசாரிக்கத் தொடங்கினுன் மிக்கக் கடினமானவனுக விருப்பினும், அவன் அந்த சாதுவின் தரினப் பிரபாவத்தால் மிருதுத்தன்மையை அடைந்தான்.

25. அப்பொழுது நாரத முனிவர் அந்த மலேமன் னன் அசைவு, அசைவற்ற தன்மை ஆகிய இரு ரூப களிலும் மிருதுவானவனுக இருப்பதைக்கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தார். பெரியோர்கள் வணக்கத்துக்கு மனதைப் பறி கொடுத்துவிடுவார்களல்லவா?

26. வீட்டிற்கு வந்தவள் மகாத்மாவோ, சாமான்யனோ, வீட்டின் தலேவன் அவனே வணக்கத் துடன் கண்டால் மகாத்மாவாகவேயாகிருன். இந்த மனுே நிலேயில்லாதவன் ரவ்வளவு உயர்ந்தவனுகிலும், உண்மையில் உயர்ந்தவனல்ல.

27. பிறகு விந்தியவேந்தன் தான் மிதந்த உயர மாகவிருந்தாலும் தன் வீட்டிற்கு வந்த அந்த மா முனிக்கு சிரந் தரையில் படும்படியாக வணங்கினுன்.

28. அம்மாமுனிவன் அப்போது அவனை தன் னிரு கங்களாலும் தூக்கி நிறுத்தி, ஆசி கூறி அக மகிழ்வெய்தி அவனளித்த மனதிற்கும் மேனமையான, உன்னதமான ஆசனத்தை யடைந்தமர்ந்தான்.

29. அப்போது, அந்தப் பருவத அரசன் தயிர், தேன், நெய், ஈரமுள்ள அட்சதை, அருகம்புல், எள், தருப்பை நுனி, மலர், என்னும் எட்டுப் பொருட்களு டன் கூடிய அர்க்யத்தை அவருக்குக் கொடுத்து உபசரித்தான்.

30. அர்க்யத்தைக் கொடுத்த பிறகு அவன் தன் னிடம் வந்திருக்கும் தேவ முனிவருக்கு அந்த நேரத் துக்குச் செய்யப்படவேண்டிய சேவைகளோச செய்து, அவருடைய கரிப்பைப் போக்கிப் பிறகு வணக்கத் டனும், கௌரவத்துடனும் தலைவணங்கி இவ்வாறு சொன்னான்.

31. "ஓ தேவமுனியே! இப்போது உம் பாத தூளிபட்டதால் என் ராஜோ குணம் போக்கப்பட்டது. உம்மைத் தீண்டியதால் ஏற்பட்ட ஒளியினுல் என னுள் இருந்த அஞ்ஞான இருட்டும் போக்கடிக்கப் பட்டது.

32. ஏ முனியே! இன்று என்னுடைய சகல ஐசுவரியமும் பயனுடையதாயிற்று; இனறைய நாளே நல்ல நாள். நான் போன பிறவியில் செய்த நல் வினை கள் யாவும் இன்று பலனுடையதாயிற்று.

33. ஏ! நாரத முனிவரே! இன்றைக்கு என் இனத்தைச் சேர்ந்த இதர குல பருவதங்களைவிட, எனக்குள்ள பூமியைச் சுமக்கும் தன்மை யதிக தும், அவை மேனமையடைந்துள்ளது" எனறு சிறிது பெருமூச்செறிந்தான். அச்சத்தினுல் தவிக்கும் மனதுடையவனுய் மீண்டும் கூறினுன். "எல்லா அர்த்தங்களிலும் மறிந்தவர்களில் முதன் மையான நாரதரே! உம்முடைய இந்தப் பெரு மூச் சுக்குக் காரணமென்ன? உமக்கு மூன்று லோகங் களிலும் தெரியாதது யாதொன்றுமில்லை எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். கடந்த காலம், நிகழ் காலம், வருங்காலம், ஆகியவற்றின் வரலாறுகள் உமக்குத் தெரிந்தேயிருக்கும். என் விஷயத்தில் உங்களுக்குத் தயவிருந்தால் அதனை எனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று உம்மை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

34. ஏ! முனியே! உமது வரவினுல் உண் டான மிக்க மகிழ்ச்சியினுல் சொற்களே வெளி வராதிருந்தாலும், ஒரு வார்த்தை மட்டும் சொல்லு கிறேன். முன்னோர்கள் புராணங்களை யறிந்தவர் கள். இந்தப் பூமியைத் தாங்கும் சக்தியை மேரு முதலிய மலைக கூட்டங்களுக்கேற்படுத்தி வருணிக கிறார்கள். ஆனுல், நானை இந்தப் பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கிறேன் எனறு சொல்லுகி றேன்.

35. சாட்சாத் பரமேசுவரனின் மனைவியான பார்வதிக்குத் தந்தை யென்பதாலும், கௌரிக்குக் குரு வென்னும் பெயரையடைந்து பருவதங்கள் எல்லாவற்றுக்கும் நாயகன் என்றும், தவிர பசுபதி அங்கிருப்பதால் இமவான் நல்லோர்களால் மதிக் கப்படுகிறான்.

36. தங்கம் நிரம்பியிருப்பதனுலோ, ரத்தி னங்கள் நிரம்பியிருப்பதனுலோ தேவதைகளை வரும் வாசம் செய்வதாலோ மேரு பருவதம் மரியாதைக்குகந்தவன் என நான் கருதவில்லை.

37. சிறுவர்கள் விளையாடுவதில் தரையில் விழுந்து, புழுவதைப்போல், புதியதாய் முளைத் துள்ள நூற்றுக்கணக்கான சிறு மலைகளும், குன்று களுமிருக்கின்றன. அவைகளெல்லாம், அந்தந்த விடங்களில் இருக்கும் மனிதர்களுக்கு மதிப்புடை யனவே.

38. மந்தேகர்கள் என்னும் அரக்கர்கள் தேகம் தொடுவதால் உதயகிரி தன் சொரூபம் நாசத்தையடைந்து சூரிய உதயகாலத்தில் மட்டும் உயிருடனிருக்கிறது. எவ்வித மூலிகைகளு மில்லாமல் நிடத மலையும் கனியிழந்து போயிற்று.

39. நீலமலையும் இருட்டிற்கு இருப்பிடமாகப் போயிற்று. மந்தரமலையோ ஒளியிழந்ததாக விருக்கிறது. மலையமலையோ பாம்புகளினிருப்பிடம். ரைவத மலையோ செல்வம் என்பதை என்ன வென்றே யறியாது.

40. இன்னும் ஏம கூடம், திரிகூடம், முத லிய மலைகள், தங்கள் பெயரிலுள்ள "கூட" என்ற பதத்தாலேயே கபடமுள்ளவைகள் என்பது வெளிப்படை.

41. கிட்கிந்தை, கிரெஞ்சம், சஹ்யம் முத லிய மலைகளின் பெயர்களே அவைகளால் பூபாரத் தைத் தாங்கும் சக்தியற்றவை என்று சொல்லா மல் சொல்லுகிறது.

42. இவ்விதம் சொன்ன விந்தியகிரியின் வார்த்தையைக் கேட்டு நாரதர் தன் மனதிலேயே இவ்வாறு எண்ணத் தொடங்கினுர். எல்லை மீறிய கர்வம் பெரும்தனமைக்கு இலட்சணமல்ல. ஸ்ரீசைலம் முதலிய பருவதங்கள் மிகச் சிறியவை யானுலும், அவ்வளவு செல்வத்துடனில்லாமலிருந்

தாலும், அவற்றின் சிகரங்களே கண்டபோதே நல்லோர்களுக்கு முத்தியைக் கொடுக்கக் கூடியவை.

43. இப்போது இந்த விந்தியத்தின் பலத்தைப் பார்க்கவேண்டுமெனச் சிந்தித்து, நாரதர், அதைப் பார்த்து, ஐயா! விந்திய வேந்தனே! எல்லா மலைகளின் ஆற்றலே வருணித்து நீ கூறியது மிகவும் சரியானது. அது உண்மையுங்கூட. ஆனால், பருவதங்கள் எல்லாவற்றிலும் பருவதேந்திரன் எனப்படும் அந்த மேரு பருவதம் உன்னை மதிப்பதில்லே. இதற்காகவே நான் பெருமூச்சு விட்டேன். இதை மூடிமறைக்க முடியாமல் உனக்குத் தெரிவிக்கிறேன். ஆனால் என்னைப் போன்றவர்களுக்கு இந்தச் சிந்தனை ஏன்? உனக்கு மங்களமுண்டாகட்டும். நான் போய் வருகிறேன் என்று கூறி ஆகாய வழியாகச் சென்றார்.

44. நாரதமுனி அவ்விதம் புறப்பட்டுப்போன பிறகு விந்தியம் தன்னேத்தானே நிந்தித்துக்கொண்டு, மனமுடைந்து, வீண்கவலே கொண்டிருந்தது.

45. விந்தியன் சொன்னன். — சாத்திரம், 64— கலேகள் இவற்றின் ஞானம் இல்லாதவன் வாழ்வு நிந்திக்கப்பட்டது. உத்தியோகமில்லாதவன் வாழ்வையும் நிந்திக்கப்பட்டதே. பங்காளிகளுக்குத் தோற்று கைகட்டுபவனின் வாழ்வும் நிந்திக்கப்பட்டதே. மனே விருப்பங்கள் நிறைவேறுதவனின் வாழ்வும் நிந்திக்கப் பட்டதே.

46. வி ரோ தியினுல் அவமானத்திற்குள்ளான வன் பகலுணவை எவ்விதம் செய்கிறனே! இரவுவ் விதம் படுக்கிறனே! ஜனங்களற்றவிடத்திலும் எவ் விதம் சாந்தியடைவனே! ஆச்சரியமாகவுள்ளது.

47. ஐயகோ! இப்போது என் மனேவருத்தம் என்னேச் சுடரொப்பதைப்போல காட்டுத்தீயும் அவ் விதம் என்னேப் பாதிக்கவில்லே.

48. சிந்தாகுலம் என்பது பயங்கரமான நோய் என்று முன்னோர்கள் சொல்லியுள்ளது சரியாகவிருக் கிறது. இது மருந்துகளாலோ, அல்லது உபவாசத் தாலோ அன்றி மற்றெதனுலும் நீக்கக்கூடியதல்ல.

In the 'Mahabharatha,' there is the clash of ideals at every stage; whether God or Mammon will come out successful in the trials of life is the question that is raised in the epic. Duryodhana seeks the might of arms for his protection, because he loves much the earthly kingdom! But, Arjuna takes refuge in the Grace of the Lord, for he knows that the Lord is the Giver and Taker of all things we love on earth! Here the Grace of the Lord wins and the material might crumbles into ruins!

The Gurukshetra battle field simbolizes the two mighty contending forces, inequity and righteousness.

Bhisma, Dhrona and Vithura know full well that Duryodhana is on the wrong track. Dritharashtra is also conscious of the treacherous step on which his son, Duryodhana has embarked. Learned as he is, saturated as he is with the Dharama shastras, his infatuation and unbridled love for his son have blinded him to the realities of of the situation. Bhisma and Dhrona are convinced of heinous crime Duryodhana has committed. Still, they fight on his side only for the simple reason that they have basked in the sunshine of his favour! Vithura, on the eve of the battle, breaks his mighty bow, perhaps this is a prelude to the disarmament of our modern days!

Allmost all the heroes of 'Mahabharatha' are born old! The intellectual vacillation which is quite characteristic of Hamlet is visible in almost all the characters of 'Mahabharatha'. Perhaps, Vyasa has fashioned a thousand Hamlets! When Draupathy is dragged into the Council halls, no body rushes to her help; each one is worried about the pros and cons of justice!

The one heroic soul of action is Abimanyu (son of Arjuna) who has been mown down in the flower of his youth!

One witnesses in the 'Mahabharatha' the mysterious workings of Fate, which tend towards a noble end. The Greek conception of Fate is quite different from ours. There is something malignant so far as their conception of fate is concerned; but, ours is a benificent working of the Will of Providence to which the whole creation moves!

The spirit of vengeance, the machinations of the force. the dastardly deed of the enemies, the evil-planned gambling the deceit, the attempted rape, the arson, in short, all the hideous and diabolic forces come into play. One begins to think ill of humanity which has descended to the depths of moral degradation! Krishna, who has been the Wielder of the destinies of Duryodhana and Arjuna, knows that man has to pass through the valley of the shadow of death!

The optimism is not something born of bank-balance, but born of the travail of the spirit which welcomes darkness and death! Against the dark background of human despair, there shines the rainbow-world of love, faith and justice!

The 'Sakunthalam' of Kalidasa is based on an episode in the 'Mahabharatha'. The story that is handled by Kalidasa differs in several aspects from that of the original. This is like any one of Shakespeare's romantic comedies! It starts with physical love; later on, it has been purged of all its grossness. When put in the cauldron of suffering, all its dross is removed and it has all the charm of the pure, unalloyed gold !

It would have turned into a heart-rending tragedy had it not been for the play of the accident in the play! The unearthing of the ring lodged in a fish saves Sakunthala, but the kerchief that has been dropped by Destimona proves her utter ruin!

'Sweet are the uses of adversity!'. It is through adversity that a man's character is mellowed. In 'As you like it' and as well as in 'King Lear' one can trace the influence of adversity!

Lord Krishna says that the good will never come to grief! This profound statement is illustrated in all our writings.

In the character of Sakunthala, we find the rare physical charm of a Menaka and all the strength and might of the penance of Visvamitra!

The relationship between a mother and a son has not found its expression in Shakespeare. Bharatha playing with the lion's cubs and his mother Sakunthala whatching them, cannot but kindle our imagination and arrest our attention!

Just to redeem the character of Dushyantha who would have become a heartless and dissolute lover, Kalidasa has introduced the curse of Durvasa!

Sakunthala takes leave of flowers and creepers! Her sympathy with, and affection for them are part and partial, of our fundamental belief in Universal Spirit, which runs through the whole creation. Such a treatment of nature endowed with all human emotions and feelings does not fall under the western notion of pathetic fallacy! What animates man is the self-same spirit that throbs through all life !

We find the growth and the development of Sakunthala's love in a sylvan scene. Though the painted pomp and the intrigue of a court life offer impediment to her union, with her Lord, they cannot triumph over her indomitable spirit and steadfastness of purpose. It is Dushyantha that seeks her union with him in the hermitage of Maruchi !

Our modern writers, in their fervour of depicting life as it is, merely imitate western conceptions of art and life! In fact they go against the very fundamental concept of our culture! They forget that imitation which goes against the grain of our genius is, indeed death! What is rooted in our culture alone, persists through ages! An exotic plant is likely to wither and fail!

BHARATI FINDS HIS "GURU"

★

- V. G. Srinivasan -

It was in 1906 that the Indian National Congress held its annual sessions in Calcutta. It was unique in its own way as it represented the renascent spirit of nationalism which the country as a whole was zealous about. Dadabai Naoroji presided over the sessions. He was a grand old man of eighty then. (This gentleman – patriot had already presided over the Congress sessions previously held at Calcutta and Lahore in the years 1886 and 1893 respectively.) This remarkable man gave to the country the catch-word Swarajya, meaning self-government, which had an immediate magical and charming effect upon the people at large. The people were already being carried away emotionally and rightly by the National Movement which had chosen as its slogan, at once effective, thrilling and potent, the Vende Mataram (Obeisance to Mother).

Sri C. Subrahmanya Bharati, our Tamil bard also went to Calcutta to attend the Congress sessions. He was a delegate and a journalist as well. He was editing then India, a weekly in Tamil and Bala Bharat, a monthly in English. The sessions were over. Knowing that Sister Nivedita was living in Dumdum, a suburban place near Calcutta he went there to see her. The 'sister' Margaret Elizabeth Noble — an Irish woman — was an adopted daughter of Swami Vivekananda. With a beckoning smile in her beaming face she extended her arms in a greeting fashion to welcome our Tamil poet. "May be she is a disciple of Swami Vivekananda! What if? Even then she is a foreign woman; and a white woman too!" — Did then Bharati think likwise? Nivedita probed deep into our poet's heart and understood the hidden thoughts. Immediatly she observed, "My dear son! Cast away the thought of differentiation from your heart. Give up the uncivilized distinctions, which divide and demarcate man from man, such as caste, colour creed and clan and religion and faith. Do have love only in your heart. There is a great and bright future ahead for you. You are sure to become a hero, a historic person charged with light divine". And added, "Dear, aren't you married yet?"

Bharati had to hang his head bashfully. He yaid, "Mother! I am married and we have a two sear old baby girl."

"Very glad! Then why did not you bring your wife also with you?"

"The habit of treating one's wife as his equal and bringing her with him to public places is not prevalent in our parts. To confess women are not treated as equal to men in our places. Furthermore, what is the use of bringing my wife to the congress sessions. How and what will she benefit from such a visit?"

On hearing this from Bharati Nivediat became almost furious.

"O, son! Many men are educated. But then they are ignorant and madly selfish. They consider women as their slaves. A few like you are intelligent. Even they are also immersed in ignorance and do not concede equal rights and privileges to women and give them proper education. Then how do you expect our land to make any progress? How can one half of society expect to achieve freedom when the other half is under slavery? Your men throw your women into oblivion and without their knowledge want to gain high status. Such an attempt can only be vain. And such a thing can and will never happen. Don't you know what our holy scriptures proclaim? 'Where women are worshipped ther' come and dwell the celestial beings,' they say,'e She thus chided Bharati with fondness. Then she dwelt at length upon 'the place of women in the progress of civilization.' At last she said, "All right! Let bygones be bygones. Hereafter do not consider your wife as a separate entity. You better take her to be your left hand. Think of her as you would a deity and pay her proper respect."

Bharati promised to do accordingly. He then was thrilled through and through. The very look of his 'guru' taught him things wonderful and hitherto not at all experienced. This encounter had an absolute magical effect upon him. An excellent transformation came over him. He saw before him the grand and great vision of Mother India—Bharat Mata! Bharati became a new man with a new vision. From then on every one of the other sex was Para Shakti to him.

At the time of parting Nivedita gave Bharati a leaf, to the size of a banyan leaf, which she had brought from the Himalayas. She blessed him with all her heart. Thanking his friend, philosopher, guide and preceptress, Bharati came back to Madras. Bharati kept that leaf with due deterence to the end of his life guarding and cherishing it as a sacred relic and 'guru prasad'.

Whenever Bharati began to narrate what all he experienced as he received the good teachings -upadesa—from his preceptress, the Mother, two stanzas from St. Tayumanavar's 'The Joy of Beatitude' (Ananda-k-Kalippu) came very handy to him.

"O, how to repeat 'the word' He said to me? He played a trick on me and made me remain lonely and silent. He gave me such bliss and solace that I had never experienced before and thus He held consummate sway over me.

He bade me to cling to Him fast casting away all other ties and attachments. And when I caught hold of Him I benefited a lot. How to express that gainful state? He gave out to me certain strange things which are quite unutterable and out of place here."

Instead of 'He' Bharati put the word 'she' to give a correct connotation and a realistic atmosphere.

When our Bharati had the 'darshan' of Sister Nivedita he was a man of twenty four years and she a woman of thirty nine years.

காஸக்ஸ்தானில் இந்தியக் கலாச்சார விழா

அல்மா அதா, அக்டோபர் 6.

இந்தியக் கலாசார விழா இன்று இங்கு முடிவடைந்தது. இவ்விழாவை அறிவிக்கும் பதாகைகளும் தோரணங்களும், காஸக்ஸ்தானிலுள்ள தியேட்டர்களிலும், பொழுது போக்கு மன்றங்களிலும், ஆலேகளிலும் பத்து நாட்களாகக் காணப்பட்டன. இங்கு வந்த இந்தியத் தூதுக்குழுவினர் கலே நிகழ்ச்சிகள் நடத்தினர். அல்மா அதாவிலும், ஏனைய காஸக் நகரங்களிலும் உள்ள தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுத்துறையினரைச் சந்தித்தனர்.

அயல்நாடுகளுடன் நட்புறவு கொள்ளும் காஸக் கழகம் இன்று இந்தியத் தூதுக் குழுவுக்கு வரவேற்பு அளித்தது. கேரள எழுத்தாளரான தேவதாஸ் பேசுகையில், "காஸக் கலாச்சாரத்தின் அற்புத சாதனைகளை நாங்கள் கண்ணுரக் கண்டோம். சோவியத் மக்களுடன் உரையாடுதல், கலே—இலக்கியம் பற்றித் தெரிந்து கொள்ளுதல் இவையெல்லாம் இந்திய மக்களுக்கும் காஸக் மக்களுக்கும் இடையே நெருங்கிய உறவு களை ஏற்படுத்துகின்றன. ஆசிய மக்கள் முன்னேற வேண்டும் என்ற வேட்கையைப் பிரதிபலிப்பதில் காஸக் இலக்கியத்திற்கும் இந்திய இலக்கியத்திற்கும் இடையே நிரம்ப ஒற்றுமை உள்ளது" என்று கூறினர்.

தெய்வ எழுத்தாளன்

புலவர் முத்து. வேங்கடேசன்

தெய்வ எழுத்தாளன் தேர்ந்த மனங்கொண்டு
மெய்மை உணர்வேந்தி மேதினியை வாழவைக்கும்
வண்ணக் கருத்தொளிர வார்த்தெடுத்த பொற்சிலையே
எண்ண எழுத்தாகும்! எண்ணரிய இன்பங்கள்
அள்ளி வழங்குகிற ஆரமுதச் சொல்லழகன்
காட்டுகின்ற பாதையிலே கல்முள் கிடையாது!
வாட்டுகின்ற சோர்வில்லை! வளமே மிகவுண்டு!
நாட்டின் நலத்தை நறுஞ்சொல்லில் காக்கின்ற
வேட்கை எழுத்தாளன் வித்தகத்தின் பொன்னுருவம்!
மாற்றுக் குறையாத மாணிக்கச் சோதியெனப்
போற்றும் எழுத்தாளன் பூலோக நாயகனும்!
தன்துன்பம் காணுமல் தாயகத்தின் வாழ்வுக்குத்
தன்னின்பச் சொல்வழங்கும் சான்ற தியாகியவன்!
சொல்லால் உலகினையே சொர்க்கமாய் மாற்றுகிற
வல்ல எழுத்துடையான் வாழ்வே எழுத்தாகும்!
எழுத்தில்லை என்றுல் இதயம் வளராது!
எழுத்தில்லை என்றுல் உலகம் உயராது!
எழுத்தில்லை என்றுல் எழிலே கிடையாது!
எழுத்தாளன் வாழ்ந்தால் எழுத்தின் எழில்வாழும்!
எழுத்தின் எழில்வாழ்ந்தால் இப்பெரிய மண்வாழும்!
வறுமைப் பிணியகல வளமை அணிதிகழப்
பெருமைச் செயல்வளரப் பேதம் மறைந்துவிட
எழுத்தின் தலைமகனே எழுத்தாள தெய்வத்தை
வழுத்துவோம் நெஞ்சேநீ வா!

நானென்ற ரகசியம்

(கே. ஆர். பசுபதி)

வேதங்களின் பிழிவு!

உபநிடதங்களின் சாரம்!

கலாச்சாரத்தின் தொட்டில்!

நாகரீகத்தின் கட்டில்!

சக்தியின் சக்தி!

அறிவின் ஊற்று!

இவற்றின் மொத்த வடிவமே கீதையென்பது பேரறிஞர்களின் கூற்று! நேற்று—இன்று—நாளை—முக்காலங்களிலும் அது முக்கனிச் சாறு!

வித்தகர்கள் போற்றும் அந்நூலேப்பற்றிய சிந்தனையிலே நெற்றியைத் தாக்கினேன். அது விம்மியது. மேலும் தாக்கினேன். ஒரு வலம்புரிச் சுற்று! ஒரு நாதம்! சொக்க வைக்கும் வேதம்! அது புதுமை! அப்புதுமை பதுமை யானது! "கீயாரென்றேன்." அது "தான யார்" என்றது!

"நான்" என்ற எண்ணம் என்னை கீதையிலே மேலும் உலவ அழைத்து! உலவினேன்! குலவினேன்!

தலங்கிய இன்பத்துளிகள் சில! இலங்கிய தூய மணிகள் பல! வழங்க விரும்பியபோது இந்தச் சில வரிகள்!

"நான் யார்" என்ற வான் முழக்கம் யுகயுகமாகக் கேட்கிறது! அப்போது சில மின்னல் கீற்றுகள் தோன்றியதுண்டு! அதிலே ஒரு மின்னல் கீற்றைப்பற்றிச் சென்ற வினுடி நேரத்தில் விழுந்த கனிகளைத் தருகிறேன்! கீதை ஒரு விடி விளக்கு!

அது மறை விளக்கு. இறை வெளிச்சம்! கறை படிந்த நாம் அதையேத் தேடிச் செல்வோம்! அதற்கே பிறவி!

சுருக்கமாகச் சொல்லும்போது "நான்" நரன்! "நான்" தாடவேண்டிய இலக்கு நாராயணன்! இதுவே அனைவருடைய வாழ்க்கை வட்டம்!

இந்தக் கீதையென்ற வட்டத்துக்குள்ளே பல பாத்திரப் படைப்புகள்!

இதிலே, முதலில் திருதராட்டிரன்! இவனுடையது ஒரே கேள்வி! அவலக்குரல்! துயரகீதம்! இந்திரியங்களைக் கட்டுப்பாடற்ற போக்கில் விட்டு, அழிவின் உச்சியில் நின்று கொண்டிருக்கும்போதும், இருண்ட நெஞ்சினனுக வாழ்கின்ற அந்தகன்!

புலன்வழி மனதை ஓடவிட்டு, பிரபஞ்ச காட்சிக்கு மேலெதுவும் கிடையாதென்ற நிலையில், தனது என்ற பிடிப்பு நீங்காத, ஆசையின் சுயதலத்தின் துடிப்பின் பிரதிநிதி அவன்! புறமனதின், ஸ்தூலமான மனதின் பிரதிநிதி!

இவன், எழுப்பிய முதல் கேள்வி! ஒரே கேள்வி! இதற்கு சஞ்சயன் விடை தருகிறான்! இவன் பகுத்தறியும் மனதுக்கு, சரியான மனதுக்குப் பிரதிநிதி. இவன் பாரதப்போரைக் கூறும், நிகழ்ச்சிகளை உள்ளது உள்ளபடி கூறும் நிருபர்! அந்த நிருபர் சேகரித்துச் சொன்னதை ஒட்டு மொத்தமாக நாற்பத்தியொன்பது செய்திகள்! நாற்பத்தியொன்பது கவிதைகள் தான்!

அந்தக் கட்டுக்கோப்புக்குள்ளேயே கண்ணனுக்கும், பார்த்தனுக்கும் நடந்த பேச்சு, வார்த்தைகள் அடங்கியுள்ளன. அதுவே பாரோர் புகழும் கீதை. வரலாற்றின் மிக முக்கியமான கட்டத்தில், உலக நாடுகளின் தலைவிதியை நிர்ணயிக்கும் மிக நெருக்கடியான நேரத்தில், நாம் வாழும் இந்தப் பூமியில் அதற்கு முன் கண்டிராத பெரிய போராட்ட மேகங்கள், குமுறிக்கொண்டிருக்கும் வேளையில் ஒலித்த வேதம்! கீதை!

இந்தக் கீதையின் துவக்கம், வீரருள் வீரன், சீலத்தின் நிலைக்களன், பார்த்தனின் துயரக் குரல் தான்.

போர்க்குணம் மழுங்கி, சக்தியை மறந்து, சுபாவத்தை இழந்து, தீனனுக்கு, கண்ணபுரத்தை நழுவவிட்டு நிறகிறான். போரின் விளைவு! அதனால் ஒடும் ரத்த வெள்ளம்; பிணக்காடுகள்! அதனுல் விளையும் உலகத்தின் சாவு, சீர்குலைவு! இவைகளை அனைத்தும் மாறச் செய்தன.

அவன் குரல் கம்மியது. அவன் சொன்ன கருத்துக்கள், கீதையில் ஒளிவீசும் அந்தச் செய்தியைப்பல முறை படிந்தும் பார்க்கவேண்டியதென்றும். மிக உயர்ந்த, கம்பீரமான கொள்கையது. போரின் விளைவுகளை எதிர்த்து, ஒப்பற்ற, விழுமிய கருத்துக்களே அவனுடைய சொற்களில் சுழன்று வருவதைக் காணலாம்.

பரந்த நோக்கும், ஒப்பற்ற வீரம், செயல்திறன், உன்னத கொள்கைகள் இவற்றின் மொத்த உருவமாகப் பார்த்தீனைப் படம் பிடித்துக் காட்டுகின்றது அவனுடைய வர்ர்ணைகள்! இருந்தபோதிலும், உடைந்துபோன உள்ளத்துடனும், வலிகுறைவுன் போல, துயரச் சுழலில் சிக்கித் தவிப்பதையும் காணலாம்! எது சரி, எது தப்பு என்று தீர்மானிக்க முடியாமல் இருட்டில் தழுவுகின்றன் - மறம் மலைபோல் எதிரே தோன்ற தட்டி நிற்கிறது. அறம் இங்கே அழுகின்றது! நீதி நடுக்கத்துடன் நிற்கிறது! எதிரில் அந்தி ஆர்ப்பாட்டம் செய்கின்றது. மறம் ஒழிய வேண்டும். அறம் அங்கே கொலுவிருக்க வேண்டும். அறம், மறத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்த வேண்டும் ஆகவே, அவன் அத்தகான செயல்முறையை நாடுகிறான். அவனுடைய ஒப்பற்ற நண்பனும், சாரதியுமான கண்ணனே நாடுகிறான். அதுவே, கீதைக்கு அஸ்திவாரமாக அமைகின்றது. பார்த்தனின் மன நெகிழ்ச்சியும், மருட்சியும், அது தெளிந்து உண்மையுணர்ச்சி பெற்றதுமாக பார்த்தனின் கருத்துக்கள் எண்பத்து நான்கு பாடல்களாக கீதையில் ஒலிக்கின்றன.

எடுத்த எடுப்பிலேயே ஒலிக்கும் திருதராட்டிரனின் முதல் வினுச் செய்யுளோ பன்முறை பயில வேண்டும். அதன் பின்னரே, சஞ்சயனின் மன நிலைக்குத் தெளிவான விளக்கம் பெற முடியும்.

திருதராட்டிரன், சராசரி மனிதனின் பிரதிநிதி. புலன்களோ, அதன் வழி செல்ல விட்டு, அறியாமையில் ஆழ்ந்து, அவதிப்படும் மனிதரின் பிரதிபிம்பம் அவன்! அவனுடைய வாசகனாக இந்தப் பிரபஞ்சத்தில் இன்றும் ஏராளம்! ஏராளம்! இந்த மனம், சரி எது என்பது புரியாமல், அறைவிட ஆழமான உள்ளத்தை, உணர்ச்சியைத் தொடுகிறது. அது சில தகவல்களைத் தருகின்றது. இந்த நல்ல மனத்தின் பிரதிநிதியே சஞ்சயன். இவனோடு போன்றோரும் இன்றும் உளர். சஞ்சயன் புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, மனதையடக்கிவைத்துள்ள மனிதர்களின் பிரதிநிதி எனக் கூறலாம்.

பார்த்தனே மனிதாபிமான மிக்கவர்களுக்கு, சமான வருமேனிகளுக்கு, உன்னதமான, நேசபக்தர்களுக்கு, உயரிய லட்சியங்களுடையவர்களுக்கு ஒரு பிரதிநிதியாகக் கூறலாம்.

நெருக்கடி மிகுந்த வேளையில், அவர்களுக்கும் சில ஊசலாட்டங்கள் வருவதுண்டு. தடுமாற்றம் தோன்றுவதுண்டு. சோர்வுமனப் பான்மை ஏற்படுவதுண்டு. ஆசாபாசங்கள் குறுக்கிடுவதுண்டு. சொந்த பந்தங்கள் சுருக்கிடுவதுண்டு. இன எழுச்சியும், இனப் பற்றுதலும் இழுத்தணைப்பதுண்டு. தேசபக்தியும், உயரிய கொள்கைகளும் மருட்சியில் ஆழ்வதுண்டு. மனிதாபிமானத்தால் மிளருவதுமுண்டு.

இந்த வேளையில் நாசமடையப்போவது, இறக்கப் போவது வாழ்வடைவது போலத் தோற்றமளிக்கின்றது. வாழவேண்டியவைகள், அழிவது போலத் தோற்றமளிக்கின்றது.

அழியும் சக்திகள் அழியாததுபோலக் காட்சியளிக்கின்றது. வளரும் சக்தி அழிவடையப்போவது போலக் காட்சியளிக்கின்றது.

இந்த இரு முரண்பட்ட கொள்கை கிடையிலே போராட்டம் தவிர்க்க முடியாதது. இதை நேருக்கு நேராகச் சந்தித்தவன் பார்த்தன். முடிவெடுக்கத் தெரியாமல் மயங்கிய மனிதன். தவிர்க்க முடியாத நிகழ்ச்சியை தடுத்து நிறுத்த, சமித்திரின் சக்கரத்தை முன்னேறவிடாமல் தடுக்க அறியாமை யென்ற குணத்தில் அகப்பட்டுள்ளப்பார்த்தன் "நான்-எனது?" என்ற மனிதர்களின் பிரதிநிதி! நான், எனது என்பது தனது ஆற்றலே இழந்து தவிக்கும்போது, வேக மிழந்துவரும்போது, கண்ணனின் திருவடிகளிலே, விவேகத்தின் பீடத்திலே சரணடைந்துவிடுகின்றன்.

அவனுடைய ஒரே நண்பன், ஒரே வழிகாட்டி, ஒரே உதவும் சக்தி கோபிநாதனின் கழல்களே!

தலையைத் தாழ்த்திவிட்டான். நிலையான கீதை பிறக்கின்றது. காதுகளைக் கொடுத்து விட்டான், வேதத்தின் சாரம் - பாய்கின்றது. நெஞ்சத்தைக் கொடுத்தான். சஞ்சலப் பாம்பு மாய்கின்றது.

பலவலாயிலேநேந்து இநாற்று எமுபத்தி நான்கு கவிதைகள் பாய்ந்து வந்தன. அத்தனையும், அள்ளஎவள்ளக்குறையாத அமுத ஊற்று. மனிதன் யார்? உண்மையில் அவனுடைய கொடுமைதானென்ன? அவன் வாழ்வில் பின்பற்ற வேண்டிய சட்ட திட்டங்களென்ன? அவனுடைய உள்ளத்திலே சுடர்விடும் தெய்வக சக்தியை, அருள் அடைவதெப்படி! அதற்கானப் பல படிகளை, வகை, தொகையாக, முறைப்படுத்திச் சொல்லும் அறிவின் பொக்கிஷம் கீதை பிறந்தது!

கர்மம், ஞானம், பக்தி, யோகம் என்ற நான்கு தூண்கள் நடப்பட்ட வேத மாளிகை கீதை.

கர்மம் செய்யமுடியாவிட்டால், ஞானம், அதுவுமில்லாவிட்டால், பக்தி. அதுவும் முடியவில்லை யென்றால் யோகம். அவரவர்களுடைய சுபாவத்தையொட்டி பின்பற்றும் வழிகளை வரிசைப்படுத்திக் கூறுகின்றது கீதை.

இவ்வளவு வழிகளையும், ஆற்ந்து படிக்கப்படிக்க, உள்ளே பார்க்கப் பார்க்க ஒரு பேருண்மை தெரியும். கீதையின் கரு, இதயத்துடிப்பு அதுதான்! அது என்ன? அதுதான்! "நான்" என்னும் சொல்!

"நானே சகல அறிவும்," "நானே எல்லாச் செயலும்" "நானே ஆனந்தம்" "நான் சத்து," "நான்சித்து," "நான் ஆனந்தம்," இதுவே, கீதையின் முழக்கம். "நான்" என்று கீதையில் குறிப்பிடுவது "அது" என்பதை! "அது' என்று குறிப்பிடுவது "நீ" என்பதையே!

முதலில், தோன்றும் "நான்" என்பது "என்னுடையது. 'எனதுடைமைகள்' "என்னைச் சேர்ந்தவைகள்" என்ற தூலமான நான்

நாமெல்லாம், இந்த முதல் வகை "நான்" என்று கூறிக் கொள்ளலாம். இந்த "நான்" என்பது "என்னுடையது" என்பதை மையமாகக் கொண்டு இயங்குவது! "என்னுடையதல்ல" என்று தள்ளாத "நான்" இது! இத்தகைய "நான்" இவ்வுலகில் வரம்பற்று, எல்லையற்று விரிந்து கிடக்கின்றது.

கீதையிலே, இத்தகைய "நான்" நான்குவகைகளாக வரையப்பட்டுள்ளன. இந்த நால்வகைப் பட்ட "நான்" என்ற உணர்ச்சிகளும், நான்குவிதக் கண்களோடு பார்க்கின்றன! அதனதன் சொந்தப் பாதையில் பேசுகின்றன! செல்கின்றன!

கீதையில், நாம் சந்திக்கும் முதல் "நான்" யார் தெரியுமா? திருதராட்டிரன்! புறமனம்! இது,தான், காணும் ஸ்தூலகாட்சிகளிலே ஊறக்கிடப்பது! இந்திரியங்களின் வழி செல்வதைத் தவிர, "என்னுடையது" என்று கூறுவதைத் தவிர, அதற்கும்மேல் போக முடியாதது. இந்த "நான்" திருதராட்டிரன்! "ஸ்தூல மனம்" எனறும் அந்த "நான்" என்பதைக் கூறலாம். "குரு" என்ற கிருஷ்ணனின் அருளால், பகுத்துணரும் தன்மை படைத்த, உயர்மனம் படைத்த "நான்" சஞ்சயனுடையது! அந்த "நான்," "எது சரி, எது தப்பு, எது அறியும், எது வாழும் என்பதையும், எது தெய்விகமானது, எது தெய்விகமற்றது என்பதையும் அலசிப்பார்க்கின்றது. அடுத்த "நான்" இன்னும் ஒருபடி உயர்ந்தது. அது அடிமனம். அது, சுழல்தோயும், சூரைவளிகளேயும் வென்று தெளிந்த கட்சியுடன் விளங்கும் "நான்"! இறையொளியைக் காணும் பேறு பெற்ற "நான்." அந்த நான் "அர்ச்சுனன்." அதைவிட ஆழமானது, மிக உயரமானது, விரிவானதுமான "நான்," சகலத்தையும், படைக்கும் "நான்" ஒவ்வொரு பொருளிலும், உளளும், புறமும், வியாபித்திருக்கும் "நான்" உள்ளே இலங்கி வழிகாட்டிடுவதுமான "நான்" என்பது கண்ணனைக்குறிப்பிடுவது! இந்த "நான்" கீதையின் கரு! அந்தப் பெட்டியின் சாவி!

இந்த "நான்," அனைத்துக்காரணமான "நான்," அற்றங்காக்கும "நான்," ரகசியமான "நான்," கீதையின் கண்ணன்! ஸ்தூல மனம், குருட்டு மனம், திருதராட்டிர மனம் தெரிந்து கொள்ள முடியாத "நான்" அது!

குருவருளால், முயன்று, பகுத்தறிந்து பார்க்கும் தெளிந்து ஒப்புக்கொள்ளும் மனம், தூய்மையடைந்த மனம் சஞ்சய மனம்.

தூய்மையடைந்தும் திக்கு தெரியாமல் தடுமாறி, அடைக்கலம் புகுந்த மனம் பார்த்தனின் மனம்!

தடுமாருத அறிவு, செயல், அன்பு எனும் அருள் இவை பெற்ற "நான்" அர்ச்சுனன்.

திருதராட்டிரன் — சஞ்சயன் — பார்த்தன் — கண்ணன். இந்த நால்வகைப் பாத்திரப் படைப்பிற்குள் ஒளி வீசுவது கீதை.

கர்மம்—பக்தி — யோகம்—ஞானம் என்ற கால் வகைப் பாதையைக் காட்டுவது கீதை.

திருதராட்டிர 'நான்"—சஞ்சய "நான்"—பார்த்தனின் "நான்"— கண்ணனின் "நான்"— என்ற நான்கு வகை "நான்"களே வகை தொகைப்படுத்திக் காட்டுவது கீதை!

திருதராட்டிர மனம் "அசத்து"— சஞ்சய மனம்— "சத்து"— பார்த்தனின் மனம் "சித்து"— கண்ணனின் மனம் "ஆனந்தம்" என்ற நால் வகைப் பிரிவுகளைக் காட்டுவது கீதை!

கீதையில் கூறப்பட்டுள்ள "நான்" விரிவடைந்து கொண்டே போவது சிந்தனைக்குச் செந்தேன்!

திருதராட்டிர "நான்"— எதையும் காணச் சக்தியற்று! குருடு!

வழிகாட்டுபவன் "கண்ணன்"! கண்ணிருப்பவன் தானே காண முடியும்? கூட்டிச் செல்ல முடியும்!

இப்போது ஒரே கேள்வி. கீதையில் கூறப்படும் "நான்" என்பது என்ன?

சொல்லுங்கள் பார்க்கலாம்.

சுருதி கலைந்தது

(ந. செல்லப்பன்)

அந்திப் பொழுது கடலோரம்—நான்
அமர்ந்து தனித்திருந்த நேரம்
சிந்தை பறந்துபறந்து தேடிடவும்—எங்கும்
தேடித் திரிந்ததுனை நடி.

பொன்னுப் உனதுடலும் மின்ன—உயிர்
பொங்கும் சிலையுருவோ என்ன
முன்னுல் உனதுருவும் தெரியும்—எனில்
மூடும் விழிதிறக்க மறையும்

கொஞ்சும் சலங்கையொலி பாட—தமிழ்
கொஞ்சிச் சிரித்து விளையாட
நெஞ்சில் நிறைந்தவளாய் நின்றுய்—சற்றும்
நில்லா துடன் மறைந்து சென்றுய்

ஆசை முகம் பொலிய வந்தாய்—என்
ஆவி கலந்து சுகம் தந்தாய்
பாசம் பெருகிவர நின்றேன்—நீ
பாட்டின் சுருதிகலீக் கின்றுய்.

வீரப்பெண் எரிக்கா!

★

மா. சௌந்தரராசன்

மே 13, 1943

இரக்கமெனும் அமிழ்தத்தை உதைத்து விட்டே
எரிமீயை நெஞ்சத்தில் எடுத்தான, ஜெர்மன்
திருநாட்டுக் கொடுங்கோலன் இட்லர்! அந்தத்
தீயவனின் வெறிக்குணத்தில் எழுந்த தீயே
இரண்டாவ(து) உலகப்போர்! அமைதி யாலே
இன்புற்ற வாழ்வெல்லாம், அவலச் சங்கின்
குரலெடுத்த முதன்று! நோயும், சாவும்
குதித்தரங்கில் பேயாட்டம் ஆடிட் டுறங்கும்!

அரக்கமனப் போக்காலே அழிவின் வாசல்
அடைப்பின்றிக் கிடந்தநிலே கண்டோர்,
[பின்னர்த்
திரண்டெழுந்தார்! பாசிசத்தைக் கருவறுக்கத்
திண்தோட்கள் தட்டிட்டார்! இனியும் இங்கே
இரத்தஞ்சேர் மண்மீது நரியின் கூச்சல்
எழுந்தாட விடோமென்றே ஆர்த்தார்! பொல்லா

அரவத்தின் சீற்றத்தை மூச்சி லேற்றி
அணிதிரண்டார்! கிளம்பிற்றே எதிர்ப்பு வேகம்!

மணமாகித் தலேமகவை ஈன்று, வாழ்வில்
மணம்பொங்கி நின் றமங்கை எரிக்கா நெஞ்சில்
அனல்போலும் கனனறதுவே இட்லர் செய்கை!
அறுநான்கு வயதுடையள், அவளும் அந்த
அணிசேர்ந்து போர்க்கொடியைப் பிடித்தாள் தூக்கி!

''அமைதிப்பு மக்களது வாழ்வில் பூக்கத்
தனியொருவன் தடையென்றால் பொறுக்கேன்'' என்றே
தன்குரலே எழுப்பிட்டாள்! நடந்தான் ஏருய்!

பிறைநெற்றிப் பார்வைக்கே அஞ்சிப் போனுன்
பெரும்போருக் கஞ்சாத இட்லர்! அம்மை
சிறைபட்டாள்-சிரங்கொய்யப் பட்டாள் பின னர்?
''சிந்திடும்என் இரத்தத்தால் நாட்டு மக்கள்
குறைதீர்ந்தே அமைதிதரும் வாழ்வு பெற்றுல்
குடங்குடமாய்ச் சிந்தட்டும்?'' என்ற வாறே
எரிக்காதன் உயிர்நீத்தாள் பலிபீ டத்தில்!
என்னேயவள் தியாகம், உயர் நாட்டுப் பற்று!

சிறைமுகாமில் இருந்தக்கால் தூணவர் 'கே'க்குச்
சில அஞ்சல் எழுதிட்டாள் எரிக்கா! அஞ்சா
மறங்காட்டும் நெஞ்சுறுதி தம்மை,அம்மை
மடல்காட்டும்-மடைதிறக்கும் கண்கள்!பெண்
ணுள்
மரணத்தை ஏற்கும்முன் இறுதி யாக
மனந்திறந்தே எழுதிட்ட அஞ்சல் ஒன்றை
இறவாத கவிதைகளால் வடித்து வைத்தேன்;
இவனேப்போல் காவியப்பெண் மலர்க ளன்றே!

அன்பே,
இறுதியாக உங்களேநான் வாழ்த்துதற்கே
இன்றெனக்கோர் அனுமதியை வழங்கல்
வேண்டும்!

பிறவிபத்திங் கெடுத்திட்ட போதும், தாங்கள்
பிறப்பையெலாம் எனக்காக சிறுது ரும்பாய்த்
துறப்பீர்கள்; உங்களுயர்த் தியாக நெஞ்சின்
துடிப்பையெலாம் இணேந்திருந்தே உணர்ந்த
வள்நான்!

இறுதியாக அவ்வுயர்ந்த நெஞ்சை வாழ்த்த
இன்றெனக்கோர் அனுமதியை வழங்கல்
வேண்டும்!

உயிரிணேய என்கலேவா, இருண்ட வாசல்
உள்ளேயிதோ நுழைகின்றேன்! அதற்காய்
தாங்கள்

மயிரினிலும் பத்திலொரு அளவே கூட
மனத்துயரை கொண்டிற்றுல் ,அதனுல் சோகம்
பயிரிடைவாழ் முட்கள்போல் என்றன் நெஞ்சில்
படர்ந்துவிடும்; துயர்பொங்கிக் கவிந்து கொள்
ளும்!

''துயில்கின்ற போதினிலும், உன்றன் எண்ணம்
துளிர்க்கின்ற போதினிலும் கவலேன்''
என்றே,

உறுதிச்சொல் வழங்குங்கள்! 'தனது வாழ்வில்
உயிர்மேலே இச்சைகொண்டே, இழிந்த
சாவைத்
துறந்திடவோ எரிக்காதான் அஞ்சி அஞ்சித்
துடித்தாள்'என் றெனேக்கேலி இங்குயாரும்
உரைத்திடவே முடியாது! நானே என்றன
உயிர்நீக்கும் போதிலேயே சிரிப்பே கொள்வேன்!
சிரிப்பில்லா தொடக்கம்போல், முடிவை யும்நான்
சிதைத்துவிட—அழுதிருக்க விரும்ப வில்லேல!

பிரிகின்றேன்! உங்களேநான் விட்டு விட்டுப்
பிரிந்திடவே விடைகொடுங்கள்! உயிரே,
அன்பே,
இறுதியாக உங்களேநான் வாழ்த்து தற்கே
இன்றெனக்கோர் அனுமதியை வழங்கி விட்டுப்
பிரிந்திடவே விடைகொடுங்கள்! தாங்கள் கோதிப்
பின்னியெழில் பார்த்திருந்த கூந்த லோடு
விரிந்தயிதழ் மலர்முகமும் தரையில் வீழும்
வீடியபொழுதில்! இஃதென்றன் இறுதி முத்தம்!

தங்கள்,
எரிக்கா.

சேமிப்புக் கலை!

(வே. ஐயாச்சாமி)

சம்பாதித்த பணத்தைச் செலவழித்துவிடாமல் சேமித்துவைப்பதற்குத்தான் எல்லோரும் முயற்சிக்கிறார்கள். ஆனால் சம்பாதிப்பதற்கு வழிகாட்ட எத்தனை பேர் இருக்கிறார்கள்? வருமானம் பெருக வழி தெரியாமல் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டு தவிக்கிறோமே அதை யாராவது தணிக்கிறார்களா? நம்மை லட்சாதிபதி ஆக்கப் படுபடும் அரசாங்கம்கூட அடிப்படைத் தேவையான அந்த ஒரு ரூபாயை நம்மிடமிருந்து தானே கேட்கிறது? பணத்தைச் சேமிக்க பலவழிகள் இருப்பதுபோல பணத்தைச் சம்பாதிக்கவும் ஏராளமான வழிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அந்த சம்பாதிக்கும் 'கலை' எல்லோருக்கும் கைவந்துவிடுகிறதா என்ன? நமக்கு நேர்வழியும் தெரிவதில்லை. குறுக்கு வழியும் பிடிபடுவதில்லை. பணத்தை லட்சியமாகக் கொண்டும் பணவை அலட்சியப்படுத்தும் நந்தநாளில், நாம் வாழ சில வழிமுறைகளைக் கைக்கொண்டுதான் தீரவேண்டி இருக்கிறது. எவ்வளவு வருவாய் வந்தாலும் பற்றாக்குறை என்பது எல்லா நிலையில் உள்ளவர்களையும் தாக்காமல் விடுவதில்லை.

போலி வாழ்க்கை வாழ்வதும், இரட்டை வேடம் போடுவதும் நம்மில் பெரும்பாலோரின் உள்ளங்களைப் பாதித்து, குடும்ப அமைதியைக் குலைத்து வருவதை உணர்க்கிறோம். ஆனாலும், நாம் உண்மையாக ஒளிவு மறைவு இல்லாமல் கள்ளம் கபடமற்றவர்களாக வாழ முடிவதில்லை. அதற்கு ஏற்றபடி வாழ நாகரிகச் சூழ் நிலையில் இருந்து நம்மை எளிதில் விடுவித்துக் கொள்ள முடிவதில்லை. போலிக்குக் கிடைக்கும் மதிப்பு, பொய்யுக்குக் கிடைக்கும் கௌரவம் உண்மைக்கு எளிதில் கிடைப்பதில்லை. ஆகவே பொய்யையும், போலியையும் கைவிட்டுவிட நம் மனம் சலபத்தில் இணங்குவல்லை. போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது. உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் உண்மையை எதற்காகவும் தியாகம் செய்யலாமா? இந்த உறுதி நமக்கு வலுவாக ஏற்பட வேண்டும். வேகமும் பரபரப்பும் மிகுந்த இந்த நாளில் அமைதியும், பொறுமையும் அவ்வளவு எளிதில் கிடைத்து விடாது. பொறுமையுடன் இருப்பது கசப்பானதுதான். ஆனால் பலன் இனிமையானது என்பதில் சந்தேகம் கிடையாது.

பரபரப்புடன் இருக்கும் நாம் சில முக்கியமான பொருள்களைத் தேடி வாங்க நேரம் கிடைக்கவில்லை என்று, அதிக விலை கொடுத்தாவது வாங்கிவிடுகிறோம். இப்படி நேரத்தை மிச்சம் பிடிக்கிறோம். இப்படி மிச்சம் பிடித்து வைக்கும் நேரத்தைவீண் பாழாகும் போக்குகளில் செலவழிக்கிறோம். பணத்தை அதிகச் செலவு செய்து நேரத்தை மிச்சப்படுத்தி, அந்த நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிக்காமல், வீணடிப்பது எவ்வளவு அறியாமை!

பொழுது போக்கு

பொழுது போக்கு, வெறும் பொழுதைப் போக்குவதாக மட்டும் அமைந்துவிடக் கூடாது. அதனால் நமக்கு ஒரு லாபம் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். நம்மிடமுள்ள குறைபாட்டை நீக்கவோ, புதிய தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்ளவோ அது துணைபுரிய வேண்டும். பொழுது போக்கு அம்சங்கள் பெருஞ் செலவுக்கோ, அமைதியைக் குலைப்பதற்கோ பயன்பட்டுவிடக் கூடாது. தோட்ட வேலை, தட்டெழுத்து, கடிகார ரிபேர், தையல் வேலை போன்ற எத்தனையோ உபதொழில்களே பொழுது போக்காகச் செய்ய முற்பட்டால் மனதுக்குத் திருப்தியும், உற்சாகமும், அத்துடன் வருமானமும் பெருகும். கற்பனையும், எழுத்தோட்டமும் கொண்டவர்கள் எழுத்துத் துறையில் இறங்கலாம்.

சிக்கனம்

செலவைக் சுருக்குவது மட்டுமே சிக்கனம் ஆகிவிடாது. நாம் செலவழிக்கும் ஒவ்வொரு காசும் முழுப்பயனே பெறும்படி செய்வதே சிக்கனம். சின்னஞ் சிறு செலவுகளைப்பற்றியும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். மலிவு விலையில் கிடைக்கிறதே என்று தேவை இல்லாத சாமான்களையும், வேண்டாத வற்றையும் வாங்கிக் குவிப்பதைத் தவிர்க்க வேண்டும். வீண் கௌரவத்துக்காக ஆடம்பர சாமான்களையும், அழகுப் பொருள்களையும் வாங்கிப் பணத்தைப் பாழடிப்பதை நிறுத்தவேண்டும். கௌரவம் என்பது பிறர் நம்மைப் பாராட்டுவதில் இல்லை. அதற்கு தகுதியுடையவர்களாக நாம் இருப்பதிலும், அதனை

உணர்வதிலும்தான் நம் கௌரவம் இருக்கிறது. என்ன ஆனாலும் பொருள்களே வாங்கவேண்டும் என்ற கவர்ச்சிக்கு அடிமையாகும் சபல மனதை முதலில் ஒழிக்க வேண்டும். அது இல்லாமலே சமாளிக்க முடியும் என்ற திடசித்தமும், புலன் அடக்கமும் கைவரப் பெற வேண்டும்.

சேமிப்பு

பணத்தைச் சேமிக்க எல்லோருக்கும் விருப்பம் தான். ஆனால் அதைச் செயலில் கொண்டுவருவது தான் சிரமமாக இருக்கிறது. சேமிப்பின் இறுதி லட்சியம் மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்வு. ஆனால் அந்த நல்வாழ்க்கையைப் பெற சில சிரமங்களே ஏற்றுத் தானாக வேண்டும். வெறும் மகிழ்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வது ருசியை உண்டாக்கி விடாது; இன்ப துன்பங்களே, ஏற்றத்தாழ்வுகளைக் கடந்து சென்று அனுபவம் பெறவேண்டும். வாழ்நாள் முழுதும் மகிழ்ச்சியைத்தவிர வேறு கிடையாது என்று இருக்குமானால் அந்த வாழ்க்கையை எவராலும் சகித்துக்கொள்ள முடியாது. அதேபோல வாழ்நாள் முழுதும் துன்பமே தொடருமானால் அந்த நரக வாழ்க்கையையும் அனுபவிக்க முடியாது. வாழ்வதே இன்பம் என்று சிலர் நினைப்பதுபோல வாழ்க்கை அத்தனை சுலபமானதுமல்ல. வாழவே முடியாது என்று பலர் நினைப்பதுபோல வாழ்க்கை அத்தனை மோசமானதுமல்ல. சேமிப்பின் மூலம் வாழ்க்கையைச் செழுமையாக்க முடியும். சேமிக்கும் பழக்கம் இரத்தத்திலேயே ஊறியிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதைச் சிரமப்பட்டு வரவழைக்கவேண்டும்.

சேமிக்க ஆரம்பிப்பவர், சிறுகச் சிறுக ஒரு ஆயிரம் ரூபாயைச் சேமிக்கக் கடுமையாக உழைத்தே ஆகவேண்டும். முதல் ஆயிரத்தை எப்பாடு பட்டாவது சேர்த்துவிட்டால், அடுத்த ஆயிரத்தைச் சம்பாதிப்பதில் அந்த மனிதருடன் அந்த ஆயிரமும் சேர்ந்து நின்று கை கொடுக்கிறது. முதலில் பட்ட கஷ்டம் இப்போது தேவையில்லை. இரண்டு ஆயிரங்களே உழைத்துச் சேர்த்துவிட்டால், மூன்றாவது ஆயிரத்தைச் சேர்க்க, முதல் இரண்டு ஆயிரங்கள் மனிதனுடன் உழைப்பை சமமாகப் பங்கிட்டு ஏற்றுக் கொண்டு உழைக்கின்றன. இப்படியே தொகை பெருகப் பெருக மனிதனின் உழைக்குப் பொறுப்பை அந்தப் பணமே ஏற்றுக் கொள்கிறது. ஆனாலும் நம் உழைப்பு தேவையில்லை என்று எப்போது நாம் அசட்டையாக இருந்தாலும் பணம் நம்மை ஏமாற்றிவிடும். நமது உழைப்பையும், உறுதியையும் எச்சரிக்கையான போக்கையும் என்றும் அங்கிருந்து திருப்பிவிடக் கூடாது.

பொருள்களைக் குறைந்த அளவில் புத்திசாலித்தனமாக கையாள்வதும், புலனடக்கத்துடன் நாவைக் கட்டுப்படுத்துவதும் சேமிப்பின் முக்கியத்துவங்களில் முதன்மையானவை. சந்தர்ப்பம் வரும்போது அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்பதே ஒருவன் வாழ்விலே வெற்றி பெறும் ரகசியம். ஆனால் சந்தர்ப்பம் ஒருவன் வாழ்விலே அடிக்கடி ஏற்பட்டு விடாது. சாமர்த்தியமுள்ள மனிதன் சந்தர்ப்பங்களைக் கூடத் தனக்காக உருவாக்கிக் கொள்கிறான்.

அஞ்சன மாறினள்!



"அபர்ணா"

சூசேலமூர்த்தி கல்லூரியின் மாணவர் மன்றச் செயலாளர் தேர்தல் நன்றாகச் சூடு பிடித்திருந்தது. போட்டிக்கு நின்ற கண்ணப்பனும் விஜயானந்தும் போட்டி போட்டுக்கொண்டு பிரசாரம் செய்தார்கள். கல்லூரிச் சுற்றுச் சுவர் எல்லோருக்குள்ளாக எத்தனை மரங்கள் உண்டோ அத்தனையிலும் அச்சடித்த அறிக்கைகளை ஒட்டிவைத்தார்கள். 'எங்கள் ஓட்டு கண்ணப்பனுக்கே' என்று ஒரு நோட்டீசு அறிவித்தால், மற்றொன்று 'உங்கள் ஓட்டு விஜயானந்துக்கே' என்று பறைசாற்றும். வேட்பாளர்கள் இருவருடைய சிலவிலும் சிற்றுண்டி, பேருண்டிகளை அடைந்து வந்த சில மாணவர்கள் கூட்டம் கூட்டமாக நின்று தேர்தலின் சாதக—பாதக நிலைகளை ஆராய்ந்துகொண்டிருந்தனர்.

"நம்ம கண்ணப்பனுக்குத்தான் வெற்றி. நான் வேணுமானால் பெட் கட்றேன்" என்று அடித்துப் பேசினான், அற்புதசாமி.

"பிரதர், நீ பாட்டுக்குப் பெட், கிட் கட்டறதாக வாக்குக் கொடுக்காதே. அந்தச் சிலவும் கண்ணப்பனுடையதுதானே!" என்று மறுத்துப் பேசினான், மருதாசலம்.

இவர்கள் குழுவைச் சோந்த கிருஷ்ணன் ஓடோடி வந்தான். 'போச்சு! மோசம் போச்சு!' என்று அலறிக் கொண்டே வந்தான்.

"மிஸ்டர் கிருஷ்ணன் அவர்களே, கொஞ்சம் புரியும்படியா சொல்லுங்கள். யாருடைய மோசம் எங்கே போச்சு?"

கிருஷ்ணன் முறைத்தான்.

"ஏய், கிண்டலா பண்ணுகிறே?..... நான் எவ்வளவு முக்கியமான தகவல் கொண்டு வந்திருக்கேன், தெரியுமா?"

"அட, யாரடா இவன்?... புராணக் கிருஷ்ணனின் பேச்சுத்தான் புரியவில்லேன்னு, இவன் பேச்சும் புரியமாட்டேனென்கிறது!...சரி, உன் தகவலை சொல்லித் தொலை!..."

"நாம் எவ்வளவு விளம்பரத் தட்டிகள் எழுதி வச்சிருக்கோம்?"

"மூணடிக்கு மூணடியில் இருபது, மூணுக்கு நாலில் பதினஞ்சு, நாலுக்கு அஞ்சில் பத்து..."

"அவங்க எவ்வளவு வைத்திருக்காங்க, தெரியுமா?... நம்மைவிட ஒரு போர்டு அதிகமா வைத்திருக்கான்... அதுவும், ஆறுக்கு எட்டு நீளம். அரை பர்லாங்குக்கு அப்பாலே வருகிறபோதே கண்ணைப் பறிக்கிறது."

"அப்படியா?.. இருக்கட்டும். —டேய் விஜயானந்த்!...நீ எத்தனை போர்டுகள் எழுதி வைத்தாலும் சரி, மாணவர்கள் உனக்கு ஓட்டுப் போட மாட்டார்கள். தோல்வி, உன்னதே!..."

"எலிவியாகப் பேசாதே. அந்த போர்டிலே என்ன எழுதியிருக்கிறது என்பது தெரிந்தால் நீ வேரற்ற மரம்போல் சாய்ந்து விழுவே..." (வேரற்ற மரம் எப்படிச் சாயும் என்று வாசகர்கள் தயவு செய்து என்னைக் கேட்கவேண்டாம். இது வரை வேரற்ற மரம் எதுவும் என் கண்முன் சாய்ந்ததில்லை!)

"என் உடம்பெல்லாம் ஆடுகிறது. சீக்கிரம் சொல்லுடா..."

"கேள்:

அன்பார்ந்த மாணவிகளே!

பதினெட்டாந்தேதி நடைபெறவிருக்கும் மாணவர் மன்றத் தேர்தலில், நாடு போற்றும் நன் மாணாக்கர் விஜயானந்தனுக்கு வாக்களித்து, அவர் ஜயத்தில் ஆனந்தம் அடைவீர்களாக.

உங்கள் சகோதரி,
அஞ்சனு'.

எப்படி ?"

"தகிலியில் இடி!"

"'உங்கள் சகோதரி' ஹலோ...ஹலோ...?"

"மிஸ் அஞ்சனு தேவி!...கல்லூரிக் காளைகள் அத்தனே பேரையும், நாகபாசமாகிற கண்வீச்சி லும் சொல்வீச்சிலும் நடைவீச்சிலும் மயக்கி வைத் திருக்கிறளே...அந்த அஞ்சனு!...'

"வீண்தான். நம் முயற்சிகள் எல்லாம் வீண்!.. அஞ்சனு இப்படிச் செய்வாள் என்று நான் எதிர்பார்க்கவேயில்லே..."

"கண்ணப்பன், பெரிய கண்ட்ராக்டரின் மகன்தான்; பெரிய பெரிய இடங்களில் பழகுகிற வன்தான். ஆனுல், அஞ்சனு தேவியின் காதலன் இல்லேயே!.."

"சே!...க்ரேட் ஷேம்!... என்ன இருந்தாலும் இவ்வளவு ஓபனுக அஞ்சனு வேலே செய்யக் கூடாது."

"மை டியர் இடியட்!..... மேலே ஆகவேண்டிய காரியத்தைப் பாரடா. சும்மா அஞ்சனுதேவியின் பேரில் அஸ்திரப் பிரயோகம் செய்துகொண்டு நிற் காதே..."

"முதல்லே, கண்ணப்பன்கிட்ட விஷயத்தைச் சொல்லணும்...ஆல்!... ஒரு ஏ கிளாஸ் ஐடியா இப்ப ஸ்டிரைக் ஆகிறது. புதுமையிலும் புதுமை!...அதுக்கு மட்டும் கண்ணப்பன் ஒத்துக்கொண்டு விட்டானுனுல் வெற்றி நமதே!"

ஃ ஃ ஃ

காரில் வந்து இறங்கிய கண்ணப்பனே மாணவர் பட்டாளம் ஒன்று சூழ்ந்துகொண்டது. கறுப்புக் கண் ணுடி வழியே அவர்களேக் கண்குளிரப் பார்த்தான், கண்ணப்பன்.

"ஏண்டா அற்புதம், விஜய் என்னேவிட அழகாவா இருக்கான்?" என்று கேள்விக் கணேயை வீசினுன், அவன்.

"யார் சொன்னது?...உன் பர்ஸனுலிடி என்ன? கம்பீரம் என்ன?"

"பின்னே, ஏண்டா சேலேப்பட்டாளம் முழுக்க அவனுக்காக வேலே செய்கிறது?"

பற்கணே நறநறவென்று கடித்தான், மருதாசலம். "எல்லாம் அந்த அஞ்சனு செய்கிற வேலே. அவளால் தான் மாணவிகள் விஜயானந்த் பக்கம் நிற்கிறுள்!"

"அப்போ நான் வாபஸ் வாங்கிக்கொண்டுவிட்டு டுமா?"

"சேச்சே!...ஆண்மகனுக்கு அழகா, அது? நான் ஒரு பிரமாதமான ஐடியா வைத்திருக்கேன். மற்றப் பிரசாரங்களே நாங்கள் பார்த்துக்கொண்டாலும் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நீ சொந்தமாய் ஊடுபட வேண்டும்."

"என்னப்பா, அது?"

"முதலில், காண்டீன்! அப்புறம், கருத்து!"

"சரி. சரிலா, காண்டீன்..."

ஃ ஃ ஃ

எம். ஏ. (இலக்கியம்) முதலாண்டு படிக்கும் விஜயானந்துக்கு, மாணவர் மன்றச் செயலாளர் பதவி லட்சியமல்ல. எப்போதும் புத்தகப் படிப்பில் மூழ்கிக் கிடக்கும் அவனுக்கு, கூப்பாடு-கூச்சல் என்றுலே அலர்ஜி. அவன் நன்னடத்தையுள்ள மாணவனும். அவன் செயலாளனுனுல் மன்றத்தில் நல்ல நல்ல நிகழ்ச்சிகள் நடைபெறுமாம். பத்து மாணவர்கள் கூட்டமாக வந்து அவனிடம் இப்படிச் சொன்ன போது, இரு புத்தகங்களால் தன் இரு செவிகளேயும் இறுக்கமாகப் பொத்திக்கொண்டுவிட்டான், அவன். ஆனுல், சக மாணவி மிஸ் அஞ்சனு வந்து எதிரே நின்றபோது அவனுல் விட்டுக்கொடுக்காமல் இருக்க முடியவில்லே.

"எதைப் பற்றியும் நீங்கள் கவலேப்பட வேண் டாம், மிஸ்டர் விஜய். பிரசாரம், விளம்பரம் எல்லா வற்றையும் நாங்கள் கவனித்துக்கொள்கிறேம்" என்று கூறி அவன் மனத்தை அரைத்து விட்டாள், அஞ்சனு.

விஜயானந்த், அஞ்சனு காட்டிய இடத்தில் கையெழுத்திட்டு வேட்பு மனுவைக் கொடுத்தான்.

ஆனுல், பத்து நாட்களுக்குள்ளாக அஞ்சனுவுக்கு என்ன ஆகிவிட்டது?

'நாடு போற்றும் நன்மாணுக்க'ருக்காக வக்கா லத்து வாங்கிய விளம்பரத் தட்டி எங்கே போய்விட் டது?

விஜயானந்துக்காக மாணவ—மாணவிகளிடம் ஓட்டுக் கேட்டுக்கொண்டிருந்த அஞ்சனு ஏன் தன் ராகத்தை மாற்றிக்கொண்டுவிட்டாள்?

"காரணம் எனக்குத் தெரியும்" என்றன், சுந்தரம்.

விஜயானந்தின் அறையில் குழுமியிருந்த மாண வர்கள், அவன் முகத்தையே பார்த்தார்கள்.

"எல்லாம் குமாரி சம்பகா தேவியின் நட்புக் காகத்தான்!..."

"எந்த சம்பகா தேவி? "

"டேய், நீ வெளியே போடா. ஃபூல்!... குமாரி சம்பகா தேவி, நடிக்கத் திரைப்படம் உண்டா? புகையிலே விளம்பரம் உண்டா? சிகரெட் விளம்பரம் உண்டா? இல்லே, அவள் நீச்சல் உடையில் காட்சி தரும் படமில்லாத சலுன்கள் உண்டா?... டேய் அக்ருணி, இப்போதாவது தெரிந்துகொள்: குமாரி சம்பகா தேவி, திரைவானின் தனித் தாரகை; இளம் காளேகளின் கனவுக் கன்னி; இளம் கன்னியரின் லட்சியக் கனவு..."

ஒரு நிமிஷத்துக்கு, அத்தனே மாணவர்களும் சிலே வடிவானுர்கள்.

"என்ன!... என்ன?... சம்பகாவுக்கும் மாணவர் மன்றத் தேர்தலுக்கும் என்னடா சம்பந்தம்?"

"இருக்கிறது, மிஸ்டர், நிறைய இருக்கிறது"?

"சொல்லு..."

"நமக்கு எதிராகப் போட்டி போடுவது யார்?"

"கண்ணப்பன்."

"அவன் தகப்பனுர், பிரபல கண்ட்ராக்டர் கடிகாசலம். அவருடை நண்பர், கோடீசுவரர் அல்லா பிச்சை. அவருடைய தம்பி, 'மேனமரம் டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்' முதலாளி. அவருடைய தொழில் நண்பர் மிஸ்டர் சித்ரவேலு பெரிய படத் தயாரிப்பாளர், சித்ர வேலு எடுக்கும் படங்களில் வழக்கமாக நடிக்கும் நடிகை..."

"... குமாரி சம்பகா தேவி!"

"வெரி குட். கண்டுபிடிச்சுட்டே!... அந்த சம்பகா தேவி, வருகிற வெள்ளிக்கிழமை நம் கல்லூரிக்கு வந்து, திருவாளர் கண்ணப்பனுக்கு ஆதரவாகப் பேசப்போகிருள்!"

"எப்படி, எப்படி?..." சம்பகா வருகிருளா!... நம்ம காலேஜுக்கா?"

"பார்த்தியா, சம்பகா வருகிருள் என்றதுமே இப்படிக் குதிக்கிறியே? 'கண்ணபனுக்கு ஓட்டுபோடு' என்று சொன்னுல் போடமாட்டியா?... பிரதர், நம்ம பையன்கள் மனத்தைப் புரிந்துகொண்டு தான், கண்ணப்பன் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கான். ரொம்ப ரகசியமாயும் வைத்திருக்கான். வெள்ளிக் கிழமை காலே நியூஸை அவுட்பண்ணி, மாணவர்களைத் தினறஅடிக்கப் போகிருன்... எனவே, விஜயானந்தின் பேருக்கு என்னுடைய ஒரு ஓட்டாகிலும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக!..."

ஃஃ ஃஃ ஃஃ

குமாரி சம்பகா தேவி, பற்பல காரியங்களே உத்தேசிதது. திருவாளர் சித்ரவேலுவின் வேண்டுகோளுக்கு இசைந்தாளே தவிர, உண்மையில், இந்தப் பிரசாரத்தில் அவளுக்குப் பற்றுதலே இல்லே. 'நடிகர் சங்கத் தேர்தலுக்கே நான் போவதில்லே. மாணவர் மன்றத் தேர்தலிப்பற்றி எனக்கு என்ன அக்கறை?' என்று எண்ணிக் கொண்டாள். 'சும்மா ஒத்துக்க, சம்பகம். ஒருகாலேசுன்னு அது எப்படியிருக்கும்னு நீயும் தெரிஞ்சுக்கிடலாமில்ல?' என்று சித்ரவேலு கூறியதும், பரதநாட்டிய பாணியில் தன் கழுத்தை அசைத்துவைத்தது, அந்த நட்சத்திரம்.

குமாரி சம்பகாவுக்கு ஒவ்வொரு நிமிஷமும் பல ரூபாய் மதிப்புடையது. கல்லூரியில் பத்தேந்து நிமிஷத்துக்கு மேல் தங்க முடியாதாம். அத்துடன், அவளே பேச வேண்டியதை எழுதி, முன்னதாகவே அவரிடம் அனுப்பிவிட வேண்டும். அதை ஒருமுறை படித்து விட்டால் போதும், அப்படியே ஒப்புவித்துவிடுவாள்— சினிமா வசனம் போல.

"வெளுத்துக் கட்டி விடுகிறேன்!" என்ருன், கண்ணப்பன்.

பத்து நிமிஷத்தைக்கு வருகிறப் போல் ஒரு சொற்பொழிவு தயாரிக்கப்பட்டது. அதை யார் கொண்டுபோய் குமாரி சம்பகாவின் இல்லத்தில் சேர்ப்பிப்பது?

"நான், நான்" என்று கண்ணப்பனின் ஆதரவாளர்களான மாணவர்களின் இதயங்கள் கூக்குரலிட்டன.

தைரியமாக ஒரு குரல். "உங்களுக்கு அப்ஜெக்ஷன் இல்லேன்னு, அந்தப் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்றேன்..."

"எஸ். எஸ்...நீங்கள்தான் தகுதியானவர்" என்று கிராப்புத் தலேகள் ஒலமிட்டன.

அஞ்சனுவின் குதிரைவால் மெல்ல அசைந்தது.

ஃஃ ஃஃ ஃஃ

அந்தச் செய்தி வெளியானதும் கல்லூரி முழுவதும் சிலிர்த்துக் கொண்டது. ஆனந்தப் பெருக்கில், தங்கள் புத்தகங்களே ஆகாயத்தில் தூக்கியெறிந்து பிடித்தார்கள், மாணவர்கள். வெள்ளித் திரையில் வந்து பரவசமூட்டும் சம்பகா, இப்போது நேரில் வந்து மகிழ்விக்கப்போகிருள்! 'மனத் தேர்தலில் மாணவர் கடமை' என்பது பற்றி சேப்பாக்கம் போகிருளாமே? என்ன பேசுவாளோ? எப்படிப் பேசுவாளோ?...அவளே பேசுவாளோ, பிளே—டேக் பேச்சோ? அடாடாடா, சம்பகா வருகிருள்! குமாரி சம்பகா தேவி வருகிருள்!... 'காணுமற்போன நம்பிக்கை'யில் விவசாயப் பெண்ணுக வந்தாளே, அவள்!...'சளார்த்தில் கண்ட முக'த்தில் இரட்டை வேஷம் போட்டாளே...

வெள்ளிக்கிழமை காலே ஏழு மணிக்குச் சம்பகாவின் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தாள், அஞ்சனு. ஒன்பது மணிக்குமேல்தான் அந்தத் தாரகையின் தரிசனம் கிடைத்தது. 'என்னேக் காட்டிலும் இவளொன்றும் ரொம்ப அழகில்லே' என்று எண்ணிக்கொண்டாள், அஞ்சனு. 'ஆண் வர்க்கமே இவளேத் தலேயில் வைத்துக்கொண்டு கூத்தாடுகிறதே? அப்படியொன்றும் தேவலோகப் பெண்ணுக இவள் இல்லேயே!' என்று மனத்திற்குள் நகைத்துக்கொண்டாள்.

சம்பகா மாடியிலிருந்து இறங்கி வந்ததும் மாளிகையே பெரும் பரபரப்படைந்ததை அஞ்சனு கவனித்தாள். மொலெய்க் தரையை ஈரத் துணியால் துடைக்கிற ஆளிலிருந்து அவளுடைய உதவியாளர் கோமேதகம்வரை ஒரே பரபரப்பு! கோமேதகம், 'சொற்பொழிவு எழுதிக்கொண்டு வந்திருக்கிங்களா?' என்று கேட்டபோது 'ஆம்' என்ற தலேயசைத்தாள், அஞ்சனு. பின், வெகு ஞாபகமாய், ஒட்டியிருந்த ஓர் உறையை அவரிடம் கொடுத்

தாள். 'என்னையும் குமாரி சம்பகா தேவியுடனேயே வரச் சொல்லியிருக்கிறார்கள். காரில் போகும்போது, இதில் எழுதியிருப்பதைப் பற்றிப் பேச வசதியாக இருக்கும்' என்று கூறி அவருடைய சம்மதத்தையும் பெற்றிருந்தாள்.

"கார் ரெடி" என்றார், கோமேதகம்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம், படகு போன்ற கறுப்புக் கார் மாளிகையிலிந்து வெளியேறியது.

ஃ ஃ ஃ

கல்லூரி சொற்பொழிவு மண்டபத்தில் கூட்டம் தாங்கவில்லை. அந்த மண்டபத்திற்குள் அன்று வரை காலடி வைத்திராத மாணவ, மாணவிகள் கூட அன்றைக்கு வந்திருந்தார்கள்! கல்லூரி டியூடர்கள் என்ன! [வீரிவுரையாளர்கள் என்ன! பேராசிரியர்கள் என்ன!... அவர்கள் குடும்பங்கள் என்ன!...

குமாரி சம்பகாதேவி மேடைக்கு வந்துவிட்டாள்! மாணவர்களின் கை தட்டலில் மண்டபமே அதிர்ந்தது.

ஒரு தலைமை உரை இல்லை; வரவேற்பு உரை இல்லை. அதற்கெல்லாம் நேரமில்லை. சம்பகாவுக்குப் பதினெரு மணிக்கு ஷூட்டிங் இருக்கிறதாம். எனவே, ஆர்ப்பாட்டம் அடங்கியதும் அவள் பேச ஆரம்பித்தாள்.

"மாணவ மாணவிகளே!

உங்கள் எல்லோரையும் சந்திக்க முடிந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மாணவர் மன்றத் தேர்தலில் இந்நிகழ்ச்சி ஒரு புதுமை.

மாணவர் விஜயானந்த், உங்கள் அணிவருக்கும் அறிமுகமான இனிய மாணவர். படிப்பிலும் சரி, செயலாற்றலிலும் சரி — அவர் முன்னணியில் நிற்கிறார்.

விஜயானந்த் இலக்கிய உணர்வு உடையவர். விஜயானந்த்...."

கண்ணப்பன் பற்களை நறநறவென்று கடித்தான் அவன் பக்க மாணவர்கள் தரையில் காலால் உதைத்தார்கள் 'எங்கே அஞ்சனா?' என்று உறுமினான், அற்புதசாமி.

"காரிலிருந்து இறங்கினதைப் பார்த்தேனே..."

"அட, சரித்தாண்டா. இப்போ, எங்கே"

"மேடையில் காணோமே?..."

மேடையில் சம்பகா முழுங்கிக் கொண்டிருந்தாள். "... விஜயானந்த் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளப் போவதாக என்னிடம் சொன்னபோது நான் அதை வரவேற்றேன். விஜயானந்த் போன்ற சீலம் மிகுந்த மாணவரால், மன்றம் பெருமையடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை..."

"கேட்டியாடா, கூஸ்... அஞ்சனா பிளான் பண்ணி நம்மைக் கவிழ்த்திருக்காளடா!.."

"எஸ், எஸ்.." நாம் எழுதிக் கொடுத்த சொற்பொழிவில் கண்ணப்பன் என்று இருந்ததை விஜயானந்த் என்று மாற்றி...? ..."

ஃ ஃ ஃ

மூன்று நாட்கள் தலைமறைவாயிருந்த மிஸ் அஞ்சனா, தேர்தல் முடிவு வெளியாகும் தருணத்தில் கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்தாள் — தொண்ணூறு சதவிகித வாக்குகள் பெற்று வெற்றியடைந்த விஜயானந்தைப் பாராட்டுவதற்காக!



குழந்தைகளும் நாடகமும்

திருச்சி பாரதன்

தமிழ் நாடக மேதை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றுண்டு விழாவினையொட்டி கடந்த 5—9—68 மதுரையில் நாடகக் கருத்தரங்கு நடைபெற்றது. மதுரை பல்கலைக் கழகத் தலைவர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரம் அவர்கள் தலைமையில், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் தொடங்கிவைத்த இந்தக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரை

— இது. —

பாரதி பாடினான் — குழந்தையைப் பார்த்துப் பாடினான். "இன்பக் கதைகள் எல்லாம் ஊனைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ!" என்று பாடினான். ஆம், எத்தகைய பெரிய ஏடாக இருந்தாலும் சரி! எவ்வளவு வண்ணச் சித்திரங்கள் — அரிய கருத்துக்களே கொண்ட ஏடாக இருந்தாலும் சரி! அந்த ஏட்டில் உணர்வைக் காண முடியும் — ஆனால் உயிரைக் காண முடியாது. அந்த ஏட்டின் கதையை ஒரு குழந்தையிடம் சொல்லி, திரும்பச் சொல்லச் சொல்லி கேட்டுப்பாருங்கள்! அந்த கதைக்கு உணர்வு மட்டுமல்ல; உயிர் வரும்; உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும் உற்சாகமும் தொடர்ந்து வரும்.

காரணம் — குழந்தையின் மழலை மொழியோடு, நாடக பாவமும் வெளிப்படுகிறது. அதனால் தான், "இன்பக் கதைகள் எல்லாம் ஊனைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ!" என்று பாரதி பாடினான்.

எனவே குழந்தைகளுக்கும், நாடகங்களுக்கும் அதிக தூரமில்லை.

பெரிய நடிகர்-நடிகைகளுக்கு நாடக இயக்குனர் நடிப்பு சொல்லிக்கொடுப்பார். அந்த நடிகர்—நடிகைகள் நடிப்பை வெளிப்படுத்தும்போது நமக்கு ஏற்படும் உணர்ச்சி வேறுதான்.

"பாட்டியை எந்தக் கால்லே உதைப்பே?"— குழந்தையிடம் எல்லா பெரியோரும் வழக்கமாக கேட்கும் கேள்விதான்! ஆனால் குழந்தை காலை தூக்கி முக பாவத்தோடு காட்டும்போது நமக்கு ஏற்படும் உணர்ச்சி வேறுதான்.

பெரியோரது நடிப்பு விலையுள்ளது. குழந்தைகளின் நடிப்பு விலை மதிப்பற்றது.

எனவே உயர்ந்த நடிப்புத் திறமையை இயல்பாகக் கொண்ட குழந்தைகளுக்கும், நாடகத்திற்கும் உறவு அதிகம்.

நாடகத் துறையில் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களின் காலம், ஒரு பொற்காலம். நாடகக் கலை வாழ்வை—வளர்ச்சியை நாம் எடைபோட்டுப் பார்க்கத்தக்க காலம்.

அவர்களுடைய காலத்திலும், அதற்குப் பின்னரும் கூட சிறுவர்க்கோ நடிகர் — நடிகைகளாகக் கொண்டே நாடகங்கள் நடத்தப்பட்டதாகவும், மன்றங்கள் நடைபெற்றதாகவும் அறிகிறோம்.

அவ்வை தி. க. சண்முகம் அண்ணா அவர்கள் சிறுவனாக இருந்தபோது, அவருக்காக அபிமன்யு என்ற நான்கு மணி நேர நாடகத்தை, சுவாமிகள் ஒரே நாள் இரவில்—'மூடு தேடி எங்கும் அலையாமல் எழுதி முடித்தது, இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த நாட்களில் இயங்கி வந்த சில நாடக மன்றங்களின் பெயர்கள் வருமாறு:—

பால மனோகர சபா
தேசிகானந்த பாய்ஸ் கம்பெனி
மதுரை பால மீனரஞ்சினி சங்கீத சபா
மதுரை ஓரியண்டல் பாய்ஸ் கம்பெனி
மதுரை பால சண்முகானந்தா சபா
மதுரை பால வினோத சங்கீத சபா
மதுரை தேவி பால வினோத சங்கீத சபா
ஸ்ரீ பால வினோத நாடக சபா
பால கந்தர்வகான சபா
ஸ்ரீ மங்கள பாலகான சபா
ஸ்ரீ ராம பால கான சபா
முத்துக்கிருஷ்ணன் பாய்ஸ் கம்பெனி
ஸ்ரீ மீனலோசனி பால சற்குண நாடக சபா
தத்துவ மீன லோசனி வித்வ பால சபா
திருச்சி பால பாரத சபா

புளியமாநகர் கிருஷ்ணா ரெட்டியார் பாய்ஸ் கம்பெனி.

ஸ்ரீ பால மோகன ரஞ்சித சங்கீத சபா!

இத்தனை நாடக மன்றங்களும், குழந்தைகளோடு தொடர்பு உள்ளவை என்பது, அந்த மன்றங்களின் பெயர்களோடு 'பால' என்ற சொல்லோ, அல்லது "பாய்ஸ்" என்ற சொல்லோ கலந்து இருப்பதைக் கொண்டு தெளிவாக உணரமுடியும்.

அவ்வளவு ஏன்? தற்போது புகழ் ஒங்கி இருக்கும் தமிழ்த்திரைப்பட நடிகர்கள்—கலைஞர்களில் பலர் சிறுவர்களாக இருந்தபோதே நாடகத்துறையின் மூலம் மெருகேற்றப்பட்டவர்கள் தான் என்ற உண்மை நம்மில் மிகப்பலருக்குப் புரியும்.

அந்த நாட்களில் நாடகத்துடன் குழந்தைகள் கொண்ட தொடர்புக்கும், இந்த நாட்களில் கொண்டு உள்ள தொடர்புக்கும் அடிப்படை வேறுபாடு ஒன்று உண்டு.

அந்த நாட்களில் நடைபெற்ற நாடகங்கள் குழந்தைகளைக் கொண்டு நடைபெற்ற நாடகங்கள். ஆனால் இந்த நாட்களில் நடைபெறும் நாடகங்கள் குழந்தைகளுக்கென்று நடைபெறும் நாடகங்கள். ஆம்; அந்த நாட்களில் பெரியவர்களுக்கான சம்பவங்களைக் கொண்ட நாடகங்களில் சிறுவர்கள் நடித்தார்கள். இந்த நாட்களில் குழந்தைகளைக் கருப்பொருளாகக் கொண்ட கதைகளில் சிறுவர்கள் நடிக்கிறார்கள். இது காலத்தின் வளர்ச்சி; கன்னித் தமிழின் மலர்ச்சி.

கடந்த சில ஆண்டுகளாக குழந்தை இலக்கியத் துறையில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

புத்தம் புதிய கற்பனைகளில் ஏராளமான குழந்தைக் கதைகளை எழுத்தாளர்கள் படைக்கத் தொடங்கினார்கள்.

குழந்தைக் கவிதைகள் மிக அற்புதமான முன்னேற்றத்தைக் கண்டுவந்தன. 'பாப்பா பாட்டு' மூலமும் 'கண்ணன் பாட்டு' மூலமும் பாரதி போட்டு வைத்த விதை, கவிமணி அவர்கள் மூலம் செடியாகி, அழ. வள்ளியப்பா அவர்கள் மூலம் மரமாகி, எண்ணற்ற இளங் கவிஞர்களைக் கனியாகக் கொண்டு, குலுங்கி வருகிறது.

குழந்தைகளுக்கான கட்டுரைகளும், படிப்படியாக வளர்ச்சிப் பெற்று வந்தன.

ஆனால், குழந்தைகளுக்கென்று நல்ல நாடகங்கள் போதிய அளவு உருவாக்கப்படாமல் இருந்தன.

இந்தக்குறையைப் போக்க எண்ணியது, குழந்தை எழுத்தாளர் சங்கம். அதையொட்டி 1955-ஆம் ஆண்டு நாடக விழா ஒன்றை ஏற்பாடு செய்தது.

3 நாட்கள் இந்த விழா நடைபெற்றது. தினம் 2 நாடகங்கள் வீதம் 6 நாடகங்கள் நடைபெற்றன. தமிழ் நாடகக் கலையில் புகழ்வாய்ந்தவர் சிலர், நடுவர்களாக இருந்தார்கள்.

அந்த 6 நாடகங்களில், 'அன்னை சொல் அமிர்தம்' என்ற நாடகம் முதல் பரிசு பெற்றது. திரு. கூத்தபிரான் இந்த நாடகத்தின் மூலம் அறிமுகம் ஆனார்.

அதே விழாவில் நடிக்கப்பட்ட திரு. தம்பி சீனிவாசனின் 'தங்கக் குழந்தைகள்' நாடகம் புத்தகமாக வெளி வந்தது; இந்திய அரசினரின் பரிசினைப் பெற்றது.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் எழுதிய 'மணிக்கு மணி' கதை வானொலி நாடகமாக நடிக்கப்பட்டது. 'ரோஜாச் செடி' என்ற கதை மேடை நாடகமாக நடிக்கப்பட்டது.

தனிகை உலகநாதன், பூவண்ணன், தேவ்வ கோமணி போன்றவர்களும் இத்துறையில் எழுதிப் புகழ்பெற்றுள்ளனர்.

மேலே சொல்லப்பட்டவர்களின் நாடகங்கள் அனைத்தும் காலத்தால் குறுகியவை; ஒரு மணி நேரத்திற்கு சற்று முன்னும் பின்னும் நடிப்பதற்கேற்ற கால அளவைக் கொண்டவை. எனவே முழு நீள மேடை நாடகங்கள் குழந்தைகளுக்காக நீண்டகாலமாக இல்லாதிருந்தது.

அந்த நிலையை மாற்றி, குழந்தைகள் நாடகத் துறையில் ஒரு புதிய-பெரிய திருப்பத்தை உண்டாக்கினார்கள், டி. கே. எஸ். சகோதரர்கள்.

"குழந்தைகளுக்காக முழுநீள நாடகம் நடத்த வேண்டும் என்பது என்னுடைய நீண்டநாள் ஆசை. ஆனால் அதற்குப் பொருத்தமான கதை கிடைக்காமல் இருந்தது. 'அப்பாவின் ஆசை' கதையைப் படித்துப் பார்த்தேன். அருமையாக இருந்தது" என்று 'அப்பாவின் ஆசை' நாடகம் தயாரிக்க ஏற்றுகொள்ளப் பட்டபோது, அவ்வை சண்முகம் அண்ணு கூறினார்கள்.

குழந்தைக்காக தயாரிக்கப்பட்ட முழுநீள மேடை நாடகம். "அப்பாவின் ஆசை" தமிழகத்தின் பல நகரங்களில் பல முறைகள் நடிக்கப்பட்டது. பம்பாய், பெங்களூர் போன்ற வெளிமாநிலங்களின் பெரு நகரங்களிலும் நடைபெற்றது. அறிஞர் பெருமக்களின் ஆசி, ரசிகர்களின் அன்பான ஆதரவு ஆகியவை அடைந்து சிறந்தது.

தமிழ்நாட்டில் குழந்தைகளுக்கென்றே குழந்தைகளுக்கென்று முதன்முதலில் நடிக்கப்பெற்ற முழுநீள நாடகம் என்றும், இந்தியாவிலேயே குழந்தைகளுக்காக நடைபெற்ற முதல் நாடகம் என்றும் பெருமை பெற்றது.

இந்த நாடகத்திற்கும், டி. கே. எஸ். சகோதரர்கள் தயாரித்த அடுத்த குழந்தைகள் நாடகமான 'பலாப்பழம்' திற்கும் தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கத்தின் மானிய உதவி கிடைத்தது.

அப்பாவின் ஆசை, பலாப்பழம் ஆகிய இரு நாடகங்களின் கதை, உரையாடல் பாடல்கள் ஆசிரியன் என்ற உரிமை எனக்குக் கிடைத்தது என்பதை பெரும் பேருக்கு கருதுகிறேன் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நல்வாய்ப்புகளின் மூலமாக எனக்கு ஏற் பட்ட சில அனுபவங்களை இங்கு சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நம்புகிறேன்; அந்த நம்பிக்கையின் அடிப்படையில் சிலவற்றைக் கூறத் தொடங்குகிறேன்.

'அப்பாவின் ஆசை' நாடகத்திற்கு காட்சி சுருக்கங்கள் அமைத்து, உரையாடல், எழுதும்போது சண்முகம் அண்ணு அவர்கள் என்னைப் பார்த்து கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்கள் :—

"உரையாடலில் பெரியவர்களுக்கு சமவாய்ப்பு கொடுங்கள். காரணம், பொதுவாக பெரியவர்களுக்கே உரையாடல்கள் சில நேரங்களில் மறந்து போவது இயல்பு! ஆனால் அவ்வாறு மறந்துவிட்டாலும், பின்னர் சமாளித்துக்கொள்வார்கள். குழந்தைகள் நாடகத்தில் உரையாடலை, குழந்தைகள் மறந்துவிட்டால், நாடகம் பெரிய தெருக்கடிக்கு உள்ளாகிவிடும்" என்று கூறினார்கள்.

அதன்படி பெரியவர்களுக்கான பாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எழுதினேன். நாடகம் முழு வெற்றி பெற்றது. தமிழகப் பத்திரிகைகளோடு, வெளி மாநிலப் பத்திரிகைகளும் பாராட்டின.

ஆனால், இனிப்புக்கு காரம் தேவைப்படுவது போல, ஒரே ஒரு தமிழ் ஏடு மட்டும் குற்றம் கூறி எழுதியது. "குழந்தைகள் நாடகத்தில் பெரியவர்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது" என்று அந்த ஏடு கடுமையாக வாதிட்டது.

அதற்கு சண்முகம் அண்ணு அவர்கள், தக்க முறையில் பதில் அளித்தார்கள். "குழந்தைகள் நாடகம் என்றால், நூற்றுக்கு நூறு குழந்தைகளே இருக்கவேண்டும் என்பது அல்ல. குழந்தைகள் பற்றிய கருப்பொருளைக் கொண்ட கதையாக இருக்கிறதா என்பதுதான் கவனிக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்கும் பெற்றோர்கள், சுற்றத்தார், கதைகளில் வரக்கூடும் அல்லவா? அந்த வேடங்களில் உண்மையில் வயது நிறைந்தவர்கள் நடிப்பதில் என்ன தவறு? அதுதானே இயற்கைத் தன்மை பொருந்தியது?" என்று கேட்டார்கள்.

அடுத்து 'பலாப்பழம்' நாடகத்திற்கு உரையாடல் எழுத முனைந்தபோது, குழந்தைகள் திறமையில் சங்களுக்கு நல்ல—உறுதியான நம்பிக்கை இருந்தது. அந்த ஏட்டின் "புத்திமதி"யையும் ஏற்றுக்கொண்டு, குழந்தைகளுக்கே அதிகமான நடிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தினேன்.

தமக்கு போதிய பாகம் இல்லாததால், சண்முகம் அண்ணு அவர்கள் நடிக்காமல் ஒதுங்கிவிட்டார்கள். பகவதி அண்ணு அவர்கட்கும், மற்ற வயதான நடிகர்களுக்கும் மிகவும் சொற்ப காட்சிகள்தான்! இந்த 'பலாப்பழம்' நாடகக் கதை முழுக்க—முழுக்க குழந்தைகளையே சுற்றி வந்தது.

பத்திரிகைகள் அறிஞர்கள் போற்றினர்கள்.

ஆனல் வருமான அளவில் பார்த்தபோது, குழந்தைகள் நாடகம் என்றால், வெறும் குழந்தை களே மட்டும் கொண்டதாகக் .இருக்கக்கூடாது; அந்த குழந்தைகள் குடும்பத்தில் சந்திக்கக்கூடிய பெரியவர்களும் உரிய அளவில் இருக்கத்தான் வேண்டும் என்பதில் அசைக்கமுடியாத உறுதியை ஏற்படுத்தியது.

சிரமங்களே வென்று லட்சியங்களில் முனைந்து வெற்றி காணுவதுதான் உண்மையான கலைஞர் களின் திறமை. காலத்தோடு ஒத்துச் செல்லும் கருத்தைச் சொல்லும் கலைஞன், அந்த காலத் தோடு விலகிவிடுகிறான்.

ஆனல் சகோதரர்கள் காலத்தோடு எதிர் நீச்சல் அடிக்கும் துணிவு கொண்டவர்கள் என்ற அனுபவத்தையும் நான் பெற முடிந்தது.

'தெய்வக் குழந்தைகள்' என்ற மற்றொரு குழந்தை நாடகத்தை அரங்கேற்ற அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதில் இருந்து புரிந்துகொள்ள முடியும். இந்த நாடகத்தை எழுதிய நண்பர் சேலம் முத்துகிருஷ்ணன்.

சகோதரர்களின் பணி, குழந்தை இலக்கி யத் துறையில் தமிழின் பெருமைக்கு சான்று கூறும் பணி என்பதை பெருமிதத்துடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் குழந்தைகளைக் கொண்டு அமைந்த நாடகங்களைப்பற்றி பார்த்தோம். நிகழ் காலத்தில் குழந்தைகளுக்கென்று அமைந்த நாடகங்களின் அமைப்பையும் பார்த்தோம். எதிர் காலத்திலும் குழந்தைகளைக்கொண்டும், குழந்தை களுக்கென்றும் நாடகங்கள் தயாரித்து வெற்றி பெற என்ன என்னவழி என்று இனி பார்ப்போம்.

குழந்தைக்களுகென்று தனி நாடகங்கள் தேவையா? இது ஒரு கேள்வி! ''தேவை'' என் பதற்கு குழந்தைக் கவிஞரின் பாடல் வரிகள் பதில்:—

''ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறு வனை நாடு காக்கும் தலைவனாய் நானே வினாங்கப் போகிறான்.''

நாட்டினை நானே ஆளப்போகும் இன்றைய சிறு வன் அறிவால்—ஆற்றலால் — அடக்கத்தால் — தியா கத்தால் பண்பட வேண்டுமானால், கலைவியோடு, கலை மூலமாகவும் அவனுடைய திறமையை தூண்டி விட வேண்டும்.

நாடகத்தில் கதை உண்டு; கவிதை உண்டு; நடனம் உண்டு; ஓவியம் உண்டு! பல கலைகளின் கூட்டு, நாடகம். எனவே குழந்தைகளுக்கான நாட கங்கள் வளர வேண்டியது அவசியம்.

தற்போது திரைப்படங்களின் நிலை நாமறிவோம். மனம் வெட்கிச் சொல்கிறேன்: கதைத் தலைவனும், தலைவியும் ஓடி விளையாடுவது, மனிதர்களின் செயல் போலவே இல்லை. அத்தகைய கொடுமான காட்சி களை பார்ப்பதால் அவற்றுக்கான உரையாடல்கள்— பாடல்களைக் கேட்பதால், குழந்தை மனம் எவ்வாறு திசை திரும்பும் -- பண்பின் நிலை வருங்காலத்தில் என்ன ஆகும் என்று சொல்லத் தேவை இல்லை, ஆபாசம் என்ருலே என்னவென்று திரைப்பட ரசிகை குழுவினருக்கும், அறிஞர்களுக்கும் புரிய வில்லையாம்! அந்த அளவு 'குழப்பம்' ஏற்பட்டு, அதைப்போக்கக் குழு அமைக்கும் சூழ்நிலையில், குழந்தைகளுக்கு நாடகத்தைவிட பண்பை வளர்க் கும் சாதனம் தான் ஏது?

குழந்தைகளுக்கு எத்தகைய நோக்கத்தில் நாட கங்கள் அமைக்கப்படவேண்டும்? என்பது ஒரு கேள்வி நான் பதில் சொல்வதைவிட 'பழுத்த பழமான நாடக அவ்வையை இதோ பேச வைக்கிறேன்:-

''சிறுவர்களின் உள்ளம் தூய்மையானது பரிசுத் தமானது. பிஞ்சு உள்ளம். பச்சை மரத்தில் ஆணியை அடித்தால் எப்படி எளிதாக உள்ளே நுழைந்து பதிந்து விடுகிறதோ, அதேபோல் தூய்மை யான இளம் உள்ளத்தில் தவருன விஷயங்கள் வெகு சுலபமாகப் புகுந்துவிடும். எனவே அதிக கவனம் செலுத்த வேண்டும்.

உயிர்களிடத்தில் அன்பு; உறுதியான நெஞ்சு; தெய்வ பக்தி; உன்னதமான உயர்ந்த எண்ணங்கள் இவற்றை எல்லாம் நாடகத்தின் மூலம் போதிக்க வேண்டும்.

தாய்மொழிப்பற்று; தேசபக்தி; தீமைகளை எதிர்த் துப் போராடும் உணர்ச்சி இவைகள் எல்லாம் நம் குழந்தைகளுக்கு இளம் பருவத்திலேயே உண்டாக்க வேண்டும் நல்ல நாடகங்கள் வாயிலாக இவற்றை சுலபமாக பெரச் செய்யலாம்.''

குழந்தைகளின் நாடகத்திற்கான கால அளவு எவ்வளவு? என்பது பற்றி சற்று கருத்து வேறுபாடு கள் உண்டு. ''ஒரு மணி நேரம் போதும்'' என்று சிலர் சொல்வார்கள்; அதிக நேரம் நாடகம் பார்த்தால் குழந்தைகள் தூங்கிவிடுவார்கள் என்பது, அதற்கு அவர்கள் கூறும் காரணம்.

ஆனல் ஒரு மணி அளவில் முழுமையான உணர்ச் சிகளை வெளிப்படுத்த இயலாது என்பது எனது நம் மையான கருத்து. ஒரு நாடகம் முழுமைபெற குறைந் தது 2 மணி நேரமாவது வேண்டும் என்பது எனது எண்ணம்.

நமது குழந்தைகளுக்கு அவ்வளவு நேரம் அமைதி யாக உட்கார்ந்து பார்க்க முடியாது என்பது அவ்

வளவு சரியல்ல. இன்றைய திரைப்படக் கொட்டகைகளைப் பேய்ப் பார்த்தால், அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டி இருக்கும். பெரும்பாலான படங்கள், சிறுவர்களின் ஆதரவால் தான் ஓட்டப்படுகின்றன! அவர்கள் தான் நாடகக்கம் முதல் கடைசி வரை இருந்து உண்மையில் ரசிக்கிறார்கள்! எனவே முழுமையான குழந்தை நாடகங்கள் உருவாக்க முயற்சி செய்தல் நலம் அதிகமாக்கும்.

குழந்தை நாடகங்கள் வளர கீழ்க்கண்ட முறைகளைக் கையாளலாம்:-

1. பெற்றோருக்கு குழந்தைகள் வளர்ச்சியில் உண்மையான ஆர்வம் இருக்க வேண்டும். அதற்கு அவர்கள் நல்ல கதைப் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பதோடு நல்ல 'குழந்தைகள் நாடகம்' எங்கு நடந்தாலும் அழைத்துச் சென்று காட்டி, பக்கத்தில் அமர்ந்து பக்குவ உரைகள் சொல்ல முன்வர வேண்டும்.

2. வசதி படைத்த பெரியவர்கள், தங்கள் குழந்தைகளுக்கான பிறந்தநாள் விழாக்களை வெறும் ஆடம்பரத்துடன், ஊரார் மெச்ச கொண்டாடுகிறார்கள். அதுவும் எப்படி? நம் நாட்டில் ஒன்று துலக்க வேண்டும் என்றால், குத்து விளக்கு ஏற்றி வைத்து குமிழ் விடுகிறோம். ஆனால், மேல்நாட்டு மோகம் கொண்ட நம் பெற்றோர்களோ, ஊர் திரட்டி, மெழுகுவர்த்தி விளக்குகளை ஏற்றி ஏறியச் செய்து, ஒவ்வொன்றாக ஊதி அணைக்கிறார்கள். ஒளி விடும்படி ஆசி கூற வேண்டிய புனித நாளில் ஒளியை அணைப்பதில் என்ன தத்துவமோ?

இப்படி 'தண்டச் செலவு' விழா நடத்துவதை விட, பொது இடத்தில் குழந்தை நாடகங்களை நடத்தச் செய்து, எல்லாக் குழந்தைகளையும் வந்து பார்க்கச் செய்யலாம்; பார்த்து பூரிக்கலாம்.

இசை நிகழ்ச்சி நடத்துவதுபோல், திருமண விழாவில் நாடகம் நடத்தும் புதுமை முறைபோல் இந்த முயற்சியில் ஈடுபடலாம்.

3. பள்ளிக்கூடங்களில் ஆண்டு விழாக்கள் நடைபெறுவதும், அந்த விழாக்களில் நடத்தை நல்ல நாடகங்களை தேடி ஆசிரியர்கள் திடமுறுவதும் நாம் அறிவோம். இந்தக் குறையைப் போக்க, பள்ளிக்கூட மாணவர்களுக்கே அந்தந்த பள்ளிகளில் ஆண்டு தோறும் ஆண்டு விழாவையொட்டி கதைப் போட்டி நடத்தலாம்.

தேர்வு பெறும் மாணவனின் சிறந்த கதையை, திறன் மிகுந்த ஆசிரியர்களை நாடகமாக நடத்திக் காட்டலாம். இதுவும் மாணவர்களிடம் கலை உணர்வு பன்மடங்கு பெருகும்; மிகச் சிறந்த பலன் தரும்.

அதற்கு சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இயலாதவர்கள், அந்தந்த வட்டார நல்ல நாடகக் குழுக்களிடம் வற்புறுத்தி, நாடகங்களை நடக்கச் செய்து, அதனால் ஏற்படும் செலவை ஏற்றுக்கொள்ளலாம்.

மனம் இருந்தால், மற்ற பள்ளிக்கூட மாணவர்களுக்கும் அழைப்புக் கொடுத்து இந்த நாடகங்களைக் காணச் செய்யலாம். இதனால், பல பள்ளிகளிடையே நல்ல நட்புறவு வளரும் என்பதில் ஐயமில்லை.

4. தமிழகத்தில், உள்ள நாடகக் குழுக்கள், ஒவ்வொன்றும் தொண்டு மனப்பான்மையுடன் குறைந்தது ஒரு குழந்தை நாடகமாவது தயாரிக்க வேண்டும்.

5. திரைப்பட தயாரிப்பாளர்கள் தற்போது நாடகக் கதைகளை திரைப்படம் ஆக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்கள் குழந்தைகளுக்கான நாடகக் கதைகளையும் படமாக்க முன் வந்தால் பல 'குழந்தை நாடகங்கள்' உருவாகும் நிலை ஏற்படும். ஒன்றிரண்டு லட்சிய படங்களை யாவது எடுத்து, மக்களை தம்பால் இழுக்கும் துணிவு, நமது பாரதிபதிகள் சிலருக்காவது ஏற்படக்கூடாதா?

6. அரசாங்கம், குடும்பக் கட்டுப்பாடு பிரசாரத்திற்காக ஏராளமாக செலவு செய்கிறது. அதற்காக நாடகப் போட்டிகளை நடத்துகிறது. கலை நிகழ்ச்சிகளை தயாரிக்கச் செய்கிறது. ஏன், திரைப்படங்களையும் உருவாக்கச் செய்கிறது.

குழந்தைகள் பிறக்காமல் கட்டுப்படுத்த நாடகங்களின் துணை நாடும் அரசாங்கம், பிறந்துவிட்ட குழந்தைகள் செம்மை வாழ்வு பெறவும் நாடகத்தின் துணை நாடவேண்டியது கடமையல்லவா?

நல்ல நாடகக் குழுக்களிடம் குழந்தை நாடகங்களை தயாரிக்கச் சொல்லி, அந்த நாடகக் குழுக்கள் பல ஊர்களில் சுற்றி நிகழ்ச்சிகள் நடத்த வசதி செய்து கொடுக்கலாம். மாவட்ட அதிகாரிகளின் துணை கொண்டு, அந்த நாடகங்களை எல்லா பள்ளி மாணவர்களும் ஒன்று சேர அமர்ந்து பார்க்க வசதி செய்து கொடுக்கலாம்.

7. கல்கத்தாவில் உள்ள பாலர் அரங்கத்தில் அடிக்கடி குழந்தை நாடகங்கள் நடைபெறுகின

றன. சென்னை பாலர் அரங்கத்திலும் ஞாயிறு மாலை தோறும் குழந்தை நாடகங்கள் நடைபெறுவதற்கே ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டும்.

அத்துடன் மற்ற ஊர்களிலும் பாலர் அரங்கங்கள் சிறிய அளவிலேனும் உருவாக்க வேண்டும். இந்த முயற்சியில் அரசாங்கத்துடன் சமதிபடைத்த பணக் காரர்களும். ஈடுபடலாம். ஆங்காங்குள்ள பாலர் மன்றங்களும். அங்கு குறைந்த செலவில் உற்சாக மாக நாடகங்கள் நடத்த வசதி செய்து கொடுக்க வேண்டும்.

அவ்வாறு செய்தால் குழந்தைகளின் நாடகங்கள் வளர்வது உறுதி. கலையுணர்வு மிக்க இன்றைய நமது அரசாங்கம் இதற்கு ஆவன செய்யும் என்று நம்புவோமாக.

சுருங்கச் சொல்லவேண்டுமானால்:—

சிறுவனாக இருந்தபோது உத்தமர் காந்தி பார்த்த அரிச்சந்திரன் நாடகம்தான் அவரை சத்திய சீலனாக – உலகம் போற்றும் உத்தமராக உருவாக்கிக் காட்டியது.

இன்றைய சிறுவர்களில் மற்றும் சில காந்திகள் தோன்ற, சிறுவர்களை நல்ல நாடகங்கள் காணச் செய்யவேண்டும்.

நாடகக் கலைக்கு அரும்பணியாற்றியவர் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள். அந்த நாடகக் கலையின் மூலம் ஒப்பற்ற தலைவராக உயர்ந்தவர் காந்தி அடிகள். இந்த இருபெரும் தலைவர்களின் நூற்றாண்டு விழாக்களில் இப்போது நாம் ஈடுபாடு கொண்டு இருப்பது மிகப் பொருத்தமாகும்.

அந்த இரண்டு உயர் ஆத்மாக்களின் நினைவாக சூளுரைப்போம்:

"உலகத்தின் வருங்காலமாகிய உருப்பட இன்றைய குழந்தைகளை செம்மைப்படுத்துவோம். அதற்கு சிறந்த கருவியாக நாடகக் கலையை பயன்படுத்துவோம். உயர்ந்த குழந்தை நாடகங்களை உருவாக்குவோம்.

அன்பு பெருக...!

பட்டை போட பேராடத்தான்
பளப ளக்கும் வைரமே
மெருகு கொடுக்க கொடுக்கத்தான்
மினுமி னுக்கும் தங்கமே
அரும்பு மலர மலரத்தான்
அளிக்கும் மணத்தை மலருமே
அன்பு பீபருக பெருகத்தான்
அமைதி அடையும் உலகுமே.

குழந்தைக் கவிஞர்.

"அப்பா அடிச்சா அழமாட்டேன்!"

சிவராமனை அடித்து நொறுக்குவது, அவனுடைய அப்பாவுக்கு சர்வ சாதாரணம்! அப்படிப்பட்ட அப்பாவையே அவன் துடிக்க வைத்தான். நம்ப முடியவில்லையா? நாடகத்தைப்படியுங்கள். நம்பமுடியும்!

கோவி மணிசேகரன்

காட்சி—1

இடம்: கருணமூர்த்தி வீடு

நேரம்: இரவு

பாத்திரங்கள்: கருணமூர்த்தி, சிவராமன், அவன் தாய் பங்கஜம்.

[தந்தை கருணமூர்த்தி மகன் சிவராமனை சாட்டையால் அடிக்கிறார். சிவராமன் 'அப்பா அப்பா' என்று கதறுகிறான். அவன் தாய் பங்கஜம் துடிக்கிறாள்.]

சிவ: அப்பா! அப்பா! நீங்க வர்ற வரைக்கும் முழிச்சிண்டு இருப்பேன்'பா! அப்பா, அப்பா!

கருணு: கண்ட பசங்கக்கூடச் சேருவாயா?

சிவ: இல்லேப்பா! இல்லே .....

பங்க: போதுங்க! ஒரே பையன்! இப்படியா போட்டு பில்ட் சாட்டையால அடிக்கிறது? அவனை விடுங்க ...

கருணு: ஒத்திப்போடி....! புள்ளைய சரியா வளர்க்கத் தெரியலே... ஒரே புள்ளேன்னு பேச வந்துட்டா! செத்துத் தொலையட்டுமே! புள்ளங்க இல்லேன்னு குடியே மூழ்கிப் போயிடுமா, என்ன? (அடிக்கிறார்) எட்டு மணிக்கெல்லாம் தூக்கம் என்னடா? நான் வர்ற வரைக்கும் முழிச்சிக்கிட்டு இருக்கணும்!

திடீர்னு பிடிகீடி வேணும்னு யாரு கடைக்குப் போய் வாங்கிக்கிட்டு வருவாங்க?

சிவ: நாகையிலிருந்து அப்படியே செய்யறேம் பா. அடிக்காதீங்கப்பா! பில்ட்லே அடிக்காதீங்கப்பா! சதை எரியுது!...அம்மா, அம்மா.....

கரு: ஜாக்கிறதை! வீட்டு வாசற்படியை விட்டுத் தாண்டக்கூடாது. பசங்கக்கூடக் கூடக்கூடாது. நீ படிச்சது போதும் .... இரு இரு .... அடுத்த வாரம் ஒரு வெள்ளிக் கடையில் வேலைக்கு விட்டுடறேன்! ஏய்...பங்கஜம்..

பங்க: என்னங்க...

கரு: கிண்ணியைக் கழுவிச் சாப்பாடு போடு.

பங்க: போடறங்க .... வெள்ளிக் கடைன்னு சொன்னீங்களே! இந்தச் சின்ன வயசிலே வேலைக்கு விட்டா...

கரு: ஏன்? புள்ளே தேஞ்சிடுமோ? மாதம் பத்து ரூபா வரட்டுமே! பீடி செலவுக்குத் தள்ளிக்கிட்டுப் போகுமில்லையா? படிப்பு இன்னு வந்தது; படிப்பு! படிச்சவன் தான் லாட்டரி அடிக்கிறான். நான் அந்த வயசுலேயே சிந்தாரி வேலை செய்த தாலே தான் இன்னிக்கு மேஸ்திரியாயிருக்கேன். போய் வேலையைப் பாரு. சோத்தைப் போடு.

(பங்கஜம் சாப்பாடு எடுத்து வைக்க உள்ளே போகிறாள். கருணமூர்த்தி சிவராமனைப் பார்த்துக் கறுவிவிட்டு பின்னே போகிறார். சிவராமன் தேம்பித் தேம்பி அழுகிறான்)

(திரை)

காட்சி—2

இடம்: கருணமூர்த்தி வீடு

காலம்: பகல்

பாத்திரங்கள்: சிவராமன், பங்கஜம்.

[ரேழியில் அமர்ந்து அரிசி புடைத்துக் கொண்டிருக்கிறாள் பங்கஜம். சிவராமன் அவளை நெருங்கி வருகிறான்]

சிவ: அம்மா...

பங்க. என்னடா ராஜா?

சிவ: அம்மா! வெள்ளிக்கடை வேலைன்னு ரொம்ப கஷ்டமாம்மா?

பங்க: ஆமாண்டா கண்ணு! ஒரே புள்ளே; உன்னைப் படிக்க வைக்கிறதுக்கு உங்கப்பாவுக்குத் தள்ளாமே தெய்வம் தான் அவரோட கண்ணைத் திறக்கணும்.

சிவ: ஏம்மா! அப்பாவுக்குப் படிக்கிறதுன்னு ஏம்மா பிடிக்கலே? பசங்கக்கூடச் சேரறது பிடிக்கலே; தூங்கறது பிடிக்கலே.. இதெல்லாம் ஏம்மா?

பங்க: அவருக்கோ, உங்க தாத்தாவுக்கோ படிப்பு வாசனே இல்லாத குறை. அந்தப் படிப்பு வாசனே இருந்தா இப்படி நடிப்பாரா?

[அப்போது தெருவில் பறையடிக்கும் ஓசை கேட்கிறது. கலகலவென்று மணியோசை ஒலிக்கிறது. பளீர் பளீர் என்ற சாட்டையடி ஓசையுடன் கல்லுளி மங்கன் பிச்சை எடுக்கிறான். பங்கஜம் பதறுகிறாள்.]

கருணு: டேய், சிவராமா! நான் சொல்லியும் இவன் தூங்கறானே! டேய் மடையா!

பங்க: (தனக்குள்) ஐயய்யோ! நல்லா குடிச்சிப்பிட்டு வந்து இருக்கிறாரே! பையன் இன்னேக்குச் சாக வேண்டியது தான்.

கருணு: டேய், சிவராமா...

பங்க: அவனுக்கு உடம்பு சரியா இல்லீங்க.

கருணு: என்ன கேடு? ஏண்டா இதுக்குள்ளே தூக்கம்!

சிவ: (கண் விழித்து) தூக்கம் வந்தது; தூங்கிப்பிட்டேன், அப்பா.

கருணு: எவ்வளவு தைரியமடா உனக்கு? எடுடி அந்த பில்டை!

பங்க: வேண்டாமுங்க! பிள்ளே என்னத்துக்கு ஆகும்?

கருணு: மீறிட்டாண்டி அவன்! செத்துத் தொலையட்டும்...

சிவ: அம்மா! பரிதாபமா இருக்கும்மா. அப்பா தான் என்னே பில்டால போட்டு அடிக்கிறாரு. இவன் ஏன் இவனையே போட்டுச் சாட்டையாலே அடிச்சிக்கணும்? சும்மா பிச்சை கேட்டா யாரும் போடமாட்டாங்களா?

பங்க: போடமாட்டாங்கோன்னு தெரிஞ்சித்தான் இப்படி ஒரு பிடிவாதத்தைக் கையாளறான். எல்லாம் இந்த வயித்துக்குத் தாண்டா... வயித்துப் பிழைப்பு நடக்கணுமே!

சிவ: (தனக்குள்) வயிறு....வயிறு....

(சிவராமனின் வாய் 'வயிறு ... வயிறு' .... என்று முணுமுணுத்துக் கொண்டே இருக்கிறது]

(திரை)

காட்சி—3

இடம்: கருணமூர்த்திவீடு.

காலம்: இரவு

பாத்திரங்கள்: கருணமூர்த்தி, சிவராமன், பங்கஜம். [சிவராமன் தூங்கிக்கொண்டு இருக்கிறான். 'சரக் சரக்' கென்ற செருப்போசையுடன், தள்ளாடியவாறு கருணமூர்த்தி வீட்டினுள் நுழைகிறார். பங்கஜம் பதறுகிறாள்.]

பங்க: பிச்சை எடுக்க வந்திருக்கான்.

சிவ: வாம்மா, கிட்டே போய் பார்க்கலாம்.

பங்: திடீர்னு அப்பா வந்திடுவாரடா.

சிவ: வரமாட்டாரம்மா. இன்னும் நேரமிருக்கு.

[மீண்டும் கல்லுளிமங்கன் சாட்டையால் தன்னைத் தானே அடித்துக்கொள்கிறான்.]

சிவ: (தாயை நிமிர்ந்து பார்த்து) அம்மா! அந்தப் பையனே ப் பாரம்மா மூஞ்சிலே பூதம்மாதிரி முகமூடி; இடது கையிலே சூலம் மாதிரி மணி; சேதத்துக் கையிலே சாட்டையெடுத்து அவனையே அடிச்சுக்கிறான். அவங்கம்மா பேசாம பாத்துக்கிட்டு மோளம் அடிக்கிறா.

பங்க: இதுதான் கல்லுளி மங்கன் பிச்சை.

சிவ: இப்படிப் பயங்காட்டி ஏம்மா பிச்சை எடுக்கணும்?

(பில்டை எடுத்து சிவராமனை அடிக்கிறார். ஆனால் அவன் முன்பு போல் கதறவில்லை. ஏழெட்டு முறை அடித்தும் சிவராமன் பற்களைக் கடித்துக்கொண்டு பொறுமையோடு இருக்கிறான்.)

கருணா: (விழி பிதுங்க) என்னடி இது! கல்லு மாதிரி அடியை வாங்கிக்கிட்டுப் பேசாம இருக்கான்; ஊமையாய் விட்டானா? ஏண்டா அடிக்கிறது உனக்கு உரைக்கலே? ... என்னடா பேசாம இருக்கிறே?

சிவ: (அமைதியுடன்) நேரத்தாம்பா செய்யுது! அதுக்காக என்ன செய்யறது?

தந்: (கோபத்துடன்) அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா?

சிவ: எனக்கு ஒரு உண்மை புரிஞ்சுட்டுதப்பா. தெரு வில கல்லுளி மங்கன் போனான். அவன் வயித்தை ரொப்ப, அவனை அவனே சாட்டை யில அடிச்சுக்கிறான். நான் என் வயித்தை ரொப்ப உங்கிட்டே பெல்டாலே அடி வாங்க றேன்! இதுவும் ஒரு வயித்துப் பொழைப்புத் தான்னு நினைச்சு அழறதைவிடப் பேசாம இருந்துடறது நல்லதுன்னு இருந்துட்டேன்!

கருணா: (விக்கிக்கது) சிவா.....
சிவ: ஏம்பா?

கருணா: (தன்னையுணர்ந்து) சாப்பிட்டியா?

சிவ: அதுக்குத்தான் அடி வாங்கறேனே; சாப்பி டாம இருப்பேனா?

கருணா: (கேவுதலுடன்) சிவா! சிவா! அவன் தான் பிச்சைக்காரன்; உன்னையும் பிச்சைக்காரனாக்கி நிறுத்திட்டியா? இனிமே அடிக்கமாட்டேன்டா, ராஜா! வாஸ்தவம் தான்! உனக்கும் உங்க அம்மா வுக்கும் வயிறுன்னு ஒண்ணு இல்லேன்னு, மானம்னு ஒண்ணு இல்லாமே ஏன் எங்கிட்டே உதைபட்டுச் சாகணும்! நான் அடிக்கமாட்டேன்! சத்தியமா அடிக்கமாட்டேன்! என் ராட்சச குணத்தை வயித்தைக் காட்டி மாத்திட்டே! வா, இன்னைக்கு என்னோடு சாப்பிடு! நீ ரொம்ப புத்திசாலிப் பையன்! என் குடும்பத்துலே நீயா வது படிச்சு முன்னுக்கு வா!

பங்க: (தனக்குள்) தெய்வமே! கண் திறந்திட்டே! என் பிரார்த்தனைக்கு இன்னிக்குத்தான் முடிவு ஏற்பட்டது.

(கருணாமூர்த்தி சிவராமனை அணைத்துக்கொள்கிறார். சிவராமன் ஆனந்தக்கண்ணீர் விடுகிறான். பங்கஜம் பூரிப்புடன் அந்தக் காட்சியைக் கண்டு மெய்மறந்து நின்று விடுகிறாள்.)

(திரை)

எங்கள் மனதிலே

மணல் வீடு

(திருச்சி. திருமாறன்)

சின்னஞ் சிறிய கையினால்—தினம்
சேர்த்து வைத்த மணலிலே
முன்னம் செய்த வீடிது—நெஞ்சில்
மூண்ட ஆசைக் கனவிது

செங்கல் செலவும் இல்லையே—இதனால்
சிறிதும் தொல்லை இல்லையே
பங்கு கொண்டால் ஏழையும்—நல்ல
பாங்காய் வீடு கட்டலாம்

குளிக்க நல்ல வசதியும்—பெரிய
கூடம் போன்ற அறைகளும்
படுக்க இடமும் அங்குநாம்—மிகப்
பாங்காய் அமைக்க முயலலாம்

நினைத்த போது அழிக்கலாம்—புதிய
நினைவு வந்தால் மாற்றலாம்
இனிக்கும் வகையில் பாடலாம்—வீட்டில்
ஏற்றம் சொல்லி ஆடலாம்.

★

சைக்கிள் வண்டி

(டி. எஸ். மணி)

வீட்டைச் சுற்றி ஓடும் வண்டி
வீணையாட்டுக்கு நல்ல வண்டி
ஆட்டம் போடும் தம்பி தங்கை
ஆனந் தத்தை தேடும் வண்டி !

பின்னும் முன்னும் நகரும் வண்டி
'பிரேக்கு' தேவை இல்லா வண்டி
தன்னைத் தானே காத்துக் கொள்ள
தகுதி தன்னைக் கூறும் வண்டி !

அழகாய்ப் பாடச் செய்யும் வண்டி
ஆடித் துள்ளச் செய்யும் வண்டி
வழுக்கும் சாலை மீதில் நழுவி
வாழ்வில் உயர்வை நாடும் வண்டி !

இன்று என்னைச் சுமக்கும் வண்டி
இன்ப ஊக்கம் கொடுக்கும் வண்டி
என்றே ஒருநாள் விமானம் ஓட்ட
இனிதே பயிற்சி வழங்கும் வண்டி !

★

ஆடும் குதிரை

(இரா. சண்முகம்)

அழகு கொண்ட குதிரையிது
ஆசை யோடு பார்க்கிறது
பழகும் போதில் சுவைகூட்டும்
பண்பு குறையா குதிரையிது!

கொள்ளும் புல்லும் கேட்காது
கோபம் என்றும் கொள்ளாது
துள்ளிச் செல்ல எண்ணுது
துணிவு கொண்டு வாருங்க !

குதித்துக் குதித்துத் தள்ளாது
குப்புற வீழ்மேவ செய்யாது
மதித்து நெருங்கும் போதினிலே
மகிழ்ச்சி தரவே தயங்காது !

தம்பி அன்பாய் அமர்ந்திடலாம்
தங்கை கூட அமர்ந்திடலாம்
அம்மா அப்பா ரசித்திடலாம்
அமர நினைத்தால் அய்யய்யோ !

★

கிலுகிலுப்பை

(செங்குளத்தான்)

கண்ணைக் கவரும் கிலுகிலுப்பை
கருத்தைக் கவரும் கிலுகிலுப்பை
முன்னுல் வந்து பார்த்திடுவீர்
மிகவும் அழகிய கிலுகிலுப்பை!

சலசல என்று ஒலியெழுப்பும்
சின்னஞ் சிறிய கிலுகிலுப்பை
பலவித மான நிறத்துடனே
பார்க்கச் செய்யும் கிலுகிலுப்பை !

அன்பு உள்ளம் கொண்டிங்கு
அமர்ந்து உள்ள நண்பர்களே !
இன்பத் துடனே எனைப்பேற்ற
இன்றே தருவேன் கிலுகிலுப்பை !

அருனை அளிக்கும் ஆண்டவனே
ஆசை நிறைய தந்துவிட்டாய்
பொருளும் கொடுப்பாய்; கிலுகிலுப்பை
பூரிப் புடனே வழங்கிடுவேன் !

இன்பம் தருபவை

பந்து

(வடமலையழகன்)

உருண்டை யான உருவத்திலே
உலகம் உள்ளதை நாமறிவோம்.
உண்டை வடிவப் பந்தினிலே
உலகத் தத்துவம் ஒன்றறிவோம்.

உந்தி உயரே அடித்தாலும்
உயர்ந்தே பந்து வீழ்ந்திடுதே!
முந்தி முன்னே அடித்தாலோ
முழுமூச் சுடனே திரும்பிடுதே!

உதைத்து உதைத்துத் தள்ளிடினும்
உவகை யுடனே ஓடிவரும்!
பதைத்து பயந்து போவதில்லை!
பாரீர்! பந்தினை பெருந்தன்மை!

உற்றுர் உறவினர் பந்துயென
உள்ளன் புடனே கூறுகிறோம்!
உற்றவினை யாட்டு பொருளிதையே
உயரிய 'பந்து' எனவுரைப்போம்!

★

ஊது குழல்

(எல். சண்முகம்)

தந்த நிறத்தால் ஆனதுபார்
தகதக எனறு மின்னுதுபார்
இந்த "பீபீ" அழகுடனே
இனிய சத்தம் போடுதுபார்

தம்பி அழுகை பேர்க்குதுபார்
தாத்தா ரசிக்கச் செய்யுதுபார்
நம்முள் நட்பை பெருக்கிடவே
நன்கு இசையைப் பொழியுதுபார்

கைகளில் அடங்கிக் கொள்ளுதுபார்
காண்போர் கைகவர்ந் திழுக்குதுபார்
பைதனில் மறைந்து கொள்ளாமல்
பாட்டுக் கேற்ப முழங்குது பார்

வாயில் வைத்து ஊதியேபார்
வருவோர் போவோர் நிற்பதைப்பார்
கோயில் கடையைச் சென்றடைந்தால்
குறைந்த விலையில் கிடைக்குதுபார்!

பம்பரம்!

(தேவி முருகேசன்)

பம்ப ரமாம் பம்பரம்!
பளப ளக்கும் பம்பரம்!
வட்ட வட்டப் பம்பரம்!
வர்ணம் போட்ட பம்பரம்!
ராட்டி னம்போல் வேகமாய்
ரம்மி யமாய் சுற்றுமாம்!
ஆட்டி விட்டால் அழகெல்லாம்
அங்கே குடி இருக்குமாம்!
சொக்கி மகிழச் செய்யுமாம்!
சுறுசு றுப்பை பூட்டுமாம்!
சுற்றி விட்டால் நொடியிலே
அசுர வேகம் காட்டுமாம்!
இன்ப நிலையைத் தந்திடும்
எழில் மிகுந்த பம்பரம்!
அன்பு மிக்க தம்பிதான்
ஆடி மகிழும் பம்பரம்!

★

பொம்மை

(அழகனூர்)

ஆடி ஆடிக் காட்டும்
ஆவல் தன்னை மூட்டும்
நீட்டி நீட்டிக் கரங்கள்
நிற்கும் தஞ்சைப் பொம்மை!

குழலிக் குழலி ஊதும்
கோலம் யாவும் காட்டும்
மழலை பேசி நம்மை
மயக்கும் கண்ணன் பொம்மை!

சாந்தம் ஆட்சி செய்யும்
தருமம நெஞ்சில் பெய்யும்
மாந்தர் தம்மை நேராக்கில்
மயக்கும் புத்தன் பொம்மை!

பொக்கை வாயைக் காட்டும்
புதுமை யாவும் கூட்டும்
மக்கள் நெஞ்சில் எல்லாம்
மலரும் காந்தி பொம்மை!

ஆத்திச்சூடிய தாயும் மகனும்

★

ப. கோபாலன்

கருவலமும் - கருத்தும் மாறுபடலாம். ஆனால் கருத்துக்கும் - கற்பித்தோருக்கும் மாறுபாடு இல்லை. "ஆத்திச்சூடி" என்ற தலைப்பில் ஔவைப்பாட்டி அறுபதுமான நூல் ஒன்று வளரும் சமுதாயத்திற்குத் தந்தார்.

ஔவைப்பாட்டி அருளிய ஆத்திச்சூடியை படித்து ரசித்து மகிழ்ந்த ஆயிரமாயிரம் உள்ளங்களில் கவியரசர் பாரதியின் உள்ளமும் ஒன்று. மற்றவர் கூறுபோலத்தான் படித்தார். பரவசம் அடைந்தார். பாட்டியின் கருத்து காலத்தின் தன்மைக்கு சிலது ஒத்துவரவில்லை. ஒத்து வந்தாலும் சத்து நிறைந்ததாக அது இல்லை. எனவே கிளர்ந்த வீரன் புதிய ஆத்திச்சூடியை பொது மக்கள் முன்னால் வைத்தான். புதிய கருத்துக்கள் பொலிவு பெற்று நின்றன. பாரத மக்கள் விழித்தனர்.

பாட்டியின் கருத்துக்கும் பாரதியின் கருத்துக்கும் மோதுதல் இல்லை. ஆனால் முன்னேற்றம் காணை கிறோம். தடியும், சொடுக்கும் கூட கிடைக்கும் சிறிது பார்ப்போமே.

ஔவையார் "அறஞ்செய விரும்பு" என்றார். பாரதியோ "அச்சம் தவிர்" என்றார். மனிதன் சிறுமையாக ஆவதற்கு காரணம் சினம் ஆகலால் "ஆறுவது சினம்" என்றார் மூதாட்டி. பாரதி "ஆண்மை தவறேல்" எனக் கூறுகிறார் "இயல்வது கரவேல்" இது பாட்டியின் கூற்று. "இனிதல் இகழ்சி" என்பது நமது பாரதியின் கூற்று. காலம் மாறிக்கொண்டே வருகிறது. அதற்கேற்ப மனிதன் சூழ்நிலையும் மாறிவிடும் என்பதற்கு எடுத்துக்காட்டாக "ஈவது விலக்கேல்" பிறர் ஒருவருக்கு கொடுப்பதை இடையூருக நின்று நீ தடுக்காதே என்ற ஔவைக் கூற்றுக்கு பாரதியோ "மனிதனுடைய திறன் பிறருக்கு கொடுத்துக்கொண்டேயிருப்பது அதுவே ஈகைத் திறன்" என்கிறார். மூதாட்டி தடுக்காதே என்பதற்கு பாரதி கொடுப்பதுதான் சக்தி என்கிறார். "ஐயமிட்டுண்" என்பது மூதாட்டியின் மூதுரை. "ஐம்பொறி ஆட்சி கொள்" இது பாரதியின் புதியகொருகருத்து. பிச்சை இடுவது முக்கியம்தான். இருந்த போதிலும் மனிதன் தன்னுடைய ஐம்பொறிகளையும், ஐந்து இந்திரியங்களையும் தன் கட்டுக்கோப்புக்கு கொண்டு வந்தால் மனிதனுக்கு எதுவும் ஏற்காது என்ற கரணத்தினால் தான் இந்த வாக்கு எழுந்ததோ! "நேர்பட ஒழுகு" பிராட்டியின் பேருரை. "நேர்பட பேசு" இது கவிஞனின் கூற்று. மனிதன் நடத்தை சரியாக இருக்கவில்லையானால் அவன் பேச்சிலே அது தொனிக்கும். அதை நன்கறிந்து இப்படிப்பட்டவர்களை "நையப்புடை" என்கிறார் என்றே கருதவேண்டியுள்ளது. "வல்லமை பேசேல்" என்ற ஔவையின் கூற்றுக்கு வருவது எதுவானாலும் சரி, இவற்றை சமநோக்காக நோக்கி மகிழ்ச்சியுறுவதே மனித வாழ்வு. 'வருவதை மகிழ்ந்துண்' என்று மிகத் தெளிவாக உரைக்கிறார் நமது யோகி. அதுவுமல்லாமல் அதை நீ ஏற்றுக்கொள் என்கிறார்.

தெய்வத்தை நிந்திக்காதே என்பதைவிட நீதான் தெய்வம் என்று உணர்வது எப்படி என்பதைப்பற்றி தன் பாட்டினிலே பிறர் கூறுவதைவிட மிகவும் எளிதாகவும், பொருள் பதியுமாறும் கூறுகின்றார். "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால், வாக்கினிலே இனிமையுண்டாகும்" இந்நிலை வந்தால்தான் நாம் தெய்வமாக ஆகமுடியும் என்பதை தன்னுடைய கூற்றுகளே வைத்துள்ளார். ஆனால் இருவர் பேசியதும் ஒருமொழியே. இவர்கள் பேசியது மாத்திரம் அல்ல தாங்கள் அதனைக் கண்டதால்தான் தங்கள் அனுபவத்தை பிறருக்கு நயம்பட கூறமுடிந்தது. ஏனென்றால் உள்ளம் அறிந்தவர் உலகை அறிந்தவர் ஆகின்றனர். அவர்கள் எல்லா நாட்டையும் சுற்றி கற்றறிந்தவர் அல்லர். ஆனால் அவர்கள் அந்த உள்ளத் தடாகத்தில் நீந்துகின்ற ஹம்ஸ பக்ஷிகள். அவர்களுக்குத் தெரியும் நீரிலிருந்து பாலினைப் பிரிக்க. இந்த உபாசனைதான் அவர்கள் சாதித்த பேரித்த உண்மை நெறியாரும். வெவ்வேறு காலத்தவர்கள் ஒரு பொருளை அந்தந்த காலத்திற்கு தக்கவாறு கூறியிருக்கின்றனர். மனிதன் பேசுவதற்கு மொழி என்கிறோம். நாமும் பேசுகிறோம். இவை எல்லாம் ஒலி அணுக்குவியல்தான். ஆனால் இந்த ஒலி அணுக்களைக் சக்தி உண்டு. அதை உளப்படியே ஒதி உணர்ந்தால்தான் பெற முடியும். அவர்களில் நாமது ஆண்டகை வாழ்ந்த வாழ்வே உலகில் மிகவும் சொற்பம். ஆனால் அவர் எந்தகாலத்திலும்; எந்த யுகத்திலும் புதுமையாகவே காட்சியளிப்பார். அவர் பட்டமோ பெற்றவரல்ல. அவர் ஆண்டாளின் அடிமை. அதே போலதான் பிராட்டியும். இவர் இளமையில் முதுமையை விரும்பி வாழ்ந்தவர். அதாவது அறிவின் இளமையில் வாழாமல் முதிர்ச்சியிலே தான் வாழ்ந்தார். ஆதலால்தான் இவர் சூடிய மலை ஆத்திச்சூடி என்று பெயர்பெற்றது. நம்மவரோ சூடிய மாலை என்றும் புதுமையாய் விளங்கவேண்டும் என்பதற்காகவே புதிய ஆத்திச்சூடி என்று பெயரிட்டாரோ! ஒரு நூலுக்கு கடவுள் வாழ்த்து அவசியம். நூலைத் தொடங்கு ஔவையார்,

''ஆத்திச்சூடி யமர்ந்ததேவனே
ஏத்தியேத்தித் தொழுவோம் யாமே''

என்று ஆத்திமலர்மாலையை அணிபவரான சிவபெருமான் விரும்பிய விநாயகக் கடவுளே நாம் இடையருது வாழ்த்தி வணங்கவேண்டும் என்றார். ஆலால்தான் இதற்கு ''ஆத்திச் சூடி'' என்று பெயரிட்டார்.

ஆனால் நூல் தொடக்கத்திலே தான் பழைய மரபின்கண் கூறிய தாயின் கூற்றைவிடுத்து தனயன் கூற்றினால் புதியதொரு ஆத்தி மலர் மாலையை அணிந்து மோனத்தில் அமர்ந்து, பிறைமதியை தன் கிரீடமாக அணிந்து என்றும் வெண்ணீறுபோல் காட்சியளிக்கின்ற சிவபெருமானையும், கருமையை உடையவனும் நிதம் பாற்கடலில் உரைகின்ற பரமண்யும், வேதத்தை அருள்கொண்டு ஓதிய மகமது நபியையும், ஏசுவின் தந்தையாகவும் விளங்குவது ஒன்றே, அதுதான் அப்பரம்பொருள். அதுதான் உலகத்தை இயக்குகிறது. அந்த ஒளியிலிருந்துதான் இவர்கள் உற்பவத்தனர் என்றும் அந்தநிலை கண்டவர்கள் அதிலிருந்து விண்டதில்லை. அவர்களுக்கு ''துன்பமும், சோர்வும்'' இல்லை.

அவனை அவன் ஒளியால் அறிந்தால் அந்த அருளின் வாழ்த்துதலினால் வாழ்ந்தால் அமரனுகலாம். என்றும் உலகத்தில் உள்ள எல்லா படைப்புகளும் பரம்பொருளே அப்பரம்பொருள் ஒளியாக இருந்து நமக்குள்ளும் ஒளியாக காட்சிதருகிறான். இந்தபுதிய ஆத்திச்சூடியைப் படிக்கிற பொருளுணர்ந்த வாழ்த்தால் அமரனுகலாம். இனி அந்த நூலின் பரம்பொருள் வாழ்த்தாக அமைந்த கடப்புச் செய்யுளைக் காண்போம்.

''ஆத்திச் சூடியிளம் பிறை யணிந்து
மோனத்திருக்கு முழு வெண் மேனியான்
கருநிறங்கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன்
மகமதுநபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை யெனப்பல மதத்தினர்
உருவகத்தாலே யுணர்ந்து துணராது
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறு மறிவாம்;
அதனிலே கண்டார் அல்லலே அகற்றினர்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவாம்''

மனிதன் வாழ ஒரு பெரும் வாழ்வாக வாழ்ந்தவர்கள் முருகனருள் அம்மையும், அம்மையருள் பாலகன் பாரதியும். மனிதன் நாட்டு விடுதலே அவசியம் பெறுதல் வேண்டும். நாடு என்பது வரைக்குட்பட்டது. அந்த வரையறுப்புவிட்டு எல்லாமாகிய பரம்பொருளே அடைவதே விடுதலே அதிலே மோக்ஷம் என்பதை நிலைநாட்டினர். ஆதலால் தான் இவரை அவர் ஓட்டி எதையும் சொல்ல முடிந்தது. காந்திஜி அவர்கள் கூறியதுபோல் தான் செய்கின்ற சோதனை சத்திய சோதனை. அது சாதாரண குழந்தைக்கு சாத்தியமானால் போதும் என்றார். ஆதலால் தான் இந்த பெருமக்கள் இருவரும் குழந்தைக்குச் சொல்வதுபோல் நம்மையும் குழந்தையாக ஏற்றுக் கொள்கிறார்கள் அல்லவா!

புத்தக விற்பனையும்-சுரண்டப்படும் எழுத்தாளர்களும்.

அகிலன்

எழுத்தாளர்கள் தங்கள் எழுத்துக்களால் ஊர் உலகத்தைச் சீர்திருத்தக் கூடியவர்கள் என்றுபராட்டப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் முதலில் தங்களுடைய சொந்தத் துறையைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டுமென்ற நெருக்கடி இப்போது அவர்களுக்கு இருக்கிறது. தமிழைப் பற்றி மிகுதியாகப் பேசப்படும் இந்த நாட்டில் தமிழ் எழுத்தாளர்கள் வாழமுடியுமா என்ற பரிதாப நிலை வந்திருக்கிறது.

அவர்களுடைய உரிமைகள் இந்தச் சில ஆண்டுகளாகவே பறிக்கப்பட்டு, அவர்கள் அப்பட்டமாக ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய எழுத்துக்கள் வாசகர்களிடம் பரவாமல் தடுக்கப்பட்டு, போலித் தனம் நிறைந்த குப்பைகள் புத்தகங்கள் என்ற பெயரால் நூலகங்களுக்குள் நுழைந்திருக்கின்றன.

இத்தனை ஆண்டுகளாக நூலகங்களுக்காக இந்த நாட்டில் செலவழிக்கப்பெற்ற பொதுமக்களின் பணத்தால், நாணயமுள்ள பதிப்பாளர்கள் சிலரும், எழுத்தாளர்களில் சுமார் நூறு பேரும் புத்தக ஸ்ரீபலனையைக் கொண்டே இந்த நாட்டில் மதிப்போடு வாழ்ந்திருக்க முடியுமென்று ஒரு பதிப்பகத்தாரே எனக்குப் புள்ளி விவரம் கொடுத்தார்.

இந்த நாட்டின் நூலக இயக்கத்தாலும், இந்த நாட்டுப் பள்ளிகளில் புத்தகங்கள் வாங்கப் பெறுவதாலும், நூறு எழுத்தாளர்கள் தாங்கள் எழுதும் புத்தகங்களைக் கொண்டு வாழ முடியுமென்றால் ஒரே ஒரு எழுத்தாளன்கூட— அவன் எத்தனை சிறந்த எழுத்தாளனாக நாட்டினரால் கருதப்பட்டாலும்- அவன் தன் எழுத்தைக் கொண்டு வாழ முடியவில்லையே ஏன்?

இந்தக் கேள்வியை, நான் நூலகவரி கொடுக்கும் ஒவ்வொரு குடிமகனிடமும், படிக்கும் வாசகர்களிடமும், லட்சக்கணக்கில் பணம் ஒதுக்கும் அரசியலாரிடமும், நூலகங்களுக்கென்று புத்தகங்கள் வாங்குவோரிடமும் கேட்க விரும்புகிறேன்.

இந்த நாட்டில்-வள்ளுவன் பிறந்ததாகச் சொல்லி உலகத் தமிழ் மாநாடு நடத்திய இந்தத் தெய்வத் தமிழ் நாட்டில்—அந்தத் தெய்வத் தமிழுக்காகவே தன் ஒவ்வொரு மூச்சையும் செலவிடும் ஒரு எழுத்தாளன்கூட எழுத்தை நம்பி வாழமுடியவில்லையே ஏன்?

எழுத்தாளர்கள் தங்களுடைய பிழைப்புக்காகவேறு வேலைசெய்து சாப்பிட்டுக் கொண்டு, அங்கே உழைத்த நேரம் போகத்தான் ஒய்வு நேரத்தில் எழுத வேண்டியிருக்கிறது. 5 அல்லது 10 ஆண்டுகளாக எழுதமுன் வந்த ஆரம்ப எழுத்தாளர்களை நான் சொல்லவில்லே. இருபது முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதி வரும் சிலரும் இப்படித்தான் அவதியுற வேண்டியுள்ளது. இவ்வளவுக்கும்— அவர்களுடைய எழுத்துக்கள் லட்சக் கணக்கான வாசகர்களால் விரும்பிப் படிக்கக்கூடிய எழுத்துக்கள். ஒவ்வொரு நூலகத்திலும் பள்ளியிலும் இருக்க வேண்டிய எழுத்துக்கள்— ஆனால், எந்த அளவில் எங்கெல்லாம் இந்த நாட்டில் அவை இருக்கவேண்டுமோ அங்கெல்லாம் அவை இல்லே.

காரணம் என்ன?

நூலக இயக்கம் தோன்றிச் சில ஆண்டுகளில், வாசகர்களைவிட அதிக எண்ணிக்கையுள்ள எழுத்தாளர்கள் ஒரு சில பதிப்பாளர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஐம்பதும் நூறும் கையில் கொடுத்து ஒட்டுமொத்தமாக உரிமையை வாங்கி வெளியிடப்படும் நூல்களுக்கும், குறுக்கு வழிகளில் தேர்ச்சி பெற்ற ஒரு சில பதிப்பாளர்களுக்குமே சில ஆண்டுகளாகப் பொதுப் பணம் போய்க்கொண்டிருக்கிறது.

தரமான நூல்களை வெளியிடும் தரமான பதிப்பாளர்கள் திண்டாடுகிறார்கள். தரமான நூல்களை எழுதுவோர் வேதனைப்படுகிறார்கள் ஆனால் அதே சமயம் மூன்றாந்தரமான நூல்களே, அதில வில்லை வைத்து, அதிகக் கமிஷன் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தள்ளிவிடுவோர் பல்லாயிரக்கணக்கில் பணம் பெறுகிறார்கள்.

எந்தப் பதிப்பாளர் தம் கணக்கில், 5 சதவிகிதம் கூட எழுத்தாளருக்குக் கொடுக்கவில்லையோ அவர்தான் தள்ளிவிடத் தெரிந்தவராக இருக்கிறார். எழுத்தாளர்களிடம் நியாயமாக நடந்துகொள்ளும் பதிப்பாளர்களால், தரமுள்ள நூல்கள் வெளியிடுபவர்களால் புத்தகத்துக்கு அதிக விலை போட முடியாது. அதிகக் கமிஷன் கொடுக்க முடியாது. 'பில்'லில் 5 சதவிகித கமிஷனும், வாங்குவோர் கையில் 30 சதவிகித 'கமிஷ'னும் தருவதாக ஆசை காட்ட முடியாது.

ஒரு சில நூலகங்கள் மட்டுமே இன்னும் நியாயத்துக்கும், தரத்துக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றனவாம். பொதுப்பணத்தில் புத்தகம் வாங்குவோரில் ஒரு சிலரே தரத்தையும் ஆசிரியரையும் கவனிக்கின்றனராம்.

எல்லாப் பதிப்பாளர்களையும் நான் மொத்தமாய்க் குறை கூறுவதாய் நினைக்க வேண்டாம். எல்லா நூலக அதிகாரிகளையும் நான் குறை சொல்லவில்லை. எல்லாப் பள்ளி ஆசிரியர்களையும் நான் குற்றம் சாட்டவில்லை. நூலின் தரம், அதை எழுதியவர், உட்பொருள், இவற்றைப் பார்த்தும் பதிப்பிடுபவர்களுக்கும் வாங்குவோருக்கும் நான் நல்வணக்கமுரிமை.

ஆனால், பதிப்பாளர்கள் தனிக் கமிஷன் என்ற பெயரில் லஞ்சம் கொடுத்தார்களானால், அவர்கள் இந்தத் தொழிலுக்கு லாயக்கற்றவர்கள். எழுத்தாளருக்குச் சேரவேண்டிய ஊதியத்தை, அவர்கள் வயிற்றிலடித்து, இலட்சத் தரர்களுக்குக் கொடுப்பவர்கள். இந்த நாட்டின் குடி ஆட்சி முறைக்குக் குழிதோண்டுவோர் அவர்.

அரசியல் கட்சி செல்வாக்குகளும், சில இடங்களில் எழுத்தாளர்களின் உரிமைகளோடு விளையாடத் தொடங்கியிருக்கின்றன. கட்சிக்குத் தக்க சட்டைகளை சந்தர்ப்பம்போல் மாட்டிக்கொண்டு, சிலர் சிபாரிசுக் கடிதங்கள் வாங்கிக்கொண்டு, பொதுப் பணத்தைத் தங்களிடம் திருப்பிக்கொள்ளுகிறார்கள். இவர்களுடைய நூல்களின் விலை பற்றி—தரம் பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

எழுத்தாளர்கள் எண்ணிக்கையில் ஒரு சிலராக இருக்கலாம். ஆனால் அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி, அவர்களுக்குச் செய்யப்படும் துரோகம், மிகப் பயங்கரமான நிலைக்கு இந்த நாட்டையே கொண்டுபோய்விடும் என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்போதே எச்சரிக்கை செய்கிறேன்.



மனிதனின் கடமை

T. V. கைலாசம்

மனிதன் ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து பல லக்ஷக்கணக்கான ரூபாய்களே சம்பாதிக்கலாம். வியாபாரத்தின் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களே சேர்க்கலாம். தன் வாழ்நாளில் பத்பல வீடுகள் கட்டலாம், நிலங்கள் பல ஏக்கர்கள் வாங்கலாம். யந்திர சாலைகள், தொழிற்கூடங்கள், அமைத்து நிரந்தரமான வருவாய்களை அடையலாம். பல கௌரவ பட்டங்கள், உயர்ந்த பதவிகளையும் அடையலாம். ஆனால் எல்லோருடைய உள்ளத்திலும் தன்னைப்பற்றி நிலவுப்படுத்துகின்ற நீதியில் ஏதாவது சம்பாதித்துள்ளோமா என்று சிந்தித்து பார்த்தால் அது தான் இல்லை என்ற முடிவைத் தான் சொல்ல வேண்டி வருகிறது. ஒவ்வொரு மனிதனும் தன் சுற்றத்தார்கள், நண்பர்கள் தான் வசிக்கும் வீதியில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தார்கள், வசதி உள்ளவர்கள், வசதி குறைவாக உள்ளவர்கள் அவ்வளவு பேரிகளின் சுகதுக்கத்தை தான் பகிர்ந்து கொள்ள முற்படுவானுகில், அவன் மற்றவர்கள் இதயத்தில் இடம் பெறுவதுடன், அவனுக்கு வாழ்க்கையில் ஏற்படும் சுகதுக்கத்தை பகிர்ந்துகொள்ள எத்தனை எத்தனையோ பேர்கள் தயாராக இருப்பார்கள்.

தன் ஸ்தாபனத்திலோ அல்லது தனக்கு உதவியாக வேலைசெய்யும் பாட்டாளி மக்களிடமோ அன்பாகவும், அவர்களுக்கு தெரியாத விஷயங்களை பிரியத்துடன் எடுத்துச் சொல்வது, அவர்களின் கெடுதலான வழியில் செல்வதாக நமக்கு தோன்றினுல், செல்வாமல் தடுத்து நிறுத்துவது, ஆபத்து காலத்தில் பிறருக்கு சரீர உதவி செய்வது, பண உதவி செய்வது இவைகள் மனிதனுடைய மதியை ஏற்படுத்தும். பண உதவி இரண்டு வகைப்படும். ஒன்று கர்மம்; மற்றொன்று கடனுக உதவி செய்வது. சில பேர்களின் அவசரத்திற்கு உதவியை நாடி பண உதவி பெற்றுக் கொண்டு திரும்பி கொடுக்க மாட்டார்கள். சில பேர்கள் சொன்ன தேதிக்கு முன் கூட்டியே கொடுத்து, தம் நன்றியைத் தெரிவிக்கும் போது, அவர்கள் உள்ளங்களின் சமய உதவியின் பூரிப்பு காரணமாக உதவிய குடும்பங்களின் பரம்பரியமே நல்ல நிலையில்தான் இருக்கும். பிறருக்கு உதவி செய்யும்போது ஒருவிதமான பிரதிபிரயோஜனமும் எதிர்பாராமல் உதவி செய்து, அவர்களின் குறைபாடுகளை பேசாமல் திருத்த முயற்சிப்பது, அவர்கள் இல்லாத சமயங்களில் அவர்களைப்பற்றி பேசாமல், நல்ல செய்கைகளை சிலாகித்துப் பேசுவது இதுதான் மனிதனின் கடமை. இப்படி பிறரின் சுகதுக்கங்களை தன்னுடையதாகவே பாவித்து வாழ்ந்து முடிவிலே உயிரையும் கொடுத்த மஹான்தான் மஹாத்மா காந்தியாகும். காந்தியை மனதில் நினைத்தால், மனித சமுதாயத்திற்குச் சேவை செய்ய வேண்டும் என்ற தாபம் வரும். அந்த தாபமே நம்மை உயர்த்தும்; வாழ்வில்லும் மற்றவர்களுக்கு உதவுவதே மனிதனின் கடமையாகும் என்பதை நினைவில் வைத்துக்கொள்வோம்.

—★—

மூன்று உள்ளங்கள்

ராஜம் கிருஷ்ணசாமி

"எரிதழல் கொண்டு வாருங்கள்...கொளுத்தி விடுங்கள் என் கையை... கொளுத்திவிடுங்கள்."

இந்த பயங்கர கூக்குரலைக் கேட்டதும் நாக நாதன் தன் படுக்கையிலிருந்து எழுந்து குரல் வந்த திசையை நோக்கி ஓடினார். அங்கே அவர் கண்டதென்ன? அவர் மனைவி கமலம் அலங்க மலங்க விழித்துக்கொண்டு கைகளை விரித்துக் கொண்டு ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தாள்.

நாகநாதன், "என்ன கமலா, என்ன? ஏதாவது கனவு கண்டாயா? விழித்துக்கொள்" என்று அவளை உலுக்கினார். "எரிதழல் எதற்கு? பாஞ்சாலி சபதத்தில் பார்த்துக் கேட்டதுபோலல்லவா இருக்கிறது உன் பேச்சு" என்று கூறவும் செய்தார்.

சுய நினைவு பெற்ற கமலம், நாகநாதன் தோளில் சாய்ந்துகொண்டு அழத் தொடங்கினாள்.

ஃ ஃ ஃ

ரகு, கோபி என்ற இரண்டு பிள்ளைக் குழந்தை களுடனும் தன் அருமைக் கணவனுடனும் கமலம் அமுதாக குடித்தனம் செய்துவந்தாள். இருபிள்ளை களுக்கும் நான்கு வயது வித்தியாசம்.

இருவரும் சேர்ந்து எப்போதும் வீட்டை நிர்த்தூளி செய்வது வழக்கம். கமலத்திற்கு அவர் களுடைய போக்கிரித்தனத்தை அடக்கவே முடி யாது. போதாதற்கு இருவருக்கும் சிலசமயம் கை கலப்பும் ஏற்படுவதுண்டு. இதெல்லாம் நாகநாதன் வீட்டில் இல்லாதபோது நடைபெறும்.

அவர் ஆபீஸுக்கு சென்றவுடன் இருவரும் தங்கள் வேலையை ஆரம்பித்துவிடுவார்கள். இவ் வளவு ரகளை நடக்குதே, இதை விசாரித்துதான் பார்ப்போமேயென்று கமலம் நினைப்பாள். விவ ரத்தை ஆராய்ந்தால் அதில் ஒன்றும் இருக்காது. இதற்காகவா இருவருக்கும் இவ்வளவு சச்சரவு என்று கமலம் சிரிப்பாள், பிறகு மிரட்டுவாள். எதற் கும் பையன்கள் மசிவதில்லை.

அன்றொரு நாள், கோபி லேசான ஜுரத்து டன் படுத்திருந்தான். இந்த மாதிரி சமயத்தில் வீட்டில் அதிக சத்தம் இருக்காது. இரண்டு கை களையும் சேர்த்துத் தட்டினால்தானே சப்தம்? ரகு தனியே விளையாடிக்கொண்டிருந்தான்.

'கோபி, தர்மாமீடர் எடுத்து ஜுரம் குறைந் திருக்கிறதா, பார். இல்லாவிடில் டாக்டரிடம் மருந்தை மாற்றித் தரும்படி கேட்கலாம்" என் றாள் கமலா உள்ளே தன் வேலையை கவனித்துக் கொண்டே.

கோபிக்குத்தானே ஜுரம் எவ்வளவு என்று பார்த்துக்கொள்ளத் தெரியும். "அம்மா இன்று நார்மல். நார்மலுக்கு வந்துவிட்டதம்மா" எனறான் உற்சாகத்துடன்.

"ஆமாம், ஜுரம் வந்து மூன்று நாட்களாக வில்லையா? இனி இறங்கவேண்டியது தானே, என்றபடி கமலம் தன் வேலையை கவனித்தாள்.

"என்ன அண்ணு" என்றான் ரகு. சில சமயம் கோபியை அண்ணு என்றும் கூப்பிடுவான்.

"இன்று ஜுரம் நார்மல்" என்றான் கோபி.

"என்ன மல்" இது ரகு.

"நார்மல்" இது கோபி.

நாரு.....நீட்டினான் ரகு.

"நார்மல் என்றேன்" அதிகமான அழுத்தத் துடன் வார்த்தைகளை கோபத்துடன் உச்சரித்துக் கொண்டே கோபி படுக்கையை விட்டு எழுந்து விட்டான்.

மேலே என்ன? இருவருக்கும் கைகலப்பு; ஒரே ரகளை. நன்றாக அடிவாங்கிக்கொண்ட ரகு ஓவென்று அலறிக்கொண்டு தன் அம்மாவிடம் ஓடிவந்தான்.

கமலம் அன்று அளவுக்கதிகமாகவே கோபித் துக்கொண்டாள். இருவரையும். ஏனென்றால் இரண்டு பேரிடமும் குற்றமிருந்தது.

இந்த மாதிரி சிறு நிகழ்ச்சிகள் காலையும், மாலையும் எப்போதும் சாதாரணமாக நிகழ்வது உண்டுதான். ஆனால் நாகநாதன் வீட்டில் இல் லாதபோதுதான் இந்த விவகாரங்களெல்லாம் நடக்கும்.

தங்கள் தகப்பனாரிடம் அன்பும், பயமும் கலந்த ஒரு மரியாதை இரு பையன்களிடமும் குவிந்திருந்தது.

பின்பொருநாள் அப்படித்தான் ஒரு சாதாரண ரகளை. ரகுப்பயல் சிறு பந்தடிக்கும் மட்டையால் பந் தடித்து வீட்டிற்குள்ளேயே விளையாடிக்கொண்டிருந் தான்.

அந்தபந்து ஒரு காற்றடித்தாலும் எங்காவது பறந்து விடும். அத்தகைய குணமுடைய பந்து அது. திடீரென்று ஹால்லில் ஒரே சப்தம். ரகு ஆவேசமாய் அழ, கோபி ஓடி ஒடி திட்டிக்கொண்டிருந்தான்.

கமலம் போய் நடந்த விஷயத்தை ஒரு தொடி யில் அறிந்தாள். அவளுக்கு வந்த கோபத்தில் கையோடு தோசைச் சட்டுவத்தையும் கொண்டு சென் குள். என்ன நடந்தது என்பதை கோபி கூறினான். ரகுவின் பந்து கோபி மேல் இரண்டு தடவை விழுந்து விட்டதாம். முதல் தடவையே கோபி எச்சரித்துவிட் டானும். மறு தடவையும் பந்து மேலே பட்டவுடன் பாய்ந்து ரகுவைப் பிடித்து நன்கு அடித்திருக்கிறான். "இந்த" பந்து மோதியதற்கா உனக்கு இவ்வளவு கோபம். ரொம்ப வலித்ததோ? இப்போது பார்" என்று கூறிக்கொண்டே கமலம் தன் கையிலிருந்த தோசைச் சட்டுவத்தாலேயே 'விளாசி' விட்டாள் கோபியை

கோபி அழுதழுது கீழ்த்துப்போய் அங்கேயே கிடந்தான். எப்போதும் அடிவாங்கும் ரகுப் பயல் சில அடிகள் பெற்றுக்கொண்டு ஒரு மூலையில் உட் கார்ந்து அவனும் அழுதுகொண்டிருந்தான்.

இன்னும் நாகநாதன் ஆபீஸிலிருந்து வரவில்லை. சற்று தாமதமாகவே அன்றைக்கென்று வந்தார். கமலமும் மௌனமாகவே உணவு பரிமாறினாள். 'தூக் கக் கலக்கம்போலும்" என்று கருதிய நாகநாதன் சீக்கிரமாகவே சமையலறையை விட்டுச் சென்று விட்டார். தன் வேலையை முடித்துவிட்டு படுக்கைக்குப் போகுமுன் கமலத்தை பார்த்தார். அவள் சாய்வு நாற் காலியில் சாய்ந்து உறங்கிக்கொண்டிருந்தாள்.

தன்கு உறங்கிக்கொண்டிருந்த நாகநாதன் கமலத்தின் கூக்குரலைக் கேட்டதும் எழுந்தோடி வந் தார். அவளிடம் மெதுவாக நடந்த விஷயத்தை விசாரித்தார். குழந்தைகள் பட்டினியோடு தூங்குவதை யும் கண்டார். வருந்திய உள்ளத்துடன் தூங்கிக் கொண்டிருந்த கமலம் துச்சோப்பனம் கண்டிருக் கிறாள் என்பதையும் உணர்ந்து கொண்டார்.

தோளில் சாய்ந்தபடி சிறுகுழந்தைபோல் தேம் பிக்கொண்டிருந்த கமலத்தை நாகநாதன் ஆசுவாசப் படுத்தி ஒரு நாற்காலியில் உட்கார வைத்தார். தானும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

"சரி நீ என்ன கனவு கண்டாய் சொல். கேட் போம்" என்று நாகநாதன் வினவினார்.

சிறிது நேரம் எதுவும் சொல்லாமல் தயங்கிய கம லம் பிறகு தன் பயங்கரக்கனவையும் கனவின் வினை வாகத் தொடர்ந்த தன் முடிவையும் பற்றியும் கூறி னாள்.

"இந்த குழந்தைகள் சண்டைக்காக உயிரை விடு வது என்ற கனவில் நிலைத்தேன் என்றபோது, உண்மை யிலேயே உன் மனதில் அத்தகைய எண்ணம் ஒன்று இல்லாமல் கனவில் வருமா? இனி இத்தகைய நினைவே மனதில் வேண்டாம். ஏண்டி என்னை விட்டு விட்டு என்னே ஏமாற்றி நீ மட்டும் தனியாக முதலில் போக நினைத்தாயே! என்ன கல் மனது உனக்கு? நீ போன பிறகு என் நிலையை எண்ணிப் பார்த்தாயா? என்குரு நாகநாதன். கலங்காத அவர் கண்களிலும் கண்ணீர்.

கமலம் ஒரு கணம் சிந்தித்தாள்.

தன் கணவன் சென்று தான் இருத்தல் பாவம்... அப்போது பூவும் மஞ்சளோடு வாழ்க்கையில் அர்த் தமே மலர்ந்துவிடுமே...

தான் இறந்தாலோ கணவர் நிக்மையென்ன? கவனிப்பார் ஒருவருமின்றி குழந்தைகளோடு தானும் அலையவேண்டும், பின்பு கோபிக்கு மணவி வந்தாலும் மாமனுரை ஏன் அவள் கவனிக்கப்போகிறாள் தங்கள் இருவரின் இன்பவாழ்க்கைக்கு ஒரு இடை யூருகவே கருதுவார்கள்!

"அதிகம் சிந்தனை ஏன்? வாழ்ந்தால் சேர்ந்து நாங்களிருவரும் வாழ்வோம். சென்குல இருவரும் ஒருவரை தொடர்ந்து மற்றவர் பிறருக்கு தொல்லை கொடுக்காமல் சீக்கிரமாக சென்றுவிடு வோம்" கமலத்தின் சிந்தனை தெளிந்தது. அவளுக்கும் தன் உயிரின்மேல் ஆசை வந்துவிட்டது! தன் கடமை யுணர்ந்தாள். திடத்தோடு தலைநிமிர்ந்தாள். "என்ன கமலம் பலத்த யோசனை?" என்குரு நாகநாதன்.

நாணத்தால் தலைகவிழ்ந்து தன்னுடைய எண்ண ஓட்டங்கள் யாவையும் கூறினாள் கமலம்.

நாகநாதன் சிரித்தார். குழந்தைகளை திரும்பிப் பார்த்தார். கோபி அருகே சென்று தொட்டுப் பார்த் தார். கோபி புரண்டு படுத்தான். அழுதழுது உடம்பு தளர்ந்திலென்று இருந்தது.

போதுமென்ற மனமே.....

டி. எஸ். எம். சுந்தரம்

"மாமா, உன்னே யாரோ தேடுகிறார்," மருமான் ரமணியின் குரல், தனபாலனே நினைவுலகத்திற்குத் திருப்பியது.

"முதலாளி உங்களே, அல்லூரில் அருணாசலம்யர் ரிடம், பணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டு, இரவு 8 மணிக்கு வீட்டுக்கு வரச்சொன்னுங்க." வந்த வேலேயை விளக்கி விட்டுச் சென்றான் வேலேயாள்.

'அரிசி வாங்க ஆண்டார் தெரு ஆள்வாரைப் பார்த்து உதவிதேட இருந்தேன் மூன்று ரூபாய்க்கு. மூந்நூறு ரூபாய் கடன் வாங்க அல்லூர் செல்லவேண்டும் முதலாளிக்காக.....ஹும்.....காலம்." வாய்விட்டுச் சொல்லவில்லே தனபாலன் இதை, நீண்டதொரு பெருமூச்சு நினேவுறுத்தியது.

"பாக்கியை கொடுங்க. தேதி என்ன ஆகுது? வினயாட்டா எண்ணிக்கிட்டீங்க", பால்காரப் பரம சிவத்தின் குரல் தனபாலேத் திணறவைத்தது.

"இன்னும் மூன்று நாள் பரமசிவம், பொறுத்துக் கொள். பணம் கொடுத்துவிடுகிறேன்" என்று தனக்கே உரித்தான சாந்தமான பதிலிறுத்தான்.

உயர்ந்த குடும்பம், உன்னதமான நிலேதான் ஒரு காலத்தில். இன்று கடைக் கணக்குப்பிள்ளே. கிட்டும் ஊதியமோ மிகமிகக் குறைவு. காலச்சுமூல் என்ன செய்வது.

மாதம் மூப்பது நாளும் உழைத்துவிட்டு முழுமையாக வாங்குவதானல் அவன் சம்பளம் ரூபாய் எண்பது. தேவைகளுக்குக் கேட்டு வாங்கிக்கொண்டே வந்தால் சம்பளம் போடும் சமயம் மீதித் துகை ரூபாய் மூன்றுதான் கிடைக்கும். மாதம் பிறந்ததும் வரிசையாக வரும் பிரச்னேகள், வீட்டு வாடகை, பால்காரன், கரிக்காரன், கட்டி வாங்கும் ஈட்டிக்காரன், எல்லாம் பட்டுவாடா ஆகி முடிய தேதி பதிஞ்சந்து ஆகிவிடும், நிம்மதியான நாட்கள் இரண்டு மூன்று இருக்கத்தான் செய்தது. அதன் பிறகு மாதக் கடைசிவரை கால்பட்டினி, அரைப்பட்டினியான நாட்களும் வந்துவிடும் சில சமயங்களில். தன் இரு குழந்தைக்கும் ஒரு மருமான், தன் மனேவியோடு குடும்பம் நடத்தி வந்த தனபாலனுக்கு இந்த மாதிரி அனுபவங்கள் பிரதிமாதமும் உண்டு.

நற்பண்பு, நற்குணங்களுள்ள தனபாலனுக்கு அவன் நிஜ, கடவுள் சோதனேதான்.

"அப்பா... குண்டா ஒரு ஆள் உன்னேக் கூப்பிட முன்...பாத்தா பயமா இருக்கு," என்று அபிநயபாவத்தோடு கூறிச் சென்றுள் அவன் பெண் குழந்தை பங்கஜம்.

வெளியில் வந்த தனபாலுக்குக் காத்திருந்தது தார்க்குதல்.

"அரே நிம்பள் வட்டிப் பணம் தரான் இல்லே? தேதி என்னா?" என்று கூறி வாட்டமான மீசையை முறுக்கிவிட்டு தாடியை தடவிக் கொண்டான் ஈட்டிக்காரன்.

குன்றிப்போன தனபாலன், பெரு முயற்சி செய்து புன்முறுவல் கூட்டினுலும் அது சோபையற்ற காணப்பட்டது. "இருபதாம் தேதி கட்டாயம் தருகிறேன் சேட். கோபிக்காதீங்க" என்று தீனமாகக் கெஞ்சினுன் தனபால்.

"கியா தனபால், எட்டாம் தேதி வாய்தா போட்டான், பத்தாம் தேதி வாய்தா போட்டான், பதினுறும் தேதி வந்தான், இப்போ இருபதாம் தேதி வாய்தா போடருன். நிம்பள் வாய்தா சொல்லி நாமம் போடருன். பைசா தந்தால் போருன் சேட், இல்லே இங்கேயே உட்காரான்" என்று சத்யாக்கிரஹத்தில் இறங்கினுன் ஈட்டிக்காரன்.

"தயவு செய்யுங்க சேட். கட்டாயம் இருபதாம் தேதி தருகிறேன்", என்று எப்படியோபேசி சமாதானப் படுத்தி யனுப்பிவிட்டு உள்ளே வந்தான் தனபாலன்.

படுக்கையில் இரு பையன்களையும் படுக்கவைத்து கமலத்திடம் வந்தார்.

"உன் குழந்தையைத்தானே நீ அடித்தாய்; அடித்த கை தானே அணேக்கும். அவன் நன்முகத் தூங்குகிறன். அடி தாங்காமல் அதிக ஜுரம் வந்து அவன் செத்துவிட்டதாக நீயாக கற்பனே செய்திருக்கிறாய். காலியில் எழுந்து உன்னுடன் எப்படி அரட்டை அடிப்பான் பார்!" என்ற நாதநாதன் மேலும் தொடர்ந்தார்:

"மற்றெரு விஷயம் கமலம்.... குழந்தைகள் சச்சரவிட்டுக்கொண்டால் நீ கவனிக்காதே. அதிகம் தொந்தரவாக இருந்தால் பிறகு மிரட்டு. அதற்காக நீ இன்றைக்குப்போல உடம்பை அலட்டிக்கொள்ளாதே. உன் உடம்பு தாங்காது. இன்னும் கொஞ்சம் பெரியவர்களானுல் பாரேன். இருவரும் எவ்வளவு ஒற்றுமையுடனிருக்கப்போகிறர்களென்று!" என்றார்.

அவருக்கு நன்முகத் தெரியும், கோபி "பொய்த் தூக்கம்" போட்டு அப்பா – அம்மா இருவரும் பேசிக் கொண்டு இருப்பதை கூர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கிருன் என்பது!

இந்தப் பேச்சு— அம்மாவின் இந்தமன அவஸ்தை அவனுடைய மனத்தைத் திருத்தி, மகத்தான மாறுதல் உண்டாக்கப்போகிறது என்பதை அவர் தெளிவாக உணர்ந்தார். புன்னகை சிந்தியபடி, கமலத்தை அழைத்துச் சென்றார்.

"தாடிக்காரன் வந்துட்டான் போலயிருக்கு. குழந்தைகளுக்கு நேரட்டு, பென்ஸில் வாங்கமுடியல இவங்களுக்குக் கொட்டி அழவே காசு போதவில்லே" என்று வருந்தினாள் மனைவி மங்களம்.

குமுறிக் கொண்டிருந்த தனபாலன் எரி மலையென வெடித்தான். அச்சமயம் அவளுல் செய்ய முடிந்தது அவ்வளவே. அவன் அதிகாரம் செல்லுபடியாகும் இடம் அச்சமயம் அவன் வீடுதான். "மங்களம்— வாயை மூடு", என்று ஆத்திரமாகக் கத்தி விட்டு, அவள் கன்னத்தில் அறைந்தான்.

மறுமொழி கூற இயலாத மங்களம் கண்ணீர் வழிய கன்னத்தைத் தடவிக் கொண்டே உள்ளே சென்று விட்டாள்.

தவறென்றும் செய்யாத மங்களம் ஆறுசலுக்காக தன்னுள் அடங்கியிருந்த சுமையை இறக்கினாள் அவ்வளவுதான். தனபாலனுக்கு மட்டுமென்ன, வர்மமா, மங்களத்தின் மீது? இல்லவேயில்லே. பரஸ்பர அன்பே போடும். அன்யோன்ய பாஸத்தோடும் மனவியை நடத்துபவன், அவனைவிட வேறு யாரும் இருக்க முடியாது. பின் ஆத்திரத்தின் காரணம், அவன் குடும்ப வாழ்வின் தரித்திர நிலைதான். அதுதான் மனிதனை மிருகமாக்குகிறது. எதற்கும் துணிந்து இதயம் கல்லாகி விடுகிறது. பண்புளவனும் பித்தனுகிருன்.

தன் செய்கைக்கு வெட்கிப்போய், ஒரு மூலையிலமர்ந்து யாருமறியாமல் விம்மினுள் தனபால்.

எண்ணிறந்த மக்கள் சமுதாயத்தில், மத்தியதர வகுப்பாரில், எவ்வளவு பேர், கௌரவத்தைவிட முடியாமலும், வருவாய், வயிற்றைக் கழுவவே போதாமலும், தேவைகளை வெளியிடமுடியாமலும், வெளியிட்டாலும் கிடைக்கப் பெருமலும், தனக்குக் கிட்டியது இவ்வளவே எனத் தேர்ந்து, வாழ்கையில் அல்லல்பட்டு, அமைதி அடைகிறார்கள். எவ்வளவு பேர் முன்னவர்களைவிட அதிகப்படியான வருவாய் வந்தும் போதவில்லை என்று, உரிமையோடு போராடி, கோஷங்களை எழுப்பி முன்னவரின் ஆதரவை முழுக்க முழுக்கத் தேடுகிறார்கள்.

அந்த நிலையை உருவாக்க விரும்பவில்லை தனபாலன். 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற மூதுரை நினைவிற்கு வரவே, கடவுளை கைகூப்பி வணங்கி காப்பாற்ற வேண்டிக் கொண்டு, படுத்துறங்கி விட்டான்.

"அப்பா ... அப்பா... எழுந்திரு அப்பா," என்ற குழந்தை பங்கஜத்தின் குரல் அவன் துயிலைக் கலைத்தது.

"விறகுக் கடைக்காரன் வந்திருப்பான்," என்ற முணுமுணுப்போடு, அவனைச் சமாதானப்படுத்தியனுப்பும் சிந்தனையோடு எழுந்தான்.

"சித்தப்பா வந்திருக்காப்பா," சந்தோஷத்தோடு கூறினுள் பங்கஜம்.

மகிழ்ச்சியோடு துள்ளியெழுந்தான் தனபாலன். தான்படும் அல்லல்களில் ஒரு விருந்தாளி. அதற்கு என்ன அவ்வளவு மகிழ்ச்சி? அதுதான் பாசம். அன்போடு அணைத்துக் கொண்டான் அன்புத் தம்பியை. பம்பாயில் வேலே பார்க்கும் கோபாலனுக்கு அண்ணன் தனபாலன் மேல் உயிர்.

கோபாலனுக்கு அவன் கம்பெனியில் வேலே யுயர்ந்து சம்பளம் கூடியதோடு போனஸ் கொடுத்திருந்தார்கள்.

தனபாலன் வீடு மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தது. அண்ணன், தாயார் இறந்து கர்மாக்கள் செய்த சிலவுகளும், கோபாலன் கல்யாண சமயம் ஏற்பட்ட சிலவுகளும் சேர்ந்து அதிகக் கடனுளியாகிவிட்டதை யுணர்ந்து, எல்லாக் கடன்களையும் தீர்த்ததோடு, குடும்பத்தில் எல்லோருக்கும், துணி மணிகளுக்கும், இதரத் தேவைகளுக்கும் பூரணமாக சிலவு செய்து விட்டுச் சிறிது நாள் சந்தோஷத்தோடு சேர்ந்து இருந்து விட்டுச் சென்றுன் கோபாலன்.

'தேவை, தேவை', என்று தேடிக்கொண்டிருந்த போது இருந்த தரித்திர நிலையை "போதுமென்ற மனமே" மாற்றியது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டான் தனபாலன்.



சிந்தனைக்கு

நமது சரீரத்திலுள்ள 96 தத்துவங்களோடு ஐந்து கர்மேந்திரியங்களும் சேர்ந்து 101-ம் துரியோதனுதிகள் என்பதையும், நமது ஞானேந்திரியங்கள் ஐந்தும் பாண்டவர்கள் என்றும், அஹங்காரத்தால் நீதி இது என்பதை அறியாதவன் குருடனுமிய திருதராட்டிரன் என்றும், பொறுமையின் வடிவமே காந்தாரி என்றும், நமது சரீரத்தில் மனம் என்பதே குருக்ஷேத்திரம் என்றும், நற்குணங்களுக்கும், தீயகுணங்களுக்குமுள்ள போராட்டமே பாரதப் போர், ஐந்து ஞானேந்திரியங்களின் ஆட்சிக்குட்பட்ட சரீரம் தான் திரௌபதை என்றும், சூர்ச்சுமமாய் அமைந்துள்ள நுண்ணுடலே கண்ணபிரான் என்றும், வெளியுடல் அர்ச்சுனன் என்றும், அந்தராத்மாவின் உபதேசமே கீதையென்றும் தத்துவம் விளக்குகிறது.

நர-நாரணர் என்று சொல்வது நம் உடல் கூட்டைத்தான். நரனுக் பிறந்தவன் தன் தன்மையால் நாராயணனாக மாற முடியும் என்ற தன் மை யை வெளிப்படுத்துகிறது.

ஒலிக்குத்தாய் மோனம். மோனம் தான் உணர்ந்ததை மற்றவர்களுக்கு உணர்த்த ஒலிக்குறந்தையைப் பெற்றது. மோனம் எத்தனையோ தடவை ஒலியை பிறப்பித்தாலும் மீண்டும் தன்னிலே தான் நிலைத்து நின்றுவிடுவதால் மோனம் கன்னி என்ற தன்மையும் பெறுகிறது. ஒலி சொல்லாக, வாக்காக உருவெடுக்கிறது. சொல் என்பது உணர்ச்சியின் உந்துதல். வாக்கு என்பது சிந்தனையின் உந்துதல். சொல்லும், வாக்கும் ஒன்றுபோல் பட்டாலும் உண்மையில் மாறுபட்டது. கருத்தறியாமல் உணர்ச்சிகளே வெளியிடுவது சொல். உணர்ச்சியோடு கருத்தையும் தாங்கி கேட்பவர் உள்ளம் நெகிழச் செய்வது வாக்கு. சொல்லுகின்ற சொல்லிலும், வாக்கிலும் மோனம் நிறைந்திருக்கிறது. மோனம் தேடும் பொருள் ஞானம்.

ஞானமும், மோனமும் கூடும்போது வாக்கு பிறக்கிறது. மோனமே ஞானத்தைக் காட்ட வல்லது. வாக்காகிய குழந்தைக்கு ஞானமாகிய தந்தையைக் காட்டுவது மோனமாகிய தாயின் செயல். தந்தையாயினும், தாய்தான் குழந்தைக்கு தன் தந்தையைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இரும்பும் காந்தமும் தரையில் கிடைப்பவை. ஒன்றுடன் ஒன்று நெருங்கிக் கிடந்தாலும் மண்ணில் கிடக்கையில் காந்தம் இரும்பை ஈர்ப்பதில்லை. ஆண்டவனும் அடியவனும் மிக நெருங்கியே இருக்கிறார்கள் என்றாலும் ஒருவரையொருவர் அறிவதில்லை. இரும்பை எடுத்து அதன் மீதுள்ள மண்ணை அகற்றிவிட்டால் காந்தம் இரும்பைக் கவ்வுகிறது. அடியவனே எடுத்து அவன் மீது படிந்திருக்கும் "நான் தான்" என்ற அஹங்கார, மமகாரங்களை நீக்கிவிட்டவுடன் இறைவனுடைய காந்தம் அடியவனுகிய இரும்பை தன்பால் இழுத்துக்கொள்கிறது. இந்த உண்மையை இரும்பும் காந்தமும் நமக்கு உணர்த்துகின்றன.

ஒரு கன்னி திருமணமானபின் இதுவரை தன்னைப் பெற்று வளர்த்த தாய், தந்தையரையும், தான் பிறந்து தவழ்ந்த வீட்டையும் தான் தூக்கி வளர்த்த சகோதர சகோதரிகளையும் விட்டு தாலிகட்டிய கணவனுடன் அன்றிரவே முன்பின் தெரியாத ஒரு ஊருக்கு புறப்பட்டுச் செல்ல ஆயத்தமாகிறாள். இதில் உலகிலுள்ள எல்லா உயிரும் பெண்ணென்றும், இறைவன் ஒருவனே நரயகன் என்றும் எத்தனையோ அவதார புருடர்கள் எடுத்துக் கூறியும் ஆண்டவனைப்பற்றி இருக்கும் காதல் நமக்கு ஏற்படாமலிருக்கும் மௌடீகத்தை நினைத்து இறைவன் நம் பெண் குழந்தைகள் மூலம் நமக்கு ஞானத்தை ஊட்டியும்கூட நாமது பெண்ணுக்கு இருக்கின்ற தாணவு, உறவு, அன்பு நமக்கு ஏற்படவில்லை என்பதை எண்ணிப்பாருங்கள். ஏற்பட்டிருந்தால் நாம் என்றோ ஞானியாயிருப்போமல்லவா!

உங்களுக்குத் தேவையான பட்டு, மில், கைத்தறி & பென்னி மில்ஸ்

ஜவுளிகள் ஏராளமாக ஸ்டாக் செய்துள்ளோம்.

தாங்கள் அவசியம் எங்கள் கடைக்கு விஜயம் செய்யுங்கள்,

மாரியப்பா ஸ்டோர்ஸ்,

மொத்தம் & சில்லரை ஜவுளி வியாபாரம்

11, கள்ளத்தெரு,] P. B. No. 405-Phone No. 4075 [திருச்சிராப்பள்ளி-8.